AR
908

# தம்பிக்கு அண்ணாவின் கடிதங்கள்

18




அறிஞர் அண்ணா

# தம்பிக்கு
# அண்ணாவின் கடிதங்கள்

பதினெட்டாம் தொகுதி

காஞ்சிக் கடிதங்கள் - 5

அறிஞர் அண்ணா

பல்லடம் மாணிக்கம்
தமிழ் நூல் காப்பகம்
திருமுதுகுன்றம்

பாரி நிலையம்
184. பிராட்வே · சென்னை · 600108

முதற் பதிப்பு : 1988

பதிப்பு உரிமையுடையது

தமிழ் நூல் காப்பகம்
09218
தமிழ் நகர் விருத்தாசலம் 606 001.

விலை ரூ. 16-00

அச்சிட்டோர்:
சாலை அச்சகம், 11, திருவீதியான் தெரு
கோபாலபுரம், சென்னை-86 [116]

முதல் இரண்டு தொகுதிகளின்
முதற்பதிப்பின் முன்னுரை

# முன்னுரை

## திரு. நாவலர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.

'அண்ணா தம்பிக்கு எழுதிய கடிதங்கள்' நூல் வடிவம் கொண்டு அழகும் கவர்ச்சியும் ஒருங்கே ஏற்று, என் கைக்கு வரப்பெற்று மிக்க பேருவகையுற்றேன். அறிஞர் அண்ணா அவர்கள் 'திராவிட நாடு இதழ் மூலம் அருமைத் தம்பிமார்களுக்கு எழுதிவந்த முடங்கல்கள் அனைத்தும் நூல் வடிவம் பெற்றால், அந்த நூல், கருத்துக் கருவூலமாகத் திகழப் பெறுமே என்ற வேணவா என் உள்ளத்தில் நீண்ட நாட்களாக எழுந்ததுண்டு. என்னைப் போன்ற பல்லாயிரக் கணக்கான தம்பிமார்களுக்கும் வேணவா கிளர்ந்தெழுந்திருக்கும் என்பது உறுதி. அந்த வேணவாவை இனிது நிறைவேற்றி வைக்கும் அரும் பெருந்தொண்டை 'பாரி நிலையத்தார்' செய்திருப்பது கண்டு பூரிப்படைகிறேன்: பாரிநிலையத்தாரை வரவேற்றுப் பாராட்டி வாழ்த்துகிறேன்.

அறிஞர் அண்ணா அவர்களின் எழுத்து வன்மையையும், அவரது எழுதுகோல் முனையிலிருந்து உருப்பெற்றெழுந்து நாடெங்கணும் வெற்றியுலா வரும் கதைகள்— கட்டுரைகள் — நாடகங்கள் — திரைப்பட வசனங்கள்— எழுத்தோவியச் சுவரொட்டிகள், துண்டு அறிக்கைகள் ஆகியவற்றையும், அவற்றில் தமிழ் மணம் மிகச் சிறந்த முறையில் கமழ்வதையும், இனிய ஓசை பயக்கும் சொற்கள் அருவியின் வீழ்ச்சியெனத் தங்கு தடையின்றிப் பாய்ந்து துள்ளிக் குதித்து ஓடுவதையும், கருத்துக்கள் செறிந்து காணப்படுவதையும், உவமை நயங்கள் பெருவாரியாக ஆங்காங்குப் பளிச்சிட்டு மின்னுவதையும், அறிவும் ஆற்றலும், உண்மையும் உயர்வும், திண்மையும் திட்பமும், சொல்லழகும் பொருளாழமும் ஒன்றையொன்று போட்டி போட்டுக்கொண்டு துள்ளிக் குதிப்பதையும், தமிழ் கற்றறிந்த நல்லறிவு படைத்தோர் அனைவரும் நன்கு உணர்வர். தமிழின்பத்தை எல்லா வகையிலும் சுவைக்க விரும்புவோர், இந்நூலைச் சுவைத்தாலே போதும். எல்லாவகையான இனிய சுவைகளும் இதனுள் பொதிந்து கிடக்கின்றன,

படித்து மகிழ்ந்து பயன் பெறுவதற்குரியவைகள் பலப் பல இருந்த போதிலும், ஒவ்வொருவரும் கடிதத்தைப் படிப்பதற்குப் பேராவல் காட்டுகிறோம். அஞ்சலை அன்றாடம் வழி மேல் விழிவைத்துப் பார்க்க நாம் தவறுவதில்லை. அஞ்சல் வந்தவுடன் மற்றப் பணிகளையெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டுப் பிரித்துப் படிக்கிறோம்; பலதரப்பட்ட செய்திகளையும் கருத்துக்களையும் அறிந்து கொள்கிறோம். பொதுவாகக் காதலியிடமிருந்தும், நண்பர்களிடமிருந்தும் நெருங்கிய உறவினர்களிடமிருந்தும் வரும் முடங்கல்களைப் படிப்பதில் ஒருவன் எவ்வளவு ஆர்வமும் அக்கறையும் அகமகிழ்ச்சியும் காட்டுவானோ அவ்வளவு ஆர்வமும் அக்கறையும் அகமகிழ்ச்சியும் அறிஞர் அண்ணா அவர்களின் கடிதங்களைப் படிப்பதிலும் ஒவ்வொருவரும் காட்டுவர். அவ்வளவு கவர்ச்சியும் அறிவுத் தெளிவும் ஆராய்ச்சித் திறனும் அறிஞர் அண்ணா அவர்களின் கடிதங்களில் காணப்பெறும். அறிஞர் அண்ணா அவர்களின் உயர்ந்த உள்ளத்தை எழுத்துக்களின் மூலம் எளிதில் கண்டறிய இந் நூல் பெரிதும் பயன்படும்.

அறிஞர் அண்ணா அவர்கள் 'திராவிட நாடு' இதழில் 'தம்பிக்குக் கடிதம்' என்று தலைப்பிட்டு எழுதிய கடிதங்களைப் பத்துத் தொகுப்புகளாகக் கொண்டுவர முயற்சி எடுத்து, இப்பொழுது இரண்டு தொகுப்புகளை வெளியிட்டிருக்கின்றனர். இந்தப் பத்துத் தொகுப்புகளும் தமிழகத்தின் அரிய பெரிய கருத்துக் கருவூலங்களாகும். இப்பொழுது வெளிவந்துள்ள இரண்டு தொகுப்புகளைப் போலவே விரைவில் ஏனைய எட்டுத் தொகுப்புகளும் வெளிவருவனவாக!

அறிஞர் அண்ணா அவர்களின் சொல்லமுதைக் கொண்டு இலக்கிய விருந்து படைக்க முன்வந்த 'பாரி நிலைய'த்தாரைப் பாராட்டுகிறேன். தமிழ்ப் பெருங்குடி மக்கள் அனைவரும் இந்த இலக்கிய விருந்தை உண்டு மகிழ்ந்து, பயன்பெற்று, இனிதுற வாழ்வார்களாக!

**4-1-63**

**-இரா. நெடுஞ்செழியன்**

# பதிப்புரை

அறிஞர் அண்ணா அவர்கள் தம்முடைய கருத்துக்களையும் சிந்தனைகளையும் தம்பிக்கு என்ற தலைப்பில் கடித வடிவில் அவர் நடத்தி வந்த 'திராவிட நாடு' இதழிலும் 'காஞ்சி' இதழிலும் அவ்வப்போது எழுதி வந்தார்கள். இவற்றில் சில கடிதங்கள் திராவிட நாடு, காஞ்சி பொங்கல் மலர்களிலும் வெளிவந்தன.

இக்கடிதங்கள் அறிஞர் அண்ணா அவர்களையும் அவர் நேசித்த இலட்சக்கணக்கான தம்பிமார்களையும் ஒருங்கிணைத்துக் கலந்து உறவாடி மகிழச் செய்தன.

திராவிட நாடு இதழ்களில் வெளிவந்த கடிதங்களை வெளியிட அண்ணா அவர்களிடமே இசைவு பெற்று, முதல் இரண்டு தொகுதிகளையும் 1963 ஆம் ஆண்டில் வெளியிட்டோம். இவை கடற்கரையில் சீரணி அரங்கில் பல ஆயிரக் கணக்கான மக்கள் முன்னிலையில் வெளியிடப் பெற்றன.

திராவிட நாடு இதழ்களில் வெளிவந்த கடிதங்கள் பன்னிரண்டு தொகுதிகளாக வெளிவந்து நிறைவடைந்தன. காஞ்சி இதழில் அண்ணா தமது சிறை அனுபவங்களைக் 'கைதி எண் 6342' என்ற தலைப்பில் கடித வடிவமாகவே எழுதி வந்தார்கள். அவைகளைத் தொகுத்து, 'கைதி எண் 6342' என்ற தலைப்பில் தனிநூலாக வெளியிட்டோம். இது அண்ணாவின் கடிதங்களின் பதின்மூன்றாம் தொகுதியாகும்.

நீண்ட இடைவெளிக்குப் பிறகு, 26-7-64 தொடங்கிக் 'காஞ்சி' இதழில் அண்ணா கடிதங்கள் எழுதத் தொடங்கினார்கள். காஞ்சி இதழில் வெளிவந்த முதல் கடிதத்தின் தலைப்பே 'நீண்ட இடைவெளிக்குப் பிறகு' என்பதாகும்,

காஞ்சி இதழில் வெளிவந்த கடிதங்களை வெளியிடத் திருமதி ராணி அண்ணாதுரை அவர்களிடம் இசைவு பெற்று வெளியிடத் தொடங்கி இருக்கிறோம். பல காரணங்களால் இவைகளை நூலாக வெளியிடுவதிலும் நீண்ட இடைவெளி ஏற்பட்டுவிட்டது. இனித் தடையின்றி இவை விரைவில் வெளிவரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இப்போது வெளியிடப் பெறும் இந்தத் தொகுதி மொத்த வரிசையில் பதினெட்டாம் தொகுதியாகும். காஞ்சியில் வெளிவந்த கடிதங்களின் ஐந்தாம் தொகுதியாகும். இதில் பதின்மூன்று கடிதங்கள் வெளிவந்துள்ளன. **'காஞ்சிக் கடிதங்கள்'—5** என்று தலைப்பிட்டுப் புதிய எண்கள் கொடுத்திருக்கிறோம்.

வழக்கம் போலப் புலவர் நா. அறிவழகன் அவர்கள் காஞ்சியில் வந்த கடிதங்களுக்கு உரிய உள் தலைப்பிட்டுக் கொடுத்தும், கிடைக்காத கடிதங்களுக்கு 'ஜெராக்ஸ்' பிரதி எடுத்துக் கொடுத்தும் பலவாறு உதவினார்கள். டாக்டர் சாலை இளந்திரையன் அவர்கள் பிரதியை நன்கு ஒப்பு நோக்கிப் பதிப்பித்து உதவினார்கள். இவ்விரு அறிஞர்களுக்கும், காஞ்சியில் வெளிவந்த கடிதங்களை நூல் வடிவில் வெளியிட எங்களுக்கு வாய்ப்பளித்த திருமதி ராணி அண்ணாதுரை அவர்களுக்கும், அழகாக அச்சிட்டு உதவிய சாலை அச்சகத்தாருக்கும் எங்கள் நன்றி உரியது.

வழக்கம் போலத் தமிழ்ப் பெருமக்கள் இந்நூல் வரிசையினையும் ஏற்று எங்களை ஊக்குவிக்குமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம்.

பாரி நிலையத்தார்

# பொருள் அடக்கம்


| கடித எண் | பொருள் | நாள் | பக்க எண் |
|---|---|---|---|
| 51. | வெள்ளை மாளிகையில்...(4) | 27-2-66 | 1 |
| 52. | வெள்ளை மாளிகையில்...(5) | 6-3-66 | 15 |
| 53. | 'கனா' நிகழ்ச்சி-ஒரு எச்சரிக்கை! | 13-3-66 | 29 |
| 54. | வெள்ளை மாளிகையில்...)6) கருப்பு நட்சத்திரம் | 20-3-66 | 52 |
| 55. | வெள்ளை மாளிகையில்...(7) சதிக்குள் சதி-1 | 27-3-66 | 68 |
| 56. | வெள்ளை மாளிகையில்...(8) சதிக்குள் சதி-2 | 3-4-66 | 81 |
| 57. | வெள்ளை மாளிகையில்...(9) சதிக்குள் சதி-3 | 10-4-66 | 91 |
| 58. | வெள்ளை மாளிகையில்...(10) மனிதன், மிருகமல்ல! | 17-4-66 | 102 |
| 59. | கணக்குத் தீர்க்கும் காலம் | 24-4-66 | 115 |
| 60. | கண்ணீர் பொங்கும்... | 1-5-66 | 127 |
| 61. | உன்னால் முடியும்! | 8-5-66 | 148 |
| 62. | உன்னைத்தான் நம்பி இருக்கிறேன்! | 15.5-66 | 168 |
| 63. | கருத்தோவியம் | 22-5-66 | 187 |

★ தமிழ் நூல் காப்பகம் ★



# வெள்ளை மாளிகையில்... (4)

- ★ 'வழக்கு' என்னும் ஒரு நாடகம்
- ★ ஒதுக்கிடம், குப்பைமேடு!
- ★ கருப்பு முஸ்லிம் இயக்கம்
- ★ ஒரு நீக்ரோவின் உள்ளக் கிடக்கை
- ★ 'வெள்ளை மாளிகை' — என்னும் பெயர்

தம்பி,

உலகிலேயே கடைந்தெடுத்த பொய்யர்கள் இந்த வெள்ளையர்கள் என்று குற்றம் சாட்டுகிறேன்.

உலகிலேயே இவர்களை மிஞ்சிடும் குடிகாரர்கள் இல்லை என்று குற்றம் சாட்டுகிறேன்!

மிக மோசமான சூதாடிகள் இந்த வெள்ளையர் என்று குற்றம் சாட்டுகிறேன்.

கொடிய கொலைகாரர்கள் இந்த வெள்ளையர்கள்!

சாந்தியை—சமாதானத்தைக் குலைத்தவர்கள் இந்த வெள்ளையர்.

காமவெறி பிடித்தலையும் கயவர்கள், இந்த வெள்ளையர்!

மோசடிகள் பல செய்திட்ட பேர்வழிகள் இந்த வெள்ளையர்!

ஆகவே நீதிமன்றத்தினரே! இந்த வெள்ளையர்கள் குற்றவாளிகள் என்று தீர்ப்பளிக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

''வெள்ளையர்கள் குற்றவாளிகளே! தூக்கு தண்டனை விதிக்கிறேன் இவர்களுக்கு''

என்ன அண்ணா! டக்ளஸ் டில்மன் மீது தொடுக்கப் பட்ட கண்டன வழக்கு பற்றிய விவரம் தருவதாகக் கூறி விட்டு, இது ஏதோ புதிதாக, அதிர்ச்சி தரத்தக்கதாக ஒரு வழக்கு பற்றி குறிப்பிடுகிறாயே என்றுதானே தம்பி! வியப் படைகிறாய். விளக்கம் தருகிறேன்.

வெள்ளையர் குற்றம் பல புரிந்தவர்கள்; 'பஞ்சமா பாதகம்' புரிந்தவர்கள் என்பதாகக் குற்றம் சாட்டப்படு கிறது; வெள்ளையர் பஞ்சமா பாதகம் செய்தவர்களே என்பது மெய்ப்பிக்கப்படுகிறது; நீதிமன்றத் தலைவர், வெள்ளையருக்குத் தூக்குத் தண்டனை விதிக்கிறார் நாடகத்தில்!

அமெரிக்காவில், 'வழக்கு' என்றோர் நாடகம்; வெள்ளையரின் கொடுமைகளைக் கண்டிக்கும் நோக்கத் துடன், நியூயார்க் நகரிலேயேகூட இந்த நாடகம், ஒரு முறை அல்ல; இருமுறை நடத்தப்பட்டதாம்.

நாடகம் தீட்டி நடித்துக் காட்டும் பொறுப்பை மேற் கொண்டவர்கள், நீக்ரோக்களின் விடுதலை இயக்கத்தின் பல வடிவங்களில் ஒன்று என்று கூறத்தக்க 'கருப்பு முஸ்லீம்' எனும் அமைப்பினர். அந்த அமைப்பினர், நீக்ரோக்கள் தங்கள் உரிமைகளுக்காக வெள்ளையரிடம் கெஞ்சிக் கூத்தாடிக் கிடக்கத் தேவையில்லை; அது கேவலம்; தமக்குள் ஒரு எழுச்சியுடன் கூடிய ஒற்றுமையை ஏற்படுத்திக்கொண்டு, ''கருப்பு இனத்தவர்! ஆம்! கருப்பு! அதனால் என்ன? கேவலம் என்ன அதிலே! என்று அடித்துப் பேச வேண்டும், நிமிர்ந்து நிற்க வேண்டும்; கிருத்துவ மார்க்கத்தை விட்டுவிடவேண்டும்; முஸ்லீம்களாகி விட வேண்டும்; தனி உரிமை, தனிநாடு, தனி அரசு கேட்டுப்



பெறவேண்டும் என்ற புரட்சியை நடாத்திக் காட்டிடும் இயக்கம்.

அந்த இயக்கம், மேற்கொண்டுள்ள பிரசார முறை யிலே ஒன்று நாடகம்; அந்த நாடகங்களிலே ஒன்றுதான் நான் மேலே குறிப்பிட்ட 'வழக்கு'.

டக்ளஸ் டில்மன் மீது பொச்சரிப்பு காரணமாக வெள்ளை அதிகாரிகள் வழக்குத் தொடுத்தது பற்றிக் குறிப் பிட்டபோது, கருப்பு இனத்தவர், மக்கள் மன்றத்திலே வெள்ளையர் மீது தொடுத்துள்ள 'வழக்கு' பற்றி நாடகம் நடத்தப்படுவது நினைவிற்கு வந்தது.

''நான் இல்லை அங்கே! இருந்திருந்தால்!'' என்று கூறுவார் நமது முதலமைச்சர் பக்தவத்சலனார்.

வெள்ளையர்—கருப்பர் மோதுதல். அதன் காரண மாக இரத்தக் களறி சதா நடைபெற்றுக் கொண்டிருக்கும் நாடு அமெரிக்கா! இருந்தும் அங்கே வெள்ளையனைத் தூக்குத் தண்டனை பெறச் செய்கிறார்கள், நாடகத்தில். இங்கு மிகச் சாதாரணமான, துளியும் பலாத்கார வாடை அற்ற, பிரச்சார நாடகமாடினாலும் என்ன நடக்கிறது! 'உதயசூரியன்' என்ற நாடகத்தில் தம்பி கருணாநிதி எந்த விதமான 'பலாத்கார'ப் பிரச்சாரத்தையும் சேர்க்க வில்லை! ஆனால் 'உதய சூரியன்' என்று பெயர்! பக்தவத் சலனாரின் அரசாங்கம், ஆடாதே! என்று உத்திரவிட்டது; 'உதயசூரியன்' நாடகம் நின்றுவிட்டது.

அமெரிக்காவில், வெள்ளையர் பஞ்சமாபாதகம் செய்ததாகவும், உலகமன்றத்தின் முன்பு அவர்கள் இழுத்து வந்து நிறுத்தி வைக்கப் படுவதாகவும், வழக்கு நடைபெறு வதாகவும், தூக்குத் தண்டனை தரப்படுவதாகவும், கருப் பருக்கான ஒரு அமைப்பு, 'நாடகமாட' இடம் கிடைத் திருக்கிறது; நியூயார்க் நகரில்; போன நூற்றாண்டிலா? இல்லை! தம்பி! இப்போது, சில ஆண்டுகளுக்கு முன்பு!

ஆனால், ஒருபுறம் இந்த அளவு 'உரிமை' உணர்ச்சி மதிக்கப்பட்டு வருகிறதென்றாலும், மற்றோர் புறத்தில் நீக்ரோக்களை ஒதுக்கிவைத்து, கேவலப்படுத்தும் கொடு மையும் நெளிந்து கொண்டிருக்கிறது. அந்தச் சூழ்நிலை கப்பிக் கொண்டிருக்கும் இடத்திலல்லவா, டக்ளஸ் டில்மன் குடி அரசுத் தலைவரானார்? அவர்மீது நிறவெறியர்

பாய்ந்திடாதிருப்பார்களா! அதன் விளைவுதான் டில்மன் மீது தொடுக்கப்பட்ட கண்டன வழக்கு.

குடிஅரசுத் தலைவர் பதவிக்குத் தகுதியானவர் அல்ல.

குடிகாரர்! கூத்திக்கள்ளன்!

மனப்பிராந்தி நோயால் தாக்கப்பட்டவன்!

வெள்ளைப் பெண்மணியைக் கற்பழிக்க முயற்சித்த காதகன்.

இவ்விதமான 'குற்றச்சாட்டுகள்!' ஆதாரங்கள்! சாட்சிகள்! வாதங்கள்! இதழ்களிலே கண்டனக் கணைகள்! இவ்வளவும், நிறம் கருப்பு என்பதால்,

டில்மன் நாணயமானவர் என்பதிலே இதற்கு முன்பு எவருக்கும் எள்ளளவு சந்தேகமும் எழுந்ததில்லை,

டில்மன் நீக்ரோக்களின் விடுதலைக்காகப் பொறி பறக்கப் பேசிடும் போக்கினரும் அல்ல; புரட்சி இயக்கத் தொடர்பும் கொண்டவர் அல்ல; பொறுத்துக் கொள்ளும் பயிற்சி பெற்றவர்; பொறுப்பினை நன்கு உணர்ந்தவர்.

நீக்ரோக்களிலே, சிறிதளவு செல்வம் செல்வாக்கு கிடைத்துவிட்டால், வெளிச்சம் போட்டுக்கொண்டு திரிபவர்கள் சிலர் இருந்தனர்; இவர் அவ்விதமான போக்கினரும் அல்ல.

தம்பி! நிறம் கருப்பு என்றால் என்ன என்று நாம் இங்கு எளிதாகப் பேசிவிடலாம்; கருப்பில் அழகியடி! என்று சிந்து பாடிடலாம்; ஆனால் அமெரிக்காவிலே உள்ளவர்களுக்குத் தான் தெரியும் 'கருப்பு' என்னென்ன கொடுமைகளை, இழிவுகளைத் தாங்கிக்கொள்ள செய்கிறது என்கிற விவரம்.

அமெரிக்க நீக்ரோக்கள் எல்லோருமே கருப்பு நிறம் அல்ல! அவர்களிலே பலர், மாநிறம், வெள்ளைநிறம் கூட. ஆனால், இனம் நீக்ரோ, நீக்ரோ இரத்தம் கலந்திருக்கிறது என்று தெரிந்தால் போதும், அமெரிக்க சமூகத்திலே இடம் கிடையாது! ஒதுக்கிடம்! ஓரம்! குப்பைமேடு!!

இந்தக் கொடுமையிலிருந்து தப்பித்துக்கொள்ள எண்ணுவர், சிறிது வெள்ளைநிறமாகப் பிறந்துவிடும்



நீக்ரோக்கள்: யாருக்கும் தெரியாமல், பிறந்த இடத்தை விட்டு நெடுந்தொலைவு சென்று, வெள்ளையருடன் வெள்ளையராக வசித்துவர விரும்புவராம். அவ்வளவு துடிப்பு, பாவம் அவர்களுக்கு. கர்த்தர்! தமது கருணையால் நம்மை கருப்பு நிறத்துடன் படைப்பிக்கவில்லை; நமது நிறமோ வெள்ளை! நாம் வெள்ளையர் வாழும் பகுதியில் சென்று இருந்து விடலாம்; யாவரும் கண்டுபிடிக்கமாட்டார்கள்; கருப்பு நிறத்தவர்மீது வீசப்படும் இழிவிலிருந்து, கொடுமையிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம் என்று நினைப்பார்களாம்.

அவ்விதமான எண்ணம் கொண்டு, ஒருவருக்கும் தெரிவிக்காமல், பல ஆண்டுகளுக்கு முன்பே, வீட்டை விட்டு ஓடிவிட்டாள், டில்மன் பெற்றெடுத்த பெண்!

எங்கே இருக்கிறாள், எப்படி இருக்கிறாள் என்பதே தெரியாது; தொடர்பு அடியோடு அற்றுப்போய்விட்டது. ஆனால், எங்கோ வெள்ளையருடன் வெள்ளை மாதாக இருந்து கொண்டிருக்கிறாள்.

அந்தத் துக்கம் டில்மன் மனதைப் பிய்த்துக் கொண்டிருக்கிறது; அதையும் பொறுத்துக் கொள்கிறார்;

மனைவி, காலமாகி விட்டாள்; மகளோ தலைமறைவு; மகனோ கல்லூரியில் உலவுகிறான், அப்பா ஒருநொடியில் நீக்ரோக்களின் இழிவுகளைத் துடைத்துவிடுவார் என்ற நம்பிக்கையுடன்; சூழ இருக்கும் வெள்ளை அதிகாரிகளோ, "தலையாட்டிக் கொண்டிருப்பதானால் தர்பாரில் இடம்! தன்னிச்சையாக நடந்துகொள்ள முனைந்தால் தூக்கி எறியப்படுவாய்!" என்று எச்சரிக்கிறார்கள்; பார்வையால், விஷமத்தனம் கலந்த புன்னகையால்.

இவ்வளவும் புரிகிறது; ஆனால் எதையும் வெளியே வெளிப்படையாகப் பேசுவதற்கும் இல்லை.

சிக்கலான பிரச்சினைகள், அய்யப்பாடுகள், மனக் குழப்பங்கள், மனக் குமுறல்கள் ஏற்படும்போது, எது முறை? எதனை எவ்விதம் செய்திடலாம்? என்பது பற்றிக் கலந்து பேசிடவும், தக்க கருத்து பெற்றிடவும், தன்னலமற்று, அறிவுத் தெளிவுடன் யோசனை கூறிடத்தக்கவர்களைப் பெற்றிடவும் முடியாது போய்விடும்போது, பொறுப்புக்களை மேற்கொண்டு விட்டுள்ளவர்களின்

தவிப்பும் தத்தளிப்பும் எவ்விதம் இருக்கும் என்பதனை விளக்கிட முடியாது. அத்தகைய அல்லலால் தாக்குண்டவர்கள் பற்றி எழுதப்பட்டுள்ள ஏடுகளிலிருந்து அது பற்றித் தெரிந்துகொள்ளலாம்; ஓரளவு; முழு அளவு அல்ல.

தெளிவும் துணிவும் பொறுப்பும் பொறுமையும் மிகுதியாக இருக்கவேண்டும்.

தன் சொந்தக் கருத்தைத் திணிக்க வேண்டும் என்ற நினைப்பு எழலாகாது.

பிரச்சினையை எந்தவிதமான விருப்பு வெறுப்புகளுடனும் பிணைத்து விடலாகாது.

தவறான கருத்தைத் தந்திரமாகப் புகுத்தும் முயற்சியை மேற்கொள்ளக் கூடாது.

என் யோசனைதான்! என் திட்டம்தான்! என்ற எக்களிப்பைக் கொட்டிக் காட்டக் கூடாது.

கேட்பவர், கருத்தற்றவர்; அறிவுப் பஞ்சத்தால் நம்மை வந்து நாடுகிறார் என்ற தப்புக் கணக்குப் போடக்கூடாது.

பிரச்சினையை அணுகும்போது, தனது நிலையை அளவுகோலாக்கிக் கொள்ளாமல், பொறுப்பினை மேற்கொண்டுள்ளவரின் நிலையினை அளவுகோலாகக் கொள்ளவேண்டும்.

கேட்பவர் மனம் மகிழவேண்டும் என்பதற்காகத் தித்திப்பு கூட்டக்கூடாது; பிரச்சினையை விட்டு விடட்டும் என்பதற்காகக் கசப்பினையும் கலக்கக் கூடாது.

இவ்வளவு இலக்கணமும் பொருந்தியுள்ளவர்கள், கிடைத்தால் மட்டுமே, பொறுப்பினை மேற்கொள்பவர்கள், மனதிலே எழும் அய்யப்பாடுகளை நீக்கிக் கொள்ள, சிக்கல்களைப் போக்கிக் கொள்ள, வழி காண்பர். டில்மன், மனதிலே என்னென்ன அய்யப்பாடுகள் எழுந்திருக்கக் கூடும் என்பதுபற்றி ஒரு பட்டியல் தயாரித்துப் பார்த்தால், தம்பி! தலை சுற்றும்; அவ்வளவு இருக்கத்தான் செய்யும். யாரிடம் கலந்து பேசுவார்? அவர் நிறமோ கருப்பு! இருக்கும் இடமோ வெள்ளை மாளிகை!! சூழ உள்ளவர்



களோ வெள்ளை ஆதிக்கப் பாதுகாவலர்! மக்களோ இரு பிரிவு; நிறத்தால், இனத்தால்; ஒன்றை ஒன்று பகைத்துக் கொண்டு. இவர் மனதிலே எழும் அய்யப்பாட்டிலே முக்கியமானதோ, நிறம் பற்றிய நினைப்பு அற்று, நீதியாக நேர்மையாக, அரசியல் சட்ட திட்டம் ஒழுங்குமுறை கெடாத வகையில் ஆட்சியை எப்படி நடத்திச் செல்ல முடியும் என்பது பற்றி. இதற்கு யாரிடம் யோசனை கேட்பார்! நீக்ரோ தலைவர்களிடம் கேட்க முனைந்தாலே புருவத்தை நெறிப்பர், பகை கக்குவர்; இனம் இனத்தோடு என்று பழி சுமத்துவர் வெள்ளையர்.

அவர்கள் எதையோ கூறிக்கொள்ளட்டும் என்று எண்ணி நீக்ரோ தலைவர்களுடன் கலந்து பேசினால், அவர்கள் எந்தவிதமான யோசனை கூறுவார்கள்? பெரும்பாலான நீக்ரோ தலைவர்கள்; 'படமுடியாதினித் துயரம்! பட்டதெல்லாம் போதும்' என்ற மனப்போக்கினராகி விட்டனர், வெள்ளையரின் நிறவெறி அவர்களின் உள்ளத்தில் வெந்தழலை மூட்டிவிட்டது. அவர்கள் நிதானமாக நடந்துகொள்ளச் சொல்லவே மாட்டார்கள்!!

வெள்ளை இனத்தவரிடம் கலந்து பேசினால்? நீக்ரோ மக்களின் 'சாபம்' தன்னாலே வந்து சேரும். வெள்ளையரின் எடுபிடி என்பார்கள்! இனத்தைக் காட்டிக் கொடுக்கும் கயவன் என்பார்கள்! கூசாமல் பழி சுமத்துவார்கள்.

இரு நிறத்தினரையும் கேட்காமல், இருந்திடின்? இதயம் சுக்குநூறாகிறது, சிக்கல்நிறைந்த பிரச்சினைகளால்.

தம்பி "கை கூப்பியும் கண்ணீர் பொழிந்தும் கர்த்தரின் அருளைப் பெறப் பாசுரம் பாடியும், அடிமை நான் ஐயனே! கருணை காட்டுவீர்! அறியாமைப் பிடியில் உள்ளேன், தெரியாமல் பிழை செய்தேன், பொறுத்தருளுவீர்! நான் உமது அடிமை, உமது உடமை!" என்று கெஞ்சிடும் நிலையில் நீக்ரோக்கள் இல்லை. ரொட்டித் துண்டுகளை வீசினால் விழுந்தடித்துக் கொண்டு ஓடி பொறுக்கி எடுத்துக்கொள்ளும் இழிநிலையை விரும்பிடும் போக்கில் இல்லை. அவர்களின் கண்கள் பொழிய வேண்டிய அளவு கண்ணீரைப் பொழிந்துவிட்டன; வறண்டு விட்டன; இப்போது அங்கிருந்து கிளம்புவது நீர் அல்ல; நெருப்பு; கோபப் பொறிகள்! கொடுமைகளைத் தாங்கித் தாங்கி அவர்களின் உள்ளம் எரிமலையாகி விட்டது!

அவர்கள் இச்சகம் பேசவோ, பச்சைச் சிரிப்பு சிரித்துக் காட்டி 'பணம்' கேட்கவோ தயாரில் இல்லை. அவர்களை நிமிர்ந்து நிற்கச் செய்து விட்டனர், பலப்பல தலைவர்கள்; பல்வேறு வகையான தலைவர்கள், தொடர்ந்து எழுச்சியும் விழிப்புணர்ச்சியும், புரட்சிப் போக்கும் ஊட்டப்பட்டு வரப்பட்டதால், அவர்களை அடக்கிவைப்பதும் முடியாத தாகிவிட்டது, ''ஆராரோ'' பாடி தூங்கவைக்கவும் முடியாததாகிவிட்டது; பகட்டு, போலி, பளபளப்பு, பசை இவைகளைக் காட்டி மயங்க வைக்கவும் முடியாததாகி விட்டது; அவர்கள் உரிமையைக் கேட்கின்றனர்; உரத்த குரலில்; நிமிர்ந்து நின்று; நீதியின் பேரால் மட்டுமல்ல, எங்களாலும் எல்லாம் முடியும் என்ற வலிவு காட்டி.

இந்த நிலையினை மிக வேகமானதாக்கிடுவதிலே முனைந்து வேலை செய்த அமைப்புக்களிலே ஒன்றுதான் தம்பி! நான் முதலிலே குறிப்பிட்டுக் காட்டினேனே, கருப்பு முஸ்லீம் என்ற இயக்கம்,

சட்டம், ஒழுங்கு, நீதி, நேர்மை, உலகப் போக்கு, உயர் தத்துவங்கள் ஆகியவைகளை விளக்கிக் காட்டியவர்களின் குரலைக்கேட்டு, மதிப்பளிக்காத நிறவெறியர்கள் எலிஜா முகமது என்பவர் துவக்கி நடத்தி வந்த கருப்பு முஸ்லிம் இயக்கத்தவரின் இடியோசை கேட்டு மிரண்டிடலாயினர். டக்ளஸ் டில்மன் காலத்திலே அல்ல தம்பி, டக்ளஸ் கதை; நான் குறிப்பிடும் கருப்பு முஸ்லீம் நடைமுறை நிகழ்ச்சி.

'கருப்பு முஸ்லீம்' இயக்கம் வெள்ளை நிறவெறியர் மனதிலே பீதியை மூட்டியதுபோலவே நீக்ரோக்கள் மனதிலே என்றும் இல்லாத ஒரு துணிவை ஊட்டிவிட்டது. எலிஜா முகமது துவக்கிய இயக்கம், எண்ணற்ற, நீக்ரோக்களை, வெள்ளையரின் ஆதிக்கத்தை எதிர்த்து நிற்கும் வீரம் பெறச்செய்தது; அவர்கள் ஒரு தனி வாழ்க்கை முறையே அமைத்துக் கொள்ளலாயினர். தனிப் பள்ளிக்கூடங்கள்; அங்காடிகள், தொழிலிடங்கள்; பணிமனைகள்! ஒட்டும் வேண்டாம் உறவும் வேண்டாம் இந்த வெள்ளையருடன்! என்று துணிந்து கூறினர். புதியதோர் தன்னம்பிக்கையும் பெற்றனர்.

கிருத்துவ மார்க்கம் இந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கத் தவறி விட்டது, அமெரிக்க சர்க்கார்



தவறிவிட்டது. எனவே, அந்த மார்க்கமும் உமக்கு வேண்டாம். அந்த அரசிடம் பிடிப்பும் வேண்டாம். நீதி வேண்டும்; விடுதலை வேண்டும் சமத்துவம் வேண்டும்! இவற்றை ஒருவரும் தரமாட்டார்கள். நாமாகத்தான் பெற்றுக் கொள்ள வேண்டும். எப்படி? நாம் தனி! தனி இனம்! எனவே தனி அரசு வேண்டும்! தனி நாடு வேண்டும் என்று கூறிவிட வேண்டும். வெள்ளையருடன் ஒரே அரசில் வாழ்வது ஓநாய்களுக்கு மத்தியில் ஆடுகள் இருப்பதைப் போன்றதே! நாம் யார்க்கும் குடியல்லோம்!

எலிஜாவின் இந்தப் பேச்சு, தத்துவமாகிவிட்டது; இயக்கம் மார்க்கமாகிவிட்டது. நீக்ரோக்களுக்கு என்றுமில்லாத அளவு 'தெம்பு' பிறந்துவிட்டது. முஸ்லீம் மார்க்கத்தினை மேற்கொண்டு விட்டதாக இலட்சக் கணக்கானவர்கள் அறிவித்து விட்டனர்.

தம்பி! இதழ்களில் பார்த்திருப்பாய். சென்ற திங்கள் உலகப் புகழ் பெற்றிடும் வெற்றி ஈட்டினான் க்ளே என்ற நீக்ரோ குத்துச் சண்டை மாவீரன்! அவன், தன்னை 'முஸ்லீம்' என்றுதான் அறிவித்திருக்கிறான்.

ஏன் கருப்பாகப் பிறந்தோம் என்று ஏங்கிக் கிடந்தவர்கள் எழுந்து நின்று, ஆமாம்! கருப்பு! அதனால் என்ன? கருப்பு, சிறப்பு! என்று முழக்கம் எழுப்புகிறார்கள் எலிஜா துவக்கிய இயக்கம் காரணமாக.

இப்படி! இப்படி! எல்லோரும் வாருங்கள்! வெள்ளை நிறத்தார்களைப் பற்றிப் பேசப் போகிறேன்.

பேசு! பேசு சகோதரா! பேசு!

ஒன்று கேட்கிறேன், சொல்லுங்கள் பார்ப்போம். நல்லது செய்த ஒரு வெள்ளையனைப் பார்த்ததுண்டா, நீங்கள்?

இல்லை! இல்லை!

போகட்டும், உங்கள் பேரில் பூட்டப்பட்டுள்ள பொருளாதாரத் தளைகள் பற்றித் தெரியுமா, உங்களுக்கு, சொல்லுகிறேன். காலையிலே எழுந்திருக்கிறீர்கள், படுக்கையை விட்டு; எலிகளும் கரப்பான்

பூச்சிகளும் ஓடுகின்றன உங்கள் படுக்கையிலிருந்து. நான் சொல்வது சரிதானே?

உண்மைதான்! உண்மைதான்!

ஓடிப்போய் உங்கள் குழந்தையைப் பார்க்கிறீர்கள்; குழந்தையின் காதுகளை எலிகடித்துத் தின்று விட்டதா என்று பார்ப்பதற்காக! உண்மை தானே! சரிதானே நான் சொல்லுவது?

உண்மை! உண்மை!

கூரையிலிருந்து சுண்ணாம்பு அடை மேலே விழுகிறது. ஒட்டைச் சட்டியிலே தண்ணீர்! அதைக் கொண்டு முகத்தைக் கழுவிக் கொள்கிறீர்கள். அப்படித்தானே?

ஆமாம் ஐயா! ஆமாம்! அப்படித்தான்.

தூக்கத்தைக் கழுவி விட்டுவிட்டு, கந்தல் ஆடையை உடுத்திக் கொள்ளுகிறீர்கள்; கடனுக்கு வாங்கியது; கடனைக் கட்டி தீர்க்கவில்லை இன்னும்; உண்மைதானே?

ஆமாம்! சொல்லு ஐயா! சொல்லு! கொல்ல வேண்டும் வெள்ளையர்களை.

பிறகு, அதற்குப் பிறகு, செல்லுகிறீர்கள்...... வெள்ளை எஜமானனிடம் வேலை செய்ய......அயிசன் பர்க்! அவன் பெயர் என்று வைத்துக் கொள்ளுங்கள்; வெள்ளை எஜமானன்.

ஆமாம்! வெள்ளை எஜமானனிடம் வேலை செய்கிறோம்.

எட்டு மணி நேரம் வேலை! வாரம் ஐந்து நாள்! மொத்தம் 44 டாலர் கூலி பெறுகிறீர்கள்.

ஆமாம்! 44 டாலர்!

வியர்வை சிந்தச் சிந்த நீங்கள் உழைத்து இந்த 44 டாலர் சம்பாதிக்கிறீர்களே இதைப் பார்த்துக் கொண்டிருக்கிறானே அயிசன் பர்க், அவன் 440 டாலர் சம்பாதிக்கிறான், நான் சொல்வது சரியா? தவறா?



முழுக்க முழுக்கச் சரி! உண்மை! அப்படிச் சொல்லு, அதை எல்லாம் சொல்லு.

கவலைப்படாதே சகோதரா! கவலைப்படாதே! அப்பட்டமான உண்மையைத்தான் சொல்வேன். எல்லோருக்கும் விளங்கும்படி, உள்ளதை உள்ளபடி சொல்லுவேன். நாளெல்லாம் உழைக்கிறீர்கள். பிறகு இங்கே வருகிறீர்கள்—வந்து துணி வாங்குகிறீர்கள்; யாரிடம்? கோசன் பர்க்கிடம்!

ஆமாம்!

அயிசன்பர்க்கிடம் வேலை செய்து வாங்கிய கூலியிலே ஒரு பகுதியைத் துணிக்காக கோசன்பர்க்கிடம் கொடுக்கிறீர்கள். பிறகு? நகைநட்டு வாங்குகிறீர்கள், கோல்ட் பர்கிடம்!

ஆமாம்...அப்படித்தான்...

வீட்டு வாடகை கட்டுகிறீர்கள்...பைன்பர்க்கிடம்

ஆமாம் ஐயா! ஆமாம்!

கடன் வாங்குகிறீர்கள். கம்பெனியிடம்! கம்பெனி நடத்துவது யார்? வீன்பர்க்!

அப்படிச் சொல்லு! அதைச் சொல்லு!

ஆனால்; உங்களுக்கு எது தெரியவில்லை என்றால், நான் சொல்லிக்கொண்டு வந்தேனே அயிசன்பர்க், கோசன்பர்க், பைன்பர்க், கோல்ட்பர்க், வீன்பர்க் இவர்கள் எல்லாம் அண்ணன் தம்பிகள்! ஒரே இனம்!! உழைக்கிறீர்கள்; கிடைப்பதை இந்தக் கும்பல் பறித்துக் கொள்கிறது. இதுதான், நான் சொன்ன பொருளாதாரத் தளைகள், புரிகிறதா!!

ஒரே சிரிப்பொலி! ஆரவாரம்!

தம்பி! நீக்ரோக்கள் குடி இருக்கும் பகுதி ஒன்று, நியூயார்க் நகரில்; ஹார்லாம் எனும் பெயர், அந்த குப்பை மேட்டுக்கு; அங்கு தெருக் கோடியில் அடிக்கடி நடைபெறும் கூட்டம் பற்றியது நான் குறிப்பிட்டுக் காட்டியது. லோமாக்ஸ் என்பவர், கருப்பு முஸ்லீம்கள் பற்றிய விவரம் அளித்து எழுதியுள்ள ஏட்டில், இந்த நிகழ்ச்சி படமாக்கப்பட்டிருக்கிறது.

இந்தவிதமான பிரசாரம் நீக்ரோ மக்களிடம் என்ன விதமான மனப்பான்மையைக் கிள்ளிவிட்டிருக்கும்! அந்த மனநிலையில் உள்ள நீக்ரோக்களை, ஒரு நீக்ரோ குடிஅரசுத் தலைவரான பிறகும் அடக்கி வைத்திட முடியுமா! அத்தனைக் கொடிய இனத் துரோகம் செய்திட யாருக்காகிலும் துணிவு பிறந்திடுமா!

ஆனால் வற்புறுத்துகிறார்கள் டில்மனை டர்னரைட் இயக்கத்தைத் தடை செய்யும் சட்டம் பிறப்பிக்கும்படி.

இந்த டர்னரைட் இயக்கந்தான், தங்களுக்காக உண்மையாகப் பாடுபட்டு வருகிறது; அதன்மீது வேண்டுமென்றே வெள்ளையர்கள் பழி சுமத்தி ஒழித்துக்கட்டப் பார்க்கிறார்கள் என்று நீக்ரோக்கள் எண்ணிக் கொண்டுள்ளனர்.

ஆனால் டில்மனைச் சூழ உள்ள வெள்ளைப் பேரதிகாரிகளோ, டர்னரைட் இயக்கம் கம்யூனிஸ்டு இயக்கம், பலாத்கார இயக்கம் என்று வாதாடுகிறார்கள். ஒரு நீக்ரோ குடிஅரசுத் தலைவராகிவிட்டதால் அந்த இயக்கம் தலை துள்ளி ஆடுகிறது. ஒரு நீக்ரோ, நீக்ரோ இயக்கத்திற்குத் தடை விதிக்கமாட்டார் என்ற தவறான நம்பிக்கையால்; ஆகவே தாங்கள், தங்கள் நிறத்தை மறந்து, அமெரிக்க நாட்டுக் குடிஅரசுத் தலைவர் என்பதை நினைவிலே கொண்டு, அமெரிக்காவில் பயங்கரத்தையும் பலாத்காரத்தையும் மூட்டிவிட்டுப் பாழ்படுத்தும் டர்னரைட் இயக்கத்திற்குத் தடை விதிக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறார்கள்.

நீக்ரோ தலைவர்களோ டர்னரைட் இயக்கத்தைத் தடை செய்தால், இனத்துரோகி என்ற இழிவை ஏற்றுக்கொள்ள வேண்டி வரும் என்று எச்சரிக்கிறார்கள். டில்மன் மிரட்டல் எச்சரிக்கை இவைகளைப் பொருட்படுத்தவில்லை. எந்த முடிவு எடுப்பதாக இருந்தாலும், தீர யோசித்து நியாயமானதுதான், அரசியல் சட்ட திட்டத்துக்கும் ஒழுங்குக்கும் ஏற்றதுதான் என்று தெளிவாக மெய்ப்பிக்கப்பட்டால்தான் தடைவிதிக்க முடியும் என்ற கருத்துடன் இருந்தார்.

பலாத்கார இயக்கம் என்பதற்கும்

கம்யூனிஸ்டு தொடர்பு உள்ள இயக்கம் என்பதற்கும்



ஆதாரம் வேண்டும்! பிறகுதான் தடைவிதிக்க முடியும் என்று அறிவிக்கிறார்; ஆத்திரம் பீறிட்டுக்கொண்டு வருகிறது வெள்ளைப் பேரதிகாரிகளுக்கு.

நமது யோசனையை மீறுகிறான்!

நம்மை மதிக்க மறுக்கிறான்!

கருப்பருக்காகப் பரிவு காட்டுகிறான்!

உண்மையிலேயே ஆட்சி செய்ய நினைக்கிறான்!

வெள்ளை மாளிகையில் இருக்கிறோம் என்று இறுமாப்புக் கொள்கிறான்.

மாளிகையின் பெயர் வெள்ளை மாளிகை! இவன் நிறம் கருப்பு! அதையே மறந்து விட்டான்.

இவ்விதம் வெள்ளைப் பேரதிகாரிகள் எண்ணி இருந்திருப்பர், எரிச்சலாகத்தான் இருந்திருக்கும்.

நீக்ரோக்களின் உரிமைக் கிளர்ச்சியை இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வெற்றிகரமாக நடத்திச் சென்ற நீக்ரோ தலைவர் மார்ட்டின் லூதர் கிங் என்பார், ஒரு முறை, அமெரிக்கக் குடிஅரசுத் தலைவராக இருந்து மறைந்த மாவீரன், அவனிபுகழ் கென்னடியிடம் தொலைபேசி மூலம் கேட்டாராம், ''குடிஅரசுத் தலைவர் அவர்களே! நிறபேதம் ஒழிக்கப்பட வேண்டும் என்பதிலே அக்கறை காட்டும் தாங்கள் வீற்றிருக்கும் மாளிகையின் பெயரே வெள்ளை மாளிகை என்று இருக்கிறதே! பொருத்தமாக இல்லையே'' என்று; கென்னடி, ''அது நெடுநாட்களாக இருந்து வரும் பெயர்; வேறு பொருள் கொள்ளத் தேவையில்லை'' என்று பதிலளித்தாராம்.

ஆனால் நிறவெறியர்கள், அவ்விதம் கருதுவதில்லை. வெள்ளை மாளிகை! என்ற பெயர் பொருத்தம் பார்த்து, பொருள் அறிந்து வைக்கப்பட்டதாகவே கருதுகின்றனர், அதற்கேற்றபடியே நடந்து கொள்கின்றனர்.

அந்த இயல்பினர், டில்மன் தன்னிச்சையாக நடக்கத் தலைப்படுவது அறிந்து, இனியும் விட்டுவைக்கக்கூடாது; தீர்த்துக் கட்டிவிட வேண்டியதுதான் என்று முடிவு செய்தனர். அவர்களின் முடிவைத் துரிதப்படுத்துவது போல மற்றோர் சம்பவம் நடைபெற்றது. 'டர்னரைட் இயக்கம்'

பற்றிய த்கவல்களை விசாரித்தறிந்து 'அறிக்கை' அளிக்கும் படி ஒருவரை, டில்மன் நியமித்தார்.

நாங்கள் சொல்லுகிறோம்; எங்கள் வார்த்தையை நம்பாமல் விசாரணைக் கமிட்டி நியமிக்கிறாரா! அவ்வள வுக்கு வளர்ந்துவிட்டாரா! என்று கோபம் கொப்பளித்தது வெள்ளைப் பேரதிகாரிகளுக்கு.

'டர்னரைட் இயக்கம்' பற்றிய விசாரணை நடத்தும் படி நியமிக்கப்பட்டவர் யார் என்பது தெரிந்தும், அந்தப் பேரதிகாரிகளின் ஆத்திரம் மேலும் சீறிக்கொண்டு எழுந் தது ஏன்? என்று கேட்கிறாய் தம்பி! கொஞ்சம் பொறுத்துக் கொள்ளேன் அடுத்த கிழமைவரையில்!

அண்ணன்,

27—2—'66



காஞ்சிக் கடிதம்: 52

# வெள்ளை மாளிகையில்...(5)

★ ஆதிக்கத்தின் கருவி
★ உரிமைப் போர்—ஒரு தொடர்கதை
★ மால்கோமின் 'ஆள்வெறுப்பு'க் கோட்பாடு
★ டில்மனின் பொறுப்புணர்ச்சி
★ புயல் வெடித்தது!

தம்பி,

ஆதிக்கம் செலுத்தும் போக்கு ஒவ்வோர் நாட்டில் ஒவ்வோர் விதமான வடிவம் கொள்ளுகிறது; கருவியைத் தேடிப் பெற்றுக் கொள்கிறது. வடிவமும் கருவியும் வகை யிலே பலவாக இருப்பினும் நோக்கம் மட்டும் ஒன்றுதான்! எளியோர் தமை வலியோர் சிலர் வதை புரிவதுதான்! வலியோராகச் சிலர் இருப்பதற்குக் காரணம் பலப்பல; கட்டத்துக்குக் கட்டம், நாட்டுக்கு நாடு இக்காரணம் வேறு வேறாக இருந்திடும்.

இனம், மதம், மொழி, நிறம், பணம் என்பதை ஒவ் வொன்றும் ஒவ்வோர் காலத்தில், ஒவ்வோர் நாட்டில், ஆதிக்கக்கருவியாகப் பயன்பட்டு வருவதைக்காண்கிறோம். இந்த ஆதிக்கத்தின் எந்த வடிவத்தை ஆராய்ந்திடினும், ஒரு பொதுவான பாடம் கிடைத்திடும். அதற்காகவே 'நிறம்' காரணமாகப் புகுத்தப்பட்டுள்ள ஆதிக்கத்தைக் குறித்துச் சிறிதளவு விரிவாகவே விளக்கிக் கொண்டு வரு

கிறேன். நிறம் என்பது கருவியாக அமைந்திருப்பதுபோல, இனம், மதம், பணம் என்பவைகளிலே ஏதேனும் ஒன்று கருவியாக அமைந்திடினும், கொடுமையின் அளவு குறைவானதாக இருந்திடாது. எனவேதான், எங்கோ அமெரிக்காவில் கப்பிக்கொண்டுள்ள நிறவெறி பற்றிய விவரங்களைத் தெரிந்து கொள்வது வேறுவிதமான கருவியின் துணையுடன் இருந்து வரும் ஆதிக்கம் பற்றி எண்ணிடவும், பாடம் பெற்றிடவும் வழிகாட்டும் என்ற எண்ணத்துடன் இத்தனை விரிவாக எழுதிக் கொண்டிருக்கிறேன். பிரச்சினை எங்கோ நெடுந் தொலைவில் இருப்பது என்றோ, நமக்குச் சம்பந்தமில்லாதது என்றோ எண்ணிக்கொண்டு, பெற வேண்டிய பாடத்தினை இழந்துவிடக்கூடாது.

மதவெறி குறையவில்லை, ஜாதிப்பித்தம் போகவில்லை, குலச்சண்டை ஒழியவில்லை என்று பிறநாடுகள் குறித்து மிகக் கேவலமாகப் பேசும் வாடிக்கை பொதுவாக மேனாட்டினருக்கு உண்டு. மேனாட்டினரில் புரட்சிக் கருத்துக்களையும் புதுமுறை அரசியலையும் மேற்கொண்டவர்கள் அமெரிக்கர்கள். அமெரிக்காவுக்கு 'மே பிளவர்' என்ற கப்பலில் ஐரோப்பிய நாடுகளிலிருந்து, மதக் கொடுமை, அரசியல் ஆதிக்கக் கொடுமை ஆகியவற்றிலிருந்து விடுபட, கருத்துச் சுதந்திரம் பெற்றிட, மனிதத் தன்மையைப் போற்றிப் பேணிடக் கிளம்பியவர்கள், 'அமெரிக்கர்கள்,' ஆனபிறகு, கொடுமையான ஒரு ஆதிக்கத்தை, நிறவெறியைக் கருவியாகக் கொண்டு புகுத்திவிட்டனர்; அதனை மிருகத்தனமாக இன்றும் நடத்திக் கொண்டு வருகின்றனர்.

இந்த இயல்பு, அமெரிக்கர் மட்டுமே பெற்றுள்ளது என்று எண்ணிக்கொள்ளக் கூடாது.

ஆதிக்கத்தை எதிர்த்து நின்று ஒழித்தவர்கள், கொடுமைகளைத் தாக்கித் தகர்த்தவர்கள், பிறகு தாமே ஆதிக்கம் செலுத்துவோராகவும், கொடுமையாளர்களாகவும் மாறிவிடுகின்றனர். எப்போது? தங்கள் நிலை, வலுவாகி விட்டது என்ற துணிவு பிறந்ததும். இதற்கான சான்றுகள் வரலாற்றுச் சுவடிகளில் நிரம்ப உள்ளன. சுவடிகளைக்கூடப் புரட்டிக் கொண்டிருக்கத் தேவையில்லை. நம்மைச் சுற்றிலும்கூட அந்த நிலைமை இருந்திடக் காண்கிறோம்.



பேச்சுச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம், கூடிக் குறைகளை எடுத்துக்கூறும் சுதந்திரம், கிளர்ச்சிச் சுதந்திரம், என்று மேடை அதிரப் பேசியவர்கள், ஆர்வம் கொந்தளிக்கப் பேசியவர்கள், ஆர்வத்தை மற்றவர்களுக்கும் ஊட்டியவர்கள்தான், காங்கிரஸ் கட்சியினர். ஆனால், அவர்களின் இன்றைய போக்கு? எந்த ஆதிக்கத்தையும் கொடுமையையும் எழுச்சியுடன் எதிர்த்து நின்றனரோ, அதே விதமான ஆதிக்கத்தையும் கொடுமையையும் கூசாமல், தட்டுத்தடங்கல் இல்லாமல் செய்திடக் காண்கின்றோமே? இந்த பதினெட்டு ஆண்டுகளில் அடக்குமுறையை எதிர்த்து நின்ற இந்த ஆற்றல்மிக்கோர், தடைச் சட்டங்களைத் தூளாக்கிய இந்தத் தீரர்கள், சிறைச்சாலை என்ன செய்யும் என்று சிந்து பாடிய இந்தச் சீலர்கள், வெள்ளைய ராட்சியிலே வீசப்பட்ட எந்த அடக்குமுறைக் கருவியை விட்டு விட்டார்கள்? அதே குண்டாந்தடி; புதிதாகப் பித்தளைப்பூண் போட்டிருக்கிறார்கள். அதே துப்பாக்கிச் சனியன்; மாணவர்களின் மார்பினைக்கூடப் பதம் பார்க்கிறது; அதே குண்டுகள்; முன்பு விரட்டுவதற்கு; இப்போது சாகடிப்பதற்கு; அதே சிறை, அதே 144; அதேவிதமான அவசரச் சட்டங்கள், ஆள்தூக்கிச் சட்டங்கள், ஊரடங்குச் சட்டங்கள்; உடமையைப் பறிக்கும் சட்டங்கள்; நாடு கடத்தும் சட்டங்கள்; நாக்கறுப்புச் சட்டங்கள்!! ஒன்று கூட விட்டுவிடவில்லை; ஆங்கில ஏகாதிபத்தியம் தனது பாசறையில் வைத்திருந்த கருவிகள் அனைத்தையும் இன்று காங்கிரசார், பயன்படுத்துகின்றனர்; உரிமைக் குரலை அடக்கிட; கிளர்ச்சிகளை ஒழித்திட!! வெள்ளையர்கள் கொண்டிடாத அளவு துணிவுடன், நம்பிக்கையுடன்!! ஆயினும் இவர்களேதான் ஐம்பதாண்டுகளுக்கு மேலாக ஆர்ப்பரித்தனர், அடக்குமுறை ஒழிக! அநியாயச் சட்டங்கள் ஒழிக! என்று.

எனவேதான் தம்பி! உரிமைக்காகப் போராடுவது, ஒரு தொடர் கதையாக, முடிவுபெறாத நீண்ட நெடுங்கதையாக இருந்து வருகிறது. விழிப்புடன் இருந்து வந்தாலன்றி, எழுச்சியுடன் இருந்து வந்தாலன்றி ஆதிக்கம் ஓசைப்படாமல் மறுபடியும் இடம் பிடித்துக் கொண்டு விடும்! கதிரவன் ஒளி நித்த நித்தம் தேவைப்படுகிறது அல்லவா, கப்பிக்கொண்டுள்ள இருளை நீக்கிட அது

போல! உரிமை வாழ்வினைப் பெற்றிட மனிதகுலம் ஓய்வின்றி உழைத்தபடி இருந்தாக வேண்டி வருகிறது.

அமெரிக்காவில் குடியேறியவர்கள், கொடுங்கோலர்களின் வழிவழி வந்தவர்கள் அல்லர்; கொடுங்கோலை எதிர்த்து நின்றவர்கள். எனினும் அவர்கள் தங்களைக் சொடுங்கோலர்களிடமிருந்து விடுவித்துக் கொண்டான பிறகு, தாமே கொடுமைகளைப் புரியத் தொடங்கி விட்டனர்; அந்தக் கொடுமைகளை எதிர்த்து நிற்பவர்களை அழித்தொழிக்க, தமது வலிவினைப் பயன்படுத்தி வந்தனர். அந்தக் கொடுமையிலே ஒன்றுதான் நிறவெறி. இதனை எதிர்த்து நின்ற இயக்கங்கள் பலவற்றிலே ஒன்று டர்னரைட் இயக்கம். இந்த இயக்கம், பலாத்கார இயக்கமா, இரத்தவெறி கொண்டலையும் இயக்கமா என்பதனைக் கண்டறிய டக்ளஸ் டில்மன் நியமித்தவர், நிறவெறியை எதிர்த்து நின்ற மற்றோர் இயக்கத்தை நடத்திச் செல்பவர்.

பகைவனிடம் பஞ்சாங்கம் பார்ப்பது என்பார்களே அதுபோலல்லவா இருக்கிறது இது என்று எண்ணி, வெள்ளைப் பேரதிகாரிகள் ஆத்திரம் கொண்டனர்.

டக்ளஸ் டில்மன், அமெரிக்கக் குடிஅரசுத் தலைவராவதற்கு முன்பு வசித்து வந்த வீட்டிலே, குடிஇருந்து வந்தார், ஒரு நண்பர். அவர், அமைதி பொறுமை, பொறுப்புணர்ச்சி, சட்டம், ஒழுங்குமுறை ஆகியவைகளுக்கு உட்பட்டு, நீக்ரோக்களின் உரிமைக்காகவும் நல்வாழ்வுக்காகவும் பணியாற்றி வர ஒரு அமைப்பு கண்டார். ஆனால் அந்த அமைப்பு, ஆற்றலற்றது. பிரச்சினையின் அடிப்படையைக் கவனிக்க மறுப்பது, கைகூப்பியும் கண்ணீர் பொழிந்தும், கர்த்தரிடம் முறையிட்டும் கருணையைக் கேட்டுப் பெற்றும் காரியமாற்றிட எண்ணிடும் கிழட்டுத்தனம் கொண்டது; ஆகவே அந்த அமைப்பு போதாது என்ற எண்ணம் கொண்டவர்கள், அமைதியுடன் பணியாற்றி வந்த அமைப்பிலிருந்து விலகி, புரட்சிகரமான, புதிய அமைப்பை ஏற்படுத்திக் கொண்டனர். அந்த அமைப்பின் பெயர்தான் 'டர்னரைட் இயக்கம்' என்பது.

தீவிரம் நாடுவோர், புரட்சி முறை விரும்புவோர், புதிய விறுவிறுப்பு வேண்டுவோர், ஒவ்வோர் அமைப்பிலும் இருக்கத்தான் செய்வர். குருத்தோலைகள் பழுத்த ஓலைகளைக் கேலி செய்திட முனைவது விந்தை அல்ல; நடைமுறை. தம்பி! நான் குறிப்பிட்டேனே, வெள்ளையரைத் தூக்கிலிடுவதாக நாடகம் நடத்திடும் விதமான புரட்சி இயக்கம், கிருத்தவ மார்க்கத்தையே உதறித் தள்ளிவிட்டு, புதிய மார்க்கத்தை மேற்கொண்ட இயக்கம், கருப்பு முஸ்லீம் இயக்கம்.



வெள்ளையர் நடுநடுங்க, கருப்பர் தலை நிமிர்ந்து நின்றிடச் செய்த இயக்கம், அதுவே, பிறகு மந்தமானதாக—பிற்போக்குத்தனமானதாக — கிழட்டுத்தனம் மேலிட்டு விட்டதாகக் கருதப்பட்டு, புதியதோர் அமைப்பு, கருப்பு தேசிய இயக்கம் என்ற பெயருடன், கருப்பு முஸ்லீம் எனும் அமைப்பிலே சட்டாம்பிள்ளையாக இருந்துவந்த மால்கோம் என்பவரால் துவக்கப்பட்டது.

கருப்பு முஸ்லீம் அமைப்பின் கர்த்தாவான எலிஜா முகமது வெள்ளையரிடம் மூளையை அடகு வைத்து விட்டார். போராடும் இயல்பை இழந்துவிட்டார் என்று குற்றம் சாட்டிவிட்டு, புதிய அமைப்பைத் துவக்கிய மால்கோம், தனது இயக்கம், புரட்சிகரமானது என்பதனைக் காட்டிட வெள்ளை இனத்தவரை வெறுக்கக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தினார்! அதிலே பெரும் அளவு வெற்றியும் கண்டார்.

பண்பறிந்து ஒழுகுதல், பகைவனுக்கும் இரங்குதல், படிப்படியாக முன்னேறுதல், மனதை மாற்றுதல் என்பவைகள் கோழைகளின் முறைகள், இரத்தத்திற்கு இரத்தம்! கொடுமைக்குக் கொடுமை! பழிக்குப்பழி! என்பதே ஆற்றல்மிக்கோர் மேற்கொள்ள வேண்டிய முறை என்று எடுத்துக் கூறிய மால்கோம் எந்த அளவுக்கு வெறுப்பை ஒரு தத்துவமாக்கிக் கொண்டார் என்றால், தம்பி! ஒரு விமான விபத்தில் 120 வெள்ளையர் இறந்துபட்ட ஒரு நிகழ்ச்சியை, அல்லாவின் அருளால் கிடைத்த அகமகிழ்ச்சி தரும் ஓர் நற்செய்தி என்று அறிவித்திடும் அளவுக்கு!

இப்படி வெறுப்புணர்ச்சியை வளர்த்திடலாமா என்று கேட்டவர்களுக்கு மால்கோம், "தவறு என்ன! வெறுப்பை வெறுப்பதிலே தவறு என்ன! பல நூற்றாண்டுகளாக கொடுமைகளைச் செய்து குவித்துள்ள வெள்ளையர் மீது வெறுப்பு கொள்வது தர்மம்—நியாயம்!! என்று வாதிட்டாராம்.

வெள்ளையர்கள் எல்லோரும் பேய்கள் என்று கண்டிக்கிறீரே, அப்படியானால் ஏசுநாதரும் பேய்தானா? என்று ஒருவர் கேட்டபோது, மால்கோம் தட்டாமல் தயங்காமல் பதிலளித்தாராம்; ''ஏசுநாதர் வெள்ளையர் என்று யாரய்யா உமக்குச் சொன்னார்கள்? ஏசுநாதர் கருப்பர், வெள்ளையர் அல்ல'' என்று.

உலகிலே அவ்வப்போது உலவிய புகழ்மிக்கார் அனைவருமே கருப்பர்; வெள்ளையர் அல்ல என்று வாதாடினார் மால்கோம்.

கருப்பர், மனித இனத்திலேயே மட்டம், கர்த்தர் வெள்ளை மனிதர்களுக்கு உழைத்திடுவதற்கென்றே படைத்தார் மனித உருவு கொண்ட இந்த மிருகங்களை— என்று பேசிய வெள்ளைப் பாதிரிமார்கள் உண்டு! அந்த வெறியை அடக்கப் பிறந்த வெறி என்று கூறலாம் மால்கோம் போன்றார் ஊட்டிவிட்ட வெறுப்புணர்ச்சி.

இந்த வெறுப்புணர்ச்சி, கட்டு திட்டம், வரைமுறை சட்டம் ஒழுங்கு என்பவைகளை மதித்திடத்தக்க மனப் போக்கைத் துளியும் ஏற்படுத்தாதல்லவா? சுடு! இல்லையானால் சுடப்படுவாய்! கொல்லு! இல்லையானால், கொல்லப்படுவாய்! கொளுத்து! இல்லையானால் கொளுத்தப்பட்டு விடுவாய்! வெட்டு! இல்லையானால் வெட்டப் படுவாய்! தட்டு! திறக்க மாட்டார்கள்! உடை! தன்னாலே வழி திறந்து காணப்படும்! கேள்! கொடுக்கமாட்டார்கள்! பறித்துக் கொள், தடுத்திட இயலாது!! இந்தவிதமான பலாத்காரம் வெடித்துக் கிளம்பிற்று.

உரிமை, சமத்துவம் கேட்டுக் கேட்டு அலுத்துப்போய் விட்டது; வெள்ளையர் நாட்டில் கருப்பருக்கு உரிமையும் சமத்துவமும் கிடைத்திடாது; ஓநாய்களுக்கு மத்தியில் ஆடுகள் நிம்மதியாக வாழ்ந்திட முடியாது! ஆகவே அமெரிக்காவில் ஒரு பகுதியை, 'கருப்பர் நாடு' என்று ஆக்கி அமைத்திடுக!! அங்கு கருப்பர், தமது தேசீயத்தை, தமது நெறியை அமைத்துக் கொள்வார்கள். அஃது இல்லையெனில், கருப்பர்—வெள்ளையர் பூசல் இருந்தபடியே இருக்கும்; புரட்சி பூத்தபடி இருக்கும்; இரத்தம் பீறிட்டுக் கிளம்பியபடிதான் இருக்கும்; என்று மால்கோம் போன்றார் முழக்கமிட்டனர். இந்த முழக்கம் வெள்ளையரின் மனதிலே அச்சத்தை மூட்டி விட்டது! இது அழிக்கப்பட வேண்டிய ஆபத்து என்று அலறினர். அப்படிப்பட்ட



ஆபத்து இந்த டர்னரைட் இயக்கம் என்று விவரம் விளக்கம் அளித்து, அதனைத் தடை செய்யும்படி பணித்தனர் வெள்ளைப் பேரதிகாரிகள்; குடி அரசுத் தலைவராகி விட்ட அந்தக் கருப்பரோ, காரணம் கண்டறியாமல், குற்றங்கள் மெய்ப்பிக்கப்படாமல், தடைசெய்ய முடியாது என்று கூறிவிட்டு, கருப்பரின் உரிமைக்காக ஒரு அமைப்பினை நடத்திக் கொண்டு வந்த தன் நண்பர் ஒருவரை, உண்மையைக் கண்டறிய நியமித்தார் என்றால், ஆத்திரம் பீறிட்டுக் கொண்டு கிளம்பாமலிருக்குமா! கொதித்தனர்! ஆனால் டில்மன் கலக்கம் கொள்ளவில்லை; மரியாதையாக; ஆனால் உறுதி தளராமல் பதிலளித்தார்.

தம்பி! டில்மன் காட்டிய அமைதி கலந்த உறுதி என் மனதை வெகுவாக ஈர்த்தது; பலன் தரத்தக்க, நீண்ட காலம் நிலைத்து நிற்கத்தக்க வெற்றியினை ஈட்டிட விரும்புவோர் எத்தகைய போக்கை மேற்கொள்ள வேண்டும் என்பதற்கான பாடம் பெற்றிடச் செய்கிறது டில்மன் காட்டிய உறுதி, கலங்காத தன்மை, வீண் வாதிடாமை, விளைவு பற்றி பீதி கொள்ளாமை, நேர்மை பிறழாமை ஆகிய இயல்புகள், எளிதாகப் பெற்றுவிடக் கூடிய இயல்புகளா அவை!!

வேறோர் ஏட்டிலே பார்த்தேன் தம்பி! டர்னர் என்ற கருப்பு இனத் தீரன் ஒருவனைப் பற்றிய விவரத்தை. இர்விங்வாலஸ் எழுதிய 'மனிதன்' என்ற ஏட்டில், 'டர்னரைட் இயக்கம்' என்று குறிப்பிட்டிருக்கிறார்; டர்னர் என்ற புரட்சிக்காரரை நினைவிலே கொண்டுதான் வாலஸ் கருப்பரின் விடுதலை இயக்கத்துக்கு டர்னரைட் இயக்கம் என்று பெயரிட்டார் போலும்.

நான் படித்த மற்றோர் ஏட்டில், நாட் டர்னர் என்ற புரட்சியாளன் பற்றிய குறிப்பு, நெஞ்சினை உருக்குவதாக அமைந்திருக்கிறது. அந்த ஏடு கதைப் புத்தகம் அல்ல; உண்மை நிகழ்ச்சிகளின் தொகுப்பு. கருப்பரின் விடுதலைக்காக ஆர்வத்துடன் பாடுபட்ட நாட்டர்னர் என்ற நீக்ரோ 31 வயதினன் தூக்கிலே தொங்கவிடப்பட்டபோது; 'கருப்பு வழிகாட்டி' 'ஞானாசிரியன்'; 'அவதார புருஷன்' என்றெல்லாம் புகழாரம் சூட்டினர், நீக்ரோ இனத்தவர்; வெள்ளை நீதிபதிகளோ அவன் கழுத்திலே சுருக்குக் கயிற்றினை வீசினர்; குடி, சூது, பொய், வஞ்சகம் எனும் எந்த விதமான கெடுமதியும் அற்றவன் இந்த விடுதலை வீரன்,

இவன் மனதிலே கொழுந்துவிட்டு எரிந்து வந்தது ஒரே ஒரு ஆர்வம், நீக்ரோக்கள் விடுதலை பெற வேண்டும், நிற வெறி ஒழிய வேண்டும் என்பது.

நிறவெறி ஒழிய மறுத்தது; அது கண்டு வெகுண்டெழுந்த நாட் டர்னர் நிறவெறியை விட மறுக்கும் வெள்ளையர்களை ஒழிப்பது என்று துணிந்தான், 1831-ம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 21-ம் நாள், புரட்சியை நடத்தினான். அவனுக்குத் துணை நின்றவர்கள் ஆறே ஆறு பேர்; துவக்கத்தில், பிறகோ வெள்ளையர்கள் வெடவெடக்கும் அளவுக்கு வளர்ந்தது பலாத்காரம். வெள்ளையர் வெட்டி வீழ்த்தப்பட்டனர்! பிடிபட்டான்; தூக்கிலிடப்பட்டான் டர்னர்!

டர்னர் கொல்லப்பட்டான்; ஆனால் அவன் நடத்திய பலாத்காரப் புரட்சியால் வெள்ளையர் மனதிலே மூண்டுவிட்ட பீதி மடிய ஆண்டு பல ஆயினவாம். எந்த நேரத்தில் எந்தப் பக்கம் இருந்து, எந்தக் கருப்பன் கிளம்பி, குத்திக் கொல்லுவானோ, வெட்டி வீழ்த்துவானோ, சுட்டுப் பொசுக்குவானோ என்ற பீதி.

டர்னர் தூக்கிலே போடப்பட்டு ஆண்டு இருபது கழிந்த பிறகும் அந்தப் பகுதி வெள்ளையர்கள் மனதில் அந்தப் பீதி இருந்து வந்ததாம்!

டர்னரைட் இயக்கம் என்ற உடன் வெள்ளையர்கள் மனதில் இந்த டர்னர் பற்றிய நினைவும், அதன் தொடர்பாக மருட்சியும் கிளம்பத்தானே செய்யும். எனவே டர்னரைட் இயக்கத்தைத் தடை செய்ய டில்மன் மறுத்ததும் வெள்ளைப் பேரதிகாரிகள், அழிவை அரசபீடத்தில் அமர்த்தி விட்டோம் என்ற அச்சம் கொண்டனர்.

என்ன இருந்தாலும் டில்மன், கருப்பு இனமல்லவா! வெள்ளைப் பேரதிகாரிகள் எத்தனை வற்புறுத்தினாலும், நீக்ரோ இனத்துக்குத் துரோகம் இழைத்திட, சொந்த இனத்தைக் காட்டிக் கொடுக்க மனம் வருமா! தனது இரத்தத்தின் இரத்தம்! சதையின் சதை! தனது இனம்! அந்த நீக்ரோ இனம் தன்மானத்துடன் வாழ்ந்திட உழைத்து வரும் ஒரு இயக்கத்தை ஒழித்துக்கட்ட டில்மன் எப்படி ஒப்புவார். நிமிர்ந்து நின்று மறுத்துவிட்டார்! அது அல்லவா வீரம்! அவனல்லவா மனிதன்! பதவி கொடுத்து, பக்கம் நின்று பசப்பு காட்டி பணிய வைத்திடலாம் என்று



எண்ணினர் போலும். டில்மன் பதவி கண்டு பல்லிளிப்பவன் அல்ல! அறிவு மிக்கோன்! ஆற்றல் மிக்கோன்! இனப்பற்று கொண்டோன்! ஆகவே தான், டர்னரைட் இயக்கத்துக்குத் தடைவிதிக்க மறுத்துவிட்டான் என்று நீக்ரோ இனத்தவர் எண்ணிக் களிப்புற்றனர்.

டில்மன், நிறப்பற்று இனப்பற்று காரணமாக இந்த முடிவினை மேற்கொள்ளவில்லை. வீண் பழி சுமத்தி ஒரு அமைப்பை ஒடுக்குவது நியாயமாகாது, நேர்வழி அல்ல, சட்டம் தந்துள்ள அடிப்படை உரிமைகளை அழித்திடும் செயலினை மேற்கொள்ளலாகாது என்பதனால் அந்த முடிவினை மேற்கொண்டார். டில்மனுடைய இந்த நேர்மை உணர்ச்சியினை கருப்பர்—வெள்ளையர் எனும் இரு சாராருமே உணரவில்லை.

கருப்பர் உலகு களிப்பினையும் வெள்ளையர் உலகு வெறுப்புடன் கலந்த கோபத்தினையும் வெளிப்படுத்திக் கொண்டிருந்தபோது. டர்னரைட் இயக்கம் உள்ளபடி பலாத்காரத்தில் ஈடுபட்டிருக்கிறது என்பதற்கான ஆதாரங்கள் கிடைத்துவிடுகின்றன. கிடைத்ததும் டில்மன், டர்னரைட் இயக்கத்தைத் தடை செய்திட முடிவு செய்துவிடுகிறான்.

தக்க காரணமின்றி இயக்கத்தைத் தடை செய்ய முடியாது என்று கூறியபோது எப்படி வெள்ளை இனத்தவர் கொதிப்படைவார்களோ என்பது பற்றிக் கவலையற்று, மனச்சாட்சிக்கு மட்டுமே மதிப்பளித்து நடந்து கொண்டாரோ, அதேவிதமாகவே, அந்த இயக்கம் பலாத்காரச் செயல்களிலே ஈடுபட்டிருக்கிறது என்பது மெய்ப்பிக்கப்பட்டதும், அதனைத் தடை செய்தால், கருப்பு இனத்தவர் தன்னைத் தூற்றுவார்களே, வெறுப்பார்களே, எதிர்ப்பார்களே என்ற கவலையற்று, நேர்மையாக நடந்து கொள்ள முற்பட்டார். தம்பி! இதற்குத் தேவைப்படும் நெஞ்சு உரம் பொதுப்பணியினில் ஈடுபட்டுள்ளோர் அனைவரும் முயற்சி செய்து பெற்றுக்கொண்டாக வேண்டிய ஒன்றாகும்.

கடமையைச் செய்திடும்போது, இனப்பற்று, பந்த பாசம், அச்சம், தயை தாட்சணியம் என்பவைகளுக்குக் கட்டுப்படும் போக்கு தலை தூக்குமானால், அதனைத் தூக்கி எறிந்துவிடும் துணிவு பிறந்திடவேண்டும்.

09218

எந்த நீக்ரோ இனத்தவர் போற்றிப் புகழ்கிறார்களோ எமது ஈடு எதிர்ப்பற்ற தலைவன்! எமது இனத்தின் காவலன்! வெள்ளையரின் மிரட்டலுக்குப் பணிந்திடாத அஞ்சா நெஞ்சன்! என்றெல்லாம் புகழாரம் சூட்டுகிறார்களோ, அவர்கள் கண்ணீர் ததும்பிட நிற்பார்களே, இவ்வளவுதானா இவன் ஆற்றல்? என்று கேலி பேசுவார்களே; அடிபணிந்து விட்டாயா வெள்ளையருக்கு! பதவி மோகம் தலைக்கேறி விட்டதா! இனம் அழிந்தாலும் சரி, வெள்ளை மாளிகையில் கொலுவிருக்கும் நிலை இருந்தால் போதும் என்று தீர்மானித்து விட்டானா! காவலன் என்றும் நாவலன் என்றும், வழிகாட்டி என்றும் புது வாழ்வளித்தோன் என்றும் வாய்வலிக்கப் போற்றிக் கிடந்தோமே! கருப்பரின் போற்றுதல் கால் தூசு; வெள்ளையரின் நேசமே பெரிது என்று கருதிவிட்டானா! வெற்றி பெற்று விட்டார்களா வெள்ளை நிற வெறியர்! கருப்பனைக் கொண்டே கருப்பரை அழிக்கும் காரியத்தை நடத்திக் காட்டுகின்றனரா, காலமெல்லாம் நம்மைக் கொடுமை செய்துவரும் காதகர்கள்!

வெள்ளை மாளிகையிலே ஒரு கருப்பர்! அடிமை இனத்தவன் அமெரிக்கக் குடிஅரசுத் தலைவன் என்று கூறிக்கூறிப் பூரித்துக் கிடந்தோமே! இதற்குத்தானா!இவன் வெள்ளை மாளிகையில் அதிபர் வேலை பார்க்கச் சென்றது, தனது இனத்தை அழித்திடத்தானா! கேட்பார் இல்லை என்ற நிலை போய்விட்டது நமது இனத்தவனே அரசாள்கிறான் என்று பெருமிதம் கொண்டோமே! அடிமை இனம், எதற்கும் தகுதியற்ற கூட்டம், என்றெல்லாம் ஏசி வந்தீர்களே, வெள்ளை இனத்தவரே! பார்த்தீர்களா, வெள்ளை மாளிகையை!; யார் அங்கே வீற்றிருக்கிறார் தெரிகிறதா? ஒரு கருப்பர்! ஒரு நீக்ரோ! எங்கள் இனமணி! இப்போதாவது புரிகிறதா நீக்ரோ இனத்தின் பெருமை! இனியாகிலும் உம்முடைய மனதிலிருந்து ஒழியுமா நிறத்திமிர்; இனப்பகை! என்றெல்லாம் எக்களிப்புடன் பேசி வந்த தன் இன மக்கள்—நீக்ரோ மக்கள்—டர்னரைட் இயக்கத்தைத் தடைசெய்திட முனைவது கண்டால், பதறிப் போவார்களே, பயந்து விடுவார்களே, பாதகா! என்று அலறிக் கூவித் துடிப்பார்களே! இனத் துரோகி என்று ஏசுவார்களே என்றெல்லாம் எண்ணி டில்மன் மனக் குழப்பம் அடையவில்லை.



வெகுண்டு எழுபவர் எவராக இருப்பின் என்ன! அவர் நிறம் எதுவாக இருப்பின் என்ன! எனக்குக் கட்டளை பிறப்பிக்கக் கருப்பருக்கும் உரிமை இல்லை; வெள்ளையருக்கும் இல்லை. என் உள்ளம் எனக்குக் கட்டளை பிறப்பிக்கிறது; தூற்றுவோர் தூற்றட்டும்; நான் என் கடமையைச் செய்திடுவேன் என்று துணிந்து நின்றான்.

தம்பி! உள்ள உறுதியுடன் நேர்மை வழி நடந்திட டில்மன் முற்பட்டபோது ஏற்பட்ட இன்னலையும் இழிவையும் படிக்கும்போது, உள்ளபடி மனம் உருகிடும்! அத்தனை இழிவுகளைத் தாங்கிக்கொள்ள முடிந்ததே அந்த நேர்மையாளனால், நம்மால் முடியுமா, நமக்கு அத்தகைய உள்ள உரம் இருந்திடுமா என்று பொதுப் பணியினில் ஈடுபட்டுள்ளோர் ஒவ்வொருவரும் எண்ணிடுவர்: அந்தவிதமாக அமைந்திருக்கிறது, அந்தக் கட்டம்! இழிவும் இன்னலும் தாக்கிடும் கட்டம்.

அழுகல் முட்டைகள் வீசப்படுகின்றன! கற்கள் பறக்கின்றன! காட்டுக் கூச்சல் கிளம்புகிறது! பேசாதே! போ வெளியே! துரோகி! காட்டிக் கொடுக்கும் கயவனே! என்று மூலைக்கு மூலை கண்டன ஒலி! தாக்கிடத் துணிந்தோர், அருகே நெருங்குகிறார்கள்! என்னென்ன ஆபத்து வருமோ என்று எண்ணத்தக்க விதமான பரபரப்பு! போலீசும் படையினரும் வளையம் அமைத்து, உயிருக்கு ஆபத்து வராமல் பாதுகாக்க வேண்டி நேரிடுகிறது. போய்விடலாம்! நிலைமை மோசமாவதற்குள் இந்த இடத்தை விட்டுப் போய்விடலாம்! இந்தக் கும்பல் எதற்கும் அஞ்சாது! கொலைகாரக் கூட்டம்! வெறி தலைக்கேறிவிட்டிருக்கிறது! அமெரிக்கக் குடி அரசுத் தலைவர், அடித்துக் கொல்லப்பட்டார் ஆத்திரமடைந்த கும்பலால் என்று ஏற்பட்டுவிடுமானால் அது நாட்டுக்கே பெரிய அவமானம்; துடைக்கப்பட முடியாத கறை! என்றெல்லாம் கூறுகிறார்கள். டில்மனை, பாதுகாப்பான இடத்திற்குப் போலீசார் அழைத்துச் செல்கின்றனர்.

டர்னரைட் இயக்கம், பயங்கர நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறது என்பது மெய்ப்பிக்கப்பட்டிருப்பதால், அந்த இயக்கத்தைத் தடை செய்யும் சட்டம் பிறப்பித்துள்ளேன்—என்று டில்மன் அறிவித்ததும் இத்தனை அமளி நடக்கிறது. குடிஅரசுத் தலைவர் உரை கேட்டு மகிழவும், அவரை வாழ்த்தவும் கூடியிருந்த பெருந்திரள், பகை கக்கு

கிறது, பாய்ந்து வருகிறது தாக்க! போலீஸ் மும்முரமாகிறது. விழா நடத்திட முனைந்த பிரமுகர்கள் பீதி கொள்கின்றனர். மகன் கண்களில் நீர் கொப்பளிக்க நிற்கிறான்! டில்மன் போலீஸ் வளையத்திலே நிறுத்தப்பட்டு பாதுகாப்பான இடத்திற்கு அழைத்துச் செல்லப் படுகிறார்.

தம்பி! இத்தனை அமளியும் நடப்பதே ஒருவர் மனதை மெத்தவும் வாட்டிவிடும்;

அதிலும் வரவேற்று வாழ்த்தி, விழா நடத்துகிறார்கள்; அந்த இடத்தில் அந்த நேரத்தில் அமளி! 'கல்லெறி!' காட்டுக் கூச்சல்! இழிமொழிகள்! பழிச் சொற்கள்! என்றால் மனவேதனை மேலும் எந்த அளவு ஏற்படும்.

அதிலும், எந்தத் தகப்பன் இத்தனைப் பெரிய ஏற்றம் பெற்றிருக்கிறான் என்பது கண்டு பெருமிதம் கொண்டிருக்கிறானோ அந்த மகன் எதிரில் இந்த அமளி நடக்கிறது.

தந்தை வரவேற்கப்படுவதைக் கண்டுகளித்த கண்களால், ஆத்திரமடைந்த கூட்டம் அவரை விரட்டி அடிப்பதைக் காண்கிறான்—டில்மனுடைய மகன் கல்லூரி மாணவன்!

தன் தந்தையுடைய வருகை காரணமாக விழாக் கோலம் எழக் கண்டு களிப்படைந்திருக்கிறான்—மகன்—அவன் எதிரில் கல்லெறி—தந்தைக்கு!

நீக்ரோ இனத்தின் பெருமையை உயர்த்திய தலைவன் என்று தன் தந்தையைச் சான்றோர் வாழ்த்திடக் கேட்டான் களிப்புடன்—மகன்—அதே காதுகளில் நாராசம் பாய்கிறது.

தந்தை விழாக்கூடம் நுழையும்போது எத்தனை மரியாதை, என்னவிதமான அணிவகுப்பு, பிரமுகர்கள் முகமன்; இவைகளைக் கண்டான். அதே இடத்தில், அல்லோலகல்லோலம்! விடாதே! பிடி, அடி! குத்து! கொல்லு! என்ற மிரட்டல்! மாலைகள் அணிவித்தார்கள் அந்த மணிமாடத்தில் தந்தைக்கு! கற்களை வீசுகிறார்கள் அதே இடத்தில். காண்கிறான், கண்ணீர் உகுக்கிறான். ஆனால் அடப் பாவிகளே! ஆகுமா இந்த அக்கிரமம்! அவரையா இப்படி இழிவு செய்கிறீர்கள். நமது இனத் தலைவனையா தாக்கக் கிளம்புகிறீர்கள் என்று அந்த மகனால் கேட்க முடியவில்லை. ஏன், டர்னரைட் இயக்



கத்தை—கருப்பரின் பாதுகாவலனாக உள்ள அமைப்பை—ஒரு கருப்பரே தடை செய்யும்போது, இதுவும் நடக்கும் இதற்கு மேலும் நடக்கும் என்று எண்ணுகிறான். தந்தைக்கு ஏற்பட்ட இழிவு கண்டு தத்தளிக்கிறான். ஆனால் அவர் டர்னரைட் இயக்கத்தைத் தடை செய்தது நியாயம் என்று அவன் உள்ளம் ஏற்றுக் கொள்ள மறுத்தது. அவன் கல் வீசவில்லை, கண்டனக்குரல் எழுப்பவில்லை; ஆனால் கல் வீசியவர்களும் கண்டனக் குரல் எழுப்பியவர்களும், என்ன கேள்வியை எழுப்பினார்களோ அதே கேள்வியைத்தான் அவனுடைய கண்ணீர் எழுப்பிற்று.

டர்னரைட் இயக்கத்திற்குத் தடை விதிப்பதாக, டில்மன் வெள்ளை மாளிகையில் இருந்தபடியே அறிவித்திருக்கலாம். அமளி செய்திடும் கூட்டம் அருகே நெருங்கியிருக்க முடியாது. அழுகல் முட்டைகள் வீசிடக் கும்பலுக்கு முடிந்திருக்காது.

ஆனால் டில்மன், தடைச்சட்டம் பற்றிய அறிவிப்பு அளித்தது, மகன் பயிலும் கல்லூரியில் நடைபெற்ற விழாவில்!

கல்லூரி விழாவில் ஒரு நீக்ரோ தலைவர் சொற்பொழிவாற்ற அழைக்கப்பட்டதே, இதற்கு முன்பு நடைபெற்றிராத ஒரு சிறப்பு நிகழ்ச்சி. அந்த விழாவிலே கலந்துகொண்டு, டில்மன் டர்னரைட் இயக்கத்தின் மீது தடைவிதித்திருப்பதாக அறிவித்ததும், விழாக்கூடம் அமளிக் களமாகிவிட்டது.

எந்த இடத்தில் இதற்கு எதிர்ப்பு வெடித்துக் கொண்டு கிளம்பக்கூடுமோ அந்த இடமாகப் பார்த்தே, சட்டம் பற்றி அறிவிக்க வேண்டும் என்ற எண்ணம் போலும் டில்மனுக்கு.

அமளி கண்டு மகன் கண்ணீர் சிந்துகிறான். வெள்ளையர்? எப்படி இருக்கமுடியும்? ஒரு கேலிப் புன்னகை காட்டி இருப்பர்! மகத்தான வெற்றி என்று எண்ணிக் கொண்டிருப்பர்! குறும்புப் பார்வையைச் செலுத்தி இருப்பர்.

கருப்பர் தலைவனை எதிர்த்துக் கருப்பர் கூட்டம் அமளி செய்கிறது. வெள்ளைப் போலீஸ் அந்தக் கருப்புத் தலைவன் உயிருக்கு ஆபத்து வராதபடி பாதுகாப்பளிக்கிறது. இந்த வேதனை தரும் காட்சியைக் காணவா,

நான் இந்தக் கல்லூரியில் இருக்கவேண்டும் என்று எண்ணி, டில்மனுடைய மகன் வேதனைப்படாமல் இருந்திருக்க முடியுமா?

நிறவெறி கொண்ட வெள்ளையர் என்ன பேசிக் கொண்டிருந்திருப்பர்!

புயல் வீசுகிறது! நிலைமை புரிந்திருக்கும்.

புயல் இப்போதுதான் ஆரம்பமாகி இருக்கிறது. போகப் போகத் தெரியும் அதனுடைய வேகம்.

கருப்பரின் அமைப்பை ஒரு கருப்பர் தலைவன் தடை செய்யும்போதே இத்தனை அமளி நடக்கிறதே, வெள்ளை இனத்தவர் தடைச் சட்டம் கொண்டு வந்திருந்தால், பயல்கள் தலையையே சீவிவிட்டிருப்பார்கள் போலிருக்கிறதே!

தலையைச் சீவுவார்களா! யார்? கருப்பரா? பீரங்கிகள் எதற்கு இருக்கின்றன, அகன்ற வாயுடன்; ஒரு வெள்ளை இனத்தவன் மீது இந்த அழுகல் முட்டை விழுந்திருந்தால், கருப்புக் கும்பலின் மீது குண்டுகள் பொழிந்திருக்காதா? சும்மாவிடுமா படை!

நடைபெற்ற குழப்பம், அமளி டில்மன் மனதை வாட்டாமலிருந்திருக்க முடியாது. ஆனால் கடமையைச் செய்தோம்; புரிந்து கொள்ளாதவர்கள் பகை கக்குகிறார்கள். அதற்காகக் கடமையிலிருந்து தவறலாமா? கூடாது! என்றுதான் எண்ணியிருப்பான். புயல் அந்த அளவோடு நின்றுவிடவில்லை. அதன் வேகம் பற்றியும் வகை பற்றியும் அடுத்த கிழமை தெரிவிக்கிறேன்.

அண்ணன்,

6—3—'66



காஞ்சிக் கடிதம் : **53**

# 'கனா' நிகழ்ச்சி-ஒரு எச்சரிக்கை!

★ 'கனா'வை விடுவித்தவரே கவிழ்க்கப்பட்டார்!

★ காரணம், 'எல்லாம் நானே' எனும் நினைப்பே!

★ ஒரே கட்சி ஆட்சியால் வந்த வினை!

★ வெள்ளையரை விரட்டிய கருப்பரே வெள்ளையரானதன் விளைவு!

தம்பி,

நாட்டைக் குட்டிச்சுவராக்கிவிட்ட நாசகாலன்!

பொருளாதாரத் துறையைப் பாழ்படுத்தினவன்!

மக்களைப் பட்டினி போட்டுச் சாகடித்த பேயன்!

எதிர்க்கட்சிகளை ஒழித்துக்கட்டிய வெறியன்!

ஆடம்பர வாழ்வு நடாத்திய எதேச்சாதிகாரி!

எல்லாம் தனக்குத் தெரியும் என்று உறுமிய அகம்பாவக்காரன்!

ஏன் என்று கேட்பவர்களைச் சிறையில் தள்ளி வாட்டி வதைத்த காதகன்!

ஆளத்தெரியாதவன்! அகப்பட்டதைச் சுருட்டுபவன்! ஆணவக்காரன்!

'இருப்பை'த் தொலைத்துவிட்டான், நாட்டைக் கடனாளியாக்கிவிட்டான்.

வீண் பெருமைக்காகப் பணத்தை விரயம் செய்தான்!

தொழில் கெட்டது, விவசாயம் பாழ்பட்டது, வகையற்ற ஆட்சி நடத்தியதால்!

இன்று கனா நாட்டிலே இவ்விதம் பேசிக்கொள்கிறார்கள், எழுதுகிறார்கள், நிக்ருமாவைப்பற்றி. ஆட்சியை ராணுவம் கைப்பற்றிக்கொண்ட பிறகு ஒரு புரட்சி சர்க்கார் அமைத்தான பிறகு பதவியைப் பறிகொடுத்துவிட்டு, வேறு நாட்டிலே 'தஞ்சம்' புகவேண்டிய நிலைக்குத் துரத்தப் பட்டுவிட்ட நிக்ருமாவைப்பற்றி மிக வன்மையாகக் கண்டிருக்கிறார்கள்; அவன் ஆட்சியின் கேடுகள்பற்றி, கொடுமைகள் பற்றி அடுக்கடுக்காக எடுத்துரைக்கிறார்கள்.

மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்கின்றனர்,

பட்டாளிகள் களிப்படைந்துள்ளனர்,

மாணவர்கள் மமதையாளன் தொலைந்தான் என்று எக்காளமிடுகின்றனர்,

அதிகாரிகள்கூட அகமகிழ்ச்சி கொண்டுள்ளனர், என்றெல்லாம் கூறப்படுகிறது.

இவற்றில் பெரும்பகுதி, புரட்சிச் சர்க்காரின் 'பிரச்சார'த் தாக்குதலாக இருக்கக்கூடும்; மிகைப்படுத்திக் கூறுவதாக இருக்கக்கூடும். ஆனால் இந்தக் கண்டனத்தில் துளியும் உண்மை இல்லை என்று ஒரேயடியாகக் கூறிவிட முடியாது.

நிக்ருமாவின் ஆட்சி கவிழ்க்கப்பட்டபோது, 'ஐயோ' என்று சொன்னவர்களோ, எப்படி அந்த ஆட்சியைக் கவிழ்க்கலாம் என்று கேட்டவர்களோ அதிகம்பேர் இருந்ததாகத் தெரியவில்லை.

அவருக்காக எமது உயிரையும் கொடுப்போம்! எமது பிணத்தின் மீது நடந்து சென்றுதான் அவர் அமர்ந்திருந்த அரியணையைத் தொட முடியும் உங்களால் என்று 'வீரம்' பேசியவர்களையும் அதிகமாகக் காணோம்; தியாகம் புரிய முன் வந்தவர்களும் இல்லை.



ஆட்சி கவிழ்க்கப் படுகிறது! புதிய புரட்சி சர்க்கார் அமைக்கப்படுகிறது! கனா நாட்டு மக்கள், இது நடைபெற வேண்டியதுதான் என்ற முறையில் இருந்து விட்டிருக்கிறார்கள்.

பெரியதோர் உருவச் சிலை; கரத்தை உயர்த்திக் காட்டிய நிலையில்; விண்ணை நோக்கிய பார்வையுடன் அமைந்த சிலை; நிக்ருமாவின் சிலை; நிக்ருமாவே திறந்து வைத்த சிலை! அதைக் கீழே தள்ளி உடைத்துப் போட்டிருக்கிறார்கள்; தலை துண்டிக்கப்பட்டுப் போயுள்ள அந்தச் சிலை தரையிலே உருட்டப்பட்டுக் கிடக்கிறது; அதைச் சிறுவர்கள் சூழ நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்! நேற்றுவரை நாட்டை ஆண்டு வந்தவன் சிலை நொறுக்கப்பட்டுக் கிடக்கிறது; ஆத்திரம், ஆவேசம், அழுகை எதுவும் காணோம்.

இதுகூட அல்ல விசித்திரம். இந்த அளவு கண்டிக்கப்படும் நிக்ருமா ஆட்சியில் இருந்தபோது—கடைசி நாள் வரையில்—இதே மக்கள் பயபக்தி விசுவாசம்' காட்டி வந்தனர்.

கண்கண்ட தெய்வம் என்று கொண்டாடினர்.

ஏழைகளை வாழ்விக்க வந்த எம்மான் என்றனர்.

நாட்டை உய்விக்க வந்த பெம்மான் என்றனர்.

அவர் ஆற்றலை அவனி அறியும் என்றனர்.

ஆங்கிலர்க்கு அவருடைய பெயரைக் கேட்டாலே நடுக்கம் என்றனர்.

அவர் கனா நாட்டை மட்டுமல்ல. அடிமைப்பட்டுள்ள நாடுகளை எல்லாம் விடுவிக்க வல்ல தீரர் என்றனர்.

அவர் ஒரு நாட்டுத் தலைவர் மட்டுமல்ல, எழுச்சி பெற்ற ஆப்பிரிக்கக் கண்டத்துக்கே வழிகாட்டி என்றனர்.

கருப்பருக்குப் புதுவாழ்வு தந்திட அவதரித்தவர் என்றனர்.

தீரம்—தியாகம்—ஆற்றல் ததும்பும் புதிய வரலாறு படைத்திடும் பெரியோன் என்றனர்.

அவர் கரம் அசைத்தால் போதும், நாடு கட்டுக்கு அடங்கும்; அவர் சொல் கேட்டால் போதும்; படைகள் எட்டுத் திக்கிலிருந்தும் கிளம்பும் என்றனர்.

தன்னலமற்றவர்; தாயகம் வாழ்ந்திடத் தன்னையே அர்ப்பணித்துக் கொண்டவர் என்றனர்.

இவற்றிலே குறிப்பிடத்தக்க பகுதி, நிக்ருமா ஆட்சியிலே நடத்திவைக்கப்பட்ட 'பிரசாரம்' என்று கூறப்படலாம்; ஆனால் மக்கள் காட்டியதாகக் கூறப்படும் கனிவு முழுவதுமே 'போலி'யாக இருந்திருக்க முடியாது.

போலி எந்த அளவு, உண்மை எந்த அளவு என்பது எதிர்கால வரலாற்றுத் துறையினர் கண்டறிய வேண்டிய ஒன்று! இன்று ஒன்று நன்றாகத் தெரிகிறது. புகழாரம் சூட்டப்பட்டு விட்டிருப்பதாலேயே, புனிதன் என்று விருது வழங்கப்பட்டு விட்டிருப்பதாலேயே கவிழ்க்கப்பட முடியாதவன்; காலமெல்லாம் நிலைத்திருக்கத் தக்கவன், என்று கூறிவிடுவதற்கில்லை. பெரு மரம் வீழ்த்தப்படக்கூடும்—புயலின் வேகத்தால்! எம்மான் என்றும், பெம்மான் என்றும் புகழப்பட்டவனே எத்தன் என்றும், பேயன் என்றும் கண்டிக்கப்படக்கூடும். உதடும் உள்ளமும் உறவு கொள்ளாமல், வெறும் ஓசை மட்டும் கிளம்பியபடி இருக்கக்கூடும்.

கனா நாட்டிலே நடைபெற்றுள்ள திடுக்கிடத்தக்க நிகழ்ச்சி, அந்த நாட்டுக்கு மட்டுமல்ல, எம்மை அசைத்திடவும் ஆகாது எவராலும்! என்று இறுமாந்து கிடந்திடும் பெருந் தலைவர்கள் எக்காளம் கிளப்பிடும் எந்த நாட்டுக்கும், ஒரு பாடம்; ஒரு எச்சரிக்கை, ஒரு அபாய அறிவிப்புத் தருவதாக அமைந்திருக்கிறது.

விடமாட்டேன்! புரட்சிக்காரரைப் பொசுக்கியே தீருவேன்! காலம் வரும்; வெகுவிரைவில், கனா நாட்டில் வெற்றி நடைபோடுவேன் என்று வீரம் பேசுகிறார் நிக்ருமா! இன்றோ அவர் ஒரு முன்னாள் ஆக்கப்பட்டுப் போய்விட்டிருக்கிறார். மீண்டும் கனாவை அவர் கைப்பற்றிப் பீடம் ஏறி அமர்ந்து, 'வட்டியும் முதலுமாக'ப் புரட்சி நடத்தியவர்களைத் தீர்த்துக் கட்டிவிட்டு, பழையபடி அரசாளத் தொடங்கினாலும், இப்போது நடைபெற்றுவிட்ட நிகழ்ச்சி இருக்கிறதே, அது இதயத்தில் ஏற்படுத்தியுள்ள 'வடு' மறையவே மறையாது. இவ்வளவுதானா



இவர்களின் வாழ்வு! உலகம் பேசுகிறதே, அந்த ஏளனம் மாறாது. மீண்டும் கனா நாட்டு அதிபராக அவர் வருவதும் நடைபெறக் கூடியதாக இப்போதைக்குத் தெரியவில்லை, ஆப்பிரிக்காவிலே பெரியதோர் போர் மூண்டெழும் என்றாலும் கவலையில்லை என்று துணிந்து வல்லரசுகள் அவருக்காக வரிந்து கட்டிக்கொண்டு படைதிரட்டி வந்தாலொழிய.

ஆப்பிரிக்க நாடுகளிலே சில, 'இது அக்கிரமம்! நிக்ருமா வீரன், தீரன், தியாகி, அவரை விரட்டுவதா! இது அநீதி! அவருக்காக நாங்கள், எதையும் செய்திடத் தயார்!! என்று கூறிய போதிலும்—கயனா நாட்டு அதிபர், தமது 'முடி'யை நிக்ருமாவின் காலடியில் வைத்து விட்டதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது—ஐக்கியக் குடிஅரசுத் தலைவர் நாசர் 'மேல்மட்ட'த்தவர்களுக்கு இது குறித்து 'மடல்' விடுத்திருப்பதாகக் கூறப்படுகிறது—ஆப்பிரிக்க நாடுகளிலே மிகப் பல, புதிய சர்க்காரை ஏற்றுக்கொண்டுவிட்டன!

நிக்ருமா, தன்னை ராணுவப் புரட்சிக் குழுவினர் கவிழ்த்துவிட்டனர் என்றும் அறிந்துகொள்ளாமல் 'ராஜோபசாரம்' பெறச் சீனா சென்றபோது, அந்த நாட்டிலுள்ள கனா தூதரகம், புதிய சர்க்காருக்குக் கட்டுப்பட்டுவிட்டதாகத் தெரிவித்து, நிக்ருமாவை 'அதிபர்' என்ற முறையில் வரவேற்க இயலாது என்று அறிவித்துவிட்டது.

சீனத் தலைவர்கள், 'கனா நாட்டு விடுதலை வீரனே! வருக! ஏகாதிபத்திய எதிர்ப்பு முன்னணி நிற்போனே! வருக! மேற்கத்திய நாடுகளின் அகம்பாவத்திற்கு அஞ்சாத தீரனே! வருக!' என்று வாழ்த்தி வரவேற்றுக் கொண்டிருந்த அதே நேரத்தில், சீனாவில் அமைந்துள்ள கனா தூதரகத்தினர், தமது அலுவலக நுழைவு வாயிலில் தொங்கவிடப்பட்டிருந்த அதிபர் நிக்ருமாவின் படத்தை அகற்றிக் கொண்டிருந்தனர், அவர் 'காலம்' முடிந்துவிட்டது என்பதற்கு அறிகுறியாக.

நடைபெற்றுவிட்ட நிகழ்ச்சி நிக்ருமாவுக்கு அடக்க முடியாத ஆத்திரத்தை மூட்டிவிட்டிருக்கும். அதனை அனைவரும் உணர்ந்துகொள்ள முடியும். ஆனால், மீண்டும் கனா அதிபர் ஆவேன் என்று முழக்கமிடுகிறாரே அதனை ஒப்புக்கொள்ளப் பலநாடுகள் தயாராக இல்லை.

புதிய கனா சர்க்காரை இந்தியப் பேரரசு ஏற்றுக் கொண்டுவிட்டது.

நிக்ருமா ஆட்சியைக் கவிழ்க்க கனா நாட்டு ராணுவத் தலைவர்கள் இரகசிய நடவடிக்கையில் முனைந்திருக்கும் போதுதான், உலகில் சமாதானம் மலரச் செய்திட, குறிப்பாக வியட்நாம் போர்பற்றிய பிரச்சினையைத் தீர்த்து வைக்கப் 'புனித யாத்திரை' மேற்கொண்டிருந்தார் நிக்ருமா.

புதுடில்லி விமான நிலையத்தில் இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி அவர்களுடன் உலகப் பிரச்சினைகள் பற்றிக் கலந்து பேசினார்; கனா நாட்டுக்கு 'வருகை' தரும்படி இந்திரா காந்தி அவர்களையும் அழைத்திருக்கிறார்.

இவர் இங்கு உலகப் பிரச்சினைகளைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கும்போது, அங்கே இவரை 'ஒழித்துக் கட்ட' வேலை நடந்து கொண்டிருந்திருக்கிறது.

ராணுவத்தார், எத்தனை திறமையுடன் தமது 'புரட்சி'த் திட்டத்தை எவரும் கண்டறிய முடியாதபடி வகுத்துள்ளனர் என்பதைக் காணும்போது வியப்பாகவே இருக்கிறது.

துளியாவது, 'குறி' தெரிந்திருக்குமானால், வாடை அடித்திருக்குமானால், நிக்ருமா நீண்டதோர் பயணத்தை மேற்கொண்டிருந்திருக்க மாட்டார்; இரண்டில் ஒன்று பார்த்துவிடுவோம் என்று துணிந்திருக்கக்கூடும்; ராணுவப் புரட்சியாளர்கள் தோற்கடிக்கப்பட்டிருப்பின் சுட்டுக் கொல்லப்பட்டிருப்பர்; அவர்கள் வெற்றி பெற்றிருப்பின், சிலைக்கு நேரிட்ட கதி நிக்ருமாவுக்கே நேரிட்டிருக்கக் கூடும்.

துளியும் திட்டம் வெளியே தெரியாதவண்ணம் தீட்டியிருக்கிறார்கள் என்பது மட்டுமல்ல, காட்டிக் கொடுக்கும் எண்ணமும் துணிவும் கொண்டவர்கள் யாரும், ராணுவத்தின் எந்த மட்டத்திலும் இல்லை என்பதும் இதனால் விளக்கமாகிறது.

ஆகவே இந்தப் புரட்சி, யாரோ சில விரல்விட்டு எண்ணக்கூடிய 'வெறியர்' நடத்தியதாகத் தெரியவில்லை;



நீண்ட நாட்களாக மக்கள் மனத்திலே இருந்து வந்த குமுறல், வெடித்துக் கிளம்பியதாகவே தெரிகிறது.

குமுறல் கிளம்பியபோதே, கவனித்திருப்பின் புரட்சி வெடித்துக் கிளம்பியிருந்திருக்காது.

குமுறலுக்கும் முன்பே கருத்துத் தெளிவுள்ள ஆட்சியாளர், குமுறலுக்கான குறிகள் தோன்றிடுவதைக் கண்டிடுவர்.

புன்னகை மடிந்து கவலைக்கோடுகள் மக்கள் முகத்தில் பதிந்து, கண்கள் ஒளி இழந்து, பெருமூச்சுக் கிளம்பிடும் போது, இனி அடக்கிக்கொள்ள முடியாத அளவுக்கு அல்லல் வளர்ந்து விட்டிருக்கிறது என்பதை அறிந்து கொள்ளலாம், அக்கறையும் அறிவுத் தெளிவும் உள்ளவர்கள் ஆட்சி நடத்தினால்.

அறிவுத்தெளிவு ஆள்பவர்களுக்கு இருக்கவேண்டும் என்பது மட்டுமல்ல, குறிப்பினில் நிறுத்தவேண்டிய உண்மை; அல்லற்பட்ட மக்கள் தமது மனக்குறையை அச்சமின்றி, தாராளமாக, எடுத்துக் கூறிடும் உரிமை பெற்றிருக்கவேண்டும் என்பதே அடிப்படை உண்மை.

வெடி மருந்தினைக் கெட்டித்து வைத்துள்ள 'குழாய்' போல, மனம் இருந்திடச் செய்வார்களானால், ஓர்நாள் அது வெடித்திடத்தான் செய்யும்; விபரீதம்தான் விளையும்! தடுத்திட முடியாது.

ஆட்சியாளரின் போக்கு பற்றியும், நடவடிக்கை பற்றியும், சட்ட திட்டம் பற்றியும் கட்டுக்காவல் குறித்தும், மக்கள் மனத்திலே 'குறை' தோன்றிடுமானால், அதனை வெளியே எடுத்துரைக்க வாய்ப்பும் உரிமையும் இருந்திடுமானால், புரட்சி மூண்டிடாது, இரத்தக்களரி ஏற்படாது.

என்னை ஆள்பவர்கள் எப்படி ஆளவேண்டும் என்று எடுத்துரைக்கும் உரிமையும், திருத்திடவும் தடுத்து நிறுத்திடவும் உரிமையும் அதற்கு இடம் கொடாவிடின், ஆட்சி நடத்துவோரையும், தேவைப்பட்டால் ஆட்சிமுறையையும் கூட மாற்றிடும் உரிமையும், புதிய ஆட்சி, புது ஆட்சி முறை அமைத்துக்கொள்ளும் உரிமையும் எனக்கு உண்டு; நான் அந்த உரிமையுடன் என் கடமையைச் செய்திடும் போது, அலட்சியப்படுத்தவோ, அச்சமூட்டவோ, அடக்கி

ஒடுக்கவோ அரசு முனையாது என்ற நிலையில் குடிமகன் இருக்கும் நாடுகளில், கனா நாட்டிலே நடைபெற்றது போன்ற நிகழ்ச்சி எலாது; தேவையுமில்லை.

ஆனால், கனா நாட்டுக்கு உண்மையிலேயே 'ரட்சகர்' என்றுவந்த நிக்ருமா இந்த உரிமையைத் தர மறுத்து விட்டார். கொடுங்கோலராகி விட்டார் என்று பலரும் மனம் குமுறும் விதமாக நடந்துகொள்ளலானார்.

இது நிக்ருமாவுக்கு உள்ள இயல்பு; மக்களின் வாழ்வு பற்றி அவருக்கு அக்கறை கிடையாது; தைமூர், செங்கிஸ் கான் போன்ற இரத்தவெறி கொண்டலையும் போக்கு அவருக்கு என்றும் கூறிவிடுவதற்கில்லை.

கனா நாட்டு விடுதலைக்காக அயராது உழைத்தவர்; இன்னல் இழப்புகளை ஏற்றுக்கொண்டவர்; தன் நாட்டு மக்களை வாழவைக்க வேண்டும் என்று ஆர்வம் ததும்பும் உள்ளத்தினர்.

தன்னல மறுப்புப்பற்றி அவருக்கு ஒருவரும் கற்றுத் தர வேண்டியதில்லை. அவர் விடுதலை வீரராக விளங்கிய போது அதனை அவர் மற்றவர்களுக்கு ஊட்டியவர்.

எனவே இயல்பிலேயே அவர் கெட்டவர், ஆகவே தான் கேடான பல செய்தார்; இன்று கவிழ்க்கப்பட்டும் போய்விட்டார் என்று கூறிவிடுவதற்கில்லை.

கனா நாட்டின் விடுதலையைப் பெற்றளித்தபோது, நாடே விழாக்கோலம் பூண்டபோது, வீட்டுக்கு வீடு அவரை 'வழிபடும்' அளவுக்குப் பாசம் ததும்பி வழிந்தது.

அவர் அரசாள முன்வந்ததும், தங்கள் அல்லல் யாவும் அழிந்தொழிந்தது என்று நம்பினர்; களிப்புற்றனர்.

தெருவெல்லாம் ஆடலும் பாடலும்; அவர் அரசாளும் நாளை விழாவாக்கினர்.

நிக்ருமாவின் புகழ், பாடலாக்கப்பட்டது; பள்ளிப் பிள்ளைகளுக்கு அவர் வரலாறு பாடநூல்! எங்கும் அவர் ஓவியம், அவருடைய சிலை! அவர் பெயரால் புதுப்புது அமைப்புகள்!

கருப்பர்கள் ஆளத் தெரியாதவர்கள் என்று ஏளனம் பேசினரே வெள்ளையர், பார்க்கட்டும் இப்போது,



எத்தனை பெரிய ஆற்றல் கொண்டவர் எமது நிக்ருமா என்பதை என்று மார்தட்டிக் கூறினர். இத்தனை இன்ப இசையுடன் துவங்கப்பட்ட ஆட்சிதான் அவருடையது. பிறகு ஏன் அருவருக்கத்தக்க, கண்டிக்கத்தக்க, புரட்சி செய் தேனும் போக்கத்தக்கது என்று கருதத்தக்க செயல்களை அவர் மேற்கொண்டார்? மக்களைக் கொடுமையில் உழலச் செய்யவேண்டும் என்றா? இருக்க முடியாதே! ஆனால், காரணம் என்ன, ஆட்சிகெட? அடிப்படைக் காரணம் ஒன்றே ஒன்றுதான்; எல்லாம் நானே! என்ற நினைப்புத் தான்.

இந்த நாட்டை விடுவித்த விடுதலை வீரன் நானே!

அடிமைகளாக இருந்த மக்களை ஆற்றல் பெறச் செய் தவன் நானே!

இந்த நாட்டை ஆளத் தகுதியும் திறமையும் படைத் தவன் நானே!

இந்த நாட்டை நடத்திச் செல்லும் உரிமை பெற்ற வன் நானே!

இந்த மக்களுக்கு வளமான வாழ்வு அமைத்திட வல்லவன் நானே!

இந்த மக்களுக்கு எது நல்லது என்பதை அறியத் தக்கவன் நானே!

இப்படிப் பிறந்தது ஓர் நச்சுக்கருத்து.

விழாக்கோலம் கலைந்த நிலையில், மக்கள் ஆட்சி நிலையில், மக்கள் ஆட்சியின் பலன்பற்றிய கணக்குப் பார்த்திடும்போது, போதுமான சுவை கிடைத்திடாத தால், இப்படித்தானா? என்று கேட்டிட முன்வந்தனர். வந்தது கோபம் நிக்ருமாவுக்கு!

எப்படி ஆட்சி அமையவேண்டும் என்பதுபற்றி என்ன தெரியும்—உங்களுக்கு?

எதை எப்படிச் செய்திட வேண்டும் என்பதுபற்றி அறிந்திடும் திறமை ஏது—உங்களுக்கு?

அடிமைகளாகக் கிடந்தவர்களை விடுவித்து மனிதர் களாக்கினேன்—புதுவாழ்வு தந்தேன்—உங்களுக்கு!

என்னையா ஏன் என்று கேட்கத் துணிகிறீர்கள்?

என்னிடமா கேள்விகளை வீசுகிறீர்கள்!

என்னை யார் என்று தெரியவில்லையா?

என்னைப் புகழ்ந்தீர்கள், பாராட்டினீர்கள், பூசித்தீர்கள்,

என்னை வருந்தி வருந்தி அழைத்தீர்கள் அரசாள! இப்போது கணக்கா கேட்கிறீர்கள் கணக்கு!

நான் அறிவேன், உங்களுக்கு எது நல்லது என்பதனை.

எனக்குத் தெரியும் எதை எப்படிச் செய்யவேண்டும் என்று.

என் சொல்லை நம்ப மறுக்கிறீர்களா? என் சொல்லை மீறத் துணிகிறீர்களா?

நான் இல்லாவிட்டால் கனா ஏது? விடுதலை ஏது? ஆட்சி ஏது?

இவ்விதம் வளர்ந்தன விபரீத எண்ணங்கள்.

ஆட்சியிலே பல கோளாறுகள், திட்டங்களிலே பல தவறுகள், நிர்வாகத்திலே பல முறைகேடுகள்; இவற்றின் பயனாக மக்கள் மனத்திலே குமுறல்.

குமுறல்! ஆனால், அதனை வெளியே காட்டிக் கொள்ள வழி இல்லை! உரிமை இல்லை!

நாட்டுக்கு நானே தலைவன்! நான் ஒருவனே தலைவன்!

நாட்டை ஆள நான் வைத்திருக்கும் கட்சி ஒன்றுக்குத்தான் உரிமை! வேறு எந்தக் கட்சியும் என் நாட்டில், இருந்திட நான் அனுமதிக்கப் போவதில்லை.

நோய் பிடித்துக் கொண்டது நிக்ருமாவுக்கு; ஆணவத் தடிப்பு நோய்.

ஒரே கட்சி ஆட்சியை அமைத்துக்கொண்டார். எண்ண, எண்ணியதைப் பேச, எழுத, மக்களிடம் தமது கருத்துக்கு ஆதரவு திரட்ட எந்தக் கட்சிக்கும் உரிமை கிடையாது.

மக்கள், அதிபர் இடையே வேறு தொடர்பு வேதையில்லல என்று கருதிவிட்டார்; மக்களைக் கெடுக்க வேண்



டும் என்ற நினைப்புடன் அல்ல, எது நல்லது என்று தெரிந்துகொள்ளும் அறிவுத் தெளிவு மக்களுக்குக் கிடையாது என்ற அழுத்தமான—ஆனால், தவறான—நம்பிக்கை காரணமாக.

முன்பு வெள்ளையர் ஆட்சி நடத்தினர்—அவர்களின் விருப்பத்தையே சட்டமாக்கிக் கொண்டு; எதிர்த்துப் பேசும் உரிமையைத் தர மறுத்து, மீறி எதிர்த்திடத் துணிந்தவர்களைச் சித்திரவதை செய்யவும் கூசாமல்.

அவர்களை விரட்டிய வீரன் நிக்ருமா!

அவர்களை விரட்டிய எனக்கு, 'இதுகள்' எம்மாத்திரம் என்று தனது நாட்டு மக்களைப் பற்றியே ஒரு துச்சமான எண்ணத்தை வளர்த்துக் கொண்டார்.

நாலுபேர் நாலு வழி காட்டுவார்கள், நாலுவிதமாகப் பேசுவார்கள், மக்களைப் பிளவுபடுத்துவார்கள், குழப்பம் உண்டாக்குவார்கள், நல்ல காரியம் நடைபெற விடாது முட்டுக்கட்டை போடுவார்கள், பதவிக்காக அலைவார்கள், போட்டிகளை மூட்டுவார்கள்; பொல்லாங்கு வளரும், பொதுமக்கள் பாழ்படுவர்!—இவ்விதம் நிக்ருமா வாதிடலானார், உரக்கக்கூட அல்ல; தமக்குள்.

இதுபோலத்தானே வெள்ளையர் வாதாடினர்; கருப்பருக்கு என்ன தெரியும்? காட்டுப் பூச்சிகள்; நாமல்லவா எல்லாவற்றையும் அவர்களுக்குக் கற்றுக் கொடுத்தோம்? ஆட்சி பற்றி என்ன தெரியும் அவர்களுக்கு? அதற்குத் தேவையான அறிவுத் தெளிவும் ஆற்றலும் அவர்களுக்கு ஏது? அவர்களுக்குத் தேவை சோறு, வீடு, வேலை! இதை நாம் தந்து வருகிறோம்; போதவில்லை என்றால் மேலும் கொஞ்சம் கேட்டுப் பெற்றுக்கொள்ளட்டும்; அதை விட்டுவிட்டு, உரிமை வேண்டும். ஆட்சியிலே பங்கு வேண்டும், ஆட்சி எம்முடையது ஆகவேண்டும். எங்கள் நாட்டை நாங்கள் ஆளவேண்டும் என்று கூவுகிறார்களே, எப்படி இந்தக் கூச்சலைச் சகித்துக்கொள்ள முடியும்? நாடாம் நாடு! இது நாடாகவா இருந்தது நாம் வந்தபோது?—இவர்கள் மனிதர்களாகவா இருந்தார்கள் நாம் நுழைந்தபோது? இப்போது உரிமை கேட்கிறார்கள், முன்பு இந்தக் காட்டிலே உலவிக்கொண்டு வேட்டையாடி வயிறு வளர்த்துக்கொண்டு கிடந்தவர்கள்!! பாருங்களேன் அக்கிரமத்தை!—என்றுதான் வெள்ளையர் பேசினர்.

நிக்ருமாவும் அதே 'முடுக்குடன்' பேசத் தொடங்கி விட்டார்; கருப்பர் வெள்ளையராகிவிட்டார்!!

கட்சிகள் கிடையாது என்று ஆகிவிட்டதும், ஆட்சியிலே நடப்பது பற்றி 'நல்லது...கெட்டது' அறிந்து கூறிடும் உரிமை பறிபோயிற்று.

சட்டங்கள் பிறப்பிக்கப்பட்டன—நிக்ருமாவின் விருப்பப்படி.

அவை நல்லவையா அல்லவா என்பதுபற்றி ஆராய்ந்திட வாய்ப்பு இல்லை. கண்ணீர் பொழியும் நிலையில் இப்படி ஒரு சட்டமா? என்று குமுறலாயினர்; குறையினை வெளியே எடுத்துக் கூறிட வழி இல்லை, மனத்திலே புகை கப்பிக் கொண்டது; நச்சுப்புகை.

'ஒரே கட்சி' ஆட்சி என்ற முறையிலிருந்து, அடுத்த கட்டம் செல்வது வேகமாகிவிட்டது. ஒரே கட்சிதான், ஆனால் அதிலேயும், நான் ஒருவன்தான், எதற்கும்; மற்றவர்கள் நான் சொல்வதைச் செய்திட, நான் என்ன செய்ய வேண்டும் என்பதைச் சொல்ல அல்ல!—என்று இலக்கணம் புகுத்திவிட்டார் நிக்ருமா! இதுவும் எல்லாம் தனக்குத் தெரியும்; தனக்கு மட்டுமே தெரியும், என்ற நினைப்பு தடித்துவிட்டதால்.

அதற்கு அடுத்த கட்டம், உடனிருந்து பணியாற்றுவோரை ஊழியக்காரர் போல நடத்துவது, கருத்து மாறுபாடு காட்டினால் கடுமையான நடவடிக்கை எடுப்பது, பதவியிலிருந்து விரட்டுவது, சிறையிலே தள்ளுவது—இப்படிச் சர்வாதிகாரம் வளர்ந்திடலாயிற்று.

'மந்திரிகள்' என்ற நிலையில் இருந்த பலரை, ஆத்திரத்தில் நிக்ருமா அடித்துவிடுவாராம், மந்திரிசபைக் கூட்டத்திலேயே! இப்போது தெரிவிக்கிறார்கள்!!

விடுதலைப் போராட்டத்தின்போது உடனிருந்த பல உயிர்த் தோழர்களை, தியாகிகளை, தன் கருத்தினை மறுத்தனர் என்ற காரணத்துக்காக, கொல்வது, நாடு கடத்துவது, சாகும்வரை சிறையிலே அடைத்துவைப்பது, சொத்தினைப் பறிமுதல் செய்வது என்றெல்லாம் வளர்ந்து விட்டது ஆட்சியின் அலங்கோலம்,



ஜனநாயகத்தின் பேரால் சர்வாதிகாரம் நடத்துபவர்கள்கூட நீதி மன்றங்களுக்கு உரிய மதிப்பு அளிப்பதுண்டு. நிக்ருமா, என்னைவிட நீதியின் தன்மையை உணர்ந்தவர்களும் இருக்க முடியுமா என்ற ஆணவம் தலைக்கேறிய நிலையில், ஒரு சதி வழக்கில், நிக்ருமாவின் விருப்பத்தைக் கருதாமல் உயர்நீதிபதி, சிலரைக் குற்றமற்றவர்கள் என்று கூறித் தீர்ப்பளித்தபோது வெகுண்டெழுந்து, நீதிபதியை விரட்டி விட்டதுடன் நீதிமன்றத் தீர்ப்புகளை மாற்றவும், நீதிபதிகளை நீக்கவும், தண்டிக்கவும் தனக்கே அதிகாரம் உண்டு என்று சட்டம் இயற்றிக்கொண்டு விட்டார்.

ராணுவம் ஒன்று மட்டும் இருந்தது! தனி அமைப்பாக, தனித் தன்மையுடன், வல்லமையுடன்.

அரசியலைக் காலடி கொண்டு வந்தாயிற்று; பாராளு மன்றம் தலையாட்டிகளின் கூடமாகி விட்டது, நீதிமன்றம் தன் பேனாமுனையின் தயவில் கொண்டு வரப்பட்டாகி விட்டது. மக்களை, உழைத்திடு! உறங்கிடு! ஊராள நான் இருக்கிறேன், அது பற்றிய கவலையை விடு! என்ற கட்டுக்குள் அடைத்தாகி விட்டது. ராணுவம் ஒன்றுமட்டும் தானே தலை காட்டிக் கொண்டிருக்கிறது; அதையும் அடக்கிட முனைந்தார்! தனக்குப் பிடிக்காத ராணுவத் தளபதிகளை நீக்கினார்! தானே முதல் தளபதி என்பதை மரபு ஆக்கினார்! இனி? இனி! உலகைக் கவனிப்போம்! என்றுதான் உலா கிளம்பினார். இனியும் விட்டுவைக்கக் கூடாது என்று ராணுவம் புரட்சி நடத்தி, நிக்ருமாவை நீக்கிவிட்டது.

எங்கோ ஒரு நாட்டிலே நடைபெற்ற பயங்கர நிகழ்ச்சி என்ற அளவிலும் முறையிலும் இதனை நோக்கினால் முழுப் பயன் கிடைக்காது.

'ஒரே கட்சி சர்வாதிகாரம் என்னென்ன விபரீதங்களை ஏற்படுத்தும் என்ற பாடத்தையும்,

மக்களின் மனக்குமுறல் கவனிக்கப்படாவிட்டால் பயங்கரமான விளைவுகள் எதிர்பாராத நேரத்தில் வெடித்துக் கிளம்பிவிடக் கூடும் என்ற பாடத்தையும்,

இயல்பு நல்லது, நோக்கம் கூட நல்லது என்றாலும், முறையிலே ஒரு கனிவும் மக்களை மதித்திடும் பண்பும்

இல்லையென்றால், ஆட்சி அருவருக்கத்தக்கதாகி விடும் என்ற பாடத்தையும்,

எல்லாம் எனக்கு மட்டுமே தெரியும் என்ற இறுமாப்பினை, மன்னன்—சீமான் என்பவர் மட்டுமல்ல, அரசாள முனையும் எவருமே கொள்ளக்கூடாது, மக்கள் அந்த ஆணவத்தை நெடுங்காலத்துக்குத் தாங்கிக்கொள்ள மாட்டார்கள் என்ற பாடத்தையும்,

உள்நாட்டிலே மக்களை அடக்கி ஒடுக்கி வைத்து விட்டு, 'உலகப் புகழ்' தேடிச் செல்வது, ஆபத்தை விலை கொடுத்து வாங்குவதாக முடியும் என்ற பாடத்தையும் பெற்றிட வேண்டும் இந்த நிகழ்ச்சியின் மூலம்.

மாற்றத்தக்கது ஆட்சி, நீக்கத்தக்கவர்கள் ஆள வந்தோர், தீர்ப்பளிக்கத்தக்கவர்கள் மக்கள் என்ற இலக்கணத்தின் அடிப்படையில் அமைக்கப்படாத அரசுகள், அடித்தளம் அற்ற கட்டடங்களாகும். மக்களின் கோபம் எனும் கடும் காற்று வீசும்போது சரிந்து விழுந்துபோகும்.

மக்கள் தமது மனத்திலே பட்ட குறைகளை எடுத்துக் கூறும்போது, பொறுமையுடன் கேட்டுக் கொள்ளவும், பொறுப்புணர்ச்சியுடன் பரிகாரம் தேடித் தந்திடவும், கனிவுடன் விளக்கமளித்திடவும் முன்வந்திடும் ஆட்சி ஆலெனத் தழைத்திடும்.

இந்த நல்ல இயல்பு 'ஒரே கட்சி' என்ற அரசியல் அமைப்பிலே வளராது, வாழாது. அதுபோலவே ஒப்புக்கு ஜனநாயகத்தை வைத்துக்கொண்டு எதிர்க்கட்சிகளை அலட்சியப்படுத்திக் கொண்டிருக்கும் போலி ஜனநாயக அமைப்பிலேயும் வளராது, வாழ்ந்திடாது.

இப்போது—கவிழ்த்தான பிறகு—குறைகளைக் கொட்டிக்காட்டுகிறார்கள், கனா நாட்டு ஆட்சியிலே நிக்ருமாவால் ஏற்பட்டுவிட்ட குறைகளை.

நிக்ருமாவிடம் ஆட்சிப்பிடி இருந்தபோது, வாய் திறந்திட முடியவில்லை. இப்போது தடுத்திட அவர் இல்லை. ஆகவே, எத்தனை தொல்லைகளை இத்தனை ஆண்டுகளாகத் தாங்கிக் கொண்டோம் தெரியுமா என்று 'கதை கதை'யாகக் கூறுகிறார்கள்; கண்டனத்தைப் பொழிகிறார்கள்,



1958ம் ஆண்டு கனா விடுதலை பெற்றபோது, இருந்த 'இருப்பு' 2000 இலட்சம் பவுன்கள்! இப்போது கனா, கடனாளியாக இருக்கிறது. யாரால்? நிக்ருமாவினால். ஏன்? எவருடைய யோசனையையும் ஏற்க மறுத்து, தன்னிச்சையாகச் செயலாற்றி நாட்டுப் பொருளாதார யந்திரத்தையே பாழாக்கி விட்டதால். இப்படிப்பட்ட நிக்ருமாவின் ஆட்சி தொலையத்தானே வேண்டும்!—என்று கேட்கிறார்கள் விவரமறிந்தோர்; ஆம் என்கிறார்கள் உண்மை நிலைமையை உணர்ந்தோர்.

கனா நாட்டுக்கார இதழாசிரியர் ஒருவர் நிக்ருமாவின் ஆடம்பரச் செலவு பற்றிய ஒரு கணக்கு விவரம் கொடுக்கிறார், இப்போது!

பதினாறாவது நூற்றாண்டு 'சக்ரவர்த்தி' போல, கோலாகல வாழ்க்கையிலே மூழ்கிக் கிடந்தார் நாட்டிலே வறுமையைப் படர வைத்துவிட்டு என்று அவர் குற்றம் சாட்டுகிறார்.

ஆண்டொன்றுக்கு அதிபர் நிக்ருமாவுக்கு 54,400 பவுன் சம்பளமாம்! கனா குடியாட்சித் தலைவர் என்பதற்காக 12000 பவுன்; கனா பிரதம மந்திரியாக இருந்த வகையில் பென்ஷன் 2400 பவுன்; குடும்பப் பராமரிப்பு செலவுக்காக 6000 பவுன், சுற்றுப்பயணத்துக்காக 34,000 பவுன்; மொத்தத்தில் 54,400 பவுன்!

சுற்றுப்பயணச் செலவான 34,000 பவுன், அவர் சுற்றுப்பயணம் செய்தாலும், செய்யாவிட்டாலும், தரப்பட்டாக வேண்டும்.

ஐந்து அரண்மனைகளாம் நிக்ருமாவுக்கு.

கனாவை வெளிநாட்டு ஆட்சியிலிருந்து விடுவித்தாரே தவிர, நிக்ருமா தமக்கு ஆலோசனை கூற வெளிநாட்டுக்காரர் பதினைந்து பேர்களை உடன் வைத்துக் கொண்டு தான் ஆட்சி நடத்திவந்தாராம்! உள்நாட்டுக்காரர்கள்? கனா நாட்டவர்? பலர் திறமை மிக்கவர்கள், சுயமாகச் சிந்திக்கத் தெரிந்தவர்கள். தவறு நேரிட்டால் எடுத்துக் கூறிடும் துணிவு பெற்றவர்கள்—சிறையில்! ஆட்சிக்கு எதிராக நடக்கிறார்கள், சதி செய்கிறார்கள் என்று குற்றம் சாட்டப்பட்டு,

மக்களுடைய வாழ்க்கைத் தரம் நாளுக்குநாள் தேய்ந்துகொண்டிருக்கிறது; நாட்டு வருமானம் போதுமான அளவு வளரவில்லை என்று குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது; இப்போது.

கனா நாட்டை இந்தச் சீர்குலைவில் வைத்துக் கொண்டு நிக்ருமா ஆப்பிரிக்காவின் மற்றைய நாடுகளுக்கு விடுதலையும் புதுவாழ்வும் காணத் துடித்தார்; இதற்காகப் பணியாற்றும் ஆப்பிரிக்க நாடுகள் ஒற்றுமைக் கழகம் நடத்த முனைந்த மாநாட்டுக்காக என்று கடனில் சிக்கிக் கிடந்த கனா நாட்டில் பலப்பல இலட்சம் பவுன் செலவிலே ஒரு அரண்மனை அமைத்தாராம்!

நாளாகவாக மேலும் பலப்பல குற்றச்சாட்டுகள் வெளியிடப்படக்கூடும்.

கனா நாட்டுப் பொருளாதாரம் கொக்கோ ஏற்றுமதியைத்தான் பெரிதும் நம்பிக்கொண்டிருக்கிறது. நிக்ருமா ஆட்சியில் கொக்கோ பயிரிடப்படும் இடம் அதிகமாக ஆக்கப்பட்டது; ஆனால், கொக்கோவுக்கு உலகச் சந்தையில் இருந்துவந்த விலை சரிந்து விட்டதால், கனா நாட்டுப் பொருளாதாரத்தில் சீர்குலைவு ஏற்பட்டுவிட்டது; கொக்கோ பயிரையே நம்பி வாழும் கனா மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுவிட்டனர்.

எதிர்க்கட்சிகள் அனுமதிக்கப்பட்டு, உயிருட்டமுள்ள ஜனநாயகம் நடைபெற்றிருக்குமானால், இந்தக் குறைகள் ஒவ்வொன்றும் தலைகாட்டும்போதே, கண்டனம் பிறந்திருக்கும், எச்சரிக்கை கிளம்பியிருக்கும், பொதுமக்களின் எதிர்ப்பு தோன்றியிருக்கும், நிலைமையை அரசு உணர்ந்திருக்கும், கேடு தவிர்க்கப்பட்டிருந்திருக்கும்.

ஆனால், அதற்குத்தான் நிக்ருமா வழிவைக்கவில்லையே! ஒரே கட்சி அல்லவா!! ஆகவேதான் கலம் கவிழும்போதுதான் வெளியே எடுத்துக்கூற முடிந்திருக்கிறது நிலைமையை.

ஜனநாயகம், கேடு தடுக்கப்பட வழிகாட்டுகிறது; சர்வாதிகாரம், பயங்கரமான இரத்தக் களரிக்குத்தான் அழைத்துச் சென்றிடும்.

ஜனநாயகத்தில், தவறுசெய்யும் ஆளவந்தார்கள் பதவி இழந்திடுவர்; சர்வாதிகாரத்தில் தவறு செய்யும்



ஆளவந்தார், விரட்டப்படுவார், சுட்டுக் கொல்லப் படுவார்;

எனவே, ஜனநாயக முறை ஆள்பவர்களுக்கும் நல்லது, ஆளப்படுபவர்களுக்கும் நல்லது.

ஆனால், புதிதாக விடுதலை பெற்றுள்ள ஆப்பிரிக்க நாடுகள் பலவுமே, ஒரு கட்சி ஆட்சி முறையைத்தான் மேற்கொண்டுள்ளன; அதன் விளைவாகவே, அடுத்தடுத்துப் பல புரட்சிகள், ஆட்சி கவிழ்க்கப்படும் அதிர்ச்சிகள், ஆளவந்தார்கள் அழிக்கப்படும் பயங்கரங்கள் நடந்தபடி உள்ளன. இவைகள், ஜனநாயக முறையினைப் பாழ்படுத்தி வருபவர்களுக்கும், 'போலி'யாக்கி வருபவர்களுக்கும், நிலைமை காரணமாக நினைப்பிலே ஆணவத்தைப் புகுத்திக்கொண்டுள்ளவர்களுக்கும் ஒரு பாடமாக இருக்கவேண்டும்.

திட்டம் காணீர்! அணை பாரீர்! ஆலைகளைப் பாரீர்! அலங்கார மாளிகைகளைப் பாரீர்! என்று கூறி மக்களை மயக்கிவிட முடியாது என்பதற்கும் கனா நிகழ்ச்சி ஒரு சான்றளிக்கிறது.

நிக்ருமா, தனக்கு ஒரு நிலையான புகழும், கனா நாட்டுக்கு வளமும் தரத்தக்கதான வோல்ட்டா நீர்த்தேக்கத் திட்டத்தை அமைத்தளித்தார். பாசனம் மட்டுமின்றி, மின்சார உற்பத்திக்கும் ஏற்றது இந்தத் திட்டம். தொழில் நடத்தும் அமைப்புகளுக்கு (அன்னியருடைய அமைப்பு) வோல்ட்டா திட்டத்திலிருந்து மின்சாரம் விற்பதன் மூலம் நல்ல வருவாய் கிடைக்கவும் வழி கிடைக்கிறது.

என்றாலும், மற்றத் துறைகளிலே மூண்டுவிட்ட கேடுகளும், ஊழலும் ஊதாரிச் செலவும், எல்லாவற்றையும் விட அகம்பாவப் போக்கும் சர்வாதிகார முறையும், வோல்ட்டா திட்டம் பற்றி எழக்கூடிய மகிழ்ச்சியைக் கூட மங்கச் செய்து விடுகிறது.

அதுபோலவே, பிறநாட்டுத் தலைவர்களின் நேசம், தொடர்பு, தோழமை, அவர்கள் சூட்டிடும் புகழாரம் ஆகியவற்றினைக் கொண்டு, உள்ளே புரையோடிக் கொண்டிருக்கும் ஒரு ஆட்சியை நிலைநிறுத்த முடியாது என்பதற்கும் கனா ஒரு எடுத்துக்காட்டு.

சீனா எனது நண்பன், ரஷியா எனது தோழன், எகிப்து எனது நேசன் என்று பட்டியல் காட்டினார் நிக்ருமா! சொந்த நாட்டு மக்களின் கனிவைப் பெறமுடியாமல், பெறுவதற்கு ஏற்ற முறையில் ஆட்சி நடத்தாமல், பிற நாடுகளிலே 'நற்சான்று இதழ்' பெறுவதிலே என்ன பலன் கிடைத்திட முடியும்?

தனி மனிதர் ஒருவருடைய புகழ், அவருடைய ஆட்சியின் அலங்கோலத்தை மூடி மறைத்திட உதவாது என்பதற்கும் கனா நிகழ்ச்சி சான்றளிக்கிறது.

உலகப் புகழ் நிக்ருமாவுக்கு! அவருடைய ஆட்சியைக் கவிழ்த்து புது ஆட்சியை நடத்த முன் வந்திருப்பவர்களின் பெயர் இன்னும் பழக்கத்திற்கே வரவில்லை. என்றாலும், அமெரிக்காவும் பிரிட்டனும், பிரான்சும், நிக்ருமா உலகப் புகழ் பெற்றவர்—ஆகவே, அவர் இல்லாத ஆட்சியை நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று கூறிவிடவில்லை; புதிய ஆட்சியைச் சட்ட சம்மதம் பெற்ற ஆட்சி என்று ஏற்றுக்கொண்டு விட்டுள்ளன.

பிரிட்டனுடைய போக்கே இதுதானே! அமெரிக்காவுடைய போக்கும் இதுதானே! என்றும் கண்டித்து விடுவதற்கும் இல்லை. இந்தியப் பேரரசும் புதிய கனா சர்க்காரை அதிகார பூர்வமான சர்க்கார் என்று ஏற்றுக்கொண்டாகி விட்டது.

எந்த நாட்டை விடுவித்தாரோ, எந்த நாட்டிலே பாதம் பட்டால் மண்ணும் மணம்பெறும் என்று கருதப்பட்டதோ, அந்தச் சொந்த நாட்டிலே இனி நிக்ருமா நுழைய வேண்டுமானால், பெரியதோர் படையின் துணை வேண்டும். அந்த நிலை 'ஒரே கட்சி' ஆட்சியின் விளைவு.

இதனை இன்னமும் உணராமல்,

செனிகால்
காம்பியா
மவுரிடானியா
மாலி
சியாரா லியோன்
லைபீரியா
அய்வரி கோஸ்ட்



டோகோ
நைஜர்
சாட்
காமிரூன்
காபன்
காங்கோ
ருவாண்டா
டான்ஜானியா
கெனியா
மாலவி
ஜாம்பியா
மலாக்சி

ஆகிய ஆப்பிரிக்க நாடுகளில் 'ஒரே கட்சி' ஆட்சி முறையைப் புகுத்தி வைத்துள்ளனர்.

உகந்தாவில் 'சர்வாதிகாரம்' துவங்கப்பட்டு விட்டிருக்கிறது.

விடுதலை பெற்ற வேறு பல ஆப்பிரிக்க நாடுகளில் ஒப்புக்கு எதிர்க் கட்சிகள் உள்ளன, உண்மையில் சர்வாதிகாரம் நடந்து வருகிறது.

இந்த நிலை கண்டுதான் மிக்க மகிழ்ச்சி அடைந்து சீனத்து சோ-இன்-லாய் ஆப்பிரிக்காவுக்கு ஆர்வத்துடன் பலமுறை பயணம் மேற்கொண்டார்.

அவர் கரம்பட்ட இடங்களிலே ஒன்று கனா!!

விடுதலை பெற்ற நாடுகள் உண்மையான ஜனநாயகத்தை மேற்கொண்டாலொழிய வாழ்வில் வளம் இல்லை என்பதை உணர்ந்து கொள்வதற்கும், விடுதலைக்காகப் பாடுபட்டவர்கள் என்ற விருது ஒன்றே போதும் எத்தனை அலங்கோலமான ஆட்சியையும் நடத்திக் கொண்டிருக்கலாம் என்ற நினைப்பு எத்தனை விபரீதத்தை, ஆபத்தை மூட்டிவிடும் என்பதையும் கனா காட்டுகிறது.

முப்பத்து இரண்டு வயதுள்ள ஒரு மாது 'நீதிபதியாக' அமர்ந்து மக்கள் வழக்கு மன்றம் நடத்தி, கனா நாட்டு

அதிபராக இருந்த நிக்ருமா செய்த குற்றங்களை விசாரித்து அவருக்கு மரண தண்டனை விதித்தாராம்!

வேடிக்கைக்காக நடத்தப்பட்ட நிகழ்ச்சி. ஆனால், நிக்ருமா சிக்கினால், புதிய சர்க்கார் என்ன நடவடிக்கையை மேற்கொள்ளும் என்பதனை விளக்கிட உதவுகிறது.

ஆனால், மரண தண்டனைகூட பரவாயில்லை என்று சொல்லலாம்; எந்த மக்கள் வாழ்த்தி வரவேற்றார்களோ அவர்களுடைய வெறுப்பினை, அரசியல் ஆணவம் கொண்டதால் பெற்று, ஆண்ட நாட்டிலிருந்து விரட்டப்பட்டு, ஆட்சி பறிக்கப்பட்டு, 'அன்றொரு நாள்' பற்றி எண்ணி ஏங்கி ஏங்கி மனம் சின்னா பின்னமாகிடும் கொடுமை, மரண தண்டனையைவிட மோசமானது.

நாட்டை விடுவித்தவர் என்ற காரணத்துக்காக மக்கள் பாசம் காட்டுகின்றனர்; அது மக்களின் நல்லியல்புக்கு எடுத்துக்காட்டு. ஆனால், பாசம் கொண்ட மக்களை, இனி இவர்களை என்ன செய்தாலும் எதிர்க்க மாட்டார்கள் என்று ஆட்சியிலுள்ளோன் எண்ணிக் கொள்வது ஏமாளித்தனம்.

நாட்டை விடுவித்த நமக்கு எதிராகவா ஒரு புரட்சி நடத்திட முடியும்; நம்மையா ஆட்சியிலிருந்து விரட்டிட முடியும் என்று நம்பிக் கிடந்தார் கனா அதிபர்.

அவர் 'ஒரு கட்சி' சர்வாதிகாரம் செய்திட முனையாமல் உண்மையான ஜனநாயக ஆட்சியை நடத்தியிருப்பின் இந்தக் 'கதி' ஏற்பட்டிருந்திருக்காது.

பாசம் கொண்ட மக்களை ஏதுமறியாதவர்கள், எதையும் செய்ய இயலாதவர்கள் என்று எண்ணிக்கொண்டு சர்வாதிகாரம் செய்தார் நிக்ருமா. படைத் தலைவர்களோ, படையைக் காட்டி அவருடைய ஆட்சியைக் கவிழ்த்துவிட்டனர். 'தன்வினை தன்னைச் சுடும்! ஓட்டப்பம் வீட்டைச்சுடும்!' என்ற பட்டினத்தடிகள் பற்றிய கதையின் நினைவுதான் பலருக்கும் வரும்—கனா அதிபரின் வீழ்ச்சி பற்றி அறியும்போது.

ஒரு நாட்டை விடுவித்த பெருமை நிக்ருமாவுக்கு. அது வரலாற்றுச் சிறப்புமிக்க புகழ், ஐயமில்லை. ஆனால்



அந்தப் புகழேவா மக்களுக்கு வாழ்வு அளித்து விடும்? பசி! பசி! என்று துடிப்பவனிடம், பசி போக்கிச்சொள்ள வழி தந்திடாமல் தனித்தனி முக்கனி பிழிந்து வடித்து ஒன்றாகக் கூட்டிச் சர்க்கரையும் கற்கண்டின் பொடியும் மிகத் தூவி என்ற பாடலை இனிமையாகப் பாடிக் காட்டினால் பதறுவான், போதும்! போதும்! பசி தீர்ந்துவிட்டது என்றா கூறுவான்! நிக்ருமா மட்டுமல்ல தமது நாட்டுக்கு விடுதலை பெற்றுத்தந்தவர் என்ற விருது பெற்றவர்களில் மிகப் பலர் இது போலவே நடந்து கொள்கிறார்கள்.

அதற்குக் காரணம், விடுதலை வீரன் என்ற விருது இவர் பெற எத்தனை எத்தனை மக்கள் தமது இன்னுயிரையும் ஈந்துள்ளனர், இன்னல் இழப்புகளைக் கண்டுள்ளனர் என்பதனை மறந்து விடுவதும், கணக்கெடுக்கத் தவறிவிட்டதுமேயாகும்.

விளக்கிலே காணப்படும் ஒளிக்கு, அதிலே ஊற்றப்பட்டுள்ள எண்ணெய்த்துளி ஒவ்வொன்றும் தன்னைத்தானே அர்ப்பணித்திருக்கிறது, திரியின் ஒவ்வொரு இழையும் தன்னைத்தானே தந்துவிட்டிருக்கிறது, இவற்றின் மொத்த விலையே ஒளி!

ஒரு நாட்டு விடுதலைக்காகப் பாடுபட்டு வெற்றி பெற்றவர் என்ற 'விருது' ஒருவருக்கோ, ஒரு சிலருக்கோ கிடைப்பதற்காக அந்த நாட்டில் 'ஊர் பேர்' தெரியாத எண்ணற்றவர்கள் உழைத்து உருக்குலைந்து போயுள்ளனர். அவர்களின் தியாகத்தின் விளைவின் காரணமாகவே, நாடு விடுதலை பெற்றிட முடிந்தது என்ற உண்மையை உணர்ந்திடின், எத்தனை பெரிய விடுதலை வீரனுக்கும் ஓர் அடக்க உணர்ச்சி ஏற்படும். அந்த அடக்கம் அவனது ஆற்றலைப் பன்மடங்கு அதிகமாக்கிடும்; பெருமையைப் பன்மடங்கு உயர்த்திடும்.

ஆனால், இந்த இயல்பு பலருக்கு எளிதாக இருப்பதில்லை, உச்சி செல்லச் செல்ல ஒரு மனமயக்கம் ஏற்பட்டு விடுகிறது.

எல்லாம் நானே! எதற்கும் நானே! நான் மட்டுமே! என்ற எண்ணமே தலைக்கேறி விடுகிறது. அப்போது அவர்கள் தம்மையும் அறியாமல் 'கொடுங்கோலர்' ஆகிவிடுகின்றனர்.

அப்படிப்பட்ட கொடுங்கோன்மை ஏற்பட்டுவிடுமானால், விடுவிக்கப்பட்ட மக்கள் மீண்டும் அடிமைகளாக்கப்பட்டுப் போவர். ஒரு சுமை கீழே தள்ளப்பட்டுப் புதுச்சுமை தலைமீது ஏற்றப்பட்டுவிடும் நிலை! தலைவலி போய் திருகுவலி வந்தது என்பார்களே அந்த நிலை.

மக்கள் உரிமையும் நலனும் பெற்று வாழ்ந்திடவே விடுதலை பெறுகின்றனர்; அந்த நோக்கம் ஈடேற வேண்டுமானால், மக்கள் மனதில் தமது கருத்தினைக் கேட்டறிந்து கொண்டுதான் ஆட்சி நடத்தப்படுகிறது என்ற உணர்வு எழவேண்டும்; அந்த உணர்வு உண்மையான ஜனநாயகத்திலேதான் பெறமுடியும். அந்த உணர்வை அழித்திட்டார், ஆகவே அவருடைய முன்னாள் 'புகழ்' கூட அவருக்குத் துணை நிற்க முடியவில்லை.

அவராகிலும் உள்ளபடி விடுதலைக்காகப் பணியாற்றியவர், பெருமைக்கு உரியவர், மக்களிடம் மார்தட்டிக் கூறமுடியும் 'நான் உங்களுக்காகப் பாடுபட்டவன் அல்லவா?' என்று. இங்கு பார்க்கிறோமே, விடுதலைக்காகச் சிறு விரலையும் அசைக்காத பேர்வழிகள் எல்லாம்கூட, அந்த முகாமில் நுழைந்து இடம் பிடித்துக் கொண்டதாலேயே, எக்காளம் கிளப்பிடும் உரிமை தமக்குக் கிடைத்துவிட்டிருப்பதாக நினைத்துக் கொள்வதை.

வியர்வை பொழியப் பாடுபட்டேன் என்று விலாப்புடைக்கத் தின்றவன், சாப்பிடும்போது ஏற்பட்ட அலுப்புக் காரணமாகச் சிந்திய வியர்வையைக் காட்டினால் "ஆமப்பா!" வியர்வை கொட்டக் கொட்டத்தான் பாடுபட்டிருக்கிறார் என்று ஏமாளியன்றி வேறு யார் ஒப்புக் கொள்வார்கள். கடுமையான வேலை முடிந்து விழா நடந்து விருந்துண்ணும்போது பந்தியிலே இடம் பிடித்துக் கொண்டதுகளெல்லாம் இங்கே 'வீரதீரம்' பேசம்போது, உள்ளபடியே நெருப்பாற்றில் நீந்தி வெளி வந்த நிக்ருமா, பெருமை பேசிக் கொள்ளக் கூடாதா? உரிமை உண்டு. ஆனால் அதையே காரணமாகக் காட்டி, கொடுங்கோலாட்சி செய்திடின்? நாடு ஒப்புக் கொள்ளாது என்பதனைக் காட்டுகிறது கனா நிகழ்ச்சி.

வெள்ளை மாளிகையில் என்ற தலைப்பில் நான் தந்து வந்த தொடர் கட்டுரையையும் இந்தக்கிழமை நிறுத்தி



வைத்து, கனா பற்றி எழுதியதற்குக் காரணம், இந்த நிக்ருமா தன் ஆற்றலால் கனா நாட்டை மட்டுமல்ல, கருப்பர் இனம் முழுவதையுமே விடுவிக்க வந்தவர் என்ற விருது பெற்றவர், என்றாலும் நிதானம் இழந்ததால், மக்களை மதிக்க மறுத்ததால் கவிழ்ந்து விட்டார் என்பது, ஆட்சி எவ்விதம் இருந்தால் மக்களின் நிலையான ஆதரவைப் பெற்றிடும் என்ற பொதுவான பாடத்தை, வெள்ளை மாளிகையில் என்ற தொடர் கட்டுரையுடன் இணைத்துப் படித்துக் கொள்வது பயனளிக்கும் என்பதால்.

அது மட்டுமன்றி, நான் எழுதிக் கொண்டு வந்த தொடர் கட்டுரையிலும் நிக்ருமா தொடர்பு கொள்கிறார். எங்ஙனம் என்பதை அடுத்த கிழமை தந்திடும் வெள்ளை மாளிகை பற்றிய தொடர் கட்டுரையில் காணலாம்.

அண்ணன்,

*13-3-66* அண்ணாதுரை

காஞ்சிக் கடிதம் : 54

# வெள்ளை மாளிகையில் (6)
# கருப்பு நட்சத்திரம்

★ **நம்பிக்கை நட்சத்திரம் 'கார்வி'**

★ **சாதியைக் காத்திடக் கொலை!**

★ **'இரத்தக் கலப்பா?—கூடவே கூடாது!'**

★ **எட்னா என்னும் இனியவள்**

★ **சதியும் விழித்திருக்கிறது!**

தம்பி,

**''நான் படித்த எல்லா இலக்கியங்களிலேயும் என் உள்ளத்தில் அதிக அளவு எழுச்சியூட்டியது மார்கஸ் கார்வியின் தத்துவம் பற்றிய இல்க்கியமே''**

என்று ஆர்வத்துடன் கூறினார் கனா நாட்டு அதிபராக இருந்து அகற்றப்பட்ட நிக்ருமா, 1958-ல். நீக்ரோக்களின் உரிமைக்காகவும் நல்வாழ்வுக்காகவும் போராடியவர்களிலே மிகத் தீவிரவாதி இந்தக் கார்வி. இவர்பற்றிப் பெரு மதிப்புக் கொண்டவர் நிக்ருமா. அக்ராவில் 1958-ல் நடைபெற்ற அகில ஆப்பிரிக்க மக்கள் காங்கிரசில் பேசும் போது கார்வியைப் பெரிதும் பாராட்டிப் பேசியதுடன், கனா நாட்டுத் துரைத்தனம் அமைத்த வியாபாரக் கப்பல் அணிக்கு, நிக்ருமா, ''கருப்பு நட்சத்திர அணி'' என்று



பெயருமிட்டார். எந்தக் கார்வியிடம் நிக்ருமா அத்தனை மதிப்பு வைத்திருந்தாரோ, அவர் பொறிபறக்க பேசினவர் -புதுப்புதுத் திட்டம் தீட்டியவர்—துணிவுடன் போராடியவர். ஆனால் நிர்வாகத்தைத் திறம்பட நடத்திச் செல்லாமல் தோல்வி கண்டவர்.

பல ஆண்டுகள் கார்வியின் புகழ் நாடு பலவற்றினிலே பரவி நின்றது. கருப்பரின் கஷ்டமெல்லாம் இனித் தீர்ந்து போகும், விடுதலையும், புதுவாழ்வும் கிடைத்துவிடும் என்று எண்ணற்ற நீக்ரோக்கள் நம்பினர். மார்கஸ் கார்வி, நீக்ரோக்கள் அமெரிக்காவில் இருந்துகொண்டு அல்லலையும் இழிவையும் தாங்கிக் கொண்டிருப்பானேன், அவர்களுக்கென்று தாயகம் இருக்கிறது, ஆப்பிரிக்கா! அங்கு சென்று உரிமையுடன் வாழ்ந்திடலாம்! எழுக! என்னுடன் வருக! ஆப்பிரிக்கா சென்றிடுவோம், அங்கு நமது அரசு கண்டிடுவோம்! என்று அழைத்தார். எழுச்சி ததும்பிற்று. மேற்கிந்தியப் பகுதியில் பிறந்த இந்தக் கார்வி அமெரிக்க நீக்ரோக்களின் மாபெரும் தலைவரானார். ஆப்பிரிக்கா சென்றிடுவது என்ற அவருடைய திட்டம், சொல்லளவுடன் இருந்துவிடவில்லை; ஏற்பாடுகளே மேற்கொள்ளப்பட்டன. கப்பல்கள் தயாரிக்கப்பட்டன; பெருநிதி திரட்டப்பட்டது; பல இலட்ச நீக்ரோக்கள் புனிதப் பயணத்துக்குத் தயாராயினர். மூன்று கப்பல்களே கிளம்பின! அந்தப் பயணக் கம்பெனிக்கு கார்வி சூட்டிய பெயர்தான் 'கருப்பு நட்சத்திரம்' என்பது. அந்தப் பெயரைத்தான் ஆட்சியில் அமர்ந்தபோது நிக்ருமா கனா நாட்டுக் கப்பல் அணிக்குச் சூட்டினார்.

.....................................

நிக்ருமாவுக்கு எழுச்சியூட்டத்தக்க சிறப்புப் பட்டங்கள் பல உண்டு; அதுபோலவே கார்விக்கும் தளபதிகளாக்கப் பட்டவர்களுக்கும் விதவிதமான பட்டங்கள்.

ஆப்பிரிக்க மாமன்னர்— மன்னர்— அமைச்சர்— தளபதி—என்றெல்லாம் பட்டங்கள். எல்லாம் அமெரிக்காவில் இருந்து கொண்டே! கார்வி ஆப்பிரிக்காவில் காலடி வைத்ததே இல்லை; ஆனால் பல ஆண்டுகள் அமெரிக்காவில் அவரைச் சுட்டிக்காட்டுவர் பெருமிதத்துடன், ஆப்பிரிக்க மாமன்னர் என்று!

பட்டங்கள் மட்டுமல்ல, அவைகளுக்கேற்ற விதமான பகட்டுடைகள்! பவனிகள்! பராக்குகள்!

கார்வி தோற்ற பிறகு இவைபற்றிப் பலர் ஏளனம் செய்தனர்; ஆனால் அவர் புனிதப் பயணம் பற்றிய திட்டத்தை எடுத்துரைத்துக் கொண்டிருந்தபோது, ஏளனம் செய்தவர் எவரும் இல்லை. எங்கும் எழுச்சி மயம்!!

அப்போது நிக்ருமா, அமெரிக்காவில் மாணவர்!

அந்த இளம் உள்ளத்தில் பதிந்துவிட்ட எழுச்சி காரண மாகவே, நிக்ருமா ஆட்சிக்கு வந்தபோது, கார்வியே தனக்கு 'வழிகாட்டி'யாக விளங்கிவந்தார் என்று கூறிடச் செய்தது.

அடிமைப்பட்டு, இன்னலையும் இழிவையும் தாங்கித் தாங்கிக் குமுறிக் கிடக்கும் மக்களுக்கு, விடுதலை ஆர்வம் ஊட்ட, எழுச்சி உண்டாக, ஒரு நம்பிக்கை எழவேண்டும். அந்த நம்பிக்கையைத் தரத்தக்க ஒரு மாவீரன் வேண்டும்.

கார்வி அந்த மாவீரனாக விளங்கினான். ஆனால் எழுச்சியூட்டப் பயன்பட்ட அந்த மாபெருந் தலைவன் தானே எழுச்சி வயப்பட்டு, நடைமுறைக்கு ஏற்றதல்லாத திட்டம் தீட்டி, தோல்வி கண்டான்; சிறையிலேயே தள்ளப்பட்டான்; நாடு கடத்தப்பட்டான்.

நீக்ரோ இனத்தவரை அழைத்துச் சென்று மாபெரும் ஆப்பிரிக்கப் பேரரசு அமைக்கப் போவதாக அறிவித்து, அணிவகுப்பு நடத்திய கார்வி தன் கடைசிநாட்களை, இலண்டன் நகரில் கழிக்க வேண்டியதாயிற்று; கனவு கலைக்கப்பட்ட நிலையில்; மனம் உடைந்த நிலையில்; கவனிப்பாரற்று! நட்சத்திரம் கருப்பாகி விட்டது!

இலட்சியங்களைக் கொண்டு எழுச்சி யூட்டுவதிலேயே வெற்றி கிட்டியான பிறகு, மக்களை அணி திரட்டியான பிறகு, செயலில் ஈடுபட்டு, இலட்சியத்தை நிறைவேற்றிட முனையும்போது ஏற்படும் ஏமாற்றம் தோல்வி வரலாற்று ஏட்டினிலே பலப்பல காணக் கிடக்கின்றன. இலட்சியம் காண்பதில், அதனை மக்கள் ஏற்று கொள்ளச் செய்வதில் வெற்றி கண்டவர்களிலேயே பலர், இலட்சியத்தை நடை முறை வெற்றியாக்கிடும் முயற்சியில் தோல்வியால் தாக்



குண்டு போயுள்ளனர், காலம் ஏற்றதாக அமையாத தாலும் கருவிகள் செம்மையாகக் கிடைக்காததாலும், புதிய சூழ்நிலைகள் எதிர்பாராதவகையிலே வடிவமெடுத்து விடுவ தாலும், அத்தகைய தோல்விகள் ஏற்பட்டுவிடுகின்றன.

அந்தத் தோல்விகள் எல்லாமே இலட்சியம் சரியான தல்ல என்பதற்குச் சான்றுகள் என்று கொண்டுவிடக் கூடாது.

தோல்வி தாக்கிடும் என்று அஞ்சி இலட்சியங்களை மேற்கொள்ளாதிருப்பதும் தவறு; நடைமுறைக்கு ஏற்ற தோ அல்லவோ என்பது குறித்த கவலையற்று காலமும் கருவியும் தக்கவிதமாக அமைகின்றனவா என்பதுபற்றிப் பொருட்படுத்தாமல், வெறும் இலட்சியமுழக்கம் எழுப்பிய படி இருந்து வருவதும் பயனற்ற வேலையாகிவிடும்.

குழலின் துளைகள் சரியானபடி அமைந்து விடுவதாலே யே அதனைக் கொண்டு எவரும் இன்னிசை எழுப்பிடலாம் என்று எண்ணுவதும் தவறு; அதுபோலவே திறமைமிக்க இசைப் புலவன் நான்! எனவே குழலின் துளைகள் எப்படித் தாறுமாறாக இருப்பினும் இனிய இசையினை எழுப்பிட என்னால் முடியும் என்று இறுமாந்து கூறுவதும் தவறு.

மக்கள் நம்முடன் வருவார்களா அவர்களால் முடியுமா கடினமான பயணம் மேற்கொள்ள என்று எண்ணி எண்ணித் தயங்கிப் பயணத்தைத் துவக்காமல் இருந்து விடு வதும் தவறு. மக்கள் தன்னோடு வருகிறார்களா இல்லை யா என்பது பற்றிய கவலையற்று பயணத்தை மேற் கொண்டு விடுவதும் பயனற்றதாகி விடும்.

ஆர்வம் காரணமாக, எந்தத் திட்டமும் எளிதாக நிறைவேற்றிவிடக் கூடியது என்ற 'மனமயக்கம்' ஏற்பட்டு விடுவதுண்டு; ஆனால் அந்த மயக்கம் பீடித்து கொண்ட நிலையிலே செய்துவிடும் செயல் வெற்றிக்கு வழி அமைப்ப தில்லை.

அச்சகத் தொழிலாளியாக வாழ்க்கையைத் துவக்கிய கார்வி ஆர்வம் கொந்தளிக்கும் உள்ளத்தினராக கொடி, படை, முழக்கம் அமைத்துக் கொண்டு 'ஆப்பிரிக்கப் பேரரசு அமைத்திடுவேன்' என்று சூள் உரைத்துக் கிளம் பியபோது, வெற்றி நிச்சயம் என்றுதான் நம்பிக் கொண்டி ருந்தார்,

பச்சை—கருப்பு—சிகப்பு— என்றவிதமான மூவர்ணக் கொடியினைப் பறக்கவிட்டார் கார்வி! கருப்பு, இனத்திற்குச் சின்னம்; சிகப்பு இரத்தம் சிந்தியேனும் வெற்றி காண்போம் என்பதனை உணர்த்த; பச்சை, வளமான வாழ்வு அமைந்திடும் என்பதற்கான அடையாளம்!

கிட்டத்தட்ட பத்து இலட்சம் டாலர்கள் திரட்டினார், புனிதப் பயணத்துக்காக. கப்பல்கள் கிளம்பின! வழியிலேயே இன்னல், இழப்பு! திரட்டிய பணத்தைக் கொண்டு செம்மையான அமைப்பை நடத்திட முடியவில்லை. பணம் திரண்டதும், பசப்பித் திரிவோர், பல்லிளிப்போர், பறித்துத் தின்போர் மொய்த்துக் கொண்டனர். பணம் பாழாயிற்று. பொதுமக்களிடம் பணம் திரட்டி மோசம் செய்ததாக வழக்குத் தொடரப்பட்டு, கார்விக்கு ஐந்தாண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

இரண்டாண்டுச் சிறை வாழ்க்கைக்குப் பிறகு, கார்வியை அமெரிக்க அரசு நாடு கடத்திவிட்டது. அவ்வளவோடு அவர் 'கதை' முடிந்தது.

கார்வியை, மாணவ நாட்களிலே கண்டு களித்து, எழுச்சி பெற்ற நிக்ருமாவும், தனது நாட்டை வாழவைக்க வேண்டும் என்ற ஆர்வம் கொழுந்து விட்டெறியும் உள்ளத்தினர்; அதிலே ஐயமில்லை. ஆனால் நடைமுறைக்கு ஏற்றதா அல்லவா என்பதுபற்றி எண்ணிப் பார்த்திடாமல் திட்டம் பல மேற்கொண்டதுடன், எவருடைய கருத்தையும் மதிக்க மறுத்து, ஜனநாயகத்தைச் சிதைத்து ஒரு கட்சிச் சர்வாதிகாரத்தைத் திணித்தார்; எல்லாம் நாட்டின் நன்மைக்காகவே!! ஆனால் நாடு தாங்கிக் கொள்ள மறுத்துவிட்டது. எந்த நாட்டிலே அவரை 'வழிபட்டு' நிற்க மக்கள் துடித்துக் கிடந்தனரோ, அதே நாட்டிலே அவர் இனி 'படையுடன்' வந்து போரிட்டு வெற்றி பெற்றாலன்றி 'பவனி' வந்திட முடியாது என்ற நிலை.

ஜனநாயகம் சிதைக்கப்பட்டால் ஏற்படக்கூடிய கேட்டினைக் கனா நிகழ்ச்சி எடுத்துக் காட்டுகிறது; அதுபோன்றே ஜனநாயகத்தை 'போலியானதாக்கி, ஆட்சி செய்பவரை 'தலையாட்டி'யாக்கிட தருக்கர் சிலர் முனையக்கூடும்; அதிலும் நிறவெறி காரணமாக அந்தத் தருக்கு ஏற்பட்டிருப்பின் எத்தகைய அக்கிரமத்தையும் துணிந்து செய்வார்கள் என்பதை எடுத்துக் காட்டுகிறார் இர்விங்



வாலாஸ், தாம் எழுதிய கருத்தாழம் மிக்க மனிதன் என்ற ஏட்டின் மூலம்.

வெள்ளையருக்கு அஞ்சி அநீதிக்கு அடிபணியவும் மாட்டேன்; கருப்பர் என்ற இனப்பாசத்திற்காகவும் அநியாயத்துக்குத் துணை நிற்கவும் மாட்டேன் என்று டில்மன் பேச்சால் அல்ல, செயலால் காட்டியது கண்டு வெகுண்ட வெள்ளைப் பேரதிகாரிகள், அவர் மீது 'கண்டனம்' தொடுத்தனர்.

தகுதியற்றவர்

தருக்கர்

காமவெறி பிடித்தவர்

சதிகாரருக்குத் துணை நிற்பவர்

என்ற பல்வேறு வகையான குற்றங்களைச் சுமத்தினர்.

தம்பி! இனம், ஜாதி, குலம், செல்வம் என்பவை காரணமாக அமைக்கப்பட்டுவிடும் பேத உணர்ச்சி இருக்கிறதே, அதனால் ஆட்டிப்படைக்கப்படுபவர்கள், சொல்லிடவும் கூசும் கொடுமைகளைச் செய்திடவும் துணிவர்; இனப்பெருமை காப்பாற்றப்படவேண்டும் என்பதற்காக, கொலையும் துணிந்து செய்திடுவர்.

நான் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்த நாட்களில்— ஜாதிப் பிடிப்பு இன்றுள்ளதைவிட பயங்கரமான அழுத்தத்துடன் இருந்தது; அந்த நாட்களில், ஜாதி வெறிபிடித்தவர்கள் எத்தகைய கொடுமையைச் செய்யத் துணிவர் என்பதனை எடுத்துக் காட்டும் ஒரு பயங்கரச் சம்பவம் நடைபெற்றதாகக் கேள்விப்பட்டு கிடுகிடுத்துப் போனேன்.

தன்னை சற்று மேல்ஜாதி என்று கூறிக் கொண்டு தமது மகளை மண முடித்துக் கொண்டவன் உள்ளபடி தம்மைவிடச் சிறிதளவு 'மட்டமான' ஜாதி என்று அறிந்து கொண்ட பெண் வீட்டார், என்ன செய்தனர் தெரியுமோ! தாலியை அறுத்துப்போடு! அந்தத் தகாதவனுடன் செய்து கொண்ட திருமணம், சாஸ்திர சம்மதம் பெற்ற திருமணம் அல்ல!!—என்று கூவிக் கொக்கரித்து 'மாப்பிள்ளை'யை விரட்டிவிட்டு, பெண்ணைத் தமது வீட்டோடு வைத்துக் கொண்டார்கள் என்று எண்ணிக் கொள்ளுவாய். அவ்விதம் செய்யவில்லை! ஊரிலே கேள்வி பிறக்காதா? ஏன்

பெண் மாப்பிள்ளை வீட்டுக்குப் போகவில்லை? என்ன தகராறு சம்பந்திகளுக்கு? என்று கேள்விகள் துவங்கி, கடைசியில் ‘மட்டஜாதி’க்காரனுக்குப் பெண்ணைக் கொடுத்து விட்டார்களாம் என்ற உண்மை அம்பலமாகி, ஊர் ஏசுமே, ஏளனம் செய்யுமே! காலத்துக்கும் இருக்குமே அந்தக் கறை!! ஆகவே வெளியே சொல்லவில்லை. உண்மை தெரிந்துவிட்டது என்று மாப்பிள்ளையே கூடத் தெரிந்துகொள்ள விடவில்லை. புன்னகை காட்டியபடி இருந்தனர். மாப்பிள்ளை ‘விருந்து’ சாப்பிட வந்தவர், மாலையில் உலவப் போனார்! இரவு பிணத்தைத்தான் தூக்கிக் கொண்டு வந்து போட்டனர்; யாருக்கும் தெரியாமல், ஆளைவிட்டு அடித்துக்கொன்று போட்டு விட்டனர். மகளை விதவையாக்கினர், ஜாதி கெடக்கூடாது, ஜாதி காரணமாக இருந்து வந்த மதிப்பு மடியக் கூடாது என்பதற்காக; கொலையே செய்தனர், குலப் பெருமையைக் காப்பாற்றிக்கொள்ள! பெரிய இடம்! ஒரு துப்பும் கிடைக்கவில்லை! ஒரு புகாரும் எழவில்லை!! இங்கு மங்குமாக, மெள்ள மெள்ளப் பேச்சுக் கிளம்பிற்று.

இருக்கும்! இருக்கும் என்றவர்களும்,

இதை எல்லாம் யார் கண்டனர் என்றவர்களும்’

இல்லாமல் பிறவாது அள்ளாமல் குறையாது என்றவர்களும்

நிரம்ப இருந்தனர்; இந்த அக்கிரமம் ஆகுமா என்று கேட்க எவரும் கிளம்பவில்லை. அதுமட்டுமல்ல, தம்பி! ஜாதியைக் கெடுத்துக்கொள்ள எவனய்யா சம்மதிப்பான்? என்று கேட்டவர்களும், ‘‘வேறே வழி! தீர்த்துக் கட்டுவது தவிர வேறே வழி?’’ என்று ‘நியாயம்’ பேசியவர்களும், அவன் செய்த அநியாயத்துக்கு அவனை வெட்டி வெட்டியல்லவா போட்டிருக்க வேண்டும என்று கொதித்துக் கூறியவர்களும், கொலை! கொலை! என்று பேசுகிறார்களே!! பாம்பைச் சாகடிக்காமல், படுக்கையில் புரளவிடுவார்களா! ஜாதியைக் கெடுக்க வந்தவனைச் சாகடித்துப் போடாமல், சந்தனத் தாம்பூலம் கொடுப்பார்களா! என்று பேசியவர்களும் இருந்தனர், பெரிய புள்ளிகளாக! ஊருக்கு நியாயம் வழங்கும் பெரியவர்களாக!!

ஒரு கருப்பு இனத்தவன் நாட்டை ஆள்வது, எஜமானர் இனமான வெள்ளையர் அடிபணிந்து கிடப்பது இந்த அக்கி



ரமத்தைச் சகித்துக் கொள்ளச் சொல்லுகிறீர்களா? இது சட்ட சம்மதமானது என்று சொல்லுகிறீர்களா? அரசியல் வேறு! இன இயல் வேறு என்று விளக்கம் கூற முற்படுகிறீர்களா? இந்த வாதமும் விளக்கமும் கோழைத்தனத்தின் விளைவு, மதிப்பறியா நிலையின் விளைவு; நான் அவ்விதம் இருக்கமாட்டேன்; இந்தக் கருப்பனை வெள்ளை மாளிகையிலிருந்து விரட்டி அடிக்கும் வரையில் நான் ஓயமாட்டேன், நிம்மதியாக உறங்கமாட்டேன் என்று துவக்கமுதலே உறுமிக் கொண்டிருந்தான், நிறவெறியை ஒரு தத்துவம் தர்மம் என்று நம்பிய வெள்ளை இதழாசிரியன் ஒருவன். அவன் போன்றவர்கள், டில்மன்மீது வழக்கு தொடரப்பட்டதும் களிநடமாடினர். விரட்டி விடுவதைவிட, வீழ்த்தி விடுவதைவிட, அவன்மீது குற்றம் சுமத்தி, தண்டித்து வெளியே துரத்துவதுதான் அவனுக்கு மட்டுமல்ல, அவனுடைய ‘இனத்துக்கே’ —இன்று மட்டுமல்ல, என்றென்றும் துடைக்கப்பட முடியாத கறையை ஏற்றிவைக்கும் என்று கருதி மகிழ்ந்தனர் நிறவெறியர்கள்.

இனம், ஜாதி, குலம் ஆகியவை கெட்டுவிடாமல் பாதுகாக்கப்பட வேண்டுமானால், ‘இரத்தக்கலப்பு’ ஏற்படக் கூடாது; இரத்தக் கலப்பு ஏற்படாமலிருக்க வேண்டுமானால் இரு இனத்தவர்க்குள்ளே கலப்புமணம் அனுமதிக்கப்படக்கூடாது; உடலுறவு ஏற்பட்டு விடக்கூடாது என்று அழுத்தமான நம்பிக்கை காரணமாக, கட்டுதிட்டமும் சட்டமும் சம்பிரதாயமும் அமைந்துவிடுகின்றன.

நீக்ரோக்கள் தாழ்ந்தவர்கள், அவர்களுடைய ‘இர[illegible]’ வெள்ளை இனத்தவரின் இரத்தம் போன்றதல்ல, [illegible] என்ன, [illegible]து அல்ல! என்று வாதாடினர்; அக்கிரமக்காரர்களும் அடாவடிப் பேர்வழிகளுமல்ல, கற்றவர்களே!! தம்பி! இன்று வெகு எளிதாகக் கூறிவிடுகிறோம், எல்லோர் உடலிலும் ஒரேவிதமான இரத்தம்தான் ஓடுகிறது! இதிலே நீ என்ன உயர்வு? நான் என்ன மட்டம்? என்று கேட்கிறோம். மறுப்பார் இல்லை!! ஆனால் அமெரிக்காவில் இன்றளவும், நீக்ரோ இரத்தம் வேறு, வெள்ளையர் இரத்தம் வேறு; இந்த இரண்டும் கலந்திடக்கூடாது என்ற முரட்டுத்தனத்தையும் குருட்டுப் போக்கையும் கட்டிப்பிடித்துக் கொண்டுள்ளவர்கள் பலப்பலர்! இத்தகைய ‘காட்டுமிராண்டி’க் கருத்தைக் கொண்டவர்கள் முன்பு அமெரிக்காவில், பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் என்ற

நிலையிலும், பாதிரிமார்கள் என்ற பட்டத்தைச் சுமந்து கொண்டிருக்கும் நிலையிலும் இருந்தனர்.

ஒருசொட்டு நீக்ரோ இரத்தம் கலந்தாலும் போதும், நீக்ரோ ஆகிவிட வேண்டியதாகிவிடும்! ஒரு சொட்டு நீக்ரோ இரத்தம் கலந்தால் போதும் தலை முடி சுருண்டுவிடும், உதடு பெருத்துவிடும், முகம் தட்டையாகி விடும், அறிவு ஒளி அணைந்து விடும், மிருக இயல்பு மிகுந்துவிடும், நீக்ரோ தன்மை தன்னாலே வந்துவிடும்.

1906-ல் தம்பி! இப்படிக் கூறியவர் தாமஸ் டிக்சன் என்பார். கர்த்தருக்கு பூஜை நடாத்திடும் புனிதப் பணியில் ஈடுபட்டிருந்தார். இந்தப் போக்கினராக இருந்த பல்லாயிரவரில் இந்த டிக்சன் ஒருவர்.

இவ்விதமான குருட்டுக் கோட்பாடு காரணமாக வெள்ளை இனத்தவர் தங்கள் 'இரத்தம்' தூய்மையானதாக இருந்தாக வேண்டுமென்பதில் மிகுந்த அக்கறை காட்டி வந்ததுடன், நீக்ரோக்களுக்கு உரிமை கொடுத்தால், மனிதத் தன்மையுடன் நடத்திவந்தால், மெள்ள மெள்ள அந்த இரு இனத்துக்கும் இரத்தக் கலப்பு ஏற்பட்டு விடும், பிறகு வெள்ளை இனத்தின் உயர்வும் தனித்தன்மையும் நாசமாகிவிடும் என்று கருதினர். இந்த எண்ணத்தின் தொடர்பாக வேறோர் கருத்து கிளம்பிற்று; நீக்ரோக்கள் காமவெறியர்கள்! சிறிதளவு ஏமாந்த நிலையில் இருந்திடின் போதும், வெள்ளை மாதர்களைக் கற்பழித்து விடுவர்; அவர்களின் விலங்கியல்புக்கு வெள்ளை மாதர்கள் பலியாகிப் போவர்!—என்ற எண்ணம்!

நீக்ரோக்களைத்தான் வெள்ளையர் தமது [illegible]ணை களிலே மட்டுமல்ல, வீடுகளில், கடை[illegible]ளில், அலுவலகங் களில், கேளிக்கைக் கூடங்களில் வேலைக்கு வைத்துக் கொண்டிருந்தனர்; கடுமையாக உழைப்பார்கள், அடக்க ஒடுக்கமாக நடந்துகொள்வார்கள், கூலியும் அதிகம் தரத் தேவையில்லை என்ற காரணத்தால்.

வெள்ளையருடன்—மாதருடனும்—பழகியே தீர வேண்டிய நிலை நீக்ரோக்களுக்கு.

ஆனால், வெள்ளையர்களுக்குச் சொல்லிவைக்கப்பட்ட தகவல், கருப்பரிடம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்,



அவர்கள் மிருக இயல்பினர், காமவெறி கொண்டவர்கள் என்பது!

இதன் பயனாக வீணான சந்தேகத்துக்கு ஆளாகி, சித்திரவதை செய்யப்பட்ட நீக்ரோக்களைப் பற்றிய ஏடுகள் படிப்போரின் உள்ளத்தை உருக்கும்; இரத்தக் கண்ணீர் வடிப்பர்.

நிலைமையை உணர்ந்த நீக்ரோக்கள், இது விஷயத்தில் மிக ஜாக்ரதையாக இருப்பர். வெள்ளை மாதர்களை நெருப்பாகக் கருதுவர்! எந்த நேரத்தில் எந்த விதமான பழி சுமத்தப்பட்டுவிடுமோ என்பது மட்டுமல்ல, எந்தச் சமயத்தில் என்னவிதமான பயங்கரச் சோதனைக்கு ஆளாக்கப்பட்டு விடுவோமோ என்ற பயமும்கூட.

டக்ளஸ் டில்மன் குடிஅரசுத் தலைவரானதும், இந்த நிலைமையை எடுத்துக்காட்டும் நிகழ்ச்சி ஒன்று நடைபெறுகிறது. தம்பி! படித்ததும், நம்மையுமறியாமல் கண்களில் நீர் துளிர்க்கிறது.

வெள்ளையர்கள் மனதில் நெடுங்காலமாகப் படர்ந்து கிடக்கும் வெறுப்புணர்ச்சி, ஒரு கருப்பர் குடிஅரசுத் தலைவர் என்ற உயர் பதவி பெற்றுவிடுவதாலே மட்டும், ஒரே அடியாக மறைந்துவிடுமா?

தாங்கிக்கொள்ள வேண்டி இருக்கிறது,

சகித்துக்கொண்டாக வேண்டும்.

வேறு வழி இல்லையே, என்ன செய்வது,

என்று எண்ணிக்கொள்வரேயன்றி, நிறம் எதுவாக இருந்தால் என்ன, குடிஅரசுத் தலைவர் என்ற முறையில், அவர் நம்முடைய அன்புக்கும் மரியாதைக்கும் உரித்தானவராகிறார் என்றா எண்ணிக்கொள்வர்; இயல்பு இலேசாகவா மாறிவிடும்!

டக்ளஸ் டில்மன் குடிஅரசுத் தலைவராகி, வெள்ளை மாளிகை சென்ற நாள்; முதல்நாள்.

குடிஅரசுத் தலைவருக்கென்று உள்ள பல அலுவலர்கள், ஒரு கருப்பரின் கீழ் வேலை செய்யவேண்டி இருக்கிறதே என்ற விசாரத்தில் மூழ்கிக்கிடக்கின்றனர். சிலர் நீக்ரோ இனத்தவரான டில்மனுக்கு அதே இனத்தைச்

சேர்ந்தவர்கள் பணியாட்களாக இருப்பது முறையாக இருக்கும் என்று கருதி, தமது வேலைகளை ராஜிநாமாச் செய்துவிட முடிவு செய்தனர். அவ்விதம் முடிவு செய்த வர்களில் ஒருவர் எட்னா என்ற வெள்ளை மாது; குடி அரசுத் தலைவருக்கு அந்தரங்கக் காரியதரிசியாக வேலை பார்ப்பவர். இனி நீக்ரோ மாது ஒருத்தியைத்தான் இந்த வேலையைப் பார்த்துக்கொள்ளச் சொல்லவேண்டும், இன்று மட்டும் குடிஅரசுத் தலைவருக்கு அலுவலக முறை களைக் கூறிவிட்டால் போதும் என்று எண்ணிக்கொண்டு, ராஜிநாமாக் கடிதத்தைத் தயாராக எடுத்துக்கொண்டு, அன்று அவர் பார்க்க வேண்டிய அலுவல்கள் பற்றிய குறிப்புப் புத்தகத்துடன், குடிஅரசுத் தலைவருடைய தனி அறைக்குச் செல்கிறாள்.

டில்மனுக்கு வணக்கம் கூறிவிட்டு, அவருடைய அன்றைய அலுவல் பற்றிய குறிப்பைத் தந்துவிட்டு, ராஜி நாமாக் கடிதத்தைத் தந்திடத் தயாராகிறாள்.

முக்கியமான ஒரு கடிதம் எழுதப்பட வேண்டும் என்ற குறிப்பினைக் காட்டுகிறார் டில்மன். அவர் கூறிக்கொண்டு வர எட்னா சுருக்கெழுத்தில் எழுதவேண்டும். இருவரும் உட்கார்ந்து கொள்வதற்கு வசதியாக அமைந்திருந்த ஒரு சோபாவைக் காட்டுகிறார் டில்மன். உடனே எட்னா, பலகணியை இழுத்து மூடுகிறாள்; அறைக்கதவைச் சாத்தித் தாளிடுகிறாள்.

''என்ன செய்கிறாய் எட்னா?''

''கதவைச் சாத்தித் தாளிடுகிறேன். தாங்கள் கூறப்போகும் தகவல்—கடிதம்—இரகசியமானதா யிற்றே! குடிஅரசுத் தலைவர் தமது அந்தரங்கக் காரிய தரிசியைக் கொண்டு தயாரிக்கும் கடிதத்தில் உள்ள விஷயம் வெளியே ஒருவருக்கும் தெரியக்கூடாதே...''

''அதனால் கதவைத் தாளிட்டாயா, எட்னா? வேண்டாம், கதவு திறந்தே இருக்கட்டும். ஏன் என்று திகைத்திட வேண்டாம்...என் நிலை அப்படி...ஒரு சம்பவம் நினைவிலே இருக்கிறது. முன்பு குடிஅரசுத் தலைவராக இருந்த அயிசனவர் ஒரு நீக்ரோவுக்கு முக்கியமான பதவி கொடுத்தார்...அந்த நீக்ரோ தனக்கு உதவியாளராகப் பணிபுரிய, வெகு கஷ்டப் பட்டுத்தான் ஒரு வெள்ளை மாதைப் பெற முடிந்தது...



வெள்ளை மாதர்கள் ஒரு கருப்பரிடம் வேலை பார்த் திட விரும்பவில்லை...பலர்...எப்படியோ ஒரு பெண் கிடைத்தாள்......அவள் அலுவலகத் தனி அறையில் அமர்ந்து வேலை பார்க்கும்போது, கதவுகளைத் திறந்தே வைத்திருந்தாள். பாவம்! அத்தனை பயம், யார் என்ன சொல்வார்களோ, கருதிக் கொள்வார் களோ என்பதால்...நான் அந்தச் சம்பவத்தை மறக் கவே இல்லை...மறக்கவே முடியாது...எட்னா! கதவு களைத் திறந்துவை!''

தம்பி! இந்தக் கருத்துப்பட டில்மன் கூறியதும், எட்னாவின் மனம் எப்படி உருகாமலிருந்திருக்க முடியும்? நிறம் கருப்பு என்ற ஒரு காரணத்தினால், குடிஅரசுத் தலைவர் பதவி பெற்ற போதிலும், வெள்ளைமாதுடன் தாளிடப்பட்ட தனி அறையில் இருப்பது முறையல்ல, முறைமை அல்ல என்று வெள்ளை உலகம் வெகுண் டெழுந்து கூறும் என்றல்லவா கருதுகிறார் டில்மன்! நிலை மையும் வெள்ளையர் நினைப்பும் அதுபோலத்தானே இருக்கிறது! எத்தனை வேதனை ஏற்பட்டிருக்கும் தனது நிலைமையை எண்ணிப் பார்த்திடும் போது! தத்தளிக் கிறார் பரிதாபம்! இவருக்குப் பரிவு காட்டி, மனித உள்ளத் தோடு நடந்துகொள்ள வேண்டும். நிறவெறி எல்லோருக் கும் இருந்தே தீரும் என்பதில்லை; வெள்ளையரிலும் மனி தர்கள் இருக்கிறார்கள் என்பதனை மெய்ப்பித்தாக வேண் டும். அஞ்சாதீர் ஐயா! உமது நிறம் கருப்பு, என் நிறம் வெளுப்பு! இருந்தால் என்ன? ஒரு வெள்ளை மனிதர் மேலான பதவியில் இருந்தபோது நான் எப்படி நடந்து கொண்டேனோ அதுபோலவே உம்மிடம் நடந்துகொள் வேன்; பேதம்காட்டமாட்டேன்; உமது இதயத்தில் குமுறும் வேதனையை நான் உணருகிறேன்!—என்றெல்லாம்எட்னா கூறவில்லை; பார்வையின் மூலமாகவும் பெருமூச்சின் மூல மாகவும் இவ்வளவும் இதற்கு மேலும் விளக்கமாக்கினாள் போலும்!

தலைவர் அவர்களே! கதவுகள் தாளிடப்பட்டே இருக்கட்டும். அதுதான் முறை. எப்போதும் உள்ள முறை.

சரி. எட்னா! நான் பார்க்க வேண்டிய முத அலுவல் என்ன? குறிப்பு இருக்கிறதல்லவா?

முதல் அலுவல், உமது அலுவலகத்திற்கான பணியாளர்களை, உதவியாளர்களை நியமித்துக் கொள்வது. முன்பு குடிஅரசுத் தலைவராக இருந்தவரிடம் வேலை பார்த்தவர்களையே வேண்டுமானால் நியமித்துக் கொள்ளலாம்; புதிதாக நியமித்துக் கொள்ளவும் செய்யலாம்...''

அப்படியா! முன்பு இருந்தவர்களையே நியமிக்க விரும்புகிறேன்...எட்னா! முதலாவதாக உன்னிலிருந்து துவக்க விரும்புகிறேன், என்னிடம் பணியாற்றுச் சம்மதமா?

நன்றி, வணக்கம். பணியாற்றுகிறேன் மகிழ்ச்சியுடன்.

அப்படியானால் எட்னா! குடிஅரசுத் தலைவராகியுள்ள நான் முதன் முதலாகப் பிறப்பிக்கும் உத்திரவு, உன்னை வேலைக்கு அமர்த்துவதுதான்...

மெத்தவும் நன்றி, தலைவர் அவர்களே! மிக்க நன்றி, உமக்கு எல்லோருமே துணை நிற்பார்கள்; உதவி செய்வார்கள்!

அப்படியா கருதுகிறாய்! எனக்கு அப்படித் தோன்றவில்லை, எட்னா!

எல்லோரும் உதவி செய்வர்! உங்கள் வெற்றிக்காகப் பிராாத்தனை நடத்துவர். ட்ருமனுக்கும் ஜான்சனுக்கும் துணை நின்றது போல உமக்கும் துணைபுரிவார்கள், முன்பு போலவே...

முன்பு! இப்போது நிலைமை மாறி இருக்கிறது. அவர்கள்—முன்பு தலைவர்களாக இருந்தவர்கள் கருப்பர் அல்லவே...இருக்கட்டும்...யாருடைய உதவி கிடைக்காவிட்டாலும், ஆண்டவனுடைய உதவி கிடைக்குமல்லவா...ஆண்டவன் கருப்பா, வெள்ளை நிறமா என்று நிச்சயிக்கப்படவில்லை அல்லவா!

இந்தக் கருத்துப்பட டில்மன் பேசக் கேட்ட எட்னாவால் அழுத்திவைக்கப்பட்ட, தாழ்வாக நடத்தப்பட்டு வந்த ஒரு இனத்தின் இதயத்தில் கொதித்துக் கொண்டிருக்கும் வேதனையை உணர முடிந்தது. டில்மன் எத்தனை நேர்த்தியான நற்குணம் படைத்தவர் என்பதையும் எப்படி உண



ராமல் இருந்திருக்க முடியும்? ராஜிநாமாக் கடிதத்தைக் கசக்கி எறிந்துவிட்டு, அந்த மனிதனிடம் பணியாற்றி, மனிதத்தன்மையின் மாண்பினை உயர்த்திட உறுதி கொண்டாள்.

எட்னா எனும் வெள்ளை மாதிடம் இத்துணைப் பெருங்குணத்துடன் நடந்துகொண்ட டில்மன் மீதுதான் வெள்ளைப் 'பேரதிகாரிகள், சாலி வாட்சன் என்ற வெள்ளை மாதைக் கற்பழிக்க முயன்றார் என்று குற்றம் சாட்டினர்.

சாலி என்ற அந்த வெள்ளை மாது, வாட்சன் என்ற செனட் உறுப்பினரின் மகள்! சீமானின் மகள், சீமானுக்கு வாழ்க்கைப்பட்டு அவனிடமிருந்து விடுதலை பெற்று, புதிய பூங்காவில் உலவிடத் துடித்துக் கொண்டிருந்த உல்லாசி. குறியற்ற குதூகலத்திலும் சாலி குடைந்தாடியபடி இல்லை. பெரிய இடம் தேடிக் கொண்டிருந்தாள்.

ஈட்டன் என்ற வெள்ளைப் பேரதிகாரி, குடிஅரசுத் தலைவருக்கு அடுத்த நிலையினன்! ராஜாங்கக் காரியதரிசி என்ற செல்வாக்கு மிக்க பதவி வகித்து வந்தவன்—மணமானவன்—மனைவியோ மலைமுகடு, கடலோரம், சந்தைச் சதுக்கம், சல்லாபக்கூடம் ஆகிய இடங்களிலே உலவிக் கொண்டிருந்தாள், இவனைத் தனியனாக்கி விட்டு! அவனைத் தன் 'இனியன்' ஆக்கிக் கொண்டிருந்தாள் சாலி! இந்தச் சல்லாபியைக் கெடுக்க முயற்சித்ததாகக் குற்றச்சாட்டு. அவள் போக்கு அறிந்தவர்களும் அந்தப் புகார் கேட்டுக் கொதித்தனர்; ஆயிரம்தான் இருக்கட்டும், அவள் ஆடிக் கெட்டவள் என்ற பெயரெடுத்தவளாகக் கூட இருக்கட்டும், அவள் வெள்ளை இனம்! இவன் குடி அரசுத் தலைவராகிவிட்டதாலேயே வெள்ளை இனத்தவனாகிவிடுவானா! கருப்பன்! நீக்ரோ! ஒரு நீக்ரோ வெள்ளை மாதைக் கற்பழிக்க......! என்ன அக்கிரமம்! என்ன அக்கிரமம்!! என்று கொதித்தனர்.

டில்மன், மாசற்றவன்; பொறுப்பு மிக்கவன்; வெள்ளை இனத்தவரால் தன் இனத்தவர் மீது ஏற்றப்பட்டிருக்கும் பழிகளை நன்கு அறிந்தவன்; எட்னா எனும்

வெள்ளை மாது தன்னுடன் தாளிடப்பட்ட தனி அறையில் இருந்துங்கூட தகாத செயல் என்று 'நாலுபேர்' கூறுவார்களே என்பதை எண்ணி நடுங்கினவன்; நேர்மையாளன்! அவன் மீது இந்தப் பழி! பொதுவாக நீக்ரோக்கள் மீது சுமத்தப்படும் பழி இது! அவர்கள் மனிதர்கள் அல்லவே! மிருகங்கள்! மிருகங்கள் தாக்கத்தானே செய்யும், அடக்கி வைக்காவிட்டால்!

சாலி வாட்சன் தந்திர மிக்க சதி புனைந்தாள்.

டில்மன்—ஒரு கரு நிறத்தான்—குடி அரசுத் தலைவரானது அவளுக்குக் கட்டோடு பிடிக்கவில்லை; ஆயினும் தானாக வலியச் சென்று 'சிபாரிசு' பிடித்துக் கொண்டு சென்று டில்மனிடம் வேலைக்கு அமர்ந்தாள்;—குடி அரசுத் தலைவர் அவ்வப்போது உள்நாட்டுப் பிரமுகர்களுக்கும் வெளிநாட்டுத் தலைவர்களுக்கும் நடத்திடும் விருந்து வைபவங்களைக் கவனித்துக் கொள்ளும் காரியதரிசியாக.

பகட்டும் ஆடம்பரமும், பளபளப்பாளர்கள் பலருடன் பழகும் வாய்ப்பும் கிடைக்கும் என்பதற்கு மட்டுமல்ல; குடி அரசுத் தலைவருடன் நெருங்கிப் பழகவும், அவருடைய 'அந்தரங்கம்' அறியவும் வாய்ப்புக் கிடைக்கும் என்பதால்.

அதிலே என்ன ஆதாயம்?என்று எண்ணுவாய் தம்பி! ஏன் ஆதாயம் இல்லை! கண்டறியும் தகவல்களை உடனுக்குடன் தன் 'காதலன்' ஈட்டனுக்குத் தந்திடலாம்; அதனைக் கொண்டு அவன் தன் செல்வாக்கை மேலும் வலுவாக்கிக் கொள்ளலாம்......பிறகு...பிறகு குடி அரசுத் தலைவராகவே வந்துவிடலாமே, தக்கசமயம் பார்த்து. அதனால் சாலிக்கு என்ன கிடைக்கும்? என்ன கிடைக்குமா? அவள் சாலி ஈட்டன் ஆகிவிடலாம்! அமெரிக்காவின் முதல் ஆரணங்கு ஆகிவிடலாம்!!

இத்தனை சதித்திட்டம் உருவாயிற்று, அந்தச் சரசிக்கு.

குடி அரசுத் தலைவரின் கட்டிலறை! இரவு! ஆடை நெகிழ, மயங்கிய நிலையில், சாலி!



டில்மன் அவளை எழுப்புகிறார்; அவள் சாய்கிறாள் மேலே; மயக்கத்தில்! அவர் தாங்கிப் பிடித்துக் கொள்கிறார்.

எப்படி நேரிட்டது இந்த நிலை? ஏன் நேரிட்டது என்று கேட்கிறாய்; புரிகிறது தம்பி! உன் ஆசை. சல்லாபச் சீமாட்டியின் சதி நாடகத்தை அவ்வளவு சாமான்யமாகவா எண்ணிக் கொண்டாய். ஒரு வாரம் பொறுத்திரு, முழு வடிவம் கண்டிட.

அண்ணன்,

20—3—'66



## காஞ்சிக் கடிதம் : 55

# வெள்ளை மாளிகையில் (7) சதிக்குள் சதி-1

★ பண்பு நிறைந்த காதலர்கள்

★ சாகசக்காரி சாலிவாட்சன்

★ சாலி தலை குனிந்தாள்!

★ அருங்குணக் குன்று டில்மன்

தம்பி!

அமெரிக்கக் குடிஅரசுத் தலைவரிடம் 'கலந்து பேசவும்', 'உடன்பாடு காணவும்' 'உதவி பெற்றிடவும்' உலகில் பல்வேறு நாட்டின் தலைவர்கள் வருகை தருவர். அப்போது அளிக்கப்படும் விருந்துகளில், உபசரிக்க—அளவளாவ—குடிஅரசுத் தலைவரின் துணைவியார் உரிமை பெறுகிறார். குடிஅரசுத் தலைவரின் துணைவியார், நாட்டின் முதல் ஆரணங்கு எனும் அரியநிலை பெறுகிறார். டக்ளஸ் டில்மன் தாரமிழந்தவர்; எனவே துணைவியாருக்குப் பதிலாக, பண்புள்ள ஒரு மாது இந்தப் பக்குவமான காரியத்தைக் கவனித்துக்கொள்ளத் தேவை. இதனை அறிந்தே, வாட்சன் எனும் செனட்டரின் மகள் சாலி வாட்சன், அந்தப் பதவியைக் கேட்டுப் பெற்றாள்.

குடிஅரசுத் தலைவர் நடத்திடும் விருந்துகளுக்கு, 'தக்காருக்கு' அழைப்பு அனுப்புவது, விருந்துக்கான எல்லா



ஏற்பாடுகளையும் கவனித்துக் கொள்வது, விருந்தில் கலந்து கொள்ள வருபவர்களிடம் உரையாடி மகிழ்விப்பது என்பவைகள் சாலிவாட்சன் மேற்கொண்ட அலுவல்கள்.

தனக்குத் துணைவியில்லாததால். இந்த ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டது என்பதனால் மட்டுமல்ல, இது பொருத்தமானது என்பதாலும் டில்மன் மகிழ்ச்சி அடைந்திருக்க வேண்டும். வெள்ளை மாளிகையில் எல்லாமே 'கருப்பு மயம்' ஆகிவிடவில்லை; குடிஅரசுத் தலைவர் மட்டுமே 'கருப்பு'. ஆனால், விருந்தினை நடத்திவைக்க, உரையாட, உபசரிக்க அமர்த்தப்பட்டிருப்பவரும் கருப்பு அல்ல; வெள்ளை இனமாது!!—என்பதிலே வெள்ளை இனத்தவர் மிகுந்த மகிழ்ச்சி கொள்வரல்லவா!

துணைவியார் இறந்தபிறகு டில்மன் தனியாக இருந்து வந்தார்; ஆனால் அவருடைய உள்ளம் மெள்ள மெள்ள வேறோர் மாதிடம் ஈர்க்கப்பட்டு வந்தது. அறிவும் அடக்க உணர்வும், பண்பும் நிறைந்த ஒரு மாதினை அவர் உளமார நேசித்தார். திருமணம் செய்து கொள்ளலாம் என்ற முடிவுக்கு அவர் வருகிற சமயத்திலேதான், குடிஅரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டார்!

அந்தப் பெரிய பதவியில் இருந்துகொண்டு திருமணத்தை நடத்திக்கொண்டால், மிகச் சிறப்பாக அல்லவா இருக்கும்; நாடே விழாக்கோலம் கொள்ளுமே; உலகின் பல நாடுகளின் தலைவர்கள் வாழ்த்துக் கூறிட வருவார்களே, எத்தனை கோலாகலமாக நடத்திக் கொள்ளலாம்! ஏன் டில்மன் தாம் விரும்பிய மாதைத் திருமணம் செய்துகொண்டு வெள்ளை மாளிகைக்கு அழைத்துச் செல்லவில்லை? சென்றிருந்தால் சாலிவாட்சன் தேவைப்பட்டிருக்க மாட்டாரே. நாடகம் நடந்திடவே இடம் கிடைத்திருக்காதே என்றுதான் எண்ணிடத் தோன்றும்—எவருக்கும்! ஆனால் டில்மன் மனதில் வேறுவிதமான கருத்து!

ஒரு நீக்ரோ, குடிஅரசுத் தலைவரானது மட்டுமல்லாமல், இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு, திருமணமும் செய்துகொண்டு விழா நடத்திக் கொள்கிறான், எத்தனை வீண் பெருமை! என்று வெள்ளையரில் வெறியர் கேலி பேசுவர். வெள்ளை மாளிகையில், தலைவர் மட்டுமல்ல, அவருடைய துணைவியாரும் கருநிற இனம், எப்படித் தாங்கிக்கொள்வது சகித்துக் கொள்வது என்று

வெறுப்புடன் பேசுவர். எதற்காக வீண் வம்பைத் தேடிப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று டில்மன் எண்ணியிருந்திருக்க வேண்டும். அதனால்தான், அவர், தாம் மிகவும் விரும்பிய வாண்டா கிப்சன் எனும் மாதைத் திருமணம் செய்துகொள்வது தமது நிலைமைக்கு முறையாக இருக்காது என்று கருதிக் கொண்டார்.

தமக்குக் கிடைத்த பதவியைத் தமது பெருமைக்காகவும் சுவைக்காகவும் துளியும் பயன்படுத்திக் கொள்ளக் கூடாது என்பதிலே அவ்வளவு அக்கறை காட்டினார்.

வாண்டா கிப்சன், கருநிறம்கூட அல்ல; கவர்ச்சிமிக்க மாந்தளிர்மேனி! நீக்ரோ இனம் என்றுகூடக் கூறிவிடுவதற்கில்லை. நீக்ரோ—வெள்ளையர் கலப்பிலே பிறந்து, ஒரு தலைமுறை கடந்த இனம்! முலாட்டோ என்பது அவர்கட்கு இடப்பட்டிருந்த பெயர். டில்மன்போலவே, கிப்சன் பெருந்தன்மை கொண்டவராக இருந்திருக்க வேண்டும் எனத்தெரிகிறது. நூற்றிலே தொண்ணூறு பெண்கள், தன்னை விரும்புபவர், தகுதிமிக்க இடம் பெற்றிடும்போது, திருமணம் செய்துகொள்ளும்படி அல்லவா வற்புறுத்துவார்கள்! கண்ணைக் கசக்கிடுவர்! அன்றோர் நாள் சொன்னதனை அடியோடு மறந்தீரோ என்று கேட்பர்; உயர்ந்துவிட்டீர், உளளத்திலிருந்து என்னைத் தூக்கி எறிந்துவிட்டீர் என்று கோபத்துடன் பேசுவர், பார்க்கிறோம்; கதைகளிலே மிகச்சுவையான கட்டங்களாக இவை அமைந்திருப்பதை. வாண்டா கிப்சன், தன் காதலனுக்குத் துளியும் சங்கடம் ஏற்படத் தக்கவிதமான எந்த நிலைமையும் எழக்கூடாது என்ற பெருங்குணம் கொண்டவராக இருந்திருக்கிறார்.

ஆகவே டில்மன் திருமணம் செய்துகொள்ளவில்லை; சாலி வாட்சன் வெள்ளை மாளிகையில் சீமாட்டி வேலை பார்த்து வந்தாள்.

குடி அரசுத் தலைவருடன் நெருங்கிப் பழகும் நிலை.

விருந்து, வைபவம் ஆகியவற்றினை ஏற்பாடு செய்திடும் அலுவல்; ஆகவே எப்போதும் அணிபணிபூண்டு, நகைமுகம் காட்டி இருந்திடும் நிலைமை.

மனதைக் கட்டுப்படுத்திக் கொள்ளும் திறனற்றவர்களின் மனம் நெகிழ்ந்து போவதும், தவறுகள் நேரிட்டு



விடுவதும், நெருக்கடிகள் விளைவதும், இத்தகைய சூழ்நிலையில்தானே!!

ஆளப்பிறந்தவர்கள் என்ற அகம்பாவத்துடன் நடந்து கொள்ளும் வெள்ளையர்மீதே ஆட்சி நடத்தும் வாய்ப்புக் கிடைத்தாலே போதும், தலை சுற்றும்; கால் பூமியில் அழுத்தமாக அமைந்திடாது, கொடுமை செய்திடத் தோன்றும்; கோலாகலமாக நடந்திடத் தோனறும்; எவரையும் எடுத்தேன் கவிழ்த்தேன் என்று பேசிடத் 'தோன்றும்! அதுமட்டும் போதாமல், அழகிய இளமை மெருகு குலையாத, ஆடிப்பாடி மகிழ்விக்க வல்ல ஒரு வெள்ளைச் சீமாட்டியும், தன் பக்கம் நின்று, பாசம் நிறைந்த பார்வையை வீசியும், பாகு நிறைந்த சொல்லினைத் தந்தும் வந்திடின், கிடைத்தது இன்ப வாழ்வு! என்று கருதி, களியாட்டத்தில் அல்லவா மூழ்கிடத் துடிப்பர், நூற்றுக்கு அறுபதுபேராகிலும். டில்மன் மனதிலே இறுமாப்போ, மயக்கமோ, தூய்மையற்ற எண்ணமோ, துளியும் இடம் பெறவில்லை. இருந்தும், அவர்மீது சாலிவாட்சன் என்ற வெள்ளை மாதினைக் கற்பழிக்க முயன்றதாகக் குற்றச்சாட்டு; சாலியே தொடுக்கிறாள் அந்தக் குற்றச்சாட்டை!

வெளிநாட்டுத் தலைவர் ஒருவருக்கு விருந்து நடைபெறுகிறது. சுவைமிகுபானம்! சொக்க வைக்கும் பேச்சுக்கள்! ஒளிவிடு பார்வை! ஒய்யார நடை! போதைமிகுந்திடும் நிலை! டில்மன் இந்த மயக்கம் எதிலும் சிக்கவில்லை. விருந்தளிப்பது, தனது கடமையின் ஒரு பகுதி என்று மட்டுமே கருதி அதிலே கலந்துகொண்டார்.

சாலி? உல்லாசியாகக் காட்சி தந்தாள்! அளவுக்கு அதிகமாகவே உட்கொண்டாள்; ஆனால் உட்கொண்ட போதைப் பொருளைவிடக் கொடிய சதி எண்ணம் அவள் மனதிலே நிரம்பிக் கிடந்தது. எப்படியும் அன்றிரவு டில்மனுடைய இரகசியக் குறிப்புகளைக் கண்டறிந்து, அவற்றினை ராஜாங்கமந்திரியும் தன் காதலனும்—எதிர்காலக் கணவனுமான—ஈட்டனிடம் தந்துவிடுவது என்று துணிந்து விட்டாள்.

விருந்து மண்டபம்விட்டு டில்மனும் வெளிநாட்டிலிருந்து வந்திருந்த விருந்தினர்களும் வேறோர் கூடம் சென்று ஏதோ ஓர் படக்காட்சி காண ஏற்பாடாகி இருந்தது. தனக்குத் தலைவலியாக இருப்பதாகவும், வீடுசெல்வதாக

வும் கூறிவிட்டு, விடைபெற்றுக் கொள்கிறார் சாலிவாட்சன்.

வீட்டுக்கு அல்ல, டில்மனுடைய படுக்கை அறைக்குச் செல்கிறாள்!—அவருடைய குறிப்பு ஏடுகளைக் கண்டெடுக்க! கிடைத்துவிடுகின்றன. அவைகளைத் தனியே தனித் தாட்களில் குறித்துக்கொள்கிறாள் விரைவாக. திடீரென யாரோ நடமாடும் அரவம் கேட்கிறது. ஒரு கணம் மிரட்சி! மறுகணம் சதி தயாராகி விடுகிறது; விளக்கை அணைத்து விடுகிறாள். மயங்கி விழுந்தவள் போல, கட்டிலிலே சாய்ந்து கொள்கிறாள்.

உள்ளே வெண்ணிற நாகம் இருப்பது அறியாமல் நுழைந்த டில்மன், படுக்கை அறைக் கதவினைத் தாழிட்டு விட்டு விளக்கைப் பொருத்துகிறார்; காட்சி அவரைத் திணறச் செய்கிறது.

நள்ளிரவு நேரத்தில், சாலிவாட்சன், தன் கட்டிலின் மீது! அலங்காரப் பதுமை! ஒய்யார உருவம்! வெள்ளை மாது! சிங்காரவல்லி! அவள் படுத்துக்கிடக்கிறாள், ஆடை நெகிழ்ந்த நிலையில். அறையையோ தானே தாளிட்டிருக்கிறார்!

வெள்ளை மாளிகையில் ஒரு கருப்பர், குடிஅரசுத் தலைவர்! அவர் படுக்கை அறையில் ஒரு வெள்ளை மாது! நள்ளிரவில்! கட்டிலின்மீது! என்ன கருதுவர் வெள்ளை மாளிகை அலுவலர்கள் இது கண்டிடின்! அமெரிக்காவே அதிர்ச்சி அடையுமே இது பற்றிக் கேள்விப்பட்டால்! வெள்ளையர் மனம் எரிமலையென வெடிக்குமே. அவர் மனத்திலே, அந்தச் சமயம் என்னென்ன அதிர்ச்சி தரத்தக்க எண்ணங்கள் கிளம்பித் தாக்கினவோ, எவ்விதமான திகைப்பும், திகிலும் கொண்டாரோ, யாரறிவார்? எப்படி இருந்திருக்கும் அவர் நிலை என்பதை எண்ணும்போதே நடுக்கம் பிறந்திடும் பலருக்கு.

அருகே செல்கிறார், உற்றுப் பார்க்கிறார், மிகுந்த வேதனையை அடக்கிக்கொண்டு, அவள் மயங்கிச் சாய்ந்திருப்பதுபோலத் தெரிகிறது, தோற்றம்; அவள் நடிப்பு அவ்வளவு நேர்த்தியாக இருக்கிறது.

குடிமயக்கத்தில் இடம் புரியாமல் வந்து படுத்துக்கொண்டாள் என்று எண்ணிக்கொண்ட டில்மன், சாலியை எழுப்பினார்,



தொட்டு எழுப்பும் வரையில் எழுந்திருப்பாளா—தூங்காமல் தூங்கும் சாலி! எங்கோ கனவு உலகிலிருந்து திரும்புவது போல ஒரு பாவனை காட்டினாள். கண்களைத் திறந்தாள், மீண்டும் மூடிக்கொண்டாள், மறுபடி திறந்தாள் ஒரு மிரட்சிப் பார்வை!

யார்...இங்கே எப்படி நீங்கள்...ஏன் வந்தீர்கள்...? அய்யோ!...நான் எங்கு இருக்கிறேன்...!

தம்பி! வழக்கமான திகைப்பு, வியப்பு, அதிர்ச்சி! நாடகத்திலே நாம் பார்க்கிறோமல்லவா, சாகசக்காரிகள் தம்மிடம் சிக்கிக்கொள்ளும் ஆடவரைச் சாய்த்திடும் காட்சியினை.

'என் படுக்கை அறையில் வந்து படுத்துக்கொண்டாய் சாலி! யார் கண்களிலாவது பட்டிருந்தால் என் கதி!'

உங்கள் படுக்கை அறையா...? அய்யோ...! ஆமாம்... தலைவருடைய தனி அறைதான்...இங்கு எப்படி நான் வந்தேன்...? ஏன் என் தலையிலே இவ்வளவு குடைச்சல்...?

'விருந்திலே சற்று அதிகமாக உட்கொண்டு விட்டேன், மயக்கமாக இருக்கிறது, வீடு செல்கிறேன்; தலைவலி' என்று சொல்லி புறப்பட்டாயே சாலி!

ஆமாம்...இப்போதுதான் நினைவிற்கு வருகிறது... மயக்கம்...தடுமாற்றம்...எங்காவது சென்று படுத்துத் தூங்கியாகவேண்டும் என்ற நினைப்பு...இது வேறு ஏதோ ஒரு அறை என்று எண்ணி...மன்னிக்கவேண்டும்...

பரவாயில்லை...இப்படியெல்லாம் சில வேளைகளில் நடந்துவிடுவதுண்டு...பரவாயில்லை...எழுந்திருந்து ஆடையைச் சரிப்படுத்திக்கொள் சாலி! மோட்டார் வரவழைக்கிறேன்...வீட்டுக்குப் போ!

அய்யோ! ஆடைகள் இப்படியா அலங்கோலமாகவா படுத்துக் கிடந்தேன்...என்ன தவறு செய்துவிட்டேன்... பெருந்தவறு...

நான் அந்தப் பக்கமாகச் சென்றுவிடுகிறேன், சாலி! நீ எழுந்திருந்து ஆடையைச் சரிப்படுத்திக் கொள்.

சாலி திடுக்கிட்டுவிட்டதுபோலப் பாவனை காட்டி எழுந்திருக்கிறாள்; படுக்கைமீது இருந்த அவளுடைய

'கைப்பை' கரம்பட்டுக் கீழே விழுகிறது; விழும்போது அதற்குள்ளே இருந்த பொருள்கள்—குறிப்பு அட்டைகள்—கீழே சிதறி விழுகின்றன. டில்மன் அவைகளை எடுக்கிறார்.

அவள் அலறுகிறாள்! வேண்டாம்! வேண்டாம்! நான் எடுத்துக்கொள்கிறேன்! ஒன்றுமில்லை...சாதாரண குறிப்பு அட்டைகள்...நானே எடுத்துக் கொள்கிறேன்...

டில்மன், குறிப்பு அட்டைகளைப் பார்த்துவிடுகிறார்; எல்லாம் விளங்கிவிடுகிறது. ஆத்திரம் அல்ல, அளவற்ற வருத்தம் பிறக்கிறது அவருக்கு.

நிறவெறி காரணமாக எவ்வளவு கீழ்த்தரமான செயலுக்கும், இழித்தன்மைக்கும் சென்றுவிடத் தோன்றுகிறதே என்பதுபற்றி எண்ணி வருத்தப்பட்டார்.

ஒன்றும் இல்லை; தவறாக எண்ணிக் கொள்ளாதீர்கள்...குறிப்புகள் எடுத்தேன்...உங்கள் வாழ்க்கை பற்றி ஒரு புத்தகம் எழுதப் போகிறேன்...ஒரு நாள்...அதிலே சேர்ப்பதற்காக இந்தக் குறிப்புகள்...

புரிகிறது சாலி, புரிகிறது! இதற்காகத்தானா இங்கு வந்தாய்! ஈட்டனுக்கு வேலை செய்ய, என்னிடம் வேலைக்கு அமர்ந்தாய்...தெரியும்...போ! இந்த இடத்தை விட்டு...உன் குறிப்பு ஏடுகளைக் கொடு ஈட்டனிடம்... வேலையை முடித்துவிட்டேன் என்று கூறிவிடு...போ! சாலி! இனி இங்கு வரவும் வேண்டாம்...

'ஈட்டனைப் பற்றி எனக்கென்ன கவலை? அவனுக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்? அவன் மணமானவன்... மனைவி இருக்கிறாள்...நான் அவனுக்காக எதையும் செய்யவில்லை...எங்களுக்குள் என்ன தொடர்பு? எங்கள் இருவரையும் இணைத்துப் பேசாதீர்..,

நாடே பேசுகிறது! நானும் அறிவேன்...ஈட்டன் குடி அரசுத் தலைவர் வேலை பார்க்க விரும்புகிறான்...அவனுக்காக இங்கு வேலை பார்க்கிறாய்...புரிகிறது...

உண்மையைச் சொல்லிவிடுகிறேன் ... கூச்சத்தை வீட்டு...ஈட்டனுக்காக நான் எதுவும் செய்யவில்லை... குறிப்பு எடுத்தது புத்தகம் எழுதத்தான்...இங்கு வந்தது குறிப்பு எடுக்க அல்ல...தனியாகச் சந்திக்க...பழகி...பாசமாக இருந்திட...விரும்புவதால்...அன்பினால்,..



சீமாட்டி சாகசம் நடத்திட முனைந்தால் எப்படி இருக்கும் என்பதுபற்றி அதிகமான விவரமா தர வேண்டும்?

வெள்ளை மாளிகையில், அந்த நள்ளிரவில், கட்டிலறையில், கருப்பு இன டில்மன் கரங்களைப் பற்றிக் கொண்டு, வெள்ளை இன சாகசக்காரி காமப்படுகுழிக்கு அழைப்பு விடுகிறாள்; தழுவிக் கொள்ளத் துடிக்கிறாள்.

தனியாகத் தவிக்கிறீர்கள், பாவம்..என் மனம் பாகாய் உருகிவிட்டது...என் நேசம் வேண்டாமா...நானே உம்மிடம் நேசமாக இருந்திடத் துடிக்கிறேன்...அதனால் தான் இங்கு வந்தேன்; உங்களுக்காகக் காத்துக்கொண்டிருந்தேன்...அதுவரையில் பொழுதை ஓட்டவேண்டுமே... அதனால் உம்முடைய குறிப்பு ஏடுகளைப் புரட்டினேன்... சிலவற்றைக் குறித்துக்கொண்டேன், புத்தகம் எழுதப் பயன்படும் என்பதற்காக.

கைப் பையில், குறிப்புத் தாட்களைத் திணித்து அவளிடம் கொடுத்தான் டில்மன்; வெறுப்பும் கண்டிப்பும் கலந்த குரலில் கூறினான் போ! உடனே! வெளியே!— என்று.

சாலி கடைசிக் கணையையும் ஏவிட முனைந்தாள்...

பயமா...நான் வெள்ளை மாது என்பதால் பயமா? வெளியே தெரிந்தால் பகை கிளம்புமே என்ற பயமா! எனக்குக் கருப்பு இனத்தின் மீது வெறுப்புக் கிடையாது. நிறபேதம் கிடையாது...சொல்லப்போனால் கருப்பு இனத்தின்மீது எனக்கு விருப்பம்கூட...ஆமாம் பலருடன் பழகி இருக்கிறேன், கருப்பு இனத்தவரிடம்...எனக்கு மிகவும் விருப்பம்...பயம் வேண்டாம், துளியும். நான் என்னை உம்மிடம் ஒப்படைக்கிறேன், ஏற்றுக் கொண்டிடுங்கள்...

இணங்க மறுத்தான் டில்மன். அடிபட்ட புலியானாள் சாலி!

மாதின் மனதை அறிந்து கொள்ள முடியாத மதியிலி! சுவை உணர முடியாத மிருகம்!

ஒரு பெண்ணின் உள்ளத்தை மகிழ்விக்கத் தெரியாத உலுத்தன்!!

சுடுசொற்கள் மளமளவெனக் கிளம்பின. அந்தத் தூற்றலுக்கு இடையிலே அவள் டில்மனுக்கு எதிராக உரு

வாகிக்கொண்டு வரும் சதி பற்றியும் கோடிட்டுக் காட்டினாள்.

இருகால் மிருகமே! இன்னும் எத்தனை நாளைக்கு உனக்கு இந்த வெள்ளை மாளிகை வாசம். உன் காலம் முடிகிறது, வெகுவிரைவில். வெள்ளை மாளிகையில் இன்னும் எத்தனை நாளைக்குக் காட்டுமிராண்டி கொலு இருந்திட முடியும்? இந்த இடத்திற்கு ஏற்ற பெரிய மனிதர் வருகிறார், புறப்பட, வெளியேறத் தயாராகி விடு!

ஏற்கனவே ஈட்டன் என்ற வெள்ளைப் பேரதிகாரியும் நிறவெறி கொண்ட இதழாசிரியர்களும், டில்மனை விரட்டிவிடத் துடிதுடித்தபடி இருந்தனர்.

எதிர்த்துப் பேசுவதோ, இறுமாந்து கிடப்பதோ தனது முறையாக்கிக் கொண்டிருந்தால், டில்மனை ஒழித்துக் கட்டும் வேலையை அவர்கள் எளிதானதாக்கிக்கொண்டிருந்திருப்பார்கள்.

துளியும் தன்னலம் காட்டாமல், தலைக்கனம் கொள்ளாமல், பதவியைத் தன் உயர்வுக்காகவோ, தனக்கு வேண்டியவர்களின் உயர்வுக்காகவோ பயன்படுத்தாமல், நேர்மையாக, நாணயமாக நடந்துகொள்கிறார். ஆனால், அதே நேரத்தில், எவருடைய மிரட்டலுக்கும் வளைய மறுக்கிறார். குடிஅரசுத் தலைவர் நாட்டு மக்களுக்கு அளித்திடும் செய்தி என்ற பெயரில் உரை நிகழ்த்துவதும், அந்த உரையைப் பெரிய அதிகாரிகள் தயாரித்துக் கொடுப்பதும், தயாரித்துத் தரப்பட்ட உரையையே தம்முடைய பேருரை என்று படித்து முடிப்பதும் ஒப்புக்கொள்ளப் பட்டிருந்த ஒரு பழக்கம்; முறை. அதன்படி டில்மனுக்கு வெள்ளைப் பேரதிகாரிகள் உரை தயாரித்து அனுப்புகிறார்கள். அதிலே இன்ன குறை இருக்கிறது, இப்படி மாற்றவேண்டும், இன்ன கருத்தைச் சேர்க்கவேண்டும் என்றுகூடக் கூறவில்லை, கலந்து பேசவில்லை, வாதாடவில்லை; அதற்கு மாறாக, எனக்காக உரை தயாரித்துக் கொடுத்ததற்கு எனது நன்றி. ஆனால் நானே பேருரை தயாரித்துக்கொண்டுவிட்டதால், தாங்கள் அனுப்பிய உரையைத் திருப்பி அனுப்பி இருக்கிறேன். பெற்றுக் கொள்ளவும். எனக்காகத் தாங்கள் எடுத்துக்கொண்ட கஷ்டத்திற்கு என் நன்றி—இவ்விதமாக அல்லவா கடிதம் அனுப்புகிறார்!



குடிஅரசுத் தலைவராக்கப்பட்ட கருப்பனாக நடந்து கொள்ள மறுக்கிறார்; குடிஅரசுத் தலைவராகவே நடந்து கொள்ள விரும்புகிறார்; இது தாங்கிக் கொள்ள முடியாத தொல்லை; அனுமதிக்கப்பட முடியாத ஆபத்து என்று வெள்ளைப் பேரதிகாரிகள் முடிவு செய்தனர். அவர்களுக்குத் தலைமை வகித்திருந்தான், ராஜாங்க மந்திரி வேலை பார்த்து வந்த ஈட்டன். அவன் எதிரில் போய் நின்றாள் சாலி வாட்சன், ஆடை கிழிக்கப்பட்டு, அலங்கோல நிலையுடன்! உடலிலே கூடச் சில கீறல்கள்!

என்ன அலங்கோலம்? என்ன நேரிட்டது...

கருப்பு வெறியன் என்னைக் கற்பழிக்க...

அவ்வளவு அக்கிரமம் செய்யத் துணிந்தானா அற்பன்?

முயன்றான்...பெரும் போராட்டம்...தப்பித்துக் கொண்டேன்—அந்தப் பயங்கரமான முரட்டுப் பிடியிலிருந்து...இதோ கீறல்கள்...

ஆமாம்! இரத்தகாயம்! கருநிற மிருகம் இனியும் உலவக் கூடாது...

கட்டிப் போட்டாக வேண்டும்...

விரட்டவேண்டும் வெள்ளை மாளிகையிலிருந்து.

ஏற்கனவே குவிந்துள்ள குற்றச் சாட்டுகளுடன்

இதோ புதிய, பயங்கரமான, நாட்டு மக்கள் காதில் விழுந்ததும் கொதிப்பினை மூட்டத் தக்க குற்றம்... கற்பழித்தல்...

கற்பழிக்க முயற்சித்தல்...

வெள்ளை மாதை...சீமாட்டியை...செனட்டர் வாட்சன் திருக் குமாரியை.

டில்மன் மீது இத்தகைய முறையில் கண்டனக் கணைகள் தொடுத்ததும், அவனைப் பதவியிலிருந்து விரட்டிவிடத் தீர்ப்பாகிவிடும்.

அந்தத் தீர்ப்பு கிடைத்ததும் அன்பே! குடிஅரசுத் தலைவர் ஆகவேண்டியது...யார்...?

நான்தான்...ராஜாங்க மந்திரி ஈட்டன்தான் அடுத்த குடிஅரசுத் தலைவர்! முறை அதுதான்...

ராஜாங்க அமைச்சர் ஈட்டனா! என்காதலர் ஈட்டன்! என் கணவர் ஈட்டன்!...

ஆமாம், ஆருயிரே! உன்னை மறந்தா...பதவி எவ்வளவு உயரினும், உன்னிடம் நான் கொண்டுள்ள அன்பு குறையுமா...

எப்போது, உமது மனைவி என்று கூறிக் கொள்பவளிட மிருந்து விடுபடப் போகிறீர்? எப்போது விவாக விடுதலை? எப்போது சாலி வாட்சன், சாலி ஈட்டன் ஆகிவிடுவது?

சதி, தம்பி, ஒரே ஒரு வட்டம் அல்ல; வட்டத்திற்குள் வட்டம்; வட்டங்கள் என்ற முறையில்தான் இருந்திட முடியும்.

ஈட்டன், சதி செய்கிறான் குடிஅரசுத் தலைவர் ஆகி விடுவதற்காக.

சாலி சதி செய்கிறாள் ஈட்டனின் மனைவி ஆவதற் காக.

ஈட்டனுக்காகச் சாகசம் காட்டி வேலை செய்கிறாள் சாலி! கற்பழிக்க முயற்சித்த குற்றம் சுமத்தப் படுகிறது டில்மன்மீது. தீர்ப்பைப்பற்றிய சந்தேகம் எழவே நியாய மில்லை. மிகப் பெரும் அளவு வெள்ளையர்கள்—அதிலும் நிற வெறி பிடித்தவர்கள் கொண்ட அவையில், ஒரு கரு நிறத்தான் வெள்ளை மாதைக் கற்பழிக்க முயன்றதாக மெய்ப்பிக்கப் பட்டுவிட்டால், பிறகு அவன் கீழே உருட்டப் படுவான் என்பதிலே என்ன சந்தேகம் எழ முடியும்?

கண் சிமிட்டினான்! பச்சைச் சிரிப்பு சிரித்தான்!
அந்தத் தோட்டத்து மலர் எனக்குக் கிடைக்குமோ
என்று கேட்டான்!

என்ற இவ்விதமான 'குற்றச் சாட்டுகளுக்கே' கருப்பரை, அடித்துக் கொன்று மரத்திலே தொங்கவிட்டிருக்கிறார் கள்!—நிறத் தூய்மையைக் காத்தாக வேண்டும் என்ற முறையை வெறியாக்கிக் கொண்ட அமெரிக்காவில்.

வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது, டில்மன்மீது கண்டனக் கணைகளைச் சரமாரியாகத்



தொடுத்துக் கொண்டிருக்கும்போது, இதழ்கள் வெறுப்பை யும் கோபத்தையும் கக்கியபடி இருந்தபோது, தீர்ந்தது இவன் காலம் என்று மக்கள் பேசிக் கொண்டிருந்தபோது, மற்றோர் விசித்திரமான விபரீதம் நடக்கிறது.

சாலிஈட்டன் ஆகப்போவது உறுதி; வெள்ளை மாளி கையின் ஆரணங்கு ஆகப் போகும் நாள் விரைவில் என்று எண்ணி அகமகிழ்ச்சியுடன் இருந்து வந்த சாலி வாட்சன் தற்செயலாக, ஈட்டன் நடத்தும் சதியைக் கண்டறிகிறாள்.

உனக்காகத்தான் இவ்வளவும் என்று சாலி கூறிய போது உன்னோடு சேர்ந்துதான் வெள்ளை மாளிகைக்குச் செல்லப் போகிறேன் என்று பசப்பிய ஈட்டன், திருநாள் உறுதி என்று தெரிந்ததும், எங்கோ நெடுந் தொலைவில் இருந்து வந்த தன் மனைவிக்கு அழைப்பு அனுப்புகிறான்! நான் குடிஅரசுத் தலைவராகப் போகிறேன்; வெள்ளை மாளிகை உன்னை அழைக்கிறது; உடனே வந்திடுக! என்று; அவளும் வந்து சேருவதாகச் சேதி அனுப்புகிறாள்.

இது தெரிந்ததும் சாலி சீறுகிறாள்; ஈட்டன் தன்னை ஏமாற்றுவது அறிந்து பதறுகிறாள்.

டில்மன் மீது தொடுக்கப்பட்ட வழக்கிலே நெருக்கடி யான கட்டம்!

அதே நேரத்தில், சாலி—ஈட்டன் தொடர்பிலே நெருக்கடி!

ஆத்திரம் பீறிட்டுக் கொண்டுவந்த நிலையில், சாலி வாட்சன், தன் தவறு பற்றியும், டில்மன் மாசற்றவன் என்பது குறித்தும், குற்றச்சாட்டு பொய்—இட்டுக் கட்டப் பட்டது என்பது பற்றியும்—தன் தகப்பனாரிடம் ஒப்புக் கொள்கிறாள். அவளுடைய வாக்கு மூலம், சட்ட முறைப் படி தயாரிக்கப்படுகிறது. அதை எடுத்துக்கொண்டு போகிறார் வாட்சன்; தனது மன்னிப்பைத் தெரிவித்துக் கொள்கிறார் டில்மனிடம்.

''வீணான பழி சுமத்தினார்கள் என்பதை உணரு கிறேன். இதோ என் மகள் தந்த வாக்குமூலம். இதனைத் தாங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்'' என்று கூறி செனட்டர் வாட்சன் தன் பெருந்தன்மையை எடுத்துக் காட்டுகிறார்.

அதனைக் காட்டிலும் மேலான பெருங்குணம் தமக்கு உண்டு என்பதை எடுத்துக்காட்டும் விதத்தில் டில்மன் அந்த வாக்குமூலத்தை வாட்சனிடமே கொடுத்துவிட்டு உண்மையை நீங்கள் உணர்ந்து கொண்டீர்களே அதுபோதும் எனக்கு என்று கூறுகிறார்.

ஆனால் வாட்சன்! இந்த ஒரு விஷயம், வீண்பழி என்பதாலேயே, நான் உமது பக்கம் இருப்பேன் வழக்கிலே என்று எண்ணிக்கொள்ளாதீர். வழக்கு விவரம் முழுவதும் அறிந்து, நேர்மையின் பக்கம்தான் நிற்பேன், என் மகள் பழி சுமத்தினாளே என்ற பரிதாபத்துக்காக உம்பக்கம் நிற்பேன் என்று நம்பிவிடாதீர்கள் என்று அந்த முதியவர் கூறுகிறார். நேர்மையின் பக்கம் நின்றிடுவதை நான் வரவேற்கிறேன் என்று ஒப்பம் அளிக்கிறார் டில்மன்.

இப்படிச் சித்திரவதை செய்வதைவிட, டில்மனை வெள்ளை வெறியர்கள் ஒரே அடியாகக் கொன்று போட்டுவிட்டிருக்கலாமே என்று கேட்கத் தோன்றும்.

ஆபிரகாம்லிங்கனைக் கொன்றுவிடவில்லையா! கென்னடியைச் சுட்டுக் கொன்றுவிடவில்லையா! டில்மன் மீது மட்டும் கொலைகாரர்கள் பாயாமலா இருந்திருப்பார்கள். பாய்ந்தனர்! தப்பித்துக் கொண்டார். அந்தக் கொலை முயற்சியையொட்டியும் ஒரு உள்ளம் உருக்கும் நிகழ்ச்சி இருக்கிறது. அடுத்த கிழமை அதுபற்றிக் கூறுகிறேன்.

அண்ணன்,

27-3-66

அண்ணாதுரை

காஞ்சிக் கடிதம் : 56

# வெள்ளை மாளிகையில்...(8)

## சதிக்குள் சதி! (2)

★ ஆபிரகாம் லிங்கன்—கென்னடி போல...

★ ஆத்திரத்திலே அறிவை இழந்து...

★ உல்லாசியின் சதிவலை

★ வீரன் விழித்துக் கொண்டான்

★ கருப்பைக் காத்தது 'வெள்ளை'...

★ உலகம் காடாகிப் போய்விடவில்லை!

தம்பி,

அடக்கப்பட முடியாத ஆத்திரம், அதிலும் நீதியற்ற காரணத்துக்காக மூட்டிக் கொள்ளப்பட்டுவிடும் ஆத்திரம், வெறியாகிவிடுகிறது; அந்த வெறியிலே சிக்கிக்கொள்பவர்கள் எந்தக் கொடுமை செய்திடவும், இழிசெயல் புரிந்திடவும் கூசுவதில்லை. வெறிகளில் மிக மோசமானது, தன் இனம், தன் மதம் உலகிலேயே உயர்வானது, தூய்மையானது என்ற அழுத்தமான நம்பிக்கையின் காரணமாக விளைந்திடும் வெறி—தன் இனத் தூய்மை காப்பாற்றப்பட்டாக வேண்டும் என்பதற்காக அந்தத் தூய்மையைக் கெடுக்க முனைபவர்களை அல்லது அந்தத் தூய்மையை

ஒப்புக்கொள்ள மறுப்பவர்களைத் தீர்த்துக் கட்டிவிடவும் துணிந்துவிடச் செய்கிறது.

அப்படிப்பட்ட கொலைபாதகத்துக்குப் பலியானவர்களே, அமெரிக்கக் குடிஅரசுத் தலைவர்களான ஆபிரகாம்லின்கனும், கென்னடியுமாவர்.

இங்கேயும் உலக உத்தமர் என்று கொண்டாடப்பட்ட காந்தியாரின் உயிரைக் குடித்ததும் ஒருவிதமான வெறி உணர்ச்சியேயாகும்.

எதிர்பாராத வகையில் குடிஅரசுத் தலைவராகிவிட்ட டக்ளஸ் டில்மனையும் கொன்று போட வெள்ளை வெறியர் திட்டமிட்டதிலே வியப்பேதும் இல்லை. ஆனால் டில்மன் தப்பித்துக் கொள்கிறார். அவரைக் கொலை செய்துவிடத் தீட்டப்பட்ட சதி தோற்றுவிட்டதாலேதான், அவர் மீது கொடுமையான பழிசுமத்தி வழக்குத் தொடுத்தனர்.

கொலை செய்து போடுவதைக் காட்டிலும் மோசமான செயல் ஒருவருடைய பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தி, இழிவான பழிசுமத்திக் கேவலப்படுத்திவிடுவது.

டக்ளஸ் டில்மனை, வெள்ளை மாளிகைத் தோட்டத்திலேயே அவர் உலவும்போதே மறைந்திருந்து தாக்கித் தீர்த்துக்கட்டிவிடுவது என்று தீர்மானித்த சதிகாரர்கள், அதற்கேற்ற சூழ்நிலையை உருவாக்கிட முனைந்தனர்.

குடிஅரசுத் தலைவருக்குத் தக்க பாதுகாப்பளிக்க, திறமைமிக்க காவலர் பலர் அமர்த்தப்பட்டிருந்தனர். அவர்களில் மிகுந்த கடமை உணர்ச்சியும், துணிவும் கொண்ட வெள்ளை இனத்தவன் ஒருவன் இருந்தான். அவன் மனதிலேயும் ஒரு குமுறல் மூண்டு கிடந்தது; இனவெறி காரணமாக அல்ல; தனக்கு உரிய இடம், மேலிடம் தரப்படாமல், அந்த மேலிடம் ஒரு நீக்ரோவுக்குத் தரப்பட்டுவிட்டது என்பதாலே மூண்டிட்ட குமுறல். ஆனால் அவனைக் கைக்குள் போட்டுக்கொண்டு காரியத்தை முடித்திட சதிகாரர்கள் முனையவில்லை. ஒருவேளை மனதிலே குமுறல்இருப்பினும், இத்தகைய இழிசெயலுக்கு அவன் உடந்தையாகிட மாட்டான் என்று எண்ணிடத்தக்க விதமாக அவன் போக்கு இருந்திருக்கும்போல இருக்கிறது. சதிச் செயலுக்கு அவன் உடந்தையாக இருக்க மாட்டான் என்



பதை மட்டுமல்ல; அவன் டில்மனைக் காத்து நிற்கிற வரையில் தமது கொலைபாதகத் திட்டம் நிறைவேறாது என்ற எண்ணமும் தோன்றிவிட்டது சதிகாரர்களுக்கு. ஆகவே அவனை முதலில் மடக்கத் தீர்மானித்தனர். அதற்கு ஒரு மை விழியாள் கிடைத்தாள்!

அவள் அழகி; கருநிறக் கவர்ச்சியும் இளமை மெருகும், இனிய இயல்பும் கொண்டவள்; நீக்ரோ.

நிறவெறி தலைவிரித்தாடிடும் நிலையிலும் இனத்தூய்மை காப்பாற்றப்படுவதற்காக எத்தகைய கொடுமையையும் இழிசெயலையும் செய்திடத் துணிவுகொண்ட நிலையிலும், காமம்—அல்லது காதல் எனும் உணர்ச்சி, இனபேதம், நிறபேதம் என்பவைகளைக் கடந்த ஒரு கவர்ச்சியாக அல்லவா இருக்கிறது! அந்தக் கவர்ச்சியையே, விழிப்புடன் இருந்து வந்த அந்த வெள்ளைக் காவலாளியை வீழ்த்தப் பயன்படுத்தினர். இது ஒரு 'ஏற்பாடு' என்பதனை அவன் உணரவில்லை; மைவிழியாள் உள்ளபடி தன்னிடம் மயங்கிவிட்டாள் என்று எண்ணிக்கொண்டான்; அவன் அவளிடம் மயங்கி விட்டதன் விளைவு அந்த எண்ணம்.

ஒரு சிற்றுண்டி விடுதியில் ஏற்பட்ட சந்திப்பு, புன்னகையாகி, பொருளற்ற பேச்சாகி, பொழுது போக்காகி, பிறகு ஆசைதான் ஆனால் அச்சமாக இருக்கிறதே என்ற சாகசப் பேச்சாகி, பிறகு இதுவரையில் நான் என்னை எவரிடமும் ஒப்படைத்ததில்லை, உம்மிடமோ என்னை முழுவதும் ஒப்படைத்து விடத் துணிந்துவிட்டேன் என்ற காதற்பேச்சாகி, கடைசியில் தனி அறைக்கே கொண்டு சென்றுவிட்டது.

அன்றையத் தினமும் அவன் குடிஅரசுத் தலைவரின் அருகிருந்து காவல் செய்யவேண்டிய முறை இருந்தது. ஆனால் இந்த விருந்து முடிந்ததும் வேலையைக் கவனிக்கலாம் என்று இருந்துவிட்டான். தன்னைக் கடமையைச் செய்யவிடாமல் தடுத்திடவே இந்தக் கள்ளி அமர்த்தப்பட்டிருக்கிறாள் என்பதை அவன் உணரவில்லை. கள்ளி என்றா எண்ணிக்கொண்டான், கற்கண்டு, பாகு, தேன் என்று அல்லவா எண்ணிக் கொண்டான். ஆடவன்! இளைஞன்! மயக்கம்! தன்னையும் அறியாமல் ஒரு பயங்கர சதியிலே பங்கெடுத்துக்கொள்கிறோம் என்ற எண்ணமே எழவில்லை, அவன்தான் பாவம் அவளுடைய விழியின் ஒளியையும் அது

விடுத்திடும் அழைப்பையும் கண்டு மெய்ம்மறந்திருக்கிறானே, மதுவும்கூட அருந்திவிட்டான்! நிலைமையை மேலுமா விளக்கவேண்டும்.

இசைத்தட்டு ஒலி எழுப்புகிறது; அவள் இதழ் அழைக்கிறது; அவன் தன்னை மறந்திருந்தான்.

நீக்ரோ இனத்தவள் தன் இனத்தானைக் கொன்றுபோடச் செய்யப்படும் சதியிலே எப்படி ஈடுபட முடிந்தது என்று வியப்பு ஏற்படும். தம்பி! வெறுப்பும் ஆத்திரமும், தெளிவான அறிவின் மீது கட்டப்படுவதில்லையல்லவா! டக்ளஸ் டில்மன்மீது வெள்ளையரில் வெறியருக்கு, நிற பேதம் காரணமாகப் பகை கிளம்பியது போலவே, நீக்ரோ இனத்தவருக்கு, டில்மன் தன் இனத்தை மறந்தவன், கை விட்டு விட்டவன், காட்டிக் கொடுப்பவன் என்ற ஒரு தவறான எண்ணம் காரணமாக வெறுப்பும் ஆத்திரமும் கொந்தளித்துக் கொண்டிருந்தது. வெள்ளை மாளிகையில் கொலுவிருக்கிறான், இவன் இனப்பற்று உள்ளவனானால், ஒரே வரியில், நமது இனத்தின் இழிவைத் துடைத்திட முடியாதா —செய்தானா?

குடியரசுத் தலைவர் பதவியைக் காப்பாற்றிக் கொண்டால் போதும், இனம் எக்கேடு கெட்டால் என்ன என்று எண்ணிவிட்டான்; சுயநலக்காரன்.

இனத்துக்காகப் பரிந்து பேசினால், வெள்ளைப் பேரதிகாரிகள் தன்னைக் கவிழ்த்து விடுவார்களோ என்ற பயம்! கோழை!

இவன்தான் இப்படி என்றால் நமது இன விடுதலைக்காகப் பாடுபட்டுக் கொண்டு வந்ததே ஒரு இயக்கம், அதனையாவது விட்டு வைத்தானா? தடைச் சட்டம் போட்டு விட்டான்! இனத்தைக் காட்டிக் கொடுத்து விட்டான்.

அது மட்டுமா! வெள்ளையர்களே ஏதோ பச்சாதாபப் பட்டுக்கொண்டு, நீக்ரோ மக்களுடைய வறுமையைப் போக்க பெரிய தொகையைச் செலவிட ஒரு சட்டம் கொண்டுவந்தார்கள்; இந்த இனத்துரோகி அந்தச் சட்டத்தையுமல்லவா, தூக்கி எறிந்து விட்டான்! இவனுக்கு வெள்ளை மாளிகையில் வாசம்! இவன் இனம் நாம்! நமக்குச் சாக்கடை ஓரம்! இவனை நாம் நமது இனத்தின் ரட்சகன் என்று கூறிக் கொண்டாடினோம் புத்தி கெட்டு! இவன்



நமது இனத்தின் இழுக்கு அவ்வளவும் ஒன்று திரண்டு வந்துள்ள உருவம்! நீக்ரோ இனத்தை நாசமாக்க வந்துள்ள கேடு! தம்பி, இந்த விதமான எண்ணம், நீக்ரோக்களில் மிகப் பலருக்கு. அவர்களின் தயாரிப்பு இந்தக் கவர்ச்சிமிக்க கருநிறக்காரிகை!

கட்டிலின்மீது சாய்ந்து கிடக்கிறாள்; காமவெறியால் அவன் ஆட்டிவைக்கப்படுகிறான்; மிருக உணர்ச்சியை மது கிளறிவிடுகிறது. காரியம் கச்சிதமாக முடிவடைகிறது என்ற களிப்புடன் அவள் பேசுகிறாள்:

நான் உன்னிடம் மயங்கியதுபோல, இதற்கு முன் வேறு எவரிடமும் மனதைப் பறிகொடுத்ததில்லை. எத்தனையோ பேர் முயற்சித்தனர். எட்டிநில்! கிட்டே வராதே! என்றேன். ஆனால் உன்னிடம்! எல்லோரையும் போலவா நீ? நீ தனி!

அதென்ன! நான், மற்றவர்களைக் காட்டிலும் எதிலே சிறந்தவன்! எப்படிச் சிறந்தவன்!

தம்பி! உணர்ச்சி தோன்றிய நாள் தொட்டு, நடைபெற்றுக்கொண்டு வரும் 'உரையாடல்' தான்! காதலில் கட்டுண்ட நேரத்தில், பெருமூச்சும் பூங்காற்றாகத் தோன்றும்; பொருளற்ற பேச்சிலே ஒரு தனிச் சுவை தெரியும்; உள்ளம் நெகிழ்ந்திடும் நிலை அல்லவா! அதிலும் ஒரு பெண் 'சல்லாபம்' செய்வது என்று தீர்மானித்துவிட்டால், மயங்காத ஆடவன் ஏது!!

சல்லாபப் பேச்சோடு பேச்சாக அவள்,

''எனக்கு ஒன்று பிடிக்கவில்லை, உன்னுடைய தகுதிக்கும் திறமைக்கும் ஏற்ற வேலையிலா இருக்கிறாய்...போயும் போயும் காவல் வேலை! அதிலும் யாருக்கு...

அமெரிக்கக் குடிஅரசுத் தலைவருக்கு!! அது என்ன சாமான்யமா...

தலைவர்! குடிஅரசுத் தலைவர்! யார்...கருநிறத் தான்தானே...

உன் இனம்! உன் இனத்தவர் வெள்ளை மாளிகையிலே கொலுவிருப்பது உனக்குப் பெருமை அல்லவா,,,

என் இனம்! இன உணர்ச்சி அற்ற மனிதனை என் இனம் என்று எண்ணிப் பெருமைகொள்ள நான் என்ன முட்டாளா! எப்படியோ அங்கே இடம் கிடைத்து விட்டது! அனுபவிக்கிறான்! அவ்வளவுதானே...

வியப்பாக இருக்கிறதே உன் பேச்சு.,. வெறுப் பாகப் பேசுகிறாயே...மகிழ்ச்சியால் துள்ளுவாய் என் றல்லவா எண்ணினேன்...

மகிழ்ச்சியா? எதற்காக! என் இனத்தின் உரிமைக் காகப் போராடி வந்த இயக்கத்தை ஒழித்துக் கட்டி னானே அதற்காகவா...என் இனம் வறுமையிலிருந்து விடுபட, பெரிய தொகை தரச் சட்டம் கொண்டு வந்ததை வேண்டாமென்று கூறினானே, அதற் காகவா...

இவ்விதமாகப் பேச்சு தொடர்ந்திடவே, விருந்து பெற வேண்டிய நேரத்தில் வீணான விவாதம் நடைபெறுகிறதே, காலம் வீணாகிறதே என்ற கவலை பிறக்கிறது அவனுக்கு. துடியிடை! சுவைதரும் இதழ்! இனக்கவர்ச்சிமிகு ஈடில்லா இன்பம்! இவைகளை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறான் அவன்! அவளோ கட்டிலறையில், அரசியல் பேசுகிறாள்! அதிலும் வெறுப்பைக் கொட்டிக் காட்டும் பேச்சு! இடத் திற்கோ, நேரத்திற்கோ, நிலைமைக்கோ துளியும் பொருத்தமற்ற பேச்சு. அவளிடம் அவன் எதிர் பார்த்தது, கண்ணாளா! என்ற கொஞ்சுமொழி; அவளோ வெள்ளை மாளிகையில் உள்ள 'கருப்பன்' எங்கள் இனத்துரோகி என்று பேசுகிறாள். திடுக்கிட்டுப் போனான். அதிலும், குடி அரசுத் தலைவரின் அருகே இருந்து வந்ததால் அவன் அறிந் திருந்த உண்மை நிலைமைக்கும், அவள் டில்மனைக் குறித்துப் போட்டிருந்த மதிப்பீட்டுக்கும் பொருந்தவே இல்லை.

ஒரு உண்மை கூறுகிறேன், உல்லாசி! அதை மட்டும் கேட்டிடு; மேற்கொண்டு அரசியல் பேச்சே வேண்டாம்; ஆடிப்பாடி மகிழ்ந்திட வேண்டிய நேரம் இது; அரசியல் பேச அல்ல! நான் அறிந்துள்ள உண்மையைக் கூறுகிறேன், கேள். டில்மன் நீ நினைப்பது போலக் கெட்டவன் அல்ல. வெள்ளை மாளிகையிலே வாழ்வதிலே சுகம்கண்டு அதிலே மூழ்கிக் கிடந்திடவில்லை. இனத்தைக் காட்டிக் கொடுத் திடும் கயவன் அல்ல, டில்மன். தன் இனத்திற்கு ஏதும் செய்



திட முடியாத இக்கட்டான நிலைமையில் சிக்கித் தத்தளிக் கிறான்...

என்ன சொல்லுகிறாய்...? டில்மன், வெள்ளை மாளிகை வாழ்விலே இன்பம் கண்டு அதிலே மூழ்கி, தன் இனத்தையும் மறந்து கிடந்திடும் போக்கிலே இல்லை என்றா சொல்லுகிறாய்...

சொல்லப்போனால், வெளியே இருப்பவர்கள் தான் டில்மன் சொகுசான வாழ்க்கை வாழ்வதாக எண்ணிக் கொள்வார்கள்...உண்மை என்ன தெரியுமா ...யாரை நம்புவது என்றுகூடத் தெரிந்துகொள்ள முடி யாத நிலையில், டில்மன் தவிப்பதை நான் கண் கூடாகப் பார்க்கிறேன். டில்மன் நிலைமையைப் பார்க் கும்போது எனக்கு 'ஐயோ பாவம்' என்றுதான் தோன்றுகிறது. சுற்றிலும் சூழ்ச்சிக்காரர்கள் எப்படி, எப்போது கவிழ்த்துவிடுவது என்று திட்டம் தீட்டியபடி உள்ள சதிகாரர்கள். தாங்கள் ஆட்டி வைக்கிறபடி அவன் ஆடவேண்டும், இல்லையென்றால் அவனைப் பதவியிலிருந்து விரட்டிட வேண்டும் என்று எண்ணும் சூழ்ச்சிக்காரர்களுக்கு மத்தியிலே கிடந்து திகைக் கிறான்...

உண்மையாகவா... டில்மன், வெள்ளையரின் விளையாட்டுப் பொம்மையாக இல்லையா?

யார் சொன்னது அப்படி?... டில்மன் வெள்ளையர் கருப்பர்என்ற நிறத்தை அடிப்படையாக்கிக் கொண்டு கடமையைச் செய்யவில்லை. நாணயமானவனாக நாலுநாள்பதவியில் இருந்தாலும் போதும் என்று எண் ணுகின்றவன். தன்னை வெள்ளையர் இழிவாக நடத்த விரும்புவதையும் உணருகிறான்; கருப்பர் தன்னிடம் வெறுப்புக் கொண்டிருப்பதையும் உணருகிறான். ஆனால் தன் மனச்சாட்சியின்படி நடக்க முனைகிறான்; குடிஅரசுத் தலைவருக்கு உள்ள கடமையைச் செம்மையாகச் செய்திட விரும்புகிறான். மகிழ்ச்சி இல்லை! நட்புக் காட்டுவோர் இல்லை!! பரி தாபமான நிலைமை! இதுதான் உண்மை. சரி...சரி... மேலும் நமக்கு எதற்கு அரசியல்...வா! வடிவழகி! வாரி அணைத்திட நான் துடித்திடும் வேளையில், நீ

மேலும் அரசியல் பேசி ஆயாசத்தை மூட்டிவிடாதே;
வா!

அவள் வரவில்லை! துடிதுடித்து எழுந்திருக்கிறாள். சற்றே தொலைவில் நிற்கிறாள், பாசப்பார்வை காணோம்! பாகுமொழி இல்லை! மையலூட்டும் நிலை இல்லை! கண்களிலே கொப்பளித்துக் கொண்டு வருகிறது கண்ணீர்.

பெருந்தவறு! பெரிய அக்கிரமம் செய்யத் துணிந்தேனே! நானோர் பேதை! கலகக்காரர் பேச்சை நம்பினேன்; நாசவேலைக்கு உடந்தையானேன்... உண்மை புரிகிறது. டில்மன்...பாவம்...இந்நேரம் என்ன நேரிட்டிருக்குமோ...மனம் பதறுகிறதே...என் இனத்தவரில் சிலர், டில்மன் இனத்துரோகி, ஒழித்துக் கட்டவேண்டும் என்று கூறினர்; இணங்கினேன். இங்கு உன்னை மயக்கத்தில் கட்டிப் போட்டு வைக்கச் சம்மதித்தேன். என் சல்லாபத்தில் உன்னைச் சிக்கவைக்கச் சொன்னார்கள். அந்த நேரமாகப் பார்த்து டில்மனை அவர்கள்...தீர்த்துக்கட்ட...ஐயோ! என்ன ஆகி இருக்குமோ இந்நேரம்...

கட்டழகியிடம் கொண்ட மையல், சல்லாப உணர்ச்சி, வாலிபத் துடிப்பு எல்லாம் இருக்குமிடம் தெரியாமல் பறந்தது; அவன் நிலைமையை உணர்ந்து கொண்டான். துடித்தெழுந்தான்; ''அடிப்பாவி! சாகசக்காரி! சதிகாரி விபசாரி!'' என்று ஏசினான், உடைகளைச் சரிப்படுத்திக் கொண்டான்; அவளைக் கொன்றுவிடத் துடித்தான். குடி அரசுத் தலைவரின் நிலைமை எப்படியோ என்ற எண்ணம் அவனைச் செயலிலே துரத்திற்று. ஓடினான்! ஓடினான்! காப்பாற்ற வேண்டும்; கடமையைச் செய்தாக வேண்டும்! பரிதாபத்துக்குரிய டில்மன் பாதகர்களின் குண்டுக்கு விழாதபடி தடுத்தாக வேண்டும் என்று உறுதிகொண்டு, வெள்ளை மாளிகையை நோக்கி அம்பெனப் பாய்ந்தான்.

அவள் சொன்னபடியே சதிகாரர்களால் ஏற்பாடு செய்யப்பட்டபடி, தோட்ட வேலைக்காரனாக வந்திருந்த ஒருவன்-ஒருநீக்ரோ-டில்மன் மீது குறிபார்த்துத் துப்பாக்கியால் சுடுகின்ற நேரம், கடைசி வினாடி, வெள்ளை இனத்தவனாகப் பிறந்தும் நிறவெறியற்று, நீதியில் பற்று வைத்துப்



பணியாற்றிட உறுதி கொண்ட காவலாளி, டில்மன் மீது பாயக் கிளம்பிய குண்டினைத் தானே ஏற்றுக் கொண்டு டக்லஸ் டில்மன் உயிரைக் காப்பாற்றினான். அவன் மடியவில்லை, படுகாயமுற்றான்.

தம்பி! எத்தகைய வெறி உணர்ச்சி ஊட்டப்பட்டிருந்தாலும், நீதியிலும் நேர்மையிலும் நம்பிக்கை கொள்பவர்கள், வெறி உணர்ச்சியை உதறித் தள்ளிவிட முடியும்; மனிதனாக முடியும் என்பதை மெய்ப்பிக்கும் மன நெகிழ்ச்சி தரத்தக்க சம்பவமல்லவா இது!

உடல் வனப்பைக் காட்டி, வலை வீசி காமவெறி ஊட்டி வாழ்க்கை நடத்திடும் ஒரு பெண்ணே அல்லவா, உண்மை புரிந்ததும் உள்ளம் சுட்டதும், திருந்துகிறாள், ஒரு நொடியில்!

வாலிப முடுக்கு காரணமாகவும், இன்பம் பெறும் துடிப்பு காரணமாகவும், தன்னை மறந்து கிடந்திடும் நிலை பெற்ற போதிலும், தன்னையும் அறியாமல் ஒரு அக்கிரமத் திட்டத்திற்குத்தான் உடந்தைஆக்கப்படுவதைஉணர்ந்ததும் அந்த மனிதன், ஓடோடிச் சென்றானல்லவா, உல்லாசியை உதறித் தள்ளிவிட்டு, தன் உயிரை இழந்தாகிலும், தன்னை நம்பியுள்ள நாட்டுத் தலைவன் உயிரைக் காத்திட! இன வெறி எல்லோரிடமும் இடம் பெற முடியாது. மனித உள்ளம், எல்லாவிதமான வெறியையும் மாய்த்துக் கொண்டு எழ முடியும் என்பதனை எடுத்துக் காட்டும் சம்பவமல்லவா இது? மனிதத் தன்மையை மாய்த்திட, மிருக உணர்ச்சியைக் கிளறிவிட எத்தனை கேடான சூழ்ச்சிகள் மூட்டப்பட்டு விடினும், எல்லோருமே பலியாகிவிடுவதில்லை; ஒரு சிலர் ஒப்பற்ற தனித் தன்மை காட்டி, தாங்கள் மனிதர்கள் என்பதை மெய்ப்பித்துக் கொண்டு வருவதனால்தான், உலகு காடாகிப் போகாமல் இருந்து வருகிறது.

தன்னைக் கவிழ்த்திடச் சதிசெய்யும் வெள்ளையர்களும், தன்னிடம் வெறுப்பைக் கக்கிடும் நிலையில் தன் இனத்தவரும் இருக்கக்கண்டு இதயம் நொந்துகிடந்த டில்மனுக்கு, ஒரு சாதாரணக் காவற்காரன் காட்டிய இந்தத் தியாக உணர்ச்சி, நீதியில் பற்று, நேர்மையில் உறுதி, எவ்வளவு நெஞ்ச நெகிழ்ச்சி உண்டாக்கி இருந்திருக்கும்!

வெள்ளையர்—கருப்பர் என்ற இருபிரிவாக மட்டுமல்ல மக்கள் இருப்பது; மனிதர்களும் இருக்கிறார்கள் என்பதை உணர்ந்து டில்மன், புதிய உறுதி பெற்றிருக்க வேண்டும்.

அந்தப் புதிய உறுதியுடனேயே. டக்ளஸ் டில்மன் தன் மீது தொடுக்கப்பட்ட வழக்கைச் சந்தித்தான்; துளியும் கலக்கமின்றி; விளைவு பற்றிய கவலையற்று, கடமையைச் செய்கிறோம் என்ற மனத்திருப்தியுடன்.

அண்ணன்,

3—4—66

காஞ்சிக் கடிதம் : 57

# வெள்ளை மாளிகையில்...(9)
## சதிக்குள் சதி! (3)

★ தன்னலத்தின் பல வடிவங்கள்!

★ பெருமைக்கு உரிய நன்மகன்

★ புகழுரையில் பாதி பொய்யுரை!

★ இனம் வெள்ளை—உள்ளம் தூயது!

★ விந்தையான மாறுதல்...

தம்பி,

'மனிதன்' என்ற தலைப்பிட்டு இந்த ஏடு எழுதப் பட்டிருப்பதன் நோக்கம் மனிதத் தன்மை இன, மத, குலப் பற்று வெறியாகிடும்போதும், சுகபோகத்தில் நாட்டம், சுயநலத்தில் விருப்பம் எழும்போதும், மாய்க்கப்பட்டுவிடு கிறது; அத்தகைய நிலையிலும் வீழாமல், நிமிர்ந்து நின்று, நேர்மையுடன் யார் நடந்துகொள்கிறார்களோ, 'இதயசுத்தி' யுடன் நடந்துகொள்கிறார்களோ, அவர் களையே 'மனிதன்' என்ற பட்டியலில் சேர்க்க முடியும்; 'மனிதன்' என்ற தகுதியை அவர்களே பெறுகிறார்கள் என்பதை எடுத்துக் காட்டும் தூய நோக்கமே காரணமாக அமைந்திருக்கிறது. இந்த ஏட்டின் தனிச் சிறப்புக்கு இதுவே காரணமாகவும் அமைகிறது,

தன்னலம் தலைகாட்டவே செய்யாது என்று கூறிவிடுவதோ, என்னிடம் தன்னல உணர்ச்சி வெற்றிகொள்ளவே செய்யாது என்று இறுமாந்து கூறிடுவதோ பொருளற்றதாகும்.

தன்னலம் என்பதற்கே வடிவங்கள் பலப்பல.

தன்னலத்தை ஊட்டிடும் நிலைகளும் பலப்பல.

தன்னலத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கான முறைகளும் பலப்பல.

தன்னலத்தைத் துளியும் கருதாதவன் என்றோ, தன்னல நோக்கமே எழாத நிலையினன் என்றோ ஒருவரைப்பற்றிக் கூறி, பெருமைப்படுத்துவதைக் காட்டிலும், உண்மையான பெருமை, தன்னலத்தை வென்றவன், தன்னல உணர்ச்சியால் தாக்கப்பட்டும் தாழ்ந்துவிட மறுத்தவன், தன்னல உணர்ச்சியுடன் போரிட்டு வெற்றி கண்டவன் என்பதிலேதான் இருக்கிறது.

தன் வாழ்க்கை, அதிலே குளிர்ச்சி; தன் குடும்பம், அதிலே ஏற்றம்; தன் நிலை, அதிலே பெருமிதம் பெற்றிட வேண்டும் என்ற உணர்ச்சி, கெட்டவர்களுக்கு மட்டுமே தோன்றிடக்கூடியது என்று கூறிவிடுவதும் முற்றிலும் உண்மையாகிவிடாது. இயற்கையாகவே அனைவருக்கும் எழக்கூடிய உணர்ச்சியே அது.

அவ்விதமான உணர்ச்சியே இல்லை, கற்சிலை போன்ற உறுதி இவருக்கு என்று பெருமைப்படுத்தக் கூறிடலாம்; அது கேட்டுச் சிலர் பெருமகிழ்ச்சியும் கொண்டிடலாம். ஆனால் உண்மையான பெருமை, தன்னல உணர்ச்சி எழவே எழாது என்ற நிலையில் இல்லை; தன்னல உணர்ச்சி எழுகிறது; எதைச் செய்தாகிலும், எவரைக் கெடுத்தாகிலும், நேர்மையை மறந்தாகிலும் தன்னலத்தைப் பெருக்கிக்கொள்ளலாம் என்று கருதிவிடாமல், தன்னல உணர்ச்சியைக் கட்டுப்படுத்தவும், பொது நன்மைக்காக விட்டுக் கொடுக்கவும், நீதியாக நடப்பதன் மூலம் தன்னலம் பெற்றிட முடியாது என்ற நிலை ஏற்படின் நீதி பெரிது, தன்னலம் அல்ல என்ற உறுதிகொள்வதும், அதன்படி ஒழுகி இன்னலை இன்முகத்துடன் ஏற்றுக் கொள்வதுமாகிய நிலைமை இருக்கிறதே, அதிலேதான் உண்மையான, நிலையான பெருமை இருக்க முடியும்.



அதிலும், அடிப்படைத் தேவைகளைப் பெறும் முயற்சியிலேயே அநீதிக்கு அடிபணிய வேண்டிய நிலை ஏற்பட்டுவிடுகிறபோது, யார் அடிப்படைத் தேவைகளையும் கூட இழந்திடுவேன், இன்னலை ஏற்பேன், வாழ்வதற்காக நீதியை இழந்திட மாட்டேன் என்று கூறுகிறானோ கூறியபடி செயல் படுகிறானோ, அவனே எல்லாப் பெருமைக்கும் உரியவனாகிறான்.

தம்பி! நமது செவிகளிலே விழுகிறதல்லவா, பெரிய இடத்தைப் பிடித்துக் கொண்டவர்களைப் பற்றிய புகழுரை; அவற்றிலே மிகப்பெரும் அளவு வெற்றுரையே; அல்லது பலன்பெற விழைந்து செய்யப்படும் அர்ச்சனையேயாகும்.

அவர் எப்படிப்பட்டவர் தெரியுமா! தன்னலம் துளியும் அற்றவர்! தன் குடும்பம், தன் குழந்தைகள் இதைப் பெற வேண்டும் அதைப் பெறவேண்டும் என்று அலைபவர் அல்ல, குடும்பம் அல்ல அவருடைய கண்முன் தெரிவது; நாடு, மக்கள்; அத்தகைய தியாகி அவர் என்று ஒருவரைப் பற்றிப் புகழ் சொரிவது எப்போது பொருளுள்ள பேச்சாக முடியும்? அவருக்குக் குடும்பம் இருந்து, அதனைக் காத்திடவும் ஏற்றம் பெறச் செய்திடவும் அவர் தமது முழுநேரத்தையும் நினைப்பையும், ஆற்றலையும் வாய்ப்புகளையும் பயன்படுத்திக் கொண்டிருந்துவிடும் போக்கிலே செல்லாமல், தன் குடும்பம் நாட்டு மக்கள் சமுதாயத்திலே ஒரு அங்கம் என்ற அளவிலே கருதி, பொதுநலனைப் புறக்கணிக்காமல் தமது பணியினை நடாத்திச் செல்லும்போது; குடும்பத்திடம் இயற்கையாக ஏற்படும் பாசத்துக்கு முழுக்க முழுக்கக் கட்டுப்பட்டுவிடாமல், சமுதாயத்தை மனதிலே கொண்டு பணியாற்றும்போது; தன் குடும்ப நலனை மட்டுமே கவனித்துக் கொண்டு பிறர் நலனைப் பேணிடத் தவறாமல், பொது நலனுக்காக உழைத்திடும் போது. அவ்விதமின்றி, குழந்தை குட்டிகளைக் காப்பாற்றிக் கொண்டிருக்கும் போக்கு கொண்டவரல்ல அவர்; எப்போதும் பொதுத் தொண்டிலே நாட்டம் காட்டுபவர் என்று ஒருவரைக் குறித்துப் புகழ்ந்துவிட்டு அவருக்கு எத்தனைக் குழந்தைகள்? என்று கேட்கும் போது, அவருக்குத் திருமணமே ஆகவில்லையே! !என்று பதிலளித்தால், தியாகி என்றும், தன்னலம் மறுத்தவர் என்றும் புகழ்ந்து பேசியது என்ன பொருளைத் தரும்?

அவர் தன் குழந்தைகளைக் கவனிப்பதிலேயே காலத்தைத் தள்ளிவிடவில்லை! ஏனென்றால், அவருக்குக் குழந்தைகளே இல்லை!! ஏனென்றால் அவருக்குத் திருமணமே ஆகவில்லை!!

இந்த நிலையிலே அவரைப் புகழ்ந்து பேசுவதிலே பொருளோ பொருத்தமோ எப்படி இருக்கமுடியும்!

அவருடன் நீச்சல் போட்டியிலே எவனும் வெற்றி காண முடியாது; ஆனால் அவருக்கு நீச்சலே தெரியாது.

அவள் மலரைத்தொட்டுத் தன் கொண்டையில் செருகிக்கொள்ளவே மாட்டாள்; ஏனெனில் அவள் தலை மொட்டை.

அவன் பசும்பாலே சாப்பிடமாட்டான்; ஏனெனில் அவன் இருக்கும் இடத்தில் உள்ளவை அவ்வளவும் எருமைகள்?

அவன் எந்த அழகியையும் ஏறெடுத்தும் பார்க்க மாட்டான்; ஏனெனில் அவன் பிறவிக்குருடன்!

தம்பி! இந்த வரிசையிலேதான் சேர்க்கவேண்டும், திருமணம் செய்துகொள்ளாத ஒருவரைப் பற்றிப் பேசும்போது அவர் தமது குழந்தை குட்டிகளின் நலனுக்காகப் பாடுபடுபவர் அல்ல என்று புகழ்வது! இல்லை ஆகவே தேவை இல்லை! குழந்தைகள் இருந்து, அவை காகூவெனக்கூவி, அவைகளுக்காகப் பாடுபடாமல், நாட்டுத் தொண்டுக்கே என் நேரம் முழுவதும் என்று கூறிச் செயலாற்றினவரா? இல்லையே! குழந்தைகள் இல்லை, ஆகவே குழந்தைகளைக் கவனிப்பதா சமுதாயத்தைக் கவனிப்பதா என்ற சிக்கல் எழவே காரணம் இல்லை.

என்றாலும் புகழ்கிறார்களே! ஏன்? மகிழச் செய்திடலாம் என்ற எண்ணம். அந்த எண்ணம் எழக்காரணம்? ஏதாவது கிடைக்காதா என்ற ஆசை தான்!

தம்பி! தன்னலத்துக்கும் பொதுநலனுக்கும் இடையிலே சிக்கி, தத்தளித்து இறுதியில் பொதுநலனுக்காகத் தன்னலத்தை இழந்திட உறுதிகொள்பவனே, மனிதன்!



நிறம் கருப்பு என்ற போதிலும், குடிஅரசுத் தலைவர் நிலை என்றபோதிலும், நான் ஓர் மனிதன் என்பதை எத்தனையோ இடர்ப்பாடுகள் இடித்தபோதும் கலங்காது எடுத்துக்காட்டினாரே டக்ளஸ்டில்மன், அவருக்கு மற்றோர் 'மனிதன்' துணை நிற்க முன்வருகிறான்.

ஓர் வழக்கறிஞன்; டில்மனுக்கு நெடுநாளைய நண்பன்; வெள்ளை இனம்; ஆனாலும் தூய உள்ளம்.

திறமைமிக்க வழக்கறிஞர்! ஆனால் வருவாய் அதிகம் இல்லை! காரணம் அவர் ஏழை எளியோருக்காகவே வாழ்ந்து வந்தவர்.

குடும்பம் இல்லாதவர் அல்ல! வாழத் தெரியாதவர் அல்ல. வாழ்ந்திட வேண்டிய அவசியமே அற்றவர் அல்ல! ஒண்டிக் கட்டை அல்ல; நான் எதற்காகவும் எவரிடமும் தயவு கேட்கத் தேவையில்லை; நாலு முழத் துண்டு போதும் இடுப்புக்கு; நாளைக்கு ஒருவேளை சோறு போதும்; படுத்து உறங்க எந்தத் தெருத்திண்ணை கிடைத்தாலும் போதும் என்று 'வக்கணை' பேச.

தன்னையொத்த வழக்கறிஞர்கள், தன்னிலும் திறமை குறைவானவர்கள் பொருள் திரட்டி, தனவானாகி, கனவானாகி, மாளிகையிலே வாழ்ந்திடக் காணும்போதுகூட, நாம் ஏன் பணம்திரட்டக்கூடாது என்ற எண்ணம் கொள்ளவில்லை.

"உழைப்பு அதிகம். இதயம் பலகீனமாக இருக்கிறது. இதே அளவிலும் வேகத்திலும் வேலை செய்து கொண்டிருந்தால், நல்லதல்ல; ஆபத்தாகிடக் கூடும்."

மருத்துவர் கூறுகிறார் இதுபோல. இதுகேட்ட துணைவர் தன் துணைவியின் கண்களைக் காண்கிறார்; சோகம் கப்பிக் கொண்டிருக்கிறது! ஆகவே ஒரு புது முடிவுக்கு வருகிறார், நல்ல வருவாய் தரத்தக்க முறையில் 'தொழிலை' அமைத்து நடத்தி, பிறகு ஓய்வு எடுத்துக் கொள்ளவேண்டும். சிற்றூரில் ஒரு வசதியான வீடு அமைத்துக்கொண்டு, இயற்கைச் சூழ்நிலையில் தனது முதுமையைக் கழித்திடவேண்டும் என்று விரும்புகிறார். இந்த எண்ணத்தை, அனுமதிக்கப்பட முடியாத தன்னலம் என்றோ பொறுத்துக் கொள்ளக்கூடாத கெடு நினைப்பு என்றோ பேதையும் கூறிடான்.

நாலுமுழத் துண்டு போதும் என்று 'தன்னலமற்றவர்' பேசுகிறாரே, அவருக்கு நாளைக்கு மூன்று வேளை குளியல்! ஒவ்வொரு குளிப்பாட்டுக்குப் பிறகும் புதிதாக வெளுக்கப்பட்ட ஆடை! என்றால் அவர் நாலு முழத்துண்டு போதும் என்று பேசியது, தன்னலமற்ற தன்மையா அல்லது ஏழையைத் தடவிக் கொடுக்கும் தந்திரமா என்பது பற்றிய விளக்கம் கூற வேண்டும்.

பெரியதோர் மாளிகையில், திண்டுமீது சாய்ந்தபடி பேசலாம், எனக்கென்னய்யா? படுத்துத் தூங்கத் தெருத்திண்ணை போதும்! என்று. தந்திரப்பேச்சன்றி வேறென்னவாக அது இருக்க முடியும்?

கடினமாகப் பல ஆண்டுகள் ஏழைகளுக்காக உழைத்தான பிறகு, மேலும் அதுபோலவே உழைத்துக் கொண்டிருக்க உடல் இடம் தராது என்று மருத்துவர் எச்சரிக்கை தந்தான பிறகு, வாழ்க்கையை இனிச் சற்று நிம்மதியாக நடத்திச் செல்ல வழி தேடிக்கொள்ள வேண்டும் என்ற நிலையினைக் கொள்வது—'தன்னலம்' என்று இழிவாகக் கூறப்பட வேண்டியதாகிடுமா! பேதையும் அங்ஙனம் கூறிடக் கூசுவான்.

ஒரு வாய்ப்பும் தன்னாலே வந்தது, அந்த வழக்கறிஞருக்கு.

செல்வாக்கு மிக்க ஒரு வணிக நிறுவனம், குறிப்பிட்ட சில ஆண்டுகள், சட்ட ஆலோசகராக இருக்க அழைத்தது. ஊதியம் அதிக அளவில்! கட்டு திட்டங்கள் குறைவு, கண்ணியமாக நடத்துவார்கள்! இந்த வணிக அமைப்புடன் ஒப்பந்தம் செய்துகொண்டு சில ஆண்டுகள் வேலை பார்த்தால், பிறகு பலப்பல ஆண்டுகள் இன்னலற்ற வாழ்க்கை நடத்திச் செல்வதற்கு ஏற்ற பொருள் கிடைத்துவிடும். சிங்காரச் சிற்றூர்! வயல் வெளி! இயற்கை அழகு! ஓய்வு தரும் மகிழ்ச்சி!

வழக்கறிஞர் இசைவு தருகிறார்! துணைவியார் மெத்தவும் மகிழ்ச்சி கொள்கிறார்கள்; வணிக அமைப்பின் பொறுப்பாளர் வேலை சம்பந்தமான ஒப்பந்தம் அச்சடித்துத் தருகிறார்; படித்துப் பார்க்கிறார் வழக்கறிஞர்; திருப்தியாகவே இருக்கிறது; கையொப்பமிட முனைகிறார்; தொலைபேசி மணி அடிக்கிறது.



இன்ப நிகழ்ச்சிகள் காண்கிறாள் வழக்கறிஞரின் மனைவி. வணிகக் கோட்டத்துப் பொறுப்பாளன், விழா நடத்த விரும்புகிறான்; உயர்தரமான உணவு விடுதியில்! இனி அவர் உடலுக்கு ஆபத்தின்றி வாழ்க்கை நடத்தலாம்; நிம்மதி பெறலாம் என்பதிலே அவளுக்கு மகிழ்ச்சி; சிற்றூரும் சிங்காரச் சிற்றிலும் மனக் கண்ணால் காணுகின்றாள்; இதழ்களில் புன்னகை தவழ்கிறது.

கவலை தோய்ந்த முகத்துடன் காணப்படுகிறார் வழக்கறிஞர்.

என்ன! என்ன! தொலைபேசியில் யார்? என்ன திடுக்கிடத்தக்க செய்தி? ஏன் இந்தக் கலக்கம்?

யார் பேசினார்கள் தொலைபேசி மூலம்.

என் நண்பர்! டக்ளஸ் டில்மன்! குடிஅரசுத் தலைவர்.

என்ன சொல்கிறார் உங்கள் நண்பர்?

அவர்மீது வழக்குத் தொடுத்திருக்கிறார்களல்லவா...?

ஆமாம்! பயங்கரமான குற்றச்சாட்டுக்கள், கடினமான வழக்கு!

அந்த வழக்கில், அவர் சார்பாக வாதாட அழைக்கிறார், என்னை; நம்பிக்கையுடன்; நட்பு உரிமையுடன்...

என்ன! என்ன! டில்மனுக்காக நீர் வாதாடுவதா? நன்றாய் இருக்கிறது வேடிக்கை. வேடிக்கைகூட அல்ல; இது விபரீதம்! நமது கம்பெனி, டில்மன் வீழ்த்தப்பட வேண்டும் இந்த வழக்கின் மூலம் என்று விரும்புகிறது; திட்டமிட்டிருக்கிறது; அதற்காகப் பணம் செலவிடவும் முனைந்திருக்கிறது.

நான் உமது வணிகக் கோட்டத்திலே பணி புரிய ஒப்பந்தம் செய்துகொள்வது என்றால், என் இச்சையாக வேறு வழக்குகளை கவனிக்கக் கூடாதா? அப்படி ஒரு நிபந்தனையா...!

எந்த வழக்கையும் கவனிக்கலாம், இந்த வழக்கைத் தவிர! டில்மன் ஆட்சியில் இருப்பது எமது கம்பெனிக்கு இடையூறாக இருக்கிறது.

குடிஅரசுத் தலைவருக்காக வாதாட எத்தனையோ வழக்கறிஞர்கள் கிடைப்பார்களே...

கிடைப்பார்கள்...ஆனால், அவர் என்னை அழைக்கிறார்; நம்பிக்கையுடன்; நான் மறுக்க மாட்டேன் என்ற நம்பிக்கையுடன்...

மறுக்கத்தான் வேண்டும்...உம்மையே டில்மனுக்கு எதிராக வாதாடச் செய்திட விரும்பினோம். நண்பர் என்கிறீர். ஆகவே வற்புறுத்த விரும்பவில்லை. ஆனால் கம்பெனியுடன் ஒப்பந்தம் செய்து கொள்வதானால், டில்மனுக்காக வாதாடக்கூடாது...

ஒப்பந்தம் நமக்கு நிரம்பச் சாதகமானது என்பதை மறவாதீர். உமது துணைவியாக உள்ள நான் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்; இத்தனை ஆண்டுகள் உழைத்தது போதும்; இனிக் குடும்பத்தைச் சற்று கவனித்திட வேண்டுகிறேன். மருத்துவர் கூறினதை மறந்திடலாமா... உங்கள் நண்பர் புரிந்து கொள்வார் நிலைமையை...கூறிவிடுங்கள் வேறு ஒருவரை வழக்கை நடத்தச் சொல்லி...

ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதானால், இந்த நிபந்தனையை மறவாதீர்; டில்மனுக்காக வாதாடக் கூடாது...

கையொப்பமிட்டால்தானே, நிபந்தனை...?

அப்படியானால் எமது கம்பெனி அழைப்பை மறுத்து விடப்போகிறீரா......

வேண்டாம்...... வேண்டாம்......... என் பேச்சைக் கேளுங்கள்.குடும்பத்தை நாசமாக்காதீர்கள்.மனைவி என்ற உரிமையுடன் உங்கள் நலனில் அக்கறைகொண்டவள் என்ற முறையில், உம்மைக் கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறேன்......

ஒப்பந்தத்திலே கையெழுத்திடும் ஐயா! ஏன் ஓராயிரம் யோசனை. உம்மாலும் முடியாது, உம்மைப்போன்ற பலர் கூடினாலும் முடியாது டில்மனைக் காப்பாற்ற......



நிலைமை மோசமாக இருப்பதால்தான், டில்மன் என்னை அழைத்திருக்கிறார்; புரிகிறது.நான் ஒப்பந்தத்தில் கையொப்பம் செய்யப்போவதில்லை.

வணிகக் கோட்டத்தானுக்குக் கடுங்கோபம். ஒப்பந்தத் தாளை மடித்து எடுத்துக்கொண்டு வெளியே செல்கிறான். கண்ணீர் பொழிந்த நிலையில் துணைவி இருக்கிறாள். ஒரு புறம் அவளுடைய கண்ணீர் தெரிகிறது!மற்றோர்புறம் டில்மனுடைய குரல் காதிலே விழுகிறது!மனக்கண்ணால் பார்க்கும்போது ஒருபக்கம், மாளிகை, பைபையாகப் பணம், பளபளப்பான வாழ்க்கை, பொன்னகையும் புன்னகையும் துலங்கிடும் நிலையில் மனைவி; சிற்றூர்; சாலை; சோலை; இன்பச் சூழ்நிலை தெரிகிறது; மற்றோர் புறமோ, துயரம் தோய்ந்த முகத்துடன் டில்மன்; அவன் கண்கள் அனுப்பும் அழைப்பு! நான் துரத்தப்படுகிறேன்! என்னை வேட்டையாடுகிறார்கள்—கருநிறம் என்பதால்! பழிசுமத்துகிறார்கள் என்னைச் சூழ்ந்து நிற்கும் நிறவெறியர்! என் கண்களுக்கு ஒரே ஒரு நண்பன் தெரிகிறான்! அதனால்தான் அழைக்கிறேன்; நம்பிக்கையுடன் என்று அந்தக் கண்கள் பேசுகின்றன.

தத்தளிக்கும் நிலையினளான அம்மாதரசி விழிநீரைத் துடைத்திடவும் மனமின்றி, எழுந்து செல்கிறாள் வெளியே...

எங்கே? இந்த நேரத்தில்? தனியாக! என்னிடம் சொல்லிக் கொள்ளாமல்!—அவன் கேட்கிறான்.

எங்கு என்றா கேட்கிறீர்கள்—நெடுஞ்சாலை நோக்கிச் செல்கிறேன்; ஏதாவது ஒரு மோடார் கிடைக்காதா... விழுந்து செத்துத் தொலைக்கிறேன். அவள் கூறுகிறாள், மனம் உடைந்த நிலையில்.

தம்பி! இது அல்லவா சிக்கல்!இது அல்லவா சோதனை! திருமணமே ஆகாத ஒரு திருவாளர், நான் என்ன என் பிள்ளை குட்டிகளுக்காகவா பாடுபடுகிறேன், எல்லாம் உங்களுக்காகத்தானே என்று பேசுகிறாரே, அந்த நிலைமையா இது!

ஒருபுறம் உள்ளம் உருகிக் கசிந்திடும் மனைவி.

மற்றோர்புறம், திகைத்துக் கிடக்கும் நண்பன்,

மனைவியின் கண்ணீரையும் துச்சமென்று கருதிவிட முடியாது; அந்த மாதரசியும் அக்கிரமம் எதனைச் செய்தாகிலும் எனக்குச் சுகபோக வாழ்வு அமைத்துக் கொடு என்று கேட்கவில்லை. நிம்மதியாக வாழக் கிடைத்திடும் ஒரே வாய்ப்பை இழந்துவிட வேண்டாம் என்றுதான் கெஞ்சுகிறாள்.

மனைவியின் வேண்டுகோளை மதித்திடுவதும், குடும்பத்திற்கு நிம்மதியான நிலையை அமைத்திடுவதும், ஒரு குடும்பத்தலைவன் மேற்கொண்டாக வேண்டிய கடமைகளிலே ஒன்று! அநீதியல்ல, அக்கிரமம் அல்ல! பிறரைக் கெடுப்பது அல்ல!

நண்பன் அழைப்பை ஏற்றுக்கொண்டால், அந்த நல்லவன் கண்களிலே ஒரு களிப்பு ஒளிவிடும்; மறுத்தால், அந்தக் கண்களிலே இரண்டொரு சொட்டு கண்ணீர் சிந்திடும்.

நண்பனுடைய கண்களிலே நம்பிக்கை ஒளி எழக் காண வேண்டுமானால், மனைவியின் கண்ணீரைக் கண்டு கலங்கக் கூடாது.

மனைவியை மகிழச் செய்திடும் கடமையைக் காட்டிலும் நண்பனைக் காத்திடும் கடமை பெரிது.

குடும்பம்—தன்னை ஒட்டியது! நண்பன் பிரச்சினையோ, பொதுவானது!

தன்னலம் விரண்டோடிற்று! பொதுநல உணர்ச்சி வென்றது. வெளியே புறப்பட்ட மனைவியைத் தடுக்கக் கூட இல்லை.

தம்பி! இதனை ஒத்த சிக்கல் எழும்போது, தன்னலத்தைத் துறந்திடும் உறுதி பிறந்திட வேண்டும். இந்த நிகழ்ச்சியைத் திருப்பித் திருப்பிப் படித்துக்கொண்டே இருக்கவேண்டும்போலத் தோன்றுகிறது.

குடும்ப நலனைப் பற்றிய கவலையை உதறித் தள்ளிவிட்டு கண்ணீர் பொழியும் மனைவியின் மனம் நொந்து போகிறதே என்பது பற்றிய சங்கடத்தையும் தாங்கிக் கொண்டு, அந்த வழக்கறிஞர் டில்மனுக்காக வாதாடியே தீருவேன் என்று உறுதி கொண்டாரே, அது எவருடைய மனதிலே முளைத்திடும் தன்னல உணர்ச்சியையும் பொசுக்-



கிக் கருக்கி விடத் தக்கது. எவரும் வியந்து பாராட்டுவர் அந்த வழக்கறிஞர் மேற்கொண்ட தன்னல மறுப்பினை.

ஆனால் அவரே கண்டு வியந்து பாராட்டும் விதமாக அமைகிறது அவருடைய துணைவியாரின் செயல். என்ன செயல்; அந்த மாதரசிதான் குடும்பத்தைக் கவனிக்கும்படி வற்புறுத்தினார்களே; வணிகக் கோட்டப் பணியை மேற்கொள்ளச் சொன்னார்களே; சிக்கலை ஏற்படுத்தினார்களே; அப்படிப்பட்ட செயலுக்காகவா பாராட்ட முடியும் என்று கேட்கிறாய்!

இல்லை, தம்பி! வெளியே சென்ற மாதரசி, ஒருமணி நேரம் கழித்த பிறகு வீடு திரும்பினார்கள்; திரும்பியதும், ''கண்ணாளா! என்னை மன்னித்துவிடும்! டில்மனுக்காக வாதாடச் சம்மதம் தெரிவித்துவிடும்! எப்படியும் டில்மனைக் காப்பாற்றியாகவேண்டும்'' என்று கூறினார்கள். எதனால் ஏற்பட்டது இந்த விந்தையான மாறுதல் என்று கேட்கிறாய்.

எதனால் ஏற்பட்டிருக்கக்கூடும் என்பது பற்றி, தம்பி! நீயேதான் சிறிதளவு சிந்தித்துப் பாரேன். நடந்ததை நான் அடுத்த கிழமை தெரிவிக்கிறேன்.

அண்ணன்,

*10—4—'66*



தமிழ் நூல் காப்பகம்
தமிழ் நகர் விருத்தாசலம் - 606 001.

காஞ்சிக் கடிதம்: 58

# வெள்ளை மாளிகையில்...(10)
# மனிதன், மிருகமல்ல!

- ★ வழக்கறிஞரின் திறமை எதற்குப் பயன்படவேண்டும்?
- ★ பெண் உள்ளம் பெரிய உள்ளம்
- ★ 'நல்ல நாடு' என்ற பெயரே ஒரு நாட்டுக்கு வேண்டும்!
- ★ அய்ந்தாவது 'குற்றச்சாட்டு!'
- ★ ஏடு காட்டும் நன்முடிவு நாட்டிலே ஏற்படுமா?...

தம்பி,

இன்ப வாழ்க்கைக்கான அழைப்பு ஒருபுறத்திலிருந்து. செல்வம்! செல்வாக்கு! மாளிகை! மலர்த்தோட்டம் துணைவியாரின் மனம் மகிழ்ச்சியால் துள்ளிடும் நிலை! குடும்பத்துக்கு நிம்மதி! இவையாவும் எதிரே நிற்கின்றன!

எங்கோ நெடுந்தொலைவிலிருந்து ஒரு பெருமூச்சு ஒலி கிளம்புகிறது! வழக்கறிஞர் நாட் ஆபிரகாம்ஸ் செவியிலே அந்தப் பெருமூச்சு புகுந்ததும், இன்ப வாழ்க்கைக்கான அழைப்பை அவர் உதறித் தள்ளுகிறார்.



வழக்கறிஞர் திறமையைக் காட்டி வெற்றி பெற்றிடு வதை மட்டுமே கடமையாகக் கொள்ளவேண்டும் என்ற ஒப்புக்கொள்ளப்பட்ட 'மரபு,' மனிதத்தன்மையை மாய்த் திடும் நிலைக்கு அந்த வழக்கறிஞரை இழுத்துச் செல்லு மானால், அந்த 'மரபு' மாண்பானதாக முடியாது.

வழக்கறிஞரின் திறமை எதற்குப் பயன்படுதல் வேண்டும்? எதிர்த்தரப்பினர் எந்த இடத்திலே இடருவார், எந்தக் குறிப்பிலே குழம்புவார், எந்தக் கட்டத்திலே குளறு வார், எந்த வாதத்தை மறந்திடுவார், எந்த சட்ட நுணுக் கத்தை வலியுறுத்தத் தவறிவிடுவார் என்று கூர்மையாகக் கவனித்துக் கொண்டிருந்து, தக்க சமயமாகப் பார்த்து பாய்ந்து தாக்கி வீழ்த்துவது மட்டுந்தானா!

நாட் அவ்விதம் எண்ணவில்லை. வழக்கறிஞர், நீதிக் காகப் பரிந்து பேசவேண்டும்; சட்டத்தைக் கொண்டு எவரேனும் எவரையேனும் வாட்டி வதைத்திட முனைந் தால், அவர்களைக் காத்திட முனையவேண்டும். எத்தனை சட்ட நுணுக்கங்கள், சான்றுகள், விளக்கப்பட்டபோதிலும் அவையாவும், நீதியை நிலைநாட்ட மட்டுமே பயன்படுதல் வேண்டும்; அதற்கான முறையிலே வழக்கு நடத்தப்படு கிறதா என்பதைக் கண்டறிவதே வழக்கறிஞரின் தனித் திறமையாக இருக்கவேண்டும் என்று நாட் கருதினார்.

குற்றவாளிக் கூண்டிலே கொண்டு வந்து நிறுத்தப்படு பவர், தமது நண்பர் என்பதாலேயே, அவர் காப்பாற்றப் பட்டாக வேண்டியவர் என்ற கோணல் வாதத்தை நாட் ஆபிரகாம் மேற்கொள்ளவில்லை.

தனது நண்பர், ஓர் மனிதர்! நிறம் கருப்பு, ஆனால் நெஞ்சம் தூய்மையானது! அவர் மீது பழி சுமத்தப்படு கிறது என்று நம்பினார்.

அவர்மீது குற்றம்சாட்டும் வெள்ளை இனத்தவர், பல நூற்றாண்டுகளாகக் கருப்பர் மீது பகை, வெறுப்பு கக்கி வருபவர். கருப்பர்களைக் கொடுமை செய்வது, அற மல்லவே முறையல்லவே என்ற உணர்வே அற்றவர்கள். அவர்கள் குற்றம் சுமத்துகிறார்கள் என்றால், பகை காரணமாகத்தான் இருக்கமுடியும் என்று நாட் திடமாக நம்பினார்.

எல்லாவற்றையும்விட, தன்னை எத்தனை நம்பிக்கை யுடன், நட்புணர்ச்சியுடன் அழைத்தார் டில்மன் என்பதை

எண்ணும்போது, எதை இழப்பதாயினும் சரி, எத்தனை இன்னலை ஏற்கவேண்டி நேரிடினும் சரி, நண்பன் பக்கம் நின்றாக வேண்டும் என்ற உறுதி பிறந்தது.

துணைவியாரின் பேச்சும் கண்ணீரும், தன் நெஞ்சை உருக்கிடுவதை உணர்ந்தார். பேதைப் பெண்! என்னைக் கணவனாகப் பெற்றதால், சீமாட்டியாகலாம், சிங்கார வாழ்விலே புரளலாம் என்று எண்ணிக்கொண்டாள். பெருத்த ஏமாற்றம், பாவம்! எறிச்சலாகத்தான் இருக்கும். இத்தனைக் காலமாகத்தான் ஏழை எளியோர்களுக்காக வேலை செய்து, வாழ்க்கையைப் பாலையாக்கிக் கொண் டார்! இப்போது ஒரு வாய்ப்புக் கிடைக்கிறது—பெரிய வணிகக் கோட்டம் அழைக்கிறது—கேட்கும் பணம் தரச் சம்மதிக்கிறது—இதையும் உதறித் தள்ளிவிடுவதா! குடும்பம் எக்கேடோ கெடட்டும் என்றா இருப்பது! நான் வேண்டுகிறேன், கெஞ்சுகிறேன், கண்ணீர் வடிக்கிறேன்! கவலைப்படக் காணோமே!! என்று பாபம், அவள் பதறு கிறாள். என் எண்ணத்தை அவள் ஏற்க மறுக்கிறாள். அவள்மீது கோபித்து என்ன பயன்? எந்த மனைவியும் தன் கணவனிடம் எதை எதிர்பார்ப்பாளோ அதைத்தான் அவள் எதிர்பார்க்கிறாள்! நான்தான் அவளுக்கு ஏமாற்றத் தைத் தருகிறேன், நான் வேறென்ன செய்ய முடியும்...

நாட் ஆபிரகாம்ஸ் இவ்விதமாகவெல்லாம் எண்ணி எண்ணி ஏங்குகிறார். உட்கார்ந்தபடியே உறங்கிவிடு கிறார்.

வெகுண்டு வெளியே சென்ற அவர் மனைவி வரு கிறாள்; மெள்ளத் தன் கணவன் தோளைத் தொட்டு எழுப்புகிறாள். வேறு ஏதோ ஓர் உலகு சென்று திரும்பி யவன் போன்ற நிலையில் ஆபிரகாம் இருக்கக் காண் கிறாள்.

தழதழத்த குரலில் அவள் பேசுகிறாள்! "அன்பே! என்னை மன்னித்து விடு! ஏதோ மனக் குழப்பம். என் னென்னமோ பேசிவிட்டேன், கோபமாக. உங்கள் முடிவு தான் சரியானது, நியாயமானது. டக்ளஸ் டில்மனை நாம் கைவிடக்கூடாது. அவருக்காக வாதாட வேண்டியது தான் கடமை..."

"என்ன சொல்லுகிறாய் அன்பே! டக்ளஸ் டில்மனிடம் இத்தனைப் பரிவு எப்படி ஏற்பட்டது."



"பாவம்! அத்தனைப் பெரிய மாளிகையில், தன்னந் தனியாகத்தானே டில்மன் தவித்துக் கொண்டிருப்பார்; தனக்காகப் பரிந்து பேச, தனக்கு நியாயம் கிடைக்கும்படிச் செய்ய ஒருவரும் இல்லையே என்ற துக்கம் துளைத்திடும் நிலையில். அதை எண்ணிக்கொண்டால், மனம் என்ன பாடுபடுகிறது தெரியுமா..."

"இந்த மனமாற்றம் ஏற்படக் காரணம்?"

"உண்மையை உணர்ந்ததால்; டக்ளஸ் டில்மன் எந்த நிலைமையில் இருக்கிறார்; அவரைச் சுற்றிலும் எத்தனைப் பகை கப்பிக் கொண்டிருக்கிறது என்பதை உணர்ந்ததால். அன்பே! கோபமாகச் சென்றேனல்லவா வெளியே; சிறிது தூரம் சுற்றிவிட்டு, அந்த மாளிகைக்கு எதிர்ப்புறம் நின்றேன்; வெள்ளை மாளிகைக்கு எதிர்ப்புறம் உள்ள சாலையில். அகமகிழ்ச்சியுடன் பேசிக்கொண்டே அவ்விடம் வந்த ஓர் ஆரணங்கையும் அவள் மணவாளனை யும் கண்டேன்! புது மணமக்கள் போல இருக்கிறது. அந்தப் பெண் அவனைக் கேட்டாள், "அதோ அதுதானே வெள்ளை மாளிகை?" என்று; ஆம் என்றான் அவன்; உள்ளே போய்ப் பார்க்க வேண்டும் என்று எனக்கு ஆசை யாக இருக்கிறது என்றாள் அந்தப் பெண், அவனோ ஓர் ஏளனச் சிரிப்புடன் கூறினான்:

"அங்குதானே! போகலாம்; ஆனால் இப்போது வேண்டாம்; இப்போது அங்கு ஒரு கருப்பன் அல்லவா இருக்கிறான்!! ஆனால் அவன் அங்கே அதிக நாட்கள் இருக் கப்போவதில்லை; வெளியே துரத்தப் போகிறார்கள். வழக்குத் தொடுத்தாகி விட்டது; கருநிறத்தான் வெளியே சென்றதும், நாம் உள்ளே போய்ப் பார்க்கலாம், வெள்ளை மாளிகையைக் கழுவிச் சுத்தப்படுத்தி விடுவார்கள் என் றான்; அவள் சிரித்தாள். அன்பே! அப்போதுதான் எனக்கு டக்ளஸ் டில்மனுடைய நிலைமை புரிந்தது! சட்டப்படி குடி அரசுத் தலைவராக அமர்ந்திருக்கிறார். ஆனால் நிற வெறி காரணமாக அவரை அவ்வளவு வெறுக்கிறார்கள்; கேவலமாக பேசுகிறார்கள்; ஒழிந்துக் கட்டவே முனை கிறார்கள். அவ்வளவையும் தாங்கிக் கொண்டல்லவா அவர் தத்தளிக்கிறார். நீதி அறிந்தவர்கள் அவர் பக்கமாக நிற்கவேண்டும்! அதனை உணர்ந்தேன், ஓடோடி வந்தேன்; என்ன தவறான காரியம் செய்துவிட்டேன் என்பதை எண்ணியபடி. அன்பே! உடனே குடிஅரசுத்

தலைவரிடம் கூறிவிடு, வழக்கு மன்றம் வரத் தயார் என்று; நீதிக்காக வாதாடத் தயார் என்று.''

''அன்பே, உன் மனம் மாறும் என்பதை நான் அறிவேன். அதனை எதிர்பார்த்து, நான் ஏற்கனவே குடிஅரசுத் தலைவருக்குத் தொலைபேசி மூலம் தெரிவித்து விட்டேன், அவர் சார்பில் வழக்கை நடத்துவதாக!''

தம்பி! இதுபோல இருவரும் உரையாடி மகிழ்கின்றனர். குடும்பம் நிம்மதியாக வாழ்ந்திட வேண்டும் என்ற இயற்கையான, தேவையான, நியாயமான எண்ணத்தின் காரணமாகச் சிறிதளவு 'மாசு' மனத்திலே புகுந்தது; எனினும் மீண்டும் தூய்மைப்பட்டுவிட்டது.

அப்போது அந்த மாது கூறுவதாக நூலாசிரியர் ஓர் கருத்தைத் தருகிறார்; அது என் மனதை வெகுவாக நெகிழச் செய்தது.

பெரிய வணிகக் கோட்டத்தின் வழக்கறிஞரானால், பணம் ஏராளமாகக் கிடைக்கும்; சில ஆண்டுகளுக்குப்பிறகு, சிற்றூரில் ஓர் சிங்கார இல்லம், சாலையும் சோலையும் சூழ்ந்த இடத்தில் ஒரு பண்ணை அமைத்திடலாம்; அங்கு நிம்மதியாகக் குதூகலமாக வாழ்ந்திடலாம்; குழந்தைகளுக்கு அந்த எழிலகத்தைத் தந்திடலாம் என்றல்லவா ஆசைப்பட்டாள் வழக்கறிஞரின் மனைவி; அதை மீண்டும் நினைவுபடுத்திவிட்டுச் சொல்கிறாள்: நாம் நினைத்தபடி சிற்றூரில் எழிலகம்! சாலையும் சோலையும் அமைந்த ஒரு பண்ணை! இவைகளை நமது குழந்தைகளுக்கு நாம் பெற்றளிக்க முடியாது, ஆனால் அன்பே! நீதிக்கு இடமளிக்கும் நாட்டை ஒப்படைத்துவிட்டுச் செல்லும் பாக்கியம் கிடைக்குமல்லவா! அது போதும்! அது பண்ணையைவிட எவ்வளவோ மேலானது.''

இரும்புப் பெட்டியிலே எண்பது இலட்சம்! கரும்புத் தோட்டத்திலே வருட வருமானம் பல இலட்சம்! ஆலை! சோலை! சாலை! ஆள் அம்பு! கோட்டம்! மாடம்! கூடம்! —எல்லாம் தன் பிள்ளைகளுக்குத் தரவேண்டும்! எத்தனைப் பாடுபட்டாகிலும் அந்தச் செல்வநிலையைப் பெற வேண்டும். பிறகு!

அந்த மாளிகையிலே மந்தகாசம்!

மலர்த் தோட்டத்திலே காதல் கீதம்!

ஊரிலே பெருமதிப்பு! செல்வாக்கு! உயர்நிலை!!



பிள்ளைகள்—பேரப்பிள்ளைகள்—வழிவழி வந்தோர் மகிழ்ச்சிப் பொங்கிடும் நிலையில் வாழ்ந்திடுவர்!

என்முன்னோர் எனக்காக இத்தனை செல்வத்தைச் சம்பாதித்துவைத்தார் என்று பேசுவர்; போற்றுவர்; வழி படக்கூடச் செய்வர்.

ஆனால், ஒரு தந்தை தன் மகனுக்கு இத்தகைய செல்வத்தை மட்டும் சேர்த்துவைத்துவிட்டால் போதுமா?

செல்வத்தைக் குவித்து வைத்துக் கொள்வதாலே மட்டுமே இன்ப வாழ்வு கிடைத்துவிடுமா?

பொறாமை! வஞ்சகம்! பொல்லாங்கு! பகை! சூது! சூழ்ச்சி! மாச்சரியம்!—இவை நெளியும் நிலையில் நாடு இருந்திடின், அந்த நாட்டிலே மாளிகை உண்டு மந்தகாச வாழ்வு உண்டு என்று கூறி இருந்திட முடியுமா!

நீதி! நேர்மை! பண்பு! அறம்! அறிவு! இவைகளற்ற நிலையில் ஒருநாடு இருந்திடின்...அங்கு கோடி கோடியாகப் பணம் குவிந்திருந்திடினும், வாழ்விலே ஒரு நிம்மதி கிடைத்திடுமா!

நல்ல நாடு! என்பதைக் காட்டிலும் மேலான செல்வம், நிலையான செல்வம் வேறு எதுவும் இல்லை.

நல்லநாடு! ஒருவரை ஒருவர் தாழ்த்திடும் இழிதன்மை இல்லாத நாடு! நிறம், மதம், மொழி, குலம், எனும் எதன் காரணமாகவும் பேதமும் பிளவும் ஏற்படாமல், எல்லோரும் ஓர் இனம், எல்லோரும் ஓர் நிறை என்ற முறை ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ள இடமே நல்லநாடு!

என் மக்கள் வாழ்வதற்காக அத்தகைய நல்ல நாடாக இந்நாட்டை ஆக்கிட உழைப்பேன்; இதனைக் காட்டிலும் நான் என் பிள்ளைகளுக்குச் செய்யக்கூடிய நன்மை—தரக் கூடிய செல்வம்— விட்டுச் செல்லக் கூடிய வரலாறு—வேறு என்ன இருக்கமுடியும்,

செல்வம் சேர்த்துக் கொடுத்திடலாம்— எதற்கு அது பயன்பட வேண்டும்? நிறவெறி தலைக்கேறி ஆட்டமாடுகிறார்களே அதற்காகவா! ஆளப்பிறந்த இனம் என்ற செருக்கை மூட்டிவிடவா செல்வம்!!

பூங்கொடியாளிடம் ஓர் பேழை! பேழை நிறைய வைரக் கற்கள்!! ஆனால் அவள் இருக்கும் இடமோ, வழிப்பறிக் காரர் தங்கும் குகை!!

படுத்துத் தூங்க மலர்தூவப்பட்ட படுக்கை!! ஆனால் எந்த இடத்தில்! பாம்புப் புற்றின் பக்கத்தில்!!

இவ்விதமல்லவா இருந்திடும் நமது மக்களுக்குச் சுக மளித்திடும் என்ற நம்பிக்கையில் சொத்துமட்டும் சேர்த்துக் கொடுத்துவிட்டு, நாட்டை நயவஞ்சகர் கொட்ட மடிக்கும் காடாக இருக்கவிட்டுவிட்டால்!

தம்பி! இதுபோலப் பலப்பல எண்ணிடத் தோன்று கிறது, அந்த மாது கூறிய,

> நமது மக்கள் வாழ ஒரு நல்லநாடு கிடைத்திடச் செய்திடுவோம்!

என்ற அருமை மிகு கருத்து,

நாம் வாழும் நாட்டில் நாம் காணும் கொடுமைகளில், அநீதிகளில். ஒரு சிறு அளவினையாகிலும் நாம் நமது அறி வாற்றலால், உழைப்பால், தன்னல மறுப்பால், போக்கிடு வதுதான் நாம் முதல் கடமையாகக் கொண்டிடுவது என்ற நெறி, நடைமுறையாகிடுமானால், தம்பி! உலகு புன் னகைப் பூங்காவாக அல்லவா வடிவம் கொள்ளும்.

ஆனால் மிகப் பெரும்பாலோரின் எண்ணம், தன் வீடு, தன் குடும்பம், தன் மக்கள், அவர்களின் எதிர்காலம் என்ற அளவோடு அல்லவா நின்றுவிடுகிறது.

தன் பிள்ளைகளின் எதிர்காலம் இன்பமுள்ளதாக இருந் திடவேண்டும் என்று எண்ணிக்கொண்டு, காலமெல்லாம் அதற்காகவே கடுமையாக உழைத்துவிட்டு, நிம்மதியான வாழ்வையே கெடுத்திடத்தக்க அக்கிரமபுரியாக நாடு இருந் திடுவதை மாற்றி அமைக்காவிட்டால் என்ன பயன்?

ஒரு தலைமுறை மற்றோர் தலைமுறைக்காக, தனித் தனி இல்லங்கள், செல்வம் என்ற இன்றைய முறை யைக்காட்டிலும், ஒரு தலைமுறை தன் காலத்தில் காணப்படும் கேட்டினைக் களைந்தெறிந்து தன் நாட்டைத் தான் காண்பதைக் காட்டிலும் சிறிதளவேனும் நல்ல நாடு



ஆக்கி அளித்துவிட்டுச் சென்றிடவேண்டும் என்ற முறை எத்துணை நேர்த்தியானது!

பலப்பல எண்ணம் என் மனதிலே மலர்ந்தது தம்பி! அந்த வழக்கறிஞரின் மனைவி கூறிய கருத்தைக் கேட்டு.

தான் மேற்சொள்ளும் காரியத்தைத் தன் மனைவியும் வரவேற்று ஆதரிக்கிறாள் என்பதைத் தவிர மகிழ்ச்சியை யும் எழுச்சியையும் மிஞ்சக் கூடியதாக வேறு எதுவும் இருக்க முடியாதல்லவா!

> என்னமோ போக்கு! வீட்டைக் கவனிக்காமல் குடும்பத்தைக் கெடுத்துக்கொண்டு ஊருக்கு உழைக் கிறாராம் ஊருக்கு!!

என்ற சலிப்பும் வேதனையும் நிரம்பிய 'பேச்சைத் தாங்கிக் கொண்டபடி பொதுத் தொண்டாற்றுவது காதுக்குள் ஓர் வண்டு புகுந்து கொட்டிக் கொண்டிருக்கும் நிலையில், வாட்போரில் ஈடுபட்டு வெற்றிபெற முனைவதற்கு ஒப் பானதாகும்.

ஆனால் நமது கழகத் தோழர்களிலே மிகப் பலர் அத் தகைய பேச்சையும் தாங்கிக்கொண்டுதான் தொண்டாற்று கிறார்கள்.

அளர்களின் தொண்டு மிகச் சிறந்தது என்ற நேர்த் திக்கு உரியதாவதன் காரணமே அதுதான். மாலை நேரப் பூப்பந்தாட்டம்! அல்ல, பொதுத்தொண்டு.

வழக்கறிஞர் ஆபிரகாம்ஸ் தன் துணைவியின் எண்ணம் தூய்மைப்பட்டுவிட்டதனால், புதிய எழுச்சி பெற்றிருக்க வேண்டும்—நிச்சயமாக.

வழக்கு மன்றத்திலே அவர் அதே எழுச்சியுடன் பேசு கிறார்.

வாதத் திறமையால் குற்றச்சாட்டுகளை உடைத் தெறிவது, குறுக்குக் கேள்விகளால் சான்றுகளைப் பிளந் தெறிவது, சட்ட நுணுக்க விளக்கத்தால் வழக்கின் அடித் தளத்தைப் பெயர்த்திடுவது என்ற இவைகளிலே சுவை உண்டு; இந்தச் சுவை கிடைத்திடத்தக்க வழக்குப்பற்றிய ஏடுகள் பல படித்திருக்கிறேன். இந்த ஏட்டிலே என் மனதை மிகவும் ஈர்த்த பகுதி, வழக்கறிஞர் தமது

திறமையை விளக்கிய பகுதி அல்ல; இதயத்தைத் தொட்டிடும் பகுதியே.

தம்பி! டக்ளஸ் டில்மன்மீது நான்கு குற்றச் சாட்டுகள், அவைகளில் ஒன்றுகூட இறுதியில் மெய்ப்பிக்கப்படவில்லை, ஆதாரமற்றவை என்பதால்; இட்டுக் கட்டப்பட்டவை என்பதால்.

அந்தக் குற்றச் சாட்டுகளை உடைத்தெறிவதிலே அல்ல, வழக்கறிஞர் என் மனதைக் கவர்ந்தது.

நான்கு குற்றச் சாட்டுகளை வெறியர் டில்மன் மீது சுமத்தினர், இவரோ, ஐந்தாவது குற்றச்சாட்டு ஒன்றைச் சேர்த்துக்கொண்டார்.

ஐந்தாவது குற்றம்—பட்டியலிலே சேர்க்கப்படாதது—வெளிப்படையாக எடுத்துச் சொல்லப்படாதது—ஆனால் மற்ற நான்கு குற்றச் சாட்டுகளுக்கும் அடிப்படையாக அமைந்திருப்பது—அதுதான் அவர் ஓர் நீக்ரோ என்ற குற்றச் சாட்டு!!—என்று வழக்கறிஞர் ஆப்பிரகாம்ஸ் எடுத்து விளக்குகிறார்; ஆனால் மனதிலே நியாய உணர்ச்சிக்கு இடமளித்திடுவோர் அனைவரும் உருகிடும் நிலை பெறுகின்றனர்.

குற்றம் சாட்டுகிறார்கள்!

யார்? யார்மீது?

வெள்ளையர்! கருப்பர் மீது!

ஏன் குற்றம் சாட்டுகிறார்கள்?

கருப்பன் அரசாள்வதா என்பதால்!

குடிவெறி! காமச் சேட்டை; திறமைக் குறைவு கற்பழிக்க முயற்சித்தது! மகனுக்கு உடந்தையாக இருந்தது! வெள்ளை இனம் என்று ஏய்த்துத் திரியும் மகளுக்குத் தந்தையாக இருப்பது;—இவை குற்றச் சாட்டுகள்,

இவைகள் எப்போது கிளம்புகின்றன? எப்போது கிளப்பப்படுகின்றன! வெள்ளையரின் தலையாட்டிப் பொம்மையாக டில்மன் இருக்க மறுத்திடும்போது!

கிடைத்த பதவிபோதும், சுகபோகம் போதும் என்று இருந்திருந்தால்? வழக்கு எழாது! வாழ்த்துக் கிடைத்திடும். ஆனால் அந்த வாழ்த்திலேகூட விஷம் கலந்திருக்கும்;



கருப்பர் இனத்தவராக இருப்பினும் கண்ணியமாக, திறமையுடன் நடந்து கொண்டார்!

கருப்பு இனத்தவர் கண்ணியமாக நடந்துகொள்ள மாட்டார்கள், திறமையாக நடந்திட மாட்டார்கள், என்ற பொதுவான குற்றச்சாட்டை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

கருப்பு இனத்தில் தவறிப் பிறந்தவர்!

என்ற பட்டம் தரப்படும்; சூட்டிக் கொள்ளலாம்.

இனத்தை இழிவுபடுத்துபவர்; ஏன் என்று கேட்கக் கூடாது. தனி மனிதருக்கு புகழ் தரும் என்று மகிழலாம்!

இந்த நிலையினை உணர்ந்த ஆபிரகாம்ஸ், வழக்கு மன்றத்திலே கூடி டில்மனை ஒழித்துக்கட்ட ஏன் விரும்புகிறார்கள் என்ற இரகசியத்தை அம்பலப்படுத்த முனைந்தார். அதனால்தான், ஐந்தாவது குற்றம் அடிப்படைக் குற்றம்—என்பதுபற்றிப் பேசுகிறார்.

தம்பி! அவருடைய விளக்கத்தில், நூலுடைய தலைப்பு இருக்கிறதே மனிதன் என்ற தலைப்பு-அதனையே எடுத்து ஒரு தத்துவமாக்கிக் காட்டுகிறார்.

மனிதன்! மனிதன்! என்று தம்பி! எல்லோருந்தான் பேசுகிறோம்; என்ன எண்ணிக்கொண்டு பேசுகிறோம்? எண்ணிப் பார்த்திடும்போதுதான் விந்தையான பல உண்மைகள் நமக்குத் தோன்றிடும்.

நானும் மனிதன்தான்!

அவன் ஒரு மனிதனா? எல்லோரும் மனிதர்கள் தானய்யா!

மனிதனுக்கு மனிதன் என்ன வித்தியாசம்?

மனிதனாகப் பிறந்துவிட்டால் போதுமா!

அவன் மனிதன் அல்லய்யா...!

மனிதன் செய்கிற காரியமா இது!

இப்படிப் பல்வேறு நிலைகளில் பல்வேறு முறையாகப் பேசுகிறோம்.

மனிதன் என்றால் என்ன பொருள்?—இது பற்றியே வழக்கு மன்றத்தில் விளக்கம் அளிக்கப் படுகிறது.

பல்வேறு சிந்தனையாளர்கள் தந்துள்ள விளக்கங்களை எடுத்துக் காட்டிவிட்டு, இறுதியாகக் கூறுகிறார்.

மனிதன் மிருகமல்ல!

இதைக் கூடச் சொல்லவேண்டுமா என்று கேட்கத் தோன்றும், தம்பி! ஆனால் நீக்ரோக்களை, 'மிருகம்' என்று கூட அல்ல, 'உடைமை' என்றே அமெரிக்க 'நீதி' மன்றங்கள் கூறியுள்ளன என்பதை மறந்துவிடக்கூடாது.

இங்கு மட்டும் என்ன!! ஜாதியால், பொருளாதார நிலையால் மூட்டப்பட்டுவிடும் வெறுப்பும் கேவல உணர்ச்சியும் ஆட்டிப் படைக்கும் நிலையில் உள்ளவர்கள், தம்மிலும் தாழ்ந்தவர்கள் என்று கருதப்படுபவர்களை மனிதர்களாகவா நடத்துகிறார்கள். மிருகமாக! மிருகத்தை விடக் கேவலமாக!!

டாக்டர் அம்பேத்கார் ஒரு முறை கூறினார், ஒரு உயர் ஜாதி இந்து தன்னுடைய நாயிடம் பரிவு காட்டித் தொட்டு விளையாடுவான், ஒரு தாழ்த்தப்பட்டவனைத் தொடமாட்டான் என்று.

மிருகங்கள் பலஉள; சிங்கம், புலி, நாய், நரி, ஓநாய்!—இப்படி. ஆனால் பித்துப்பிடித்தவனன்றி மற்ற எவனும் மனிதனுக்கும் மிருகத்துக்கும் வித்தியாசம் தெரியாமல் குளறமாட்டான்.

ஆனால் நமது நாட்டிலே சிலர், கருப்பு நிறம் கொண்டவர்களை அந்த நிறம் காரணமாகவே, மிருகம் என்று கூறுவதைக் கேட்டிருக்கிறேன்.

இது மடத்தனம் அல்லது வெறுப்பு என்பதும், இந்த முட்டாள்தனத்தைப் போக்கவல்லது கல்வி அறிவு என்பதையும் உணர்ந்திருக்கிறேன்.

மனிதன்—மிருகம்—இவைபற்றிய விளக்கம் கூறுவதற்காகப் பொறுத்திட வேண்டுகிறேன்; ஆனால் இந்த வழக்கு நடைபெறும்போது இந்த விளக்கத்தை மறந்துவிடாதீர்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.



வழக்கு நடப்பது, நாற்கால் பிராணிமீது அல்ல! ஒரு மனிதன் மீது! உங்களைப்போன்ற ஒரு மனிதன் மீது! அதை மறந்துவிடாதீர்கள்!

நான் குறிப்பிடும் ஐந்தாவது குற்றச்சாட்டு என்னவென்றால் டக்லஸ் டில்மன் நீக்ரோ என்பதை மறந்து அமெரிக்கக் குடி அரசுத் தலைவராக அமருவதற்கு இணங்கினார் அல்லவா, அதுதான்!

நீக்ரோ யார்? முழுமனிதன் அல்லவே! மட்டம்! இரண்டாந்தரக் குடிமகன்! மிருகம்!—அப்படித்தானே நிற வெறியர்கள் கருதுகின்றனர், பேசுகின்றனர்.

நீக்ரோ, முழுமனிதன் அல்ல! ஆகவே அறிவுள்ளவனாக இருக்க முடியாதே! ஆகவே அடக்கி வைக்கப்பட வேண்டியவன்!! இல்லையென்றால், குடித்துவிட்டு உருளுவான், குமரிப் பெண்களைக் கெடுத்திடத் துடிப்பான்!—அப்படித்தானே வெள்ளை இனத்தின் உயர்வுபற்றிய வெறியுணர்ச்சி கொண்டோர் கருதுகின்றனர்.

அப்படிப்பட்ட ஒரு கருப்பன், உயர்ந்த இனமான வெள்ளையர்களையும் சேர்த்து ஆளத்தக்க நினைப்பு கொள்ளலாமா! குடிஅரசுத் தலைவர் ஆகலாமா!! பெரிய குற்றமல்லவா! மன்னிக்கப்பட முடியாத குற்றமல்லவா!

டக்ளஸ் டில்மன் செய்த குற்றம் இதுதான்—அடிமை இனத்தவன் இவன்! ஆளப்பிறந்தவர் வெள்ளையர்! இந்த நியதியை மறந்தானே!! குடிஅரசுத் தலைவன் என்றானானே, அதுதான் அவன் செய்த குற்றம்.

குற்றப் பட்டியலில் அது இல்லை; வெள்ளை வெறியரின் உள்ளத்தில் அதுதான் மேலோங்கி நிற்கிறது.

அந்தக் குற்றத்தை வெளியே கூறக் கூச்சப்பட்டுக் கொண்டு வேறு பலவற்றை இட்டுக் கட்டியிருக்கிறார்கள்.

நான் ஒரு மனிதனுக்காக வாதாடுகிறேன்—மனிதன் மிருகமல்ல என்ற தூய கருத்துக்காக வாதாடுகிறேன்.

தம்பி! வழக்கறிஞரின் இந்தப் பேச்சு உள்ளத்தைத் தொடுகிறது; ஆனால் வெள்ளையர் தலைவர் ஒருவர் வெகுண்டெழுந்து இது வழக்குக்குத் தொடர்பற்ற பேச்சு, விபரீதப் பேச்சு, இதனை மேலும் அனுமதிக்கக் கூடாது என்றெல்லாம் கூறுகிறார். நீதிபதியும், மேற்கொண்டு இது

பற்றிப் பேச அனுமதி கிடையாது என்று அறிவித்துவிடு கிறார்.

மேலும் பேசுவானேன் தம்பி! மனிதன் மிருகமல்ல! அந்த ஒரு வாக்கியமே போதுமே; அதிலே பொதிந்துள்ள பொருள் ஏடுபல் கொள்ளுமே! நல்லவர் உள்ளத்தை உருக் குமே; அதுபோதும்!

மனிதன் மிருகமல்ல! என்பது மட்டும் தம்பி! உலகிலே அதிலும் குறிப்பாக 'உயரிடங்களிலே' ஒப்புக் கொள்ளப் பட்டுவிட்டால்!

மனிதன், மிருகமல்ல! என்பது மட்டும், அது எல்லாச் செயல்களுக்கும் அடிப்படையாக அமைந்துவிட்டால்!!

மனிதன், மிருகமல்ல! இதனை மட்டும் ஆட்சியாளர் கள் உணர்ந்துவிட்டால்!

நாடு, காடு ஆகிடாது! நல்ல நாடு கண்டிடலாம்.

தம்பி! வழக்கிலே டில்மன் குற்றமற்றவர் என்பது மெய்ப்பிக்கப்படுகிறது என்பதுபற்றியும், தன்னைக் கற் பழிக்க முயன்றதாகக்குற்றம்சாட்டிய சாலி வாட்சன் எனும் மாது, உண்மையை எடுத்துரைத்து, டில்மன்மீது ஏற்றப் பட்ட பழியைத் துடைத்திட்டாள் எபன்தையும் முன்பே குறிப்பிட்டுக் காட்டினேன்; நினைவிலிருக்கும் என்று நம்பு கிறேன்.

வழக்கு முடிகிறது; டில்மன் குற்றமற்றவர் என்ற தீர்ப்புக் கிடைக்கிறது; வழக்கறிஞரும் அவர் போன்றோரும் மகிழ்கின்றனர்; குடி அரசுத் தலைவர் டில்மன் தமது 'கடமை'யைக் கவனிக்கச் செல்கிறார் என்ற முறையில் ஏடு முடிகிறது.

ஏடு, ஒரு நல்ல முடிவைக் காட்டுகிறது. நாடு? அது பற்றித் தம்பி! எண்ணிப் பார்த்திடத்தான் இவ்வளவும் சொல்லிவைத்தேன்.

அண்ணன்,

17—4—'66



காஞ்சிக் கடிதம் : 59

# கணக்குத் தீர்க்கும் காலம்!

★ கோபம், பலக்குறைவின் அறிகுறி!

★ காமராசருக்கு இந்திராவால் தொடர்ந்து குட்டுகள்!

★ வலதுசாரிகள் முடிவை மாற்றிக்கொள்ளத் தயங்கார்!

★ காமராசருக்கு அச்சம் – எதிர்க் கட்சிகளின் உடன்பாட்டால்!

தம்பி,

தேர்தல் நெருங்க நெருங்கக் காங்கிரஸ் தலைவர் காம ராஜரின் கோபம் வளர்ந்து வருகிறது, வார்த்தைகளிலே கடுமையும் தொனியிலே மிரட்டலும் மிகுதியாகிறது. சில ஆண்டுகளாகவே அவரிடம் தொத்திக்கொண்டுவிட்ட 'எல்லாம் நானே!' என்ற போக்கு இப்போது உச்சக்கட்டம் சென்றிருக்கிறது. எனக்கு அதிலே ஒருவிதமான மகிழ்ச்சி, ஏனென்றால், இதற்குமேல் போவதற்கு இல்லை! ஆகவே, கீழே சரிந்தாகவேண்டும்! அவர் அல்ல! அவருடைய போக் கிலே காணப்படும் முடுக்கு!

'கோபம் பலவீனத்தின் அறிகுறி' என்று காந்தியார் கூறினார். அவர்தான் போய் விட்டாரே, இனி அவர் 'உப தேசம்' பற்றியா கவலைப்படப் போகிறார்கள்—அவர் பெயர் கூறிப் பெரியவர்களாகிவிட்டவர்கள்,

அவருக்குச் சிலைகள் அமைத்திருக்கிறோம். அவர் பெயரில் நகர்கள், நெடுஞ்சாலைகள், பூங்காக்கள், பவனங்கள், கல்விக் கூடங்கள், பிரார்த்தனை மண்டபங்கள் அமைத்திருக்கிறோம். 'போதாதா எமக்குள்ள பக்தியைக்காட்ட என்று கேட்பார்கள் அவர் 'பேச்சை'த் துச்சமென்று தள்ளிவிட்ட தூயவர்கள்.

கோபம், பலக்குறைவின் அறிகுறி என்பதனை எவரும் மறுப்பதில்லை; மறுப்பதற்கில்லை. 'கோபம், அடக்கமுடியாத ஆசையை நிறைவேற்றிக் கொள்வதிலே தடை ஏற்பட்டு விடும்போது பன்மடங்கு அதிகமாகிவிடுகிறது. காமராஜர் அந்த நிலையால் நெளிகிறார்; ஆகவேதான் அத்தனை ஆத்திரத்தைக் கொட்டிக் கொண்டிருக்கிறார்.

அதிலும், மிகவும் வேண்டியவர்கள், தனக்குக் கட்டுப்பட்டவர்கள், தம்மால் உயர்நிலை சென்றவர்கள், தன் பேச்சைத் தட்டி நடப்பது மட்டுமல்ல, தன் பேச்சு பொருளற்றது, பயனற்றது, பொருட்படுத்தத் தக்கதல்ல என்று வெளிப்படையாகவே கூறிடுவதைக் கேட்கும்போது, அவருக்கு—பெரியவருக்கு!—கோபம் கோபமாகத்தானே வரும்! அந்தக் கோபத்தை யார்மீது காட்டுவது? எதிர்க்கட்சிகள் மீது!! காட்டுகிறார்!!

அமெரிக்காவின் உதவியைப் பெறுவதற்காக, அந்த நாட்டு ஆட்சியாளர்கள் நீட்டிடும் காகிதத்தில் காட்டிடும் இடத்தில் கையெழுத்திடுவது, அடிமை முறிச் சீட்டிலே கையொப்பமிடுவதற்கு ஒப்பாகும்.

பலர் இந்தக் கருத்தினைக் கூறினர்; கூறி வருகின்றனர். பேரரசினை நடத்திச் செல்பவர்கள் தந்திடும் சமாதானம், விளக்கம், வாதத்திறமைக்கு எடுத்துக்காட்டாக அமைகிறது; ஏற்பட்டுவிட்ட அய்யப்பாட்டை நீக்குவதாக இல்லை.

அய்யப்பாடும் அருவருப்பும் கொண்டுள்ளவர்களில் பெரியவரும் ஒருவர்.

உரத்தொழிற்சாலை சம்பந்தமாக அமெரிக்காவிடம் இந்தியப் பேரரசு செய்துகொண்டுள்ள ஒப்பந்தம் அக்கிரமமானது, அநீதியானது, சோஷலிசக் கொள்கைக்கு ஊறு தேடுவது என்பது காமராஜரின் கருத்து.



இந்தக் கருத்தினை அவர் ஜெய்ப்பூரில் வெளியிட்டார்.

கை தட்டினர்; வரவேற்றனர்; யார் தவறான வழி சென்றாலும், பெரியவர் தடுத்து நிறுத்துவார் என்று பாராட்டினர்.

இந்திராகாந்தி அம்மையார் அமெரிக்கா சென்றார்களல்லவா—வசந்தம் கண்டேன்! என்று மகிழ்ந்து அறிவித்தார்களே!!—அப்போது. கேட்டார்கள் அவர்களை, காமராஜரின் கருத்துபற்றித் தாங்கள் என்ன கருதுகிறீர்கள் என்று.

அவர் கருத்தை நான் ஏற்றுக்கொள்ளவில்லை

என்று அம்மையார், சுருக்கமாக,ஆனால்,சுரீல் என்று படும்படி, பதில் கொடுத்தார்கள்!

கேள்வியை எழுப்பியவர்கள் அந்தப் பதிலைக் கேட்டபோது, எந்தவிதமான 'தோற்றம்' காட்டினரோ தெரியவில்லை; ஆனால், எளிதிலே புரிந்துகொள்ளலாமே!!

என்ன இருந்தாலும் இப்படிக் குட்டி இருக்கக் கூடாது.

என் தலைவர்! என் வழிகாட்டி! என்று இங்கே 'பஜனை' செய்வது; அங்கே போய் அவர்கருத்தை நான் ஏற்றுக்கொள்ளவில்லை என்று அத்தனை அலட்சியமாகச்சொல்லுவது! இதுவா தலைவரிடம் கொண்டுள்ள 'மதிப்பு'க்கு அடையாளம்!

என்ன எண்ணிக்கொள்வார்கள் அமெரிக்கர்கள் தலைவரைப்பற்றி! அவர் எதையோ பேசுவார்! ஆனால் அவர் பேச்சை ஆட்சி நடாத்தும் அம்மையார் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்! அவ்வளவுதான் அவருக்கு உள்ள 'பிடி'யின் இலட்சணம்! என்றெல்லாம் கேலி பேசமாட்டார்களா!

பச்சையாகச் சொல்வதானால், தலைவரின் முகத்தில் கரி பூசிவிட்டார் என்றுதான் தெரிகிறது!

காட்டிக் கொடுத்துவிட்டார் என்று சொல்ல வேண்டும்.

இவ்விதமெல்லாம் பேசிக் கவலைப்பட்டிருப்பர் 'துதி பாடகர்கள்,

அவருக்கு மட்டும் என்ன மனத்திலே கோபம்எழாமலா இருந்திருக்கும். கொட்டிக் காட்ட 'இடம்' பார்த்தபடி இருந்திருக்கிறார்; எதிர்க்கட்சி மீது கொட்டுகிறார்.

எதிர்க் கட்சிகள்மீது பாயும்போது காட்டும் ரோஷ உணர்ச்சியிலே நூற்றிலே ஒருபங்கு பயன்படுத்தியாவது, அம்மையாரைப் பார்த்து, மரியாதையாக, ஆனால், உறுதியாகக் கூறியிருக்க வேண்டாமா,காமராஜர்—

தாங்கள் அமெரிக்காவில் என் கருத்தைப் பற்றி அவ்வளவு அலட்சியமாகப் பேசி இருந்திருக்கக்கூடாது என்று.

கூறினாரா! இல்லை! ஏன்? அம்மையார் மேலும் என்னென்ன சொல்லிவிடுவார்களோ என்ற அச்சந்தான்! வேறென்ன?

எரிச்சலை அடக்கிக்கொண்டார்; மனம் குமுறியபடி இருந்தது.

'பஞ்சாபி சுபா'— 'வங்காளக் கலவரம்' போன்ற மிக முக்கியமான நிகழ்ச்சிகளை ஒட்டி அம்மையார் முடிவுகளெடுத்தபோது பெரியவர் நெடுந்தொலைவிலே நிறுத்தி வைக்கப்பட்டுவிட்டார்! மனம் படாதபாடு பட்டிருக்கத் தானே செய்யும்!!

பஞ்சாபி சுபா அமைக்கும் காலம்வரையில் பஞ்சாபில், குடிஅரசுத் தலைவரின் ஆட்சி ஏற்படுத்தப் படுவதைத்தான் விரும்புகிறேன்;என் சொந்தக் கருத்து அதுதான் என்று காமராஜர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்

அம்மையாரும் உடனுள்ள அமைச்சர்களும் கூடிப் பஞ்சாபில் இப்போதுள்ள 'மந்திரி சபை'யே நீடிக்கட்டும்;குடி அரசுத் தலைவரின் நேரடி ஆட்சி வேண்டாம் என்று முடிவு செய்து அறிவித்து விட்டனர்.

இவ்விதம் தொடர்ந்து குட்டுகள்; குடைச்சல்கள்!அதன் பயனாக ஏற்பட்ட மனக் குமுறல், காமராஜரை எதிர்க்கட்சிகள் மீது பாயச் செய்கிறது.

பட்டாளம் வந்துவிடும் என்று பயம் காட்டினார்!

அவருடைய இந்தப் பேச்சை, கவனிக்கத் தக்கதாகக் கூட அம்மையாரும் மற்ற அமைச்சர்களும் கருத மறுத்துவிட்ட



னர். எதையாவது பேசிக்கொண்டிருப்பார்; பேசிக்கொண்டிருக்கட்டும் என்று இருந்து விட்டனர்.

இந்த அளவு அலட்சியப்படுத்தி இருந்திருக்க வேண்டியதில்லை என்று பலரும் பரிதாபப்படத்தக்க முறையிலே பிரதம மந்திரியார் நடந்துகொண்டார்!

காமராஜரின்'பட்டாளப்'பேச்சை அறிவாளர்கள் பலமாகக் கண்டிக்கலாயினர்; இதழ்கள் கண்டித்தன. கோபம் கிளம்பி இருக்கவேண்டுமே! காணோம்! ஏன் கண்டனத்துக்கு மறுப்புக் கூறக் கிளம்பி, மேலும் எதை எதை வாங்கிக் கட்டிக் கொள்ள வேண்டி வந்துவிடுமோ என்ற அச்சம்! அந்தப் பேச்சை அந்த அளவோடு விட்டுவிட்டார்!!

பேசாமலும் இருக்க முடியவில்லை.

பேசினாலும் மாட்டிக்கொள்ள வேண்டி வந்துவிடுகிறது!

'ஆகட்டும் பார்க்கலாம்' என்ற பாணியோடு நின்றிருக்க வேண்டும்!

மேலால் சென்றதுதான் இத்தனை சங்கடத்துக்கும் காரணம்!

என்றெல்லாம் அவர் எண்ணிக்கொண்டிருந்திருப்பார். எடுபிடிகள் விடுமா!எமது தலைவர் ஏன் அவ்விதம் சொன்னார் என்றால் என்று துவங்கி ஏழும் ஏழும் பத்தடா! இதை இல்லை என்பான் யாரடா!! என்று பாடிடும் பாணியிலே பேசிடக் கேட்கிறோம். அவர் ஒருமுறை பேசியதுடன் நிறுத்திக் கொண்டுவிட்டார்.

இப்போது மற்றோர் 'கரடி'யை ஓட்டி வந்து காட்டுகிறார்.

வெளிநாடுகள் பணம் தருகின்றனவாம், இங்குள்ள எதிர்க் கட்சிகள் சிலவற்றுக்கு. எதிர்க் கட்சிகள் சில தேர்தலிலே செலவிடும் பணத்தின் அளவைப் பார்க்கும்போது, தனக்கு அவ்விதம் தோன்றுகிறதாம்.

இவ்விதம் கூறியதும் நாட்டு மக்கள் பதைபதைத்து, துடிதுடித்து, கொதித்தெழுந்து எதிர்க்கட்சிகளைச் சாடுவர் என்று பெரியவர் எண்ணிக் கொண்டு இந்தக் 'கரடியை' ஓட்டிக் காட்டுகிறார்,

விவரமறிந்தவர்கள் கைகொட்டிச் சிரிக்கிறார்கள்; இது எத்தகைய விந்தையான அரசு! துப்பறியும் இலாகாவும், போலீசும், சுங்கத் துறையும் வெளிநாட்டுத் தூதரகங்களும், கொள்ளை கொள்ளையாகப் பணத்தை மென்று தின்று கொண்டிருக்க, அத்தனை வளையங்களையும் மீறி வெளி நாட்டுப் பணம் இங்கே வந்திட எப்படி முடிந்தது! இவ்வளவு தானா இந்த அரசுக்கு உள்ள திறமை! கையும் பிடியுமாகப் பிடித்துக் காட்ட வல்லமையற்று, வக்கற்று, வழியற்று இருந் திடலாமா! பணம் அனுப்பும் வெளிநாடுகள் யாவை? எந்தக் கட்சிகளுக்குத் தருகின்றன? ஏன் என்ற விவரத்தைக் கண்ட றிந்து, குற்றவாளிகளை அம்பலப்படுத்தாமல், பொறுப்பிலே உள்ளவர்கள் இப்படியா பேசுவது; மூன்று முழ நீளமுள்ள குதிரைக் கொம்பை ஆறு பொதி அளவுள்ள அத்திமலர் கொடுத்து வாங்கினேன் என்ற முறையிலா பேசுவது?

வெளிநாடுகள் பணம் தருவது, குற்றம்! மன்னிக்கப் படமுடியாத குற்றம்.

வெளிநாடுகளிடம் கட்சிகள் பணம் வாங்குவது மாபெருங்குற்றம்; தேசத்துரோகக் குற்றம்.

அப்படிச் சில கட்சிகளுக்கு வெளிநாடுகள் பணம் கொடுக்கின்றன என்று தோன்றுகிறது என்று பேசி விட்டு அதைக் கண்டுபிடிக்காமல் இருப்பது, பொறுப் புள்ள சர்க்காராக இருக்க முடியாது.

அத்தகைய போக்கிலே ஒரு சர்க்கார் இருப்பது அந்த நாட்டுக்கே அவமானம்!

இது வெறும் தேர்தல் தந்திரப் பேச்சு தானே!! என்று இடித் துக் கேட்கிறது மெயில் இதழ்.

தெளிவும் துணிவும், திறமையும் பொறுப்பும் வல்ல மையும் பண்பும் இருப்பது உண்மையானால் எந்தெந்த வெளிநாடுகள் எந்தெந்தக் கட்சிகளுக்குத் தேர்தல்செல வுக்காகப் பணம் தந்துள்ளன என்ற விவரத்தைக் காம ராஜர் வெளியிட வேண்டும்; தயக்கமின்றி; அச்சமின்றி; வெளியிடுவாரா!!

வெளிநாடுகள் பணம் தருவதாகத் தோன்றுகிறது; ஆனால், விவரம் தெரியவில்லை: கண்டுபிடிக்க முடியவில்லை என்று கூறுவதாயின், இத்தனை பெரிய இடத்தில் இருந்துகொண்டு விவரமறியாமல், விளக்க முடியாமல் பேசுவது கேட்டு அறி



வாளர் கைகொட்டிச் சிரிப்பார்கள்! வெளிநாடுகளும் இந்த அரசுபற்றியும் நடத்திடும் தலைவர்கள்பற்றியும் மிகக்கேவல மாகக் கருதிக்கொள்வார்கள்.

ஏன் அதுபோலப் பேசினார் காமராஜர்? தேர்தலைப் பற்றிய திகில்! என்ன நேரிட்டுவிடுமோ என்ற அச்சம்! கணக் குக் கேட்கும் காலம் வருகிறதே என்ற கலக்கம்.

கோடிகோடியாகப் பணத்தைக் கொட்டிக் குவித் தாலும், ஏமாற்றப்பட்டுப்போயுள்ள மக்களின் மனக் கொதிப்பை அடியோடு போக்கிவிடமுடியாது; அவர்கள் தமக்கு இழைக்கப்பட்டுள்ள கொடுமைகளுக்காகப் பழிதீர்த் துக்கொள்ளக் கிளம்புவதைத் தடுத்து விட முடியாது என்று காமராஜர் உணருகிறார்.

காங்கிரசுக் கட்சியில் உள்ள பணக்காரர்களை எண்ணிப் பார்த்திடும்போது, ஒருவிதமான தைரியம் வருகிறது. என் றாலும், எந்தப் பக்கம் திரும்பினாலும், வறண்ட தலைவி னர், இருண்ட கண்ணினர், கூனிக்கிடப்போர், கொத் தடிமை செய்தும் வாழ்க்கை பொத்தல் இலைபோன்றா கிடக்கண்டு வதைபடுவோர், இல்லாமை கொட்டுவதால் துடிதுடித்துக் கிடப்போர் என்போர்களே தெரிகின்றனர். அவர்களின் கண்கள் கேள்விக்குறிகளாகி விட்டிருப்பதையும் காண்கிறார்! இந்தப் புயலைச் சமாளிக்கப் பணத்தால் ஆகுமா என்று எண்ணுகிறார்; திகைக்கிறார்.

காங்கிரசுக் கட்சியை எதிர்க்க முனையும் கட்சிகளைக் காட்டுப்போக்கில் தாக்கிப்பேசினால் அச்சத்தால் அடங்கி ஒடுங்கிப் போவார்களா என்று பார்க்கிறார்; பலிக்காதது கண்டு பதைக்கிறார்.

ஒரே ஒரு தைரியம் அவருக்கு! காங்கிரசுக்கு எதிர்ப்பு நிரம்ப இருக்கிறது; பல முனைகளிலிருந்து, பல்வேறு முகாம்களிலிருந்து!

ஒரு கணம் மிரட்சி ஏற்படுகிறது, இத்தனை முகாம் களிலிருந்தா எதிர்ப்பு என்று! மறுகணமோ மகிழ்ச்சி துளிர்க்கிறது; பலமான எதிர்ப்புதான், ஆனால், பல முகாம்கள்!! ஒரே அணியில் இல்லை! பல அணிகள்! பல் வேறு போர் முறைகள்!! எனவே, பிழைத்துக் கொள்ளலாம் என்ற தைரியம் பிறக்கிறது.

நாட்டுக்கு விடுதலை கிடைத்திட வேண்டும் என்ற ஒரே நோக்கத்தின் அடிப்படையில் அறுபதுஆண்டுகளுக்கும் மேலாகப் பணியாற்றிய காரணத்தால் இந்தியா முழுவதற் குமாக காங்கிரஸ் எனும் அமைப்பு பரவி வளர்ந்திட முடிந் தது.

இன்று வளர்ந்துள்ள எதிர்ப்புகள் அதுபோல ஒரே முகாமாக வடிவம் கொள்வது எளிதான காரியமல்ல.

எனவே, இந்த முகாம்களுக்குள் மோதுதலை மூட்டி விட்டால், மூலபலம் முறிந்துவிடும் என்பது காமராஜரின் கணக்கு!

ஆனால், நாடு இன்று பூண்டுள்ள போர்க்கோலத்தைப் பார்க்கும்போது இந்தக் கணக்கும் பொய்த்துப் போய்விடும் என்றே தோன்றுகிறது.

காங்கிரசுக்கு எதிர்ப்பாக உள்ள கட்சிகள் பல; அவை களிலே ஒன்றை ஒன்று பகைத்துக் கொள்ளும் நிலையும் இருந்திடக் காண்கிறோம்.

ஒவ்வொரு கட்சிக்கும் ஒரு இயல்பு, திறமை, வரலாறு, வாய்ப்பு, வலிவு; கொள்கை, திட்டம் இருந் திடக் காண்கிறோம்.

ஆனால், இவை யாவும், தனித்தனியாகத் தத் தமது கொள்கைகளை எடுத்துக் கூறிடுவதுடன், காங் கிரசின் எதேச்சாதிகாரப் போக்கைக் கண்டிப்பதிலும், காங்கிரசு ஆட்சி நீக்கப்படவேண்டும் என்பதை வலி யுறுத்துவதிலும் ஒன்றுபட்டு நிற்கின்றன.

மொத்தத்தில் நாட்டு மக்களிடம் காங்கிரசாட் சிக்கு எதிர்ப்பான உணர்ச்சி பெரிய அளவிலே கொழுந்துவிட்டு எரிகிறது.

எல்லா எதிர்க்கட்சிகளும் எடுத்துக் கூறுவதிலிருந்து, காங் கிரசாட்சி மாற்றப்பட்டாகவேண்டும் என்ற எழுச்சியை மக்கள் பெறுகிறார்கள்; முதலில்! பெறுவதால் காங்கிரஸ் கட்சிக்கு இம்முறை 'ஓட்டு' அளிக்கக்கூடாது என்ற உறுதி பெறுகிறார்கள்.

இந்த உறுதி பெற்ற பிறகு காங்கிரசை வீழ்த்த, இன்றுள்ள எதிர்க்கட்சிகளில், எதற்கு வலிவும் வாய்ப்பும் போதுமான அளவு இருக்கிறது என்ற எண்ணம் பிறக்கிறது,



அத்தகைய வலிவும் வாய்ப்பும் உள்ள கட்சி எது என்று கண்டறிந்ததும், அந்தக் கட்சியிடம், தமக்கு நலன் தரத் தக்க கொள்கையும் திட்டமும் இருக்கிறதா என்று பார்த் திட முனைவர். அதிலே பொதுமக்கள் மனத்திற்கு நிறைவு ஏற்படின் அந்தக் கட்சியினை ஆதரிப்பர்.

தம்பி; இந்த முறையில் பொதுமக்கள் நமக்குத் தந்த வாக்குகளின் எண்ணிக்கைதான், சென்ற தேர் தலின்போது 34 இலட்சம்.

சென்ற தேர்தலின்போது இருந்தது போலவே இப்போதும் காங்கிரசை எதிர்க்கும் கட்சிகள் பல முகாம்களாக உள்ளன என்ற போதிலும்,

சென்ற தேர்தலைவிட இம்முறை, கட்சிகளுக்குள் 'உடன்பாடு' பெருமளவு ஏற்பட்டுத்தீரும் என்பதற் கான அறிகுறிகள் பளிச்சிட்டுக் கொண்டுள்ளன.

வலதுசாரிகள் நம்மோடு 'ஒட்டுஉறவு' கொள்ளப்போவ தில்லையாமே, அண்ணா! அப்படி இருக்கக் கட்சிகளுக்குள் உடன்பாடு இம்முறை சென்ற முறையைவிட அதிக அள விலே இருக்கும் என்று எப்படிக் கூறலாம் என்று கேட் கிறாயா, தம்பி! காரணத்தோடுதான் கூறுகிறேன்.

வலதுசாரிகள் நம்மோடுதான் உடன்பாடு செய்து கொள்ள மறுக்கிறார்கள். ஆனால், அவர்களும் 'உடன் பாடு' தேவை என்பதை உணர்ந்து, இடதுசாரிகள், சோஷியலிஸ்டுகள், தமிழரசுக் கழகம் ஆகிய அமைப்பு களுடன் கலந்து பேச விழைகிறார்கள்.

நான் இந்த 'விழைவை' வரவேற்கிறேன். பத்துப் பதி னைந்து முகாம்கள், ஒரே முகாமாக அமையா விட்டாலும் பத்துப் பதினைந்தாகவே இருக்கப் போவதில்லையல்லவா? மூன்று அல்லது நான்கு முகாம்களாகும் போலத் தோன்று கிறது.

அந்த அளவுக்கு நிலைமை உருவெடுத்தால் கூட வரவேற்கத் தக்கதுதான்.

எடுக்கப்பட்டுள்ள முடிவு, இறுதி முடிவு என்று நான் கருத வில்லை.

ஆந்திர வலதுசாரித் தலைவர், எவருடன் கூடியேனும் காங்கிரசை வீழ்த்தவேண்டும் என்ற கருத்துடன் இருப்ப தாக இதழில் கண்டேன்.

இந்த எண்ணம் வளர்ந்து, இன்றைய முடிவு மறு வடிவம் கொள்ளக் கூடும் என்பதிலே எனக்கு நம்பிக்கை இருக்கிறது.

சென்ற தேர்தலின்போது, சுதந்திரக் கட்சியுடன் உடன் பாடு செய்து கொள்வது, தமது தூய்மையைக் கெடுத்து விடும் என்று பேசிவந்த கம்யூனிஸ்டு நண்பரொருவர், தேர்தல் நெருங்க நெருங்க, மாநில மட்டத்திலிருந்து மாவட்ட மட்டத்திற்கு வந்து, அதிலிருந்து கடைசியில் 'தொகுதி' மட்டத்துக்கு வந்தார். நினைவில் இருக்கிறது! நிலைமையை உணர உணர, முடிவுகள் திருத்தி அமைக்கப் படும்.

சுதந்திரக் கட்சியுடன் 'உடன்பாடு' செய்து கொள்ள முடியாது—அவர்களை ஆதரிக்க முடியாது—என்று திட்ட வட்டமாகத் தெரிவித்துவிட்ட கம்யூனிஸ்டுகள்—சுதந்திரக் கட்சியுடன் 'உடன்பாடு' செய்து கொண்ட 'பார்வார்டு பிளாக்குடன்' 'உடன்பாடு' செய்துகொண்டு, ஒத்துழைப்பு நல்கினர். நல்லவர்கள் தம்பி! அவர்கள்! அவர்கள் அவ்வப் போது எடுக்கும் முடிவுதான் இறுதி முடிவு என்று எண்ணிக் கொள்ளாதே, மாற்றிக்கொள்ளத் தயக்கம் காட்ட மாட்டார்கள்!

இதழில் பார்க்கிறேன், சோவியத் ரஷியாவில் கம் யூனிஸ்டு கட்சி பற்றிய ஒரு செய்தியை.

மே தினம் வருகிறதல்லவா, தம்பி! அன்று உலக நாடுகள் பலவற்றுக்கும் வாழ்த்து வழங்க, எந்த முறையில், எந்த வடிவத்தில், எந்தக் காரணம் காட்டி வாழ்த்து வழங்குவது என்பது பற்றி சோவியத் கம்யூனிஸ்டு கட்சியின் மத்தியக் கமிட்டி கூடி 111 வாழ்த்துகளைத் தயாரித் துள்ளது.

அதிலே ஒன்று, சோவியத் ரஷியாவும் அமெரிக்கா வம் மேலும் விரிவான முறையில் ஒத்துழைக்க வேண்டும் என்பதாகும்!

ஆமாம், தம்பி! யாராவது வலதுசாரி மயக்கமடித்து விழப்போகிறார்; ரஷியாவும் அமெரிக்காவும் விரிவான



முறையிலே ஒத்துழைக்க வேண்டும் என்பதுதான் வாழ்த் தோவியம்!

முதலாளித்துவத்தை வெட்டி வீழ்த்திக் குழிதோண்டிப் புதைத்து, அந்தப் புதைகுழிமீது புதுமைப் பூங்காவை அமைத்து, அங்கிருந்து கிளம்பும் சமதர்ம மணத்தை அவனியெங்கணும் பரவிடச் செய்திடும் பாட்டாளியின் அரசாம் சோவியத் ரஷியாவா, உலக முதலாளித்துவ முகாமாகவும், சோஷியலிசத்தை ஒழிக்கச் சதி நடத்தும் பாசறையாகவும் உள்ள அமெரிக்காவுடன் ஒத்துழைக்க வேண்டும்! புனிதமிகு மேதினத்திலா இந்தப் பேச்சு! ரஷியக் கம்யூனிஸ்டு கட்சியிடமிருந்தா! ஐயகோ! அக்கிரமம்! அக்கிரமம்! அடுக்காது இந்த அநீதி!! என்றெல்லாம் துடி துடித்திடுவதில் பயன் இலலை என்பதைக் கூறிடு, தம்பி! அமெரிக்காவுடன் விரிவான முறையில் ரஷியா ஒத்துழைக்க வேண்டும் என்ற வாழ்த்து தயாராகிறது.

அமெரிக்க-ரஷிய ஒத்துழைப்பு, எதற்கு? ஒரு குறிப்பிட்ட காரியத்துக்காக. உலகிலே புதியதோர் போர் மூண்டிடாமல் தடுத்திட!

அமெரிக்கா தனியுடைமைத் தத்துவத்துக்கும் ரஷியா பொதுவுடைமைத் தத்துவத்துக்கும் கட்டுப்பட்டவையே.

அந்த அடிப்படையிலே விட்டுக் கொடுப்பது, பணிந்து போவது, வளைவது, நெளிவது இல்லை.

பொதுவுடைமை மூலமாகவே மனிதகுலம் மாண்பு பெற முடியும் என்ற தத்துவத்தை ரஷியா இழக்க வில்லை; மறக்கவில்லை; வற்புறுத்தத் தவறப் போவதுமில்லை.

ரஷியாவுடன் விரிவான அளவிலே ஒத்துழைப்ப தால், அமெரிக்கா பொதுவுடைமைத் திட்டத்தை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை.

ஆனால், அந்த இரு நாடுகளும், உலகிலே போர் மூண்டிடாதிருக்கச் செய்யும் புனிதப் பணியில் ஒத்து ழைக்க முனைகின்றன.

தம்பி! சுதந்திராவுடனா...! என்று கோபம் கொப்பளிக்கும் நிலையினில் கேட்கின்றனரே, அவர்கள் ரஷியா காட்டிடும் பாடத்தையுமா, என்மீது உள்ள கோபத்தால் மதிக்க

மறுக்கவேண்டும்! வேடிக்கையாகத்தான் இருக்கிறது, அந்தப் போக்கு!

இட்லரின் கொடுமையை ஒழிக்க அமெரிக்க ரூஸ்வெல்டும், சோவியத் ஸ்டாலினும், பிரிட்டிஷ் சர்ச்சிலும் ஒன்று கூடினர்; ஒரு குறிப்பிட்ட காரியத்துக்காக; நோக்கத்துக்காக.

அதனை உலகமே வியந்து பாராட்டத் தக்க ராஜதந்திரம் என்று கூறினர், அரசியல் துறை வித்தகர்கள்.

காங்கிரஸ் எதேச்சாதிகாரத்தை வீழ்த்தப் பிற கட்சிகளுடன் செய்துகொள்ளும் 'உடன்பாடு' பற்றி அதிர்ச்சி கொள்வோர், இந்த மூவர் முகாம் பற்றிய வரலாறு பற்றி ஏன் சிந்திக்கக் கூடாது!

தம்பி! இதனை விரிவாக எழுதுவது, அவர்களை, கண்ணே! வா! வா! கண்மணியே! வா! வா!! என்று அழைத்திட அல்ல. அவர்களேதான் தமது போர்முறையை வகுத்துக் கொள்ள வேண்டும். நான் இதுபற்றி எழுதுவதன் காரணம், காமராஜர் இந்த 'உடன்பாடு' பற்றிப் பேசி வருகிறாரே, அதுபற்றி விளக்கிடத்தான்.

காங்கிரசை எதிர்க்கும் சக்திகள் 'உடன்பாடு' செய்து கொள்வது அவருக்கு அச்சமூட்டுகிறது.

அதன் காரணமாகவே அவர் ஆத்திரப்பட்டுப் பொருளற்றனவற்றைக்கூடப் பேசிக்கொண்டு வருகிறார்.

அண்ணன்,

24—4—'66

அண்ணாதுரை

காஞ்சிக் கடிதம் : 60

# கண்ணீர் பொங்கும்...

★ காரணம் கூறா நாடகம்!

★ வளரா நாடு வளர்ந்த நாட்டிடம் கடன் வாங்கலாம்!

★ கடனுக்குமேல் கடன் வாங்குவது ஆபத்து!

★ அமெரிக்கா கடன்தரக் கேட்டிடும் தகவல்கள் என்னென்ன?

தம்பி,

ஒரு சிறு நாடகம் காண்கிறாயா? நாடகம் அளவிலேதான் சிறியது; அதிலே பின்னப்பட்டிருப்பவர்கள் பெரியவர்கள்! பெரிய இடத்து விவகாரம் என்றுகூடச் சொல்லலாம்.

நாட்டிலே நடப்பனவற்றிலே இதுவும் ஒன்று என்று ஒப்புக்கொள்வாய், நாடகத்தைப் படித்ததும்.

நடப்பதைத்தான் நான் தீட்டியிருக்கிறேன்; ஏன் அவ்விதம் நடந்தது என்பது பற்றி நீயே எண்ணிப் பார்த்துக் கொள்ளவேண்டும் என்று விட்டுவிட்டிருக்கிறேன்.

மலர்கள் இங்கும் அங்கும் நிறையச் சிதறிக் கிடந்தன—என்று கூறினால், ஏன் என்பது பற்றி எண்ணிப் பார்த்தால், என்னென்ன தோன்றும்?

கடுங்காற்று வீசி மலர்கள் சிதறி இருந்திருக்கக்கூடும்.

மந்திபுகுந்து மலர்களைப் பறித்துப் பாழாக்கிப் போட்டிருக்கக்கூடும்.

காதலர்களின் ஊடலின் விளைவால் ஏற்பட்டதாக இருக்கக்கூடும்.

படமெடுப்பதற்காகச் சினிமாக்காரர்கள் அந்தத் தோற்றத்தை உண்டாக்கி இருந்திருக்கலாம்.

இதுபோல ஏதோ ஒரு காரணம் மனத்திலே தோன்று மல்லவா—மலர்கள் சிதறிக் கிடந்தன என்று கூறினது கேட்டால். அதுபோல, நாடகத்தில் உள்ள நிகழ்ச்சிகளைக் கண்டதும், அதற்கான காரணங்கள் என்னவாக இருக்க முடியும் என்று எண்ணிப் பார்த்திட முடியும். சுவையும் மிகுதி; பயனும் உண்டு. ஆகவேதான் தம்பி! நிகழ்ச்சிகள், நிலைமைகள் ஆகியவைகளை மட்டும் தந்துள்ளேன்; காரணம்பற்றி ஏதும் கூறவில்லை. இனி நாடகம் கண்டிடுவாய்.

## -[1948]-

இடம்: மங்களவிலாஸ் கூடம்.

இருப்போர்: மங்களபுரி மைனர், மானேஜர் மந்திரமூர்த்தி, பணியாள் பெருமாள்.

நிலைமை: மங்களபுரி மைனர் சோர்வாகச் சோபாவில் சாய்ந்து கொண்டிருக்கிறார். பணியாள், கால்களைப் பிடித்துக்கொண்டிருக்கிறான். மானேஜர் சிறு குறிப்புப் புத்தகத்தைப் புரட்டிக் கொண்டிருக்கிறார்.

மைனர்: நம்ம ஜெமீனிலே இதுவரை இல்லாத வழக்கமாக இருக்குதேய்யா, நீ சொல்வது. ஏன் அந்த ஆசாமியை நான் பார்க்கணும், என் பேரைச் சொல்லிக் கேட்டயேல்லோ...பிறகு என்ன? என்னை ஏன் பார்க்கணுமாம்...

மானேஜர்: கேட்டதைத் தர அப்போதே சம்மதம் சொல்லிவிட்டான்...தங்களைப் பார்க்கணும் என்கிறது அந்த மூணு இலட்சம் தருகிற விஷயமாக அல்ல. அவனுக்கு ஒரு ஆசை... நாலுபேர் மத்தியில், நான்கூட ஜெமீன்தாரரைத் தரிசனம் செய்தேன் என்று சொல்லிப் பெருமை தேடிக்கொள்ளத்தான். பணம் எப்படியோ சேர்ந்துவிட்டது அவனிடம். ஆனாலும் அந்தஸ்த்து தன்னாலே வருமா...இப்படிப்பட்ட இடத்திலே தனக்குச் சினேகம் இருப்பதாகச் சொல்லி அந்தஸ்த்து தேடிக் கொள்ளலாம் என்கிற ஆசைதான்...



மை: கடன் விஷயமாக இங்குப் பேசக் கூடாது, தெரிகிறதா?

மா: வாயைத் திறக்கமாட்டான்—

[மானேஜர் குறிப்புக் காட்டுகிறார். பணியாள் வெளியே செல்கிறான்.]

மை: ஏன்யா...ரேஸ் கிளப்புக்கு அனுப்பவேண்டியதை...

மா: எல்லாம் விவரமாகக் குறித்து வைத்திருக்கிறேன்... நாளைக் காலையிலேயே எல்லாம் கட்டிவிட முடியும்...

[பணியாளுடன் வருகிறார் வட்டி வியாபாரம் வரதராஜன்.

வரதராஜன் பணிவாகக் கும்பிடுகிறான். மைனர் தலையை அசைக்கிறார்;]

மா: இவர்தான்...வரதராஜன் என்பவர்...நம்ம ஜெமீனிடம் அலாதியான அன்பு...

(மைனர் இலேசாக ஒரு புன்னகை உதிர்க்கிறார்,]

வரதராஜன்: பெரிய ஜெமீன்தாருடைய தண்ணீர்ப் பந்தல் தருமகாரியத்தை என் தகப்பனார்தான் பார்த்துக் கொண்டு வந்தார்.

மை: இலேசாகத் தலைவலி...அதிகம் பேச முடியாது...

வர: படுத்துக்கொள்ளுங்கள்... உடம்பைப் பார்த்துக் கொள்ளுங்கள்...தங்கள் தரிசனம் கிடைத்ததே போதும்...உடனே அனுப்பி வைக்கிறேன்...

மை: (ஏதும் அறியாதவர்போல) அனுப்பி வைக்கிறீரா? எதை...என்னய்யா மானேஜர்!...பாவம் சாமான்ய மானவாளை எதுவும் கேட்டுத் தொல்லைப்படுத்தக் கூடாது என்று கண்டிப்பாக உத்திரவு போட்டுமா இப்படி...

மா : அய்யய்யோ, தப்பா நினைத்துக் கொள்ளப்படாது. ...அவராகத்தான் ... ஏதாவது வருவாய் கிடைக்குமென்று...பலருக்கும் தம்மிடம் நம்பிக்கை ஏற்படுமென்று... தர விரும்பினார்...சரி என்றேன்...

மை : உன் நோக்கம் சரியாக இருக்கலாம்...ஊரிலே என்ன பேசுவார்கள்...வட்டிக்கு ஜெமீன்தார் கடன் வாங்கினார் என்றுதானே...

வ : ஒரு ஆளுக்குக்கூடத் தெரிய விடமாட்டேன். பெரிய இடத்து விஷயம்...வெளியே பரவ விடுவேனா...

[மைனர் எழுந்து உள்ளே செல்கிறார். மூவரும் வெளியே செல்கின்றனர்.]

## 1950

இடம் : மங்களவிலாஸ் கூடம்.

இருப்போர் : மைனர், மானேஜர், புதிய வேலையாள்.

நிலைமை : மைனர் ஒரு சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொண்டிருக்கிறார். பக்கத்தில், எரிந்து போன சிகரட் துண்டுகள் சிதறிக் கிடக்கின்றன. கண்கள் சிவந்து போயுள்ளன. மானேஜர், கையில் நாளிதழ் வைத்துக் கொண்டிருக்கிறார். பணியாள், சோபா பக்கத்தில் சிதறிக் கிடந்த கண்ணாடிப் பாத்திரத் துண்டுகளைப் பொறுக்கி எடுத்துக் குவித்துக் கொண்டிருக்கிறான்; ஜெமீன்தாரரின் பட்டு மேலங்கி ஒருபுறம் விழுந்து கிடக்கிறது: கூடத்துக் சுடிகாரம் நின்று போயிருக்கிறது.

மைனர் : ஏன்யா இப்படி மரம்போல நின்னுகிட்டே இருந்தா என்ன ஆகிறது...எட்டு மணிக்கு ஆள் அனுப்பினே...அந்தப் பய இன்னும் வரவும் இல்லை, சேதியும் சொல்லி அனுப்பல்லே...

மானேஜர் : சேதி சொல்லி அனுப்பிவிட்டான்... அவசரமான வேலையாம்...ஆடூர் மிட்டாவை இவனிடம் ஒப்படைத்து விட்டார்கள் அல்லவா, அதற்கான கணக்கு சரிபார்த்துக் கொண்டிருக்கிறானாம்...

மை: ஆடூர், மாடூர், காடூர்னு ஏதேதோ சாக்கு...பணம் தரமுடியும் என்கிறானா, முடியாது என்கிறானா...



மா ; ஐயா கேட்டிருக்க மாட்டார்...நானாகத்தான் கேட்கிறேன் என்று ஒரு தப்பு எண்ணம் போல இருக்குது அவனுக்கு...

மை : பச்சையாத்தான் சொல்லேன்யா...நானே கேட்கணும், ஒரு இலட்சம் அவசரமாத் தேவைன்னு... அப்படித்தானே...

மா : அப்படி எல்லாம் இல்லே...நான்தான் மானேஜரை அனுப்பிவைத்தேன்னு ஒரு வார்த்தை சொன்னால் போதும்.

[பணியாள் வேலை செய்வதை நிறுத்திவிட்டு, இந்தப்பேச்சை உன்னிப்பாகக் கேட்டுக் கொண்டிருக்கிறான். அதைக் கவனித்துவிடுகிறார் மைனர்.]

மை : ஏண்டா தடிப்பயலே! என்ன பேசறாங்கன்னு கவனமா கேட்டாச்சேல்லோ...இனி ஊர் பூரா தமுக்கு அடிப்பே...அப்படித்தானே...

வேலையாள் : எனக்கு அந்தப் பழக்கமே கிடையாதுங்க... நேரம் ஏதுங்க வெட்டிப் பேச்சுக்கு...

[வட்டி வரதராஜன் வருகிறார், கலகலப்பான சிரிப்பை உதிர்த்தபடி. வணக்கம் கூறுகிறார், மைனர், சோபாவைக் காட்டியபடி]

மை : உம் பரவாயில்லே...சோபாவிலேயே உட்காரலாம்...

வ : வேண்டாம்ங்க... பரவாயில்லே.., இப்படியே நின்று கொண்டாலே போதும்

மை : பரவாயில்லே உட்காரய்யா...இதிலே என்ன மரியாதைக் குறைவு வந்துவிடப் போகுது...உட்கார்...

வ : அதுக்கு இல்லிங்க...சோபாவிலே ஒரே மூட்டைப் பூச்சி தொல்லைங்க...போன வியாழக்கிழமை உட்கார்ந்தேன் பாருங்க, பிடுங்கித் தின்னுவிட்டுதுங்க மூட்டைப்பூச்சி...

மை : மூட்டைப் பூச்சி இல்லாய்யா...உணி...உணி தெரியாது...நாய்க்குப் பிடிக்குமே...நம்ம டெரியர் என்ன அடித்து விரட்டினாலும் அந்தச் சோபாவிலேதான்

போய் உட்காரும்...சுத்தக் குரங்கு அந்த நாய்...சரி எனக்கென்ன வேறே வேலையே கிடையாது என்கிற நினைப்பா...எப்ப வருவாரு வரதராஜபூபதி, வரம் எப்பத் தருவாருன்னு காத்துகிட்டு இருக்க...

வ: தப்பா எடுத்துக் கொள்ளக் கூடாது, நான் துளியும் எதிர்பார்க்கவில்லை...தங்களுக்கு இவ்வளவு பெரிய தொகை இவ்வளவு அவசரமாகத்தேவைப்படும் என்று. ...சென்னை பெரிய பங்களா கூட ஏதோ ஆபீசுக்கு வாடகைக்குக் கொடுத்ததாகக் கேள்வி...

மா: விவரம் தெரியாமல் பேசாதீர். வாடகைக்கு விடுவதற்காக வீடு கட்டுகிறவரா ஜெமீன்தார்...யாரோ அவருடைய சினேகிதா வேண்டும்னு கேட்டா, சரின்னு சொன்னார்...

வ: எனக்கு வந்த தகவல் வேறே விதமாக இருந்தது...

மை: மானேஜர் வந்து சொன்ன தகவலைக் குறிந்துப் பேசுமய்யா? ஏன் வீண் விவகாரம் உமக்கு?

வ: என் வீட்டுக்காரியும் பெரிய மகனும் இதேதான் எனக்குச் சொல்லியபடி இருக்கிறார்கள். கொடுத்த பணத்தை ஒழுங்காத் திருப்பி வாங்காமப்படிக்கு மேலும் மேலும் கடனைக் கொடுத்தபடி இருந்தா ஆபத்து என்று...போனமாதம் கேள்விப்பட்டிருப்பீங்களே! தவன உத்சவம் தாதுலிங்கம்பிள்ளை மஞ்சக் கடுதாசி நீட்டிவிட்டாரே—அரைஇலட்சம்

மா: உமக்கும் கோவிந்தா தானா அரை இலட்சம்—

வ: ராமானுக்கிரகத்தாலே அப்படி ஆகவில்லிங்க... என் பணத்துக்குஈடா ஒரு பத்து ஏக்கர் நஞ்சையை வாங்கிக் கிட்டேன், கப்பல் கவிழும் என்கிற சந்தேகம் வந்த போதே—

மா: பலே ஆசாமியாச்சே நீ—

வ: பணம் இப்ப முன்னேபோல இல்லிங்க—நானே கொஞ்சம்வட்டி அதிகம் கொடுத்துத்தான் வாங்கி வர்ரேன்—

மை: சுற்றி வளைச்சி பேசுவானேன்—வட்டி கொஞ்சம் கூடுதலாக வேண்டும்—அவ்வளவுதானே? ஏன்யா அதுக்



காகத் தலையைச் சொரிந்துகிட்டு இருக்கே—எழுதிக் கிட்டுவா, போ! சுருக்கா வா—

வ: ஆகட்டுமங்க—நம்மக் கணக்கப்பிள்ளையிடம் கொடுத்தனுப்பறேன் பத்திரம்—

மா: பணம்? அது யார் மூலம் கொடுத்தனுப்பறே—

வ: பத்திரம் கைக்குவந்ததும் மகனிடம் கொடுத்தனுப்பினா அவன் ஒரு மணி நேரத்துக்கெல்லாம் ஓடிவருவான் இங்கே,—பணத்தோட—

[விடைபெற்றுச் செல்கிறார். மைனர் முகத்தில் கோபக்குறி காண்கிறார் மானேஜர்].

## 1954

இடம்: மங்களவிலாஸ் முன்புறம்—அலங்காரக் கொட்டகை.

இருப்போர்: மைனர், மானேஜர், வேலையாள்.

நிலைமை: [மைனர் இளைத்துப்போய், களைத்துப் போய் இருக்கிறார், கொட்டகையில் போடப்பட்டுள்ள பலகைமீது உட்கார்ந்து கொண்டிருக்கிறார். சிறிது அழுக்காகியுள்ள திண்டு பலகைமீது கிடக்கிறது. ஓர்புறம் வெற்றிலைப்பெட்டி இருக்கிறது. வேலைக்காரன் தூக்கக் கலக்கத்துடன் மைனருக்கு விசிறிக் கொண்டிருக்கின்றான். மானேஜர், பஞ்சாங்கத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்.]

மைனர்: ஏன்யா அதைப் புரட்டறே—எந்த நேரம் நல்ல நேரம் அவனைப் பார்க்க என்பதற்காக—

மானேஜர்: இல்லிங்க—முந்திரித்தோப்பு விஷயமா ரிஜிஸ்திரார் ஆபீசுக்கு நாளைக்குப் போகலாம்னு பார்த்தேன். கரிநாளா இருக்குது—

மை: வாங்குகிற பயலுக்கு இல்லாத அக்கறை நமக்கு எதுக்காக—நான் கையெழுத்துப் போடணுமா—?

மா: தேவையில்லிங்களே—முந்திரித்தோப்பு பெரியம்மா பேர்லேதானே இருக்குது—அவங்க வந்தாப் போதும்—ஆனா பெட்டிவண்டி—

மை : பெட்டி வண்டியிலே வரமாட்டேன் என்கிறாங்களா பெரியம்மா—

மா : அதெல்லாம் இல்லிங்க. பெட்டி வண்டியோட 'இருசு' வளைந்து போய் கிடக்குது—

மை : இப்ப நாம வரதராஜப்பிள்ளை வீட்டுக்குப் போக, வண்டி.

மா : அவரோட குதிரை வண்டியே வருது—இப்பத்தான் அவரோட காரியஸ்தன் வந்து சொன்னான். சைகிள்லே வந்தான்—

[வண்டிவந்து நிற்கிறது. மைனர் ஏறிக் கொள்கிறார். மானேஜர், தயக்கப்படுகிறார்.]

மை : பரவாயில்லை, ஏறு! எல்லாம் இப்ப! சமம்—ஏதோ பேப்பர்லே பார்த்தேன்—எவனோ ஒருத்தன் பேசி இருக்கறான் முழநீளம்—ஏறு! ஏறு—

[மானேஜர் ஏறிக் கொள்கிறார்]

[வண்டி, புதிய முறையில் கட்டப்பட்டுள்ள இரண்டடுக்கு மாடி வீட்டின் முன் வந்து நிற்கிறது.]

வரவேற்க யாரேனும் வருகிறார்களா என்று பார்க்கிறார் மானேஜர்.

வீதியில் யாரேனும் இருக்கிறார்களா, தன்னைப் பார்த்துவிடுவார்களா என்ற சந்தேகத்துடன் மைனர் பார்க்கிறார்.

ஒரு பத்து வயதுச் சிறுவன் உள்ளே இருந்து வருகிறான். மானேஜர் அவனைப் பார்த்து 'அப்பா' இருக்கிறாரா என்று கேட்கிறார்.

(சிறுவன் அதற்குப் பதில் ஏதும் கூறாமல், வண்டிக்காரனை முறைத்துப் பார்க்கிறான்.)

வண்டிக்காரன் : பெரியவருதான் போய் வரச் சொன்னாரு—

சிறுவன் : ஏன் உனக்கு எங்கே போச்சு புத்தி—நான் பள்ளிக்கூடம் போகணும்னு தெரியலியா—ஊர்லே



இருக்கறவங்க ஏறி சவாரி செய்யத்தான் பாட்டி வண்டியை வாங்கித் தந்தாங்களா—

[மைனர் கோபத்தை அடக்கிக்கொண்டு வீட்டுக்குள்ளே போகிறார்,

உள் கூடத்தில் நாலைந்துபேர் உட்கார்ந்து கணக்கு எழுதிக் கொண்டிருக்கிறார்கள்.

மானேஜர் கனைத்துக் காட்டுகிறார்.

ஒருவர், காலியாக உள்ள நாற்காலிகளைக் காட்டுகிறார். மைனர் உட்காருகிறார்.

கூடத்தை அடுத்து உள்ள அறையிலிருந்து ரேடியோ சத்தம் கேட்கிறது.

'ஆன முதலில் அதிகம் செலவானால் மானம் அழிந்து மதி கெட்டு, என்ற பாடலை யாரோ வானொலியில் நிறுத்தி நிதானமாக, சோகக் குரலில் பாடுகிறார்கள்.

மைனர், சிகரட்டைப் பற்றவைக்கிறார்.

அதைப் பார்த்துவிட்ட குமாஸ்தா ஒருவர் சுவரில் மாட்டப்பட்டுள்ள முருகன் படத்தைக் காட்டுகிறார்.

மைனர் சிகரெட்டைக் கீழே போட்டு அணைத்து விடுகிறார்.

மானேஜர் குறும்புப் புன்னகை கிளம்புவதைக் கஷ்டப்பட்டு அடக்கிக் கொள்கிறார்.

உட்புறக் கதவைத் திறந்துகொண்டு, வரதராஜன் வருகிறார்.

மைனரைப் பார்த்ததும் பதறுவதுபோல பாவனை காட்டி]

வ : அபசாரம்! அபசாரம்! இங்கேயா உட்காரச் சொன்னார்கள். மடப்பயல்கள். உள்ளே வாங்க...குளிர்ச்சியாக இருக்கும்...வாங்க...வாய்யா மானேஜர்! வா, நீயும்—

[உள்ளே செல்கிறார்கள். ஏர்-கண்டிஷன் செய்யப்பட்டுள்ள அறை. வசதியும் பகட்டும் கொண்ட சோபாக்கள் போடப்பட்டுள்ளன.]

வ: என்ன சாப்பிடுகிறீர்கள் காப்பியா — ஓவலா — மைலோவா—

மை: புறப்படும்போதுதான் ஆர்லிக்ஸ் சாப்பிட்டேன். ஒன்றும் வேண்டாம்—

வ: ஆர்லிக்ஸ் உங்களுக்கு ரொம்பப் பிடிக்குமா—அப்படியானா என் பாக்கியம்தான்—ஏன்னா! இந்த ஜில்லா பூராவுக்கும் நான்தான் ஏஜண்டு ஆர்லிக்சுக்கு—

மா: யாரோ ஆராவமுதன் என்று பேர் போட்டிருந்துதே—

வ: நம்ம பயதான்—மச்சினன்—அவன் பேர்லேதான் எடுத்துப் போட்டிருக்கிறேன்—உங்களை வரச் சொல்லி விட்டேனே தவிர, பிறகுதான் கையைப் பிசைந்து கொண்டேன், என்னடா ஒரு பெரிய மனுஷரை வரச் சொல்லிவிட்டமே, கணக்கு வழக்கைப் பார்க்காமப் படிக்குன்னு. பிறகு பார்த்தேன், பதறிப் போனேன்...

மை: பதறிப் போனிங்களா? ஏன்...

[ஒரு மேஜையைத் திறந்து காகிதக்தை எடுத்து மைனரிடம் தந்தபடி]

வர: பாருங்களேன் நீங்களேதான், படிச்சி.

[வேகமாகப் படிக்கிறார் மைனர். முகம் கடுகடுப் பாகிறது.]

மை: என்ன இது போக்கிரித்தனமான கேள்வி. சொத்து விவரம்—கடன் விவரம்—புதிய கடன் எதற்கு என்ற விவரம்—இதெல்லாம்...என்னைக் கேட்கிற கேள்வியா இது...

வர: கோபிக்கப்படாது. இதெல்லாம் உங்களுக்காக எழுதப்பட்டவை அல்ல. ஒருமுறைக்காக வைத்திருக்கிறோம். ஒரு குறிப்பிட்ட அளவுக்குமேல் கடன் தொகை ஏறிவிட்டால், இந்த விவரம் கேட்டுத் தெரிந்துக்கொண்டு, திருப்தி ஏற்பட்ட பிறகுதான் கடன் கொடுக்கவேண்டும் என்ற கண்டிப்பான சட்டம் போட்டுவிட்டான், என் மகன்; பெரியவன்; அமெரிக்காபோய்ப் படித்துவிட்டு வந்திருக்கிறான்,,,



மை: எழுந்திரய்யா மானேஜர். போதும் இவரோட உறவு...உம்! எழுந்திரு.

[இருவரும் எழுந்து செல்கின்றனர். பதறாமல் அதைப் பார்த்துக் கொண்டிருந்துவிட்டுப் பிறகு புன்னகை செய்கிறார் வரதராஜன்.]

## 1956

இடம்: 'வளர்பிறை' மாளிகைக்கூடம்,

இருப்போர்: வட்டி வரதராஜன், அவர் மகன் பால்.
நிலைமை: [மகன் தயாரித்துக் கொடுத்த பத்திரங்களைப் படித்துப் பார்க்கிறார் வரதராஜன். வேலையாள் வருகிறான்.]

வேலையாள்: நாளைக்கு வரலாமா என்று கேட்கிறார்...

வரதராஜன்: யார்? மைனரா? ஏன்! இன்னும் நாலுநாள் பொறுத்து வருவதுதானே... அதற்குள்ளே இன்னும் நாலு இடத்திலே கடனை வாங்கலாமே... போ! போ! கையோடு அழைத்துவரச் சொன்னதாகச் சொல்லு, நாளைக்கு வருகிறாராம் நாளைக்கு.

மகன்: ஒவ்வொரு நாளும் ஆசாமி முழுகிக் கொண்டிருக்கிறான்...... காரியத்தைச் சுருக்காக முடிக்க வேண்டும்...போடா! போய், அழைத்துக்கொண்டு வா...

வே: நம்ம குதிரை வண்டியை...

வர: மோடாரை எடுத்துக்கிட்டுப் போயேன். கடன்காரப் பயல்களுக்காகத்தானே வண்டி, வாகனம் இங்கே வாங்கிவைத்திருக்குது. மடையன்! போயி, அந்த மானேஜர் இருக்கானே அவனிடம் சொல்லு, ஒரு வாடகை வண்டி பிடிச்சிக்கிட்டுச் சீக்கிரமா வரச் சொல்லு...

[வேலையாள் ஓடுகிறான்.]

இதுபோலவே இன்ன ஊரில் நடைபெற்றது, தெரியும் எனக்கு; வகையின்றி வாழ்க்கை நடத்தி, வாங்கக்கூடாத அளவு கடனைவாங்கி, திருப்பிக்கட்ட முடியாமல் திகைத்து,

கடனை அடைக்க மேலும் கடன்வாங்கி இறுதியில் சொத்தினை இழந்து தத்தளித்தார். இன்ன பண்ணைக்குச் சொந்தக்காரர், அல்லது இன்ன ஜெமீன் குடும்பத்தைச் சேர்ந்தவர் என்று பலரும் தமக்குத் தெரிந்த பல 'வரலாறு களை'க் கூறுவார்கள். தம்பி! அவைகளை அறிந்துகொள்ள அல்ல நான் இதனை எழுதினது.

தனி மனிதர்கள்போலவே நாடுகளும் கடன் வாங்குவ துண்டு.

கடன் வாங்குவதே தவறு என்று கூறிடமுடியாது.

வளர்ச்சி அடைவதற்காக வளர்ச்சி அடையாத நாடு கள் வளர்ச்சி அடைந்த நாடுகளிடம் கடன்வாங்குவது தேவைப்படும் ஒன்று.

கோபக்குரலில் தம்பி! காங்கிரசார் சொல்லக் கேட்டி ருப்பாயே, ரஷியாவே கடன் வாங்கித்தான் வளர்ச்சி அடைந்தது; அமெரிக்காவே கடன்வாங்கி இருக்கிறது என் றெல்லாம்.

கடன் வாங்கவே கூடாது என்று எவரும் கூறவில்லை.

கடன் எந்தமுறையில், எந்த அளவில், என்ன காரியத் துக்காக வாங்குவது என்பதிலும்,

கடன் வாங்கிய தொகையைத் தக்க காரியத்துக்குப் பயன்படுத்தி, அதன் மூலம் வருவாய் பெற்று, பட்ட கட னைத் திருப்பிக்கொடுத்துவிடத் திட்டமிடப்பட்டுச் செயல் மேற்கொள்ளப்பட்டிருக்கிறதா என்பதைப் பொறுத்துமே இருக்கிறது, கடன் வாங்கியது தவறா அல்லவா என்பது.

மங்களபுரி மைனர்போல ஆடிப்பாடிக் கிடந்திடக் கடனுக்குமேல் கடன் வாங்கியபடி இருந்தால், தவறு என் பது மட்டுமல்ல, ஆபத்து என்றே கூறவேண்டும்.

அவருக்கு இருக்கும் சொத்துக்கு, இந்தக் கடன் அவரை என்ன செய்துவிடும்! ஒரே வருஷ வருமானத்தைக்கொண்டு கடனைக் கட்டிவிடலாமே என்றும்,

கரும்பு மாசூல் ஒன்றுபோதுமே, கடனை அடைக்க என்றும்,

ஜெமீன் குடும்பம் என்ன சாமான்யமானதா! எவனுக் குத் துணிவு பிறக்கும், கடனைத் திருப்பிக்கொடுத்தாக வேண்டும், விரைவாக என்று வற்புறுத்த என்றும்,



கடனை ஏராளமாக வாங்கியபடி உள்ள பெரிய இடத்தைப்பற்றி ஊரார் பேசிக் கொள்வார்கள், துவக்கத் தில்! பிறகோ? சொத்து இருக்கட்டுமே மலை அளவு! இருந்து!! கடனய்யா ஊரைச்சுற்றி! வட்டியே சரியாகக் கட்டவில்லையாம், வருஷம் இரண்டு முடிகிறதாம்! எந்த நேரத்தில் எவன் கோர்ட்டுக்குப்போய்க் கொடி ஏற்றி விடு கிறானோ, எவன் தமுக்குத்தட்ட வருகிறானோ என்ற திகில் ஆசாமியைத் துரும்பாக இளைக்கவைத்துவிட்டது என்று கேலி பேசுவர்.

கடன் வாங்குவதிலே உள்ள கேவலத்தைவிட அதிகக் கேவலம், கடனைத்திருப்பிக்கட்ட வழி ஏது என்று ஊரார் பேசிக் கொள்வது காதிலே விழுந்திடும் வேளையில்,

பருத்தி விளையுமாமே தரமாக. நல்ல ஆதாயம் கிடைக்குமாமே என்றும்,

பொட்டல்காடுதான்யா அந்தச் சதுரம்; ஆனால், சர்க்கார் கட்டப்போகும் விருந்தினர் விடுதிக்கு அதை விட்டால் வேறு பொருத்தமான இடம் ஏது! ஆகவே அந்தப் பொட்டல் இடத்தை என்ன விலை கொடுத்தாகிலும் வாங்கியே தீருவது என்று அதிகாரிகளின் மேல் மட்ட மாநாட்டிலே முடிவு செய்திருக்கிறார்களாம் என்றும், கடன் கொடுத்தவர்கள், கடன் வாங்கிய 'கனவான்' பெற் றுள்ள சொத்துப்பற்றிய விவரம் பேசுவர்; அதனைத் தமக் குள் பங்கு போட்டுக்கொள்ளும் நோக்கத்துடன்.

தனி மனிதர்கள் கடன் வாங்குவது அதிகப்பட அதிகப் படக் கடன் கொடுப்பவன் குரலிலே கண்டிப்பு அதிகப் படும், வட்டி ஏறும், வார்த்தைகளிலே கடுமை மிகுந்து விடும்.

ஒருநாடு மற்றோர் நாட்டிடம் கடன் கேட்டு வாங்கிய படி இருந்திடுமானால், ராஜதந்திரமுறை காரணமாகப் பேச்சிலே கடுமை எழாது. ஆனால் நிபந்தனை புதிது புதி தாக விதிக்கப்படும்!

ராஜதந்திரக் கலை இன்று மிக நேர்த்தியான வளர்ச்சி யும் வடிவமும் பெற்றுவிட்டிருப்பதால், நிபந்தனையைக் கூட நிபந்தனை என்று பச்சையாகக் கூறாமல், 'யோச னைகள்' என்ற பெயரிட்டுத் தருவர்; தருகின்றனர்,

கடன் சுமை அதிகமாகிக்கொண்டு போவதிலே உள்ள சங்கடம், சஞ்சலம் ஆபத்து ஆகியவை பற்றி அக்கறையுடன் 'புத்திமதி' கூறுவதும்,

கடனைத் திருப்பிக் கட்டுவதற்கான திட்டம் செம்மையானதாக இருக்கவேண்டும் என்று நட்புணர்ச்சியுடன் 'ஆலோசனை' கூறுவதும்,

அதற்கான திட்டங்கள் எந்தவிதத்தில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன என்பதை அறிந்துகொள்ள 'ஆவல்' கொள்வதும்,

அந்தச் செயல்முறை எந்த அளவு பலன் தந்திருக்கிறது என்பதைக் கணக்குப் பார்க்கத் 'துணை' செய்ய விரும்புவதும்,

செயல் முறையின் பயன் அதிக அளவினதாக, நாமும் உடனிருந்து மேற்பார்வை செய்திடமுற்படுவதும்,

செயல் முறையின் ஒரு பகுதியை நடத்திச் செல்லத் தக்கவர்களை அனுப்பிவைக்க முற்படுவதும்—என்ற இந்த முறைகளில், நிபந்தனைகள் புகுத்தப்படும்.

சுதந்திரம் பெற்ற ஒரு நாட்டின் நடவடிக்கைகளில் மற்றோர் நாடு தலையிடுவது தவறு; அதனை அனுமதிப்பது தேசியத் தன்மானத்தை அழித்துக்கொள்ளும் இழி நிலையை மூட்டிவிடும்! மற்றோர் நாட்டிடம் 'பிடி'யை ஒப்படைப்பதோ, அடிவருடிக் கிடப்பதோ கேவலம் என்பதுமட்டுமல்ல, அது ஆபத்தாகவும் ஆகிவிடும்.

ஆகவே, நிபந்தனையற்ற உதவி பெற மட்டுமே தன்மானத்தையும் சுதந்திரத்தையும் காத்துக்கொள்ள விரும்பும் நாடு சம்மதிக்கும்.

இந்த நிலைமையினை, கடன் கொடுக்கும் நாடும் உணராமலிருக்க முடியாது. ஆகவே, கடன் தருவதற்கு நிபந்தனை விதிக்க அந்த நாடு முற்படாது.

அறிவுரை

ஆலோசனை

கணக்குப் பார்ப்பது



துணைபுரிவது

மேற்பார்வை

பொறுப்பிலே பங்கு

என்ற சொற்களை, நிபந்தனை என்ற சொல்லுக்கு மாற்றுச் சொற்களாக்கிக் கொள்ளும்!

எத்தனை இன்னல் வந்து தாக்கிடினும் நிபந்தனையுடன் கூடிய கடன்-உதவி-ஏற்க மாட்டோம்.

என்று கடன் வாங்கும் நாடு எக்காளமிடுவதும்,

எந்த ஒரு நிபந்தனையையும் நாங்கள் விதிக்க மாட்டோம்; தேசியத் தன்மானத்தை மதித்து நடந்திடுவோம்

என்று கடன் கொடுக்கும் நாடு கனிவு காட்டுவதும், இன்று வேகமாக வளர்ந்து வரும் 'ராஜதந்திர'த்தின் விளைவு. ஆனால், அந்தப் பகட்டுப் போர்வை, உண்மையை அடியோடு மறைத்துவிடுவதில்லை; கூர்ந்து பார்த்திடுவோர், உண்மையைக் காணத் தவறுவதில்லை.

எந்தவிதமான நிபந்தனைக்கும் கட்டுப்பட்டுக் கடன்வாங்க மாட்டோம் என்று கூறிக் கொள்வதிலே பொருள் இல்லை; ஏனெனில் கடன் வாங்குவதே, கடன் படும் நாட்டைக் கடன் கொடுக்கும் நாட்டிடம் கட்டுப்பட்டு விடச் செய்து விடுகிறது, தன்னாலே!

எனவே, தனியாக நிபந்தனை எதனையும் புகுத்த வேண்டிய அவசியமே இல்லை.

ஒரு நிபந்தனையும் கிடையாது என்று கடன் வாங்கும் நாட்டின் ஆளவந்தார்கள் கூறுவது, மக்களை மயக்கிட, உண்மை நிலைமையை மறைத்திட!

உதவி கேட்கிறோம் - கடன் கேட்கிறோம் - ஆனால், அடிமைகளாகிட மாட்டோம், தலையாட்டிகள் ஆகிட மாட்டோம் என்று ஆளவந்தார்கள் முழக்கமிடும்போது, விவரமறியாத மக்கள் நிமிர்ந்து நிற்கின்றனர்.

கடன் கொடுத்த நாட்டினனோ கண் சிமிட்டுகிறான், குறும்புப் புன்னகையுடன்.

தம்பி! இந்திராகாந்தி அம்மையார் அமெரிக்கா சென்றார்களே, கடன் கேட்கத்தானே என்று வினவியபோது, ஆளவந்தார்களின் ஆலவட்டங்கள்கூறின,

கேட்க! கெஞ்சிட அல்ல!

ஆளுங் கட்சியை ஆதரிப்பதைத் தமது வாழ்வின் இலக்கணமாக்கிக் கொண்டுவிட்டுள்ள இதழ்களோ, தமது தனித் திறமையைக் காட்டி எழுதின!

எந்த அளவுக்குத் தொகை தரக்கூடிய நிலையில் அமெரிக்கா இருக்கிறது என்பதனை நேரடியாகவே கண்டறிவதற்காகப் பிரதம மந்திரி அமெரிக்கா சென்றிருக்கிறார்!

இந்தியாவுக்கு அவசரமாகவும் அதிக அளவிலும் உதவி தேவை, கடன் தேவை என்பதைக்கூட எடுத்துக் கூறிடுவது கூடாது என்ற அளவுக்கு ஆளவந்தார்களிடம் கட்டுப்பட்ட இதழ்கள், இந்திராகாந்தி, அம்மையார் சென்றது அமெரிக்காவின் நிலைமை என்ன? என்பதைக் கண்டறிய! உதவி செய்கிறேன்; கடன் தருகிறேன் என்று பேசுகிறதே அந்த நாடு, உண்மையில், கடன் தரக்கூடிய 'வசதி' அந்த நாட்டுக்கு இருக்கிறதா, அல்லது வெறும் 'வறட்டு ஜம்பம்' பேசுகிறதா என்பதைக் கண்டறியச் சென்றிருக்கிறார் என்ற கருத்துப்பட எழுதின;

தூக்கிலே தொங்குபவன் கயிற்றின் வலிவு எப்படி இருக்கிறது என்று 'பரீட்சை' பார்த்தான் என்பது போலவும்,

ஆற்றிலே விழுந்து மடிந்து போனவன் பிணம் மிதக்கும் என்ற தத்துவத்தை மெய்ப்பிக்கவே முற்பட்டான் என்பது போலவும்,

இது இருக்கிறதே என்று கேட்கத் தோன்றுகிறதா, தம்பி; கேட்டுவிடாதே! பெரிய இடத்தின் பொல்லாப்பு எதற்கு!

ஒரு பேச்சாளர் உச்சிக்கே சென்றுவிட்டார்; இந்தியா தனது நாலாவது ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றுவதிலே, அமெரிக்க உதவி பெறாவிட்டால், எத்தனை விதமான சங்கடப்பட நேரிடும் என்பதை இந்திராகாந்தி அம்மையார் எடுத்துரைப்பார்கள் என்று 'உண்மை'யைக் கூறுவதுகூட, எஜமானர்களுக்கு என்னமோ போலிருக்கும் என்ற எண்ணத்துடன் பேசினார்.



அமெரிக்க நாட்டுத் தலைவர் ஜான்சன் நமது பாரதப் பிரதமரிடம், இன்றைய நிலைமையில், வெளி நாடுகளுக்குக் கடன் தருவதிலே அமெரிக்காவுக்குள்ள சங்கடங்கள், சிக்கல்கள் ஆகியவைபற்றி விரிவாக, மனம் திறந்து பேசுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது!

கவனித்தனையா, தம்பி! அமெரிக்கா தனக்கு உள்ள சங்கடங்கள் பற்றி, பேசுமாம்! இந்தியப் பிரதமர் சென்றிருப்பது, அதைக் கேட்டு ஆறுதல்கூற; கடன் கேட்க அல்ல!; இந்த அளவுக்கு 'தங்க பஸ்பம்' சாப்பிட வேண்டி வந்துவிட்டது!

அமெரிக்கா வர விரும்புகிறேன்.

இப்போது வேண்டாம், செப்டம்பர் மாதம் வரலாம்!

லால்பகதூர்—ஜான்சன் பேச்சு இதுபோல அமைந்திருந்தது.

விரைவில் அமெரிக்கா வரவும்.

பாராளுமன்ற வேலைகள் முடிந்ததும், வர முடியும், வருகிறேன்.

இல்லை! இப்போதே வந்து போவது நல்லது.

சரி! வருகிறேன்.

இப்படிக் கருத்துப் பரிமாறிக் கொள்ளப்பட்டது, பாரதப் பிரதமருக்கும் அமெரிக்கத் தலைவருக்கும் இடையில். பாராளுமன்றக் கூட்டம் நடந்து கொண்டிருக்கும் நேரத்திலேயே, அம்மையார் அமெரிக்கா சென்று திரும்பினார்! அழைப்பின் பேரில்தான்!!

ஒருவரை இப்போது வரவேண்டாம் என்று சொல்லவும், மற்றொருவரை உடனே வந்து போகவும் என்று அழைத்திடவும் அமெரிக்கத் தலைவரால் முடிந்திருக்கிறது.

நிபந்தனை கிடையாது கடன் தருவதில்!

ஆனால், வரவேண்டாம் என்று கூறவும், வா! என்று அழைத்திடவுமான

நிலை இருக்கிறது

அமெரிக்கக் குடியரசுத் தலைவருக்கு!

நிபந்தனையா! எமக்கா! அத்தனை துணிவா? இணங்க நாங்கள் என்ன அடிமைப்பட்டவர்களா! என்று முழக்கமிட்டார்களே, தம்பி! மற்ற நிபந்தனைகள் யாவை என்ற ஆராய்ச்சி கூடப் பிறகு நடத்திடலாம்; முதலில் நிபந்தனையையே கவனித்தாயா?

அமெரிக்கக் குடிஅரசுத் தலைவர் அழைக்கும்
போதுதான், பாரதப் பிரதமர் போகலாம்!

அமெரிக்கக் குடிஅரசுத் தலைவர் அழைக்கும்
போது வேறு எந்த வேலை இருப்பினும், தள்ளிவைத்து
விட்டுச் சென்றாக வேண்டும்!

இது நிலைமை! நிபந்தனை அல்ல!! எப்படி
வேடிக்கை!!

இப்போது மீண்டும் நாடகத்தைப் படித்துப் பார்த்திடு தம்பி! என்ன சொல்கிறார், வட்டி வரதராஜன்.

வரச்சொல்! உடனே வரச்சொல்!
கையோடு கூட்டிக் கொண்டு வா!

கடன் கொடுத்தபோது, நான் வரச் சொன்னதும் வந்தாக வேண்டும் என்று ஏதேனும் நிபந்தனை உண்டா; இல்லை! ஆனால் நிலைமை? நிபந்தனையைத் தன்னாலே கொண்டு வந்து விடுகிறது!!

கடன் வாங்காமல் இருக்கவேண்டும்—இருக்க முடியும் என்பதை வலியுறுத்த அல்ல இதனை எழுதுவது.

கடனுக்கு மேல் கடன் என்று சுமையை அதிகமாக்கிக் கொண்டால், கடனைத் திருப்பிக் கட்டுவதற்கான வழிகள் அடைபட்டுக் கிடந்தால், நிலைமை எத்தனை மோசமாகி விடும் என்பதை விளக்கத்தான்.

என்ன இது! போக்கிரித்தனமான கேள்விகள், சொத்து மதிப்பு! கடன் விவரம் இவைகளைப் பற்றி எல்லாமா கேட்பது, என்னை?

மங்களபுரி மைனர் [நாடகத்தில்] கொதித்திடக் கண்டனை அல்லவா! இதோபார். தம்பி! கடன் கேட்கும் பாரத சர்க்காரிடம் அமெரிக்கா கேட்டிடும் தகவல்களை.

இன்னும் எத்தனை காலம்-கடன் வாங்கியபடி இருக்கப்போகிறீர்கள்?



இதுவரை வாங்கிய கடன் தொகையை எவ்விதம் பயன்படுத்திக் கொண்டிருக்கிறீர்கள்?

கடனைத் திருப்பித் தருவதற்குத் தேவைப்படும் வருவாய் பெற்றிட வழிகள் யாவை?

வருவாய் பெருகுவதுகூட இருக்கட்டும்; வயிற்றுச் சோற்றுக்கே வேதனைப்படுகிறீர்களே, ஏன் இந்த நிலைமை வந்தது?

விவசாயத் துறையிலே ஏன் போதுமான வளர்ச்சி பெறவில்லை?

அந்த வளர்ச்சியைக் கவனிக்காமல், தொழில்துறையில் ஏன் அகலக் கால் வைக்கிறீர்கள்?

தொழில் வளத்தைப் பெருக்கிட உதவி கேட்கிறீர்களே, ஏன் அந்தக் காரியத்தை உங்கள்நாட்டுத் 'தனியாரிடம்' (முதலாளிகள்) ஒப்படைக்கத் தயக்கம் காட்டுகிறீர்கள்?

தொழில் வளர, 'முதல்' கேட்கிறீர்களே, ஏன் தொழில் துறையில் பல 'கட்டுகள்', 'தடைகள்' போட்டு, அன்னிய நாட்டு முதலாளிகளின் உற்சாகத்தைக் குறைத்தபடி இருக்கிறீர்கள்?

கடன் அதிகம்! வளம் குறைவு! வாட்டம் அதிகம்! இந்நிலையில் ஏன் பாகிஸ்தானுடன் பகை?

பாகிஸ்தானுடன் காஷ்மீர் பிரச்சினை பற்றி ஒரு

சமரசம் செய்துகொள்ளாவிட்டால், இராணுவச்செலவு அதிகமாகும், தாங்க முடியாது; தொழில் வளர வழி கிடைக்காது: இதை உணர்ந்து பாகிஸ்தானுடன் ஏன் சமாதானமாகிவிடக்கூடாது?

பாகிஸ்தானுடன் தகராறு இருக்கும்வரையில், தொழிலில் 'மூலதனம்' போட அன்னிய முதலாளிகளுக்கு எப்படித் தைரியம் வர முடியும்?

விலைக்கட்டுப்பாடு, விநியோகக் கட்டுப்பாடு இலாப விகிதக் கட்டுப்பாடு போன்றவைகளை நீக்கி

னாலொழிய எப்படி அமெரிக்க 'முதல்' இந்தியாவுக்குக் கிடைக்க முடியும்?

பாகிஸ்தானுடன் சேர்ந்து கூட்டாகச் சில தொழில் திட்டங்களை ஏன் செயல் படுத்தக்கூடாது?

தம்பி! சலிப்பாக இருக்கிறது முழுப்பட்டியலை விளக்க மாக்கிட.

இவ்விதமாகவெல்லாம் கேட்கிறது அமெரிக்க சர்க்கார்—கேள்விகள் என்று கூறாதே; கோபம் வருகிறது கோலேந்திகளுக்கும் அவர்தம் தாளேந்திகளுக்கும்—தகவல் களைக் கேட்கிறார்கள்;

ஏன்? கடன் கேட்கிறோமே! நாலாயிரம் கோடி ரூபாய் அளவுக்கு; ஏற்கனவே கடன் பட்டிருக்கிறோமே!

அதனால்!!

தம்பி! இந்தத் தகவல்களை விளக்கியதும், அமெரிக்க சர்க்கார்—

விவசாயத்துறை

தொழில்துறை

வெளிவிவகாரத்துறை

நிர்வாகத்துறை

ஆகியவற்றிலே இந்தியப் பேரரசு என்னென்ன முறை களைக் கையாளவேண்டும், திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும் என்ற நிபந்தனைகளை விதித்திட முற்படுகிறது.

மறந்து விட்டேனே, தம்பி! நிபந்தனை என்று கூறி னால்தான் அவர்களுக்கு ஆத்திரமும் அழுகையும் வரு கிறதே, நிபந்தனைகள் அல்ல;

அறிவுரை

ஆலோசனை

கருத்துரை

நட்புரை!



அம்மையாரிடல் 'ஒட்டுமொத்தமாக'ப் பேசியாகிவிட்டது, இப்போது அசோக்மேத்தாவிடம், 'புட்டுப் புட்டு'க் காட்டிப் பேசுகிறது அமெரிக்க அரசு! இது இன்றைய நிலைமை!

இப்போது மற்றோர் முறை படித்திடேன் தம்பி! நாடகத்தை; களிப்பு அல்ல, கண்ணீர் பொங்கும்.

அண்ணன்,

1—5—'66



காஞ்சிக் கடிதம்: 61

# உன்னால் முடியும்!

★ நந்தனாருக்கு வேதியர்; நமக்கோ காமராசர்!

★ மன அரிப்பின் விளைவு!

★ உழைக்கும் உத்தமர் நம்மிடம்!

★ கழகம் காமராசரைத் 'தண்டால்' போட வைக்கிறது!

தம்பி,

உன்னிடம் ஒரு பாட்டுப் பாடிக் காட்டவேண்டும் என்று ஆவலாக இருக்கிறது; ஆனால், துணிவுவர மறுக்கிறது; என்னிடம் இத்தனை பரிவும் பாசமும் கொண்டுள்ள உனக்குச் சங்கடத்தைத் தந்திட மனம் இடந்தரவில்லை. ஆகவே, பாட்டுபற்றிக் குறிப்பு மட்டும் தருகிறேன்.

''சிதம்பர தரிசனமா! நீ அதைச் சிந்திக்கப்போமா...'' என்ற ஒரு பாட்டு உண்டு; நந்தனார் பற்றிய பாடல். அந்தப் புத்தகம் கிடைத்தால் படித்துப்பார், தம்பி! பாடக் கூடியவர்களைப் பாடச்சொல்லிக் கேட்டுப்பார், சுவை யான சந்தம்! இனிமையாக இருக்கும், இசைக்கு ஏற்ற குரல்வளம் உள்ளவர்கள் பாடினால்.

பாட்டின் கருத்து பற்றித்தான் நான் இப்போது கூற முற்படுகிறேன்.



சேரியில் வாழ்ந்துகொண்டிருந்த சீலமிக்க நந்தனாருக்குச் சிதம்பரம் சென்று ஆடலரசனைத் 'தரிசனம்' செய்திட வேண்டும் என்ற ஆர்வம் மிகுதியாக,

''தில்லை அம்பலத் தலமொன் றிருக்குதாம்
அதைக் கண்டபேர்க்கு
ஜனனமரணப் பிணியை அறுக்குதாம்''

என்று மனம் உருகிய நிலையில் வேதியர்முன் பாடி,

''போய்வர உத்தாரம் தாரும் ஐயனே!''

என்று கேட்கிறார். அய்யர், நந்தனாரின் ஆண்டை. ஆகவே அவருடைய உத்தரவு தேவைப் படுகிறது. 'வேதியர்' அனுமதி மறுப்பதற்காக என்று அமைந்துள்ள பாட்டு நான் துவக்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

''சிதம்பர தரிசனமா? நீ அதைச் சிந்திக்கப்போமா!'' என்று கேட்பது மட்டுமல்ல, நந்தனார் என்னென்னசெய்து காலந்தள்ள வேண்டும், எது முறை, எவை அவருக்கென்று ஏற்பட்டுள்ள 'நியதி' என்று விளக்கமாகவும் 'வேதியர்' எடுத்துரைக்கிறார்.

''காடு கழனியை உழுதிடு
கள்ளுத் தண்ணியைக் குடித்திடு
காடன் மாடனைக் கும்பிடு''

என்ற கருத்துப்பட, நந்தனாருக்காகவென்றே சாஸ்திரமும் சம்பிரதாயமும் வகுத்து வைத்துள்ள முறைகளை எடுத்துக் கூறுகிறார் வேதியர்.

அந்த வேதியரின் நினைவுதான் வருகிறது, தம்பி! காமராஜர் நம்மைப்பற்றிச் சின்னாட்களுக்கு முன்பு பேசியதனை அறிந்தபோது.

கடவுளை எதிர்த்துப் போரிடு
பார்ப்பன ஒழிப்பை நடத்திடு

இவைகளை விட்டுவிட்டு, தேர்தலிலே ஈடுபடுவதா! காங்கிரசை எதிர்ப்பதா! ஆட்சியிலே அமர்ந்திட முனைவதா!—என்று கேட்கிறார்.

நாம் எதைச் செய்யக்கூடாது என்பதனையும் கூறுகிறார், எதையெதைச் செய்திட வேண்டும் என்பதனையும் எடுத்துக்காட்டுகிறார். அவ்வளவு அக்கறை, நம்மிடம்!

இன்பத் திராவிடம் கேட்பதை விட்டுவிட்டார்கள்! கடவுளை ஒழிப்பதை விட்டுவிட்டார்கள்! பிராமண எதிர்ப்பை விட்டுவிட்டார்கள்! கொள்கைகளை விட்டு விட்டார்கள்! என்று கோபத்துடன் பேசுகிறார்; 'பேசு கிறாரா? ஏசுகிறார், எரிச்சல் காரணமாக.

அந்தக் கொள்கைகளை விட்டுவிட்டார்களே என்று கடுங்கோபங்கொண்டு, அந்த மதியிலிகள் விட்டுவிட்டால் என்ன, இதோ நான் இருக்கிறேன், அறிவுக்கரசன்! ஆற்றல் மிக்கோன்! நான் இனி அந்தக் கொள்கைகளை ஆதரிக்கத் தலைப்பட்டுவிட்டேன்! அவனியோரே! இதனை அறிந்து கொள்ளுங்கள்! என்றுகூறி, துந்துபி முழங்கட்டும்! என்று கட்டளையிட்டுவிட்டு, சல்லடம் கட்டிக்கொண்டு, தோள் தட்டி, துடைதட்டிக் கிளம்புகிறாரோ, களம் நோக்கி இந்த வீராதிவீரர் என்று கேட்கிறாயோ, தம்பி! இல்லை! இல்லை! அவர் எப்போதும்போல,

ஓட்டு வேட்டை நடத்துவார்
ஆட்சியை ஆமைப்பார்.

பராக்குக் கூறிடுவோர் புடைசூழப் பவனி வருவார்!

இலட்ச இலட்சமாக நிதி திரட்டுவார்.

நம்மைத்தான் செய்யச்சொல்கிறார் 'ஒழிப்பு' வேலையை.

ஏன்? அந்த வேலைகளில், அந்தக் கொள்கைகளிலே அவருக்கு அவ்வளவு விருப்பமோ என்று கேட்பாய். விருப்பம் அல்ல; விருப்பம் இருந்தால், யார் செய்தாலும் செய்யாது விட்டிடினும், இதோ நான் செய்தே முடிப்பேன், செய்து முடித்திடாமல் ஊண் உறக்கம் கொள்ளேன் என்று சூளுரைத்தல்லவா கிளம்புவார், வாளை உருவிக்கொண்டு. விருப்பம் அல்ல, நம்மை அவர் உசுப்பி விடுவதற்கான காரணம்.

இன்பத் திராவிடம் கேட்டிடுவோர், தேர்தலிலே ஈடுபட முடியாது. அப்படி ஒரு சட்டத்தை உருவாக்கி வைத்துக்கொண்டு விட்டிருக்கிறார் அல்லவா? அதனால், இன்பத் திராவிடத்தை ஏன் விட்டுவிட்டாய் என்று கேட்டு, நம்மை உசுப்பி விடுவதன் மூலம், தேர்தலிலே நாம் ஈடுபடுவதைத் தடுத்துவிடலாம் அல்லவா! அந்தத் தந்திர புத்தியால்,



ஏன் இன்பத் திராவிடத்தை விட்டு விட்டீர்கள் என்று கேட்கிறார்.

அதுபோலவேதான், கடவுள் ஒழிப்பு, பிராமண எதிர்ப்பு இவைகளை ஏன் விட்டுவிட்டீர்கள் என்று இவர் கேட்பது, அவைகளிலே ஈடுபட்டுக்கொண்டு காலந் தள்ளுங்கள், தேர்தலிலே ஈடுபட்டு என் ஆதிக்கத்துக்கு ஆபத்தை உண்டாக்காதீர்கள் என்ற கருத்துடன்தான்.

இன்பத் திராவிடம் கேட்கிறார்கள் இந்தக் கழகத்தார்; ஆனால், இவர்கள் கேட்பதை, ஆட்சி மன்றத்தினர் ஒருவர்கூட ஆதரிக்கவில்லை என்று கூறுவார். ஏனெனில், இன்பத் திராவிடம் கேட்பவர்கள்தான் தேர்தலிலே ஈடுபடக்கூடாது என்று சட்டம் இருக்கிறதே!

கடவுளை எதிர்த்திடும் கயவர்கள், பார்ப்பனரைப் பழித்திடும் பாதகர்கள், இவர்களையா ஆதரிப்பர் என்று ஒரு போடுபோட்டு, தேர்தலிலே நம்மைத் தாக்கித் தகர்த்திடலாமல்லவா! அந்த நைப்பாசை.

ஆகவேதான், நந்தனாருக்கு வேதியர் சொன்ன விதமாக நம்மைப் பார்த்துச் சொல்கிறார், நாடாளும் வாய்ப்பை இழந்துவிட வேண்டிவந்து விடுமோ என்று நடுக்கம் கொண்டுள்ள காமராஜர், ஏன் கொள்கைகளை விட்டுவிட்டீர்கள் என்பதாக.

தோட்டம் காடு பார்த்துக்கொண்டு, மாடு கன்றுகளைக் கவனித்துக்கொண்டு, கிராமத்திலே இருந்துகொண்டு, கோயில் குளத்தை வலம் செய்துகொண்டு நிம்மதியாகக் காலந் தள்ளுவதை விட்டுவிட்டு, இங்கு ஏனடா வந்தாய்! என்று கேட்பது உண்டல்லவா அண்ணன், தம்பி பட்டணம் வந்தது கண்டால். அதுபோலப் பேசுகிறார் காமராஜர். அவர் பேச்சு எனக்குக் கோபத்தைக் கிளறவில்லை; மாறாக, சிரிப்பைத்தான் மூட்டுகிறது.

வெட்ட வெளியிலே நின்றுகொண்டு, அது சொத்தை இது சோடை என்று பேசிக் கொண்டிருப்பானேன்-வந்து பாருங்களேன் சட்டசபைக்கு! நின்று பாருங்களேன் தேர்தலுக்கு! கேட்டுப் பாருமேன் ஓட்டுகளை!! என்றெல்லாம் முன்பு சொன்னார்! இப்போதோ, இந்தப் பாவிகள் ஓட்டுக் கேட்க முகங்வேதால் நமது ஆதிக்கத்திலே ஓட்டையும் ஒடிசலும்

விழுந்து விடுகிறதே என்ற கிலிகொண்டு, ஏன் தேர்த லிலே ஈடுபடுகிறீர்கள், கடவுள் ஒழிப்பு, பிராமண எதிர்ப்பு ஆகியவைகளை ஏன் விட்டுவிட்டீர்கள் என்று கேட்கிறார்.

கடவுளை ஒழிக்கட்டும், பரவாயில்லை; பிராமண எதிர்ப்பு நடத்தட்டும் பரவாயில்லை; தனி நாடு கேட்கட்டும் பரவா யில்லை; பாவிப் பயல்கள் 'ஓட்டு' அல்லவா கேட்கிறார்கள், நமது ஒய்யார வாழ்வுக்கு அல்லவா உலைவைத்து விடு வார்கள்போல இருக்கிறது என்ற அச்சம் பிடித்தாட்டும் நிலையில் பேசுகிறார்.

அன்றும் இன்றும், தம்பி! கடவுள் ஒழிப்பு எனும் காரி யத்திலே தி.மு.கழகம் ஈடுபட்டதில்லை; ஆனால், கடவுள் பெயர் கூறிச் செய்யப்படும் கபட நாடகங்களை அம்பலப் படுத்துவதிலும், கடவுள் பெயர் சொல்லிக் காதகர் செய் திடும் கயமைகளைக் கண்டிப்பதிலும் தயக்கம் காட்டிய தில்லை; தயக்கம் காட்டவில்லை.

தி.மு. கழகம், தீப்பந்தம் எடுங்கள் அக்ரகாரத்தைக் கொளுத்த என்று சொன்னதுமில்லை, அக்ரகாரத்திலுள்ள வர்கள் 'பூதேவர்கள்,' நாம் அவர் அடிவருடப் பிறந்தவர் கள் என்ற அக்கிரமத்தை ஏற்றுக்கொண்டதுமில்லை.

ஒன்றே குலம்! ஒருவனே தேவன்! என்ற நெறியைத் தேர்தலில் ஈடுபட்ட பிறகு அல்ல, தேர்தலைப் பற்றிய நினைவே எழாத நாள்தொட்டு, திராவிட முன்னேற்றக் கழகம் மேற்கொண்டு ஒழுகி வருகிறது. இதனை நாடு அறியும், நல்லோர் பாராட்டியுமுள்ளனர்.

தி. மு. கழகம், திராவிடர் கழகத்தைப் போல கடவுளின்மீதும், பிராமணர்மீதும் போர் தொடுத்துக் கொண்டு இருந்திடாமல், காங்கிரஸ் எதேச்சாதிகாரத்தின் மீது போர் தொடுத்திருக்கிறதே, அதற்குத் தேவைப்படும் வல்லமையும் வளர்ந்துகொண்டு வருகிறதே, அந்தப் போரிலே வெற்றி கிட்டுவதற்கான குறிகளும் பளிச்சிட்டுக் கொண்டுள்ளனவே என்பதைக் காணும்போது பெரியவர் கடுங்கோபம் கொள்கிறார்.

அவருடைய நோக்கம் மக்களிடம் தோழமைத் தொடர்பு கொண்டு, நாடெங்கும் நல்ல முறையிலே பரவி வளர்ந்துள்ள தி.மு.கழகத்தைத் தேர்தல்



களத்தை விட்டுத் திசை திருப்பி விடவேண்டும் என்ப தாகும்.

ஆலவட்டங்களுக்குத்தான் கணக்குப் புரிவதில்லை; அவருக்குக் கணக்குப் புரிகிறது.

ஐம்பத்து ஆறு இலட்சம்
முப்பத்துநாலு இலட்சம்

என்ற அளவிலேதான் 1962ல் ஓட்டுகள் விழுந்துள்ளன, காங்கிரசுக்கும் கழகத்துக்கும் என்பது.

இந்தக் கணக்கு கிளப்பிவிடும் கிலி காரணமாகவே அவர் நம்மை வேறு வேலைகளைப் பார்த்திடுவதுதானே என்கிறார்.

நாட்டிலே ஜனநாயகத்தை நிலைநாட்டுவது என்பதையும்,

காங்கிரஸ் எதேச்சாதிகாரத்தை வீழ்த்துவது என்பதையும்,

காங்கிரசுக்கும் பணக்கார வர்க்கத்துக்கும் ஏற் பட்டுவிட்டிருக்கிற எழுதாத ஒப்பந்தத்தைக் கிழித்து எறிவது என்பதையும்.

திராவிட முன்னேற்றக் கழகம், தனது கொள்கை யாக, வேலைத் திட்டமாக மேற்கொண்டு விட்டிருக் கிறது.

திராவிட முன்னேற்றக் கழகம் இந்த வேலைத் திட்டத்தை வெற்றிகரமாக நடத்திச் செல்லத்தக்க வலிவும் வாய்ப்பும் பெற்றிருக்கிறது.

இந்த உண்மை காமராஜருக்கு நன்றாகப் புரிகிறது. எரிச்சல் பிறக்கிறது. துடிக்கிறார்: நம்மைத் தூற்றுவதன் மூலம் அந்த அரிப்பை அடக்கிக் கொள்ளப் பார்க்கிறார்.

தம்பி! அரிப்பு எடுத்த நிலையினர் என்னென்ன செய்து அந்த அரிப்புத் தொல்லையைப் போக்கிக்கொள்ள முனைவார்கள் என்பதைப் பார்த்தாலே வேடிக்கையாக இருக்கும்: அதிலும் நல்ல கோடை காலத்தில், முதுகுப் புறத்திலே அரிப்பு எடுத்துவிட்டால் பாவம் நெளிவான், வுளைவான்; கையை வளைத்து அரிப்பு எடுத்த இடத்

தருகே கொண்டு செல்வான்: முடியாமற் போய்விடும்; விசிறிக்காம்பைக் கொண்டு கீறிப்பார்த்திடுவான்; எந்த இடத்தில் அரிப்பு எடுக்கிறதோ அந்த இடத்தருகே விசிறிக் காம்பு செல்லாது; மேலும் துடிப்பான்; கொஞ்சம் சொரிந்து விடுங்கள் என்று யாரிடமாவது கெஞ்சுவான்; அவர்களும் எந்த இடத்தில் அரிப்பு எடுக்கிறது என்பதை அறிந்து பக்குவமாகச் சொரிந்துவிடவில்லை என்றால், கூச்சத்தைத் துரத்திவிட்டுச் சுவரிலே போய்த் தேய்த்துக் கொள்வான்; அரிப்புத் தீருமட்டும்; இரத்தம் கசிகிறவரை யில்! பார்க்கவே பரிதாபமாக இருக்கும்.

உடல் அரிப்புக்கே இந்தப்பாடு, இந்தத் தவிப்பு என்றால், உள்ளத்து அரிப்பு ஏற்பட்டுவிட்டால், தவிப்பு எப்படி இருக்கும் என்பதைச் சொல்லவா வேண்டும்? காமராஜர் அந்தத் தவிப்புத் தவிக்கிறார்; பாபம். அவரு டைய சமீபகாலப் பேச்சுகள்—

அவர் அடைந்துள்ள உயர்ந்த நிலை

அவருக்கு இருப்பதாகச் சொல்லப்படும் வல்லமை

அவருக்குக் கிடைத்திருந்திருக்க வேண்டிய அனுபவம்

அவருடைய கட்சியிடம் அவருக்கு இருக்க வேண் டிய நம்பிக்கை

ஆகிய எதற்கும் ஏற்றதாகவோ பொருத்தமானதாகவோ காணோம். ஒரே தூற்றல்! எடுத்தேன் கவிழ்த்தேன் என்ற பேச்சு! எல்லாம் எனக்குத் தெரியும் என்ற போக்கு! எவனால் என்ன ஆகும் என்ற கேள்வி! என்ன செய்துவிடு வேன் தெரியுமா என்ற மிரட்டல்!

எல்லாம் அவருக்கு ஏற்பட்டுவிட்டுள்ள மன அரிப்பின் விளைவு! அதனால்தான் தம்பி! எனக்கு அவரிடம் கோபம் வரவில்லை; பச்சாத்தாபம் பிறக்கிறது.

எவ்வளவு பெரிய இடத்திலே அமர்ந்திருக்கிறார்; என்றாலும் எவ்வளவு பதைக்கிறார், பதறுகிறார், பட படக்கிறார்.

அமைச்சர்கள், நிரம்பிய அணிவகுப்பு!

கோடீஸ்வரர்கள் கொடி பிடிக்கிறார்கள்,



கொலு மண்டபத்திலே இலட்சாதிபதிகள் சாமரம் வீசுகிறார்கள்,

கேட்டதும் எந்த அளவுப் பணமும் கொட்டிக் கொடுக்க முதலாளிகள் காத்துக் கிடக்கிறார்கள்!

அவர் பாதையிலே புழுதி இருந்தால் பாதம் அழுக்காகி விடுமே என்று பயந்து பரிவு காட்டித் தமது பட்டாடையை விரிக்கிறார்கள், இதன்மீது நடந்து செல்லுங்கள் என்று!

பத்து மோட்டார், முன்னாலே! பத்து, பின்னாலே! படகு மோட்டாரிலே இவர்! வைரமோதிரக்காரர்கள், பக்கத்தில்! ஆயிரக்கணக்கான ரூபாய்களைச் செலவிட்டுப் போடப்பட்ட அலங்கார வளைவுகள்! சர்க்கார் சிப்பந்திகள் இரவெல்லாம் கண்விழித்துக்கொண்டு வேலைசெய்து எழில்கூட்டித் தந்த மேடை அமைப்புகள்!

மாளிகைகளிலே விருந்து! மகோன்னதமான வரவேற்பு வைபவம்!

ஆண்டு பல செலவிட்டு மருத்துவம் கற்றுக்கொண்ட வித்தகர்கள், அவர் எடுத்துக் கூறும் பொருளற்ற பேச்சைப் பொறுமையாகக் கேட்டுக்கொள்கிறார்கள்.

அரசியல் - பொருளாதாரம் - ஆகிய துறைகள் பற்றிய ஆய்வுரை நடத்தியவர்கள் அவர் தரும் 'அறிவுரை' கேட்டு, இதுபோலப் பேருரை ஆற்றியவர் பலகாலும் படித்த கல்லூரிகளிலே இருந்ததில்லையே! என்று கூறிடக் கூட ஒருப்படுகிறார்கள்.

இவ்விதமான ஏற்றம்! இந்த மேலிடம்! இதிலே இருந்து கொண்டு, பாவம் அவர் தமது இயல்பை மறந்திட முடியா மல், தூ, தூ! சே! சே! என்ற அவருடைய தனிச்சிறப்பைத் தான் விளக்கிக் காட்டிக் கொண்டு வருகிறார் என்றால், தம்பி! பரிதாபமாகத் தானே இருக்கும்!

கெம்பீரமான யானை! அதன்மீது உயர்தரமான அம்பாரி! அதிலே அமர்ந்துகொண்டு பவனி வந்து கொண்டிருக்கும்போது, வழியிலே நிறுத்து! நிறுத்து! என்று ஊர்வலத்தை நிறுத்தச் செய்து கீழே குதித்து, அங்குச் சிதறிக் கிடக்கும் ஈச்சம் பழங்களை எடுத்து வாயிலே போட்டுக் குதப்பிக் கொண்டே, என்ன சுவை! என்ன சுவை! என்று கூறிக் குதூகலித்திடின்,

பார்ப்போர் என்ன எண்ணுவர்! பாவம்! எல்லாச் செல்வமும் இருந்தும், இப்படி இருக்கிறதே மனம்!— என்று எண்ணிப் பரிதாபப்படுவர்! வேறென்ன செய்வர்!

காமராஜரிடம் உள்ளன்பு கொண்டவர்கள்கூட, அவர் இத்தனை மேலான இடம் சென்றும், தரத்தைத் தூக்கி எறிந்துவிட்டுத் தாறுமாறாகப் பேசுகிறாரே என்று வருத்தப்படுவார்கள்.

தொத்தலும் வத்தலுமாக உள்ளதுகள் மட்டுமே 'பெரியவர்' நம்ம 'பாணி'யைப் பழகிக் கொண்டுவிட்டாரே என்று எண்ணிக் களிநடமிடக்கூடும்.

தம்பி! காமராஜருக்குக் கிடைத்துள்ள வசதிகளில் நூற்றிலே ஒரு பாகம் நமக்குக் கிடைத்தாலும் போதும், நாம் கண்டபடி பேசிடாமல், காரியத்தைக் கன கச்சிதமாக முடித்துக் கொண்டிட முடியும்.

நமக்கு உள்ள வசதிக் குறைவுகளை நாடறியும்.

கனதனவான்கள் நம்மிடம் இல்லை, இருக்க வேண்டுமென எதிர்பார்க்கவும் உரிமை இல்லை, நியாயமுமில்லை.

நமது கூட்ட மேடைகளிலே வந்து அமருகிறவர்கள் அனைவருமே உழைத்தால் மட்டுமே பிழைக்கக் கூடியவர்கள். நிலபுலம் பற்றி, வட்டி வாடகை பற்றி, பேசிக்கொண்டிருக்கக் கூடியவர்கள், வைரக் கடுக்கன்களும், வெள்ளிப் பூண்போட்ட தடி பிடித்து நடப்பவர்களும், பாண்டியாக்குகளும் ப்யூக்குகளும் பண்ணைகள் கொண்டோரும் பர்மிட் பெற்றோரும் நம்மிடம் இல்லை. மாதச் சம்பளக்காரர்கள், தினக்கூலி பெறுவோர், வாடகை வீட்டிலே வசிப்பவர்கள், பெட்டிக்கடை நடத்துபவர்கள், மூட்டை சுமந்து விற்பவர்கள், இப்படிப்பட்ட உழைக்கும் உத்தமர்கள் நம்மிடம். எடு அரை இலட்சம் என்று கேட்டால், கொடுத்தேன் இப்போதே என்று கூறக் கூடியவர்கள் அல்ல; கொளுத்து அரசியல் சட்டத்தின் மொழிப் பிரிவை என்று கழகம் கட்டளையிட்டால், இதோ! இப்போதே! என்று ஆர்வத்துடன் கூறிச் செயலாற்றும் செம்மல்கள்! நாம் யானைமீது அம்பாரி அமைத்து அதிலே அமர்ந்து பவனி வந்து அரசபோகம் அனுபவித்திடுவோர் அல்ல; உச்சி வேளையில் கால் கடுக்க, மண்டையிலே



வெப்பம் தாக்க, வியர்வை பொழிய, கல்லும் முள்ளும் நிரம்பிய பாதையிலே நடந்து சென்றிடுவோர்.

என்றாலும், நாம் நமது பேச்சிலும் செயலிலும் ஒரு தரம் இருக்க வேண்டும், ஒரு கண்ணியம் இருக்கவேண்டும், பொறுப்பும் பண்பும் இருக்கவேண்டும் என்பதிலே மிக்க கவலை எடுத்துக் கொள்கிறோம். காமராஜரோ, யானை மீது அம்பாரி கட்டி அதில் அமர்ந்து பவனி வருபவன் பாதை ஓரத்திலே உள்ளபழத்தை எடுக்க யானையை நிறுத்திவிட்டு கீழேகுதித்திடும் போக்கினராகிறார். ஏனோ, பாவம்!

தி. மு. கழகத்தாருக்கு மானம் இல்லை என்கிறார்.

தி.மு. கழகத்தார் கூலிகள், காலிகள் என்று ஏசுகிறார்.

தி. மு. கழகத்தார், ஆச்சாரியாருக்கு அடிமையாகி விட்டார்கள் என்று தூற்றுகிறார்.

தமிழக மக்களில் முப்பது இலட்சத்துக்கு மேற்பட்டவர்கள் எந்தக் கழகத்திற்குத் தமது ஆதரவைத் தந்திருக்கிறார்களோ, எந்தக் கழகம் தமிழகச் சட்டமன்றத்திலே அதிகாரம் பெற்ற எதிர்க் கட்சியாகப் பணியாற்றிடும் நிலை பெற்றிருக்கிறதோ, எந்தக் கழகம் தாய்மொழி காத்திட அறப்போர் நடாத்திப் பல ஆயிரவர் சிறைக்கோட்டம் சென்று வாடிட வேண்டிய நிலையிலே கிளர்ச்சி நடத்திற்றோ, எந்தக் கழகத்தின் சொல்கேட்க ஒவ்வொரு நாளும் பல்லாயிரவர் ஆர்வத்துடன் தமிழகத்தின் மூலை முடுக்கெல்லாம் கூடத் திரண்டு வருகின்றனரோ, அந்தத் திராவிட முன்னேற்றக் கழகத்தினரை மானமற்றவர்கள் என்று ஏசுகிறார்; மதிகெட்டதால் அல்ல: மமதை அதிகமாகி விட்டதால்.

எடுத்தெறிந்து பேச, ஒன்றுக்கு ஒன்பதாகத் திருப்பித்தர, கடுமையும் கொடுமையும் நிரம்பிய வார்த்தைகளை உமிழ்ந்திட, தி. மு. கழகத்தில் யாருமே இல்லை என்பதல்ல நிலை; நாம் பெற்றுள்ள வளர்ச்சியும் அடைந்துள்ள இடமும், பொதுமக்கள் தந்துள்ள ஆதரவும் நமது நினைப்பையும் நேர்த்தியானதாக்கி பொறுப்பையும் உயர்த்தி இருப்பதாலே, இழிமொழி உமிழ்வது நமது தகுதிக்கு ஏற்றதல்ல என்ற தெளிவுடன் கழகத் தோழர்கள் நடந்து கொள்கின்றனர். அவரோ? மேலிடத்தில் தமக்கு இடம் கிடைத்து

விட்டதாலேயே எவ்வளவு தரக்குறைவான பேச்சையும் வீசலாம், நாடு தாங்கிக்கொள்ளும் என்ற துணிவுடன் பேசு கிறார்.

கடந்த பத்து ஆண்டுகளாக இவருக்குப் பத்திரிகை களிலே தரப்பட்டுள்ள அளவுள்ள, வகையுள்ள விளம்பரம்—மேய்ப்பு தேய்ப்பு - தி. மு. கழகத்திற்குக் கிடைத்த துண்டா?

காமராஜர் நடக்கிறார்; காமராஜர் படுக்கிறார்; காமராஜர் படிக்கிறார்; காமராஜர் திறக்கிறார்; காமராஜர் சிரிக்கிறார் - என்ற இப்படிப் பல கோலங்களை நித்தநித்தம் இதழ்கள் காட்டிக் காட்டி இவரை ஊட்டி வளர்த்து வருவதுபோல — அதே அளவுகூட வேண்டாம், அதிலே நூற்றிலே ஒரு பங்கு என்ற அளவேனும் - கழகத் துக்குக் கிடைத்ததுண்டா? இல்லை என்பதை எவரும் மறுத்திட முன்வர மாட்டார்கள். இன்று வரையில் ஏழாம் பக்கம், மூன்றாம் பக்கம், கடுகு எழுத்து என்ற அளவிலே தான் கழகத்தாரின் பேச்சு இதழ்களிலே வெளியிடப்படு கின்றது.

மூன்று மணி நேரம் வாதத்திறமையுடன் பேசியிருக்க லாம் கழகத் தோழர்; மூன்றே வரியிலே முடித்துவிடும், இதழ்கள்!

'பேச்சுக்கு மதிப்பளிக்க மறுத்திடும் அதே இதழ்கள், அந்தப் பேச்சினை மக்கள் அறிந்துகொள்ள வேண்டும் என் பதிலே அக்கறைகாட்ட மனமில்லாத இதழ்கள், கழகக் கூட்டத்திலே ஒரு பன்றி புகுந்து விட்டால், அந்தப் பன்றிக் குக்கூட அக்கறை காட்டி விளம்பரம் தேடிக்கொடுக்கின் றன! இந்த நிலையிலே! கழகம் அடைந்துள்ள வளர்ச்சி யைக் காணும்போதுதான் உண்மைக்கு மதிப்பளித்திடும் பண்பினர், கழகத்தைப் பாராட்டுகின்றனர்; அதன் வளர்ச்சி கண்டு வியப்படைகின்றனர்.

எப்படி முடிகிறது இவர்களால் இந்த அளவு வளர்ச்சி அடைய என்பதுபற்றி ஆச்சரியப்படுவோர்களும்,

எந்தவிதமான வசதியுமின்றி எப்படி இவர்கள் இவ் வளவு பணபலம் படைத்த காங்கிரசை எதிர்த்து நிற்க முடிகிறது, தொடர்ந்து போரிட முடிகிறது, குறிப்பிடத் தக்க வெற்றிகளை ஈட்டிட முனைகிறது என்று கேட்டுக்



கேட்டு, உண்மைக் காரணம் புரியாததாலே வியப்பிலாழ்ந் திடுகின்றனர்;

அதே நிலைதான், காமராஜருக்கு எரிச்சலையும், அருவருப்பையும், அடக்க முடியாத பொச்சரிப்பையும், அணைய மறுக்கும் வெறுப்பையும் கிளறிவிட்டு விடுகிறது; அந்த எரிச்சலைப் போக்கிக்கொள்ளவே ஏதேதோ பேசு கிறார்.

எனக்குக் கழகத்திடம் பயம் இல்லை என்கிறார்; யாரும் இவரைப் பார்த்துக் கேட்கக்கூட இல்லை, கழகத் தைக்கண்டு பயமா உங்களுக்கு என்று; இவராகவே சொல்லுகிறார். ஏன்? இவரை மக்கள் பார்த்திடும் பார்வையே என்னமோ போல் இருக்கிறது இவருக்கு. நான் ஒன்றும் பயப்படவில்லை என்று கூறி, தனது 'தைரி யத்தை' வார்த்தை அளவிலாவது மெய்ப்பித்துக் காட்ட வேண்டிய நிலைக்குத் துரத்தப்படுகிறார்.

மற்றவர்களுக்குத் தைரியம் வருவிக்கும் நோக்கத் துடன்,

இந்தத் தடவை கழகத்தை ஒழித்துக் கட்டிவிடுவேன் என்றும்,

இந்தத் தடவை கழகத்துக்கு ஐந்து இடங்களுக்கு மேல் கிடைக்காது என்றும்,

கழகம் ஆடி அடங்கிவிட்டது. அலுத்துக் கீழே விழுந்து விட்டது என்றும், பேசுகிறார்.

அவ்வளவு பலம் இழந்துவிட்ட, மக்களால் வெறுத்து ஒதுக்கப்பட்டுவிட்ட நிலையில் கழகம் இருப்பது உண்மை யானால், ஏன் இவர் நாள் ஒன்றிக்கு ஊர் பத்து என்ற கணக்கில் சுற்றிக் கொண்டிருக்க வேண்டும். பேசுகிற கூட்டம் அத்தனையிலும், கழகம் பற்றியே பேசிக் கொண் டிருக்க வேண்டும், விளக்கக் காணோமே!

உருட்டி மிரட்டிப் பேசுகிறார், அடிபணிவோர் அக மகிழ; உள்ளமோ கொதிப்படைந்து கிடக்கிறது; நமக்கு இருப்பது போன்ற பதவிபலம், பணபலம், பத்திரிகைபலம் அற்றவர்கள், இந்த அளவுக்கு நம்முடன் போரிடுகிறார் களே, களத்திலே எந்த முனையிலும் அவர்கள் கச்சையை வரிந்து கட்டிக்கொண்டு நிற்கிறார்களே, அவர்களுக்கு மக்களின் ஆதரவு ஒவ்வொரு கட்டத்திலும் வளர்ந்தபடி

இருக்கிறதே, அந்த வளர்ச்சியைக் குலைக்க நாம் எடுத்துக் கொண்ட சூழ்ச்சித் திறன் அவ்வளவும் பயனற்றுப் போயினவே, இப்படியே நிலைமை வளர்ந்தால், என்ன ஆகும், நாம் எங்குத் துரத்தப்பட்டு விடுவோம் என்று எண்ணுகிறார்; எரிச்சல் மூளுகிறது; அரிப்பைப் போக்கிக் கொள்ள, தேய்த்துக்கொள்கிறார், வேகவேகமாக.

தம்பி! இந்தத் தடவை விடமாட்டேன், வேரோடு பறித்துக் கீழே போட்டுவிடுவேன் என்று வீரம் பேசு கிறாரோ, இதுவாவது புத்தம் புதிதா? இல்லை! பழைய பல்லவி!!

*1957*-லும் இதைத்தான் சொன்னார்; *1962*-லும் இதையேதான் சொன்னார்; இப்போதும் இதையே சொல்லிக் கொண்டிருக்கிறார்.

சென்னை மாநாகராட்சி மன்றத் தேர்தலின்போது கூட இதனைச் சொன்னார். தெருத்தெருவாகக் கூட்டம் போட்டு மட்டுமல்ல, வீடுவீடாக நுழைந்து. நடந்தது என்ன? நாடறியும்!

ஆகவே, தம்பி! அவர் தூற்றுவது பற்றி எப்படி நான் கவலைப்படவில்லையோ அதுபோலவேதான் அவர் மிரட்டு கிறாரே இந்தத் தடவை ஒழித்துக் கட்டி விடுவேன் என்று, அதற்காகவும் நான் கவலைப்படவில்லை; தேவையு மில்லை.

அத்தனை பெரிய இடத்தைப் பிடித்துக் கொண்டவர், அத்தனை பணபலத்தைத் திரட்டியவர், பத்திரிகைகளின் பிரசாரபலத்தைப் பெற்றுக் கொண்டவர், நம்மை எதிர்த்து நிற்பதற்காக, எவ்வளவு பாடுபட வேண்டி நேரிடுகிறது: காடு மேடு என்று பாராமல், பகல் இரவு என்று பாராமல், சுற்றிக் கொண்டிருக்க வேண்டி இருக்கிறது என்பதைக் கவனிக்கும் போதுதான், களிப்பு பொங்குகிறது! கழகம் அவரை அத்தனை 'தண்டால்' போடவைக்கிறது என்பதை எண்ணிப் பெருமிதமே கொள்ளச் செய்கிறது.

ஐந்தே இடங்கள் தானாம், தம்பி! நமக்கு! 1967ல்!

அவ்வளவு திட்டவட்டமாகத் தெரிகிறது நமது எதிர் காலம்—இந்த அரசியல் ஆருடக்காரருக்கு!!

ஆனால், அவர் அலைவதையும் அரற்றுவதையும் பார்த்தால், எப்படி இருக்கிறது?



கொண்டுவா கூர்மையான வாள்! என்று கேட்டிடும் வீரனை எந்த எதிரியை வீழ்த்த? என்று நண்பன் கேட்க, இதோ இதை வெட்டிடத்தான் என்று கூறி, உருட்டி வைக்கப்பட்டுள்ள வெண்ணெய் உருண்டையை அவன் காட்டினால்? கை கொட்டிச் சிரிக்க மாட்டார்களா! அந்தச் சிரிப்பொலி எழுப்பித்தான் மக்கள் பழமொழி, சமைத்தளித்தனர், வெண்ணெய் வெட்டிச் சிப்பாய் என்ப தாக.

ஆத்திர மூட்டத்தக்க முறையிலே பேசிக்கொண்டு வரு பவர்- ஏன் சில கட்சிகள் காங்கிரசிடம் கோபித்துக்கொள் கின்றன என்ற ஒரு கேள்வியை அவரே எழுப்பி, அதற்கு அவரே விடை வீசி மகிழ்ந்து கொள்கிறார்-

ஏன் காங்கிரசிடம் கோபம் கொள்கிறார்கள்? ஊரி லெல்லாம் மின்சார விளக்குப் போட்டிருக்கிறோமே, அதனாலா? பள்ளிக்கூடங்களை நிறையக் கட்டியிருக் கிறோமே. அதனாலா? ஏழைகள் படிக்க வசதிசெய்து கொடுத்திருக்கிறாமே, அதனாலா? என்ன காரணத்துக் காகச்சிலகட்சிகள் காங்கிரசிடம் கோபித்துக்கொள்கின்றன என்று கேட்கிறார்.

நன்றி கெட்டவர்கள்! புத்தி கெட்டவர்கள்! ரயிலே இவர்களுக்கு இப்படி இருக்குமென்று நாம்தான் காட்டி னோம்!! ஆறுகளைக் கட்டுப்படுத்தினோம்! ஆஸ்பத்திரிகள் அமைத்தோம்! நெடுஞ்சாலைகளைப் போட்டுக் கொடுத் தோம்; கல்விச் சாலைகளையும் விஞ்ஞானக் கூடங் களையும் அமைத்தோம்; மின்சாரத்தைக் கொடுத்து இருளை ஓட்டினோம்; இயந்திரங்களைத் தந்து உழைப்பின் கடினத்தைக் குறைத்து உற்பத்தி பெருகிடச் செய்தோம். இவ்வளவும் செய்த நம்மிடம், ஏன் இவர்கள் கோபம் காட்டுகிறார்கள்—என்று வெள்ளைக்காரன் கூடத்தான் வெகுண்டுரைத்தான்!

பாலமும் பள்ளிக்கூடமும், பகல் உணவும், சீருடையும், மருத்துவ மனையும் பிறவும், இவர் தந்தாராம்!! ஆகவே, தயாபரனே! போற்றி போற்றி! என்று மக்கள் இவர் தாள் பணிந்து, தூபதீப நைவேத்தியம் படைத்துப் பூஜை செய்திட வேண்டுமாம்! இது இவருடைய அரசியல்!! இதற்கு அடிவருடிகள் வாய் பிளந்து கொண்டு நிற்கிறார்கள்.

கட்டினார், வெட்டினார், திறந்தார், ஊட்டினார்—சரி!—எதனால்? வரிப்பணம் கொட்டிக் கொட்டிக் கொடுக்கிறார்களே மக்கள், அதனால்.

இப்போது இவர் கட்சியை எதிர்த்து மக்களிடம் ஆதரவு கேட்கும் கட்சிகள் வெற்றி பெற்றதும்

பாலங்களை உடைத்தெறிவோம்

பள்ளிக்கூடங்களை இடித்துத் தரைமட்ட மாக்கு வோம்

மருத்துவ மனைகளை மூடிவிடுவோம்

என்றா பேசுகின்றன! பைத்தியக்கார விடுதியிலே உள்ளவன் கூடப் பேசமாட்டான் அதுபோல.

மக்களைக் கசக்கிப் பிழிந்து வரி வாங்கி ஊழல், ஊதாரிச் செலவு, நிர்வாகச் சீர்கேடு, பாதகர்களுக்குப் பங்கு என்ற முறையில் பாழாக்கியதுபோக மிச்சம் இருப்பதைக் கொண்டு, நீங்கள் கட்டிடும் பாலம் பள்ளிக்கூடத்தைவிட அளவிலும் சரி, தரத்திலும் சரி, உயர்வானதாக நாங்கள் அமைத்துத் தரமுடியும் என்று கூறித்தான் மக்களிடம் ஆதரவு தேடுகின்றன.

இதுதான் ஜனநாயக முறை! பள்ளிக்கூடம் கட்டும் கட்சி என்று ஒன்றும், பள்ளிக்கூடத்தை இடித்திடும் கட்சி என்று மற்றொன்றுமா இருக்கிறது? இல்லை! இதனையா மக்கள் உணரமாட்டார்கள்! ஆனால், இவர் உயர் இடத்திலே இருந்து பேசுவதால், வாய்திறவாமல் கேட்டுக்கொள் கிறார்கள். அச்சம் அவர்களின் வாயைத்தான் பூட்டிவிடு கிறது, சிந்தனையை அல்ல!

உணர்வு பெற்ற மக்கள், பாலம், பள்ளி, படிப்பகம், மருந்தகம், மின்சாரம், பகலுணவு என்பனவற்றைத் தரவல்லது காங்கிரஸ் ஒன்றுதான் என்று நம்பிடின், எப்படி நூற்றுக்கு அறுபது என்ற அளவு மக்கள் மற்றக் கட்சிகள் இதே காரியத்தை இதைவிடத் திறமையாகச் செய்வார்கள் என்று நம்பி, ஓட்டு அளித்திருக்க முடியும்! அளித்திருக்கிறார்களே, என்ன பொருள் அதற்கு!

காமராஜர் பேசிடும் அரசியல், அபத்தம் என்பதுதான் மக்கள் காட்டிய போக்குக்குப் பொருள். வேறென்னவாக



இருக்க முடியும்- ஏன் இவர்கள் கட்டிய பாலம் பள்ளிக் கூடம் ஆகியவற்றைக் கண்ட பிறகும் காங்கிரசை எதிர்த்துப் பெரும்பான்மையினர் ஓட்டளித்தனர்?

ஆளும் வாய்ப்பு அளிக்கப்பட்டால் காங்கிரஸ் கட்சியைவிடத் திறமையாக மற்றக் கட்சிகள் மக்க ளுக்குத் தேவையான நலன்களைச் செய்து தருவார்கள் என்ற நம்பிக்கையால்!

தம்பி! மக்கள் நம்மிடம் இவ்விதமான நம்பிக்கையைத் தெரிவித்திருக்கும்போது, நாம் இவருடைய பேச்சை மதித் திடத் தேவையில்லை, அல்லவா!

பள்ளிக்கூடம் பார், பாலம் பார், பகலுணவுபார், மருந்தகம் பார், மின்விளக்கு பார்!—என்று இவர் காட்டு கிறார்; மக்களோ—

பள்ளிச் சிறுவர்களின் ஏழ்மை நிலையைப் பார்!

ஆசிரியர்கள் படும் அவதியைப் பார்!

நடுக் கொள்ளைக்காரன் நடத்தும் தர்பாரைப் பார்!

நோயினால் நலிந்திடும் ஏழையைப் பார்!

வேலையற்றோர் படும் வேதனையைப் பார்!

ஊழலும் ஊதாரித்தனமும் பெருகி விட்டதைப் பார்!

கள்ளமார்க்கட்டைப் பார்!

கொள்ளை இலாபம் அடிப்பவனையும் பார்! அவனுடன் கூடிக் குலாவும் காங்கிரஸ் தலைவர்களை யும் பார்!

நாங்கள் கொட்டிக் கொடுக்கும் வரித் தொகை யையும் பார்! எமக்குக் கிடைத்திடும் வசதி எவ்வளவு குறைவு என்ற கணக்கையும் பார்!

பணக்காரன் மேலும் பணக்காரன் ஆவதைப் பார்! பஞ்சை, பராரியாகிடும் பரிதாபத்தையும் பார்!

என்று கூறுகிறார்கள். என்ன பதில் சொல்லுவது? என்ன பதில் சொல்கிறார்.

ஊரிலே ஏழடுக்கு மாடிக் கட்டடம் பல இருக்க அவை களைக் கண்டு பாராட்டாமல், ஊர்க் கோடியிலுள்ள சாக்கடையைப் பார்த்துவிட்டு முகத்தைச் சுளித்துக் கொள்ளுவதா என்று கேட்டாராம்!

சாக்கடை ஓரத்திலே இருந்து தீரவேண்டிய நிலையிலே தள்ளப்பட்டவர்கள், வேறு இடத்திலே இருக்கும் ஏழடுக்கு மாளிகையை எண்ணி மகிழ்ந்து கொண்டிருக்க வேண்டும் என்கிறாரா?

சேற்றிலே உழல்வார்கள் ஏழைகள், ஐயா! சேறு! என்று கூறினால், இதனையே சொல்லிக் கொண்டிருக்கா தீர்கள், வேறு இடத்தில் பன்னீரில் குளித்துவிட்டு, பரிமள கந்தம் பூசிக்கொண்டு, பால் பாயாசம் சாப்பிட்டுவிட்டு, பஞ்சணையில் படுத்துக்கொண்டு சுகமாக இருக்கிறார்கள், அதனை எண்ணித் திருப்திப் பட்டுக்கொள் என்றா கூறுவது?

அவ்விதமான புத்திமதி கூறுகிறார், சோஷியலிசம் என்ற புனிதக் கருத்தை ஏற்றுக் கொண்டிருப்பதாகப் பேசுபவர்.

கைகால் ஊனம் இல்லை! காது செவிடு இல்லை. கண்ணிலே மட்டுந்தான் 'பூ' விழுந்து விட்டது; பார்வை இல்லை; இருந்தால் என்ன; உடலிலே மற்றப் பகுதிகள் ஒழுங்காக இருக்கின்றன, அதுபோதும்; குறைபட்டுக் கொள்ளாதே; கண் பழுதானால் என்ன, காலைப் பார், கையைப் பார், காதைப் பார்! என்று கூறிடுபவரை, பாராட்டவா செய்வார்கள். பாராட்டச் சொல்கிறார், இதுபோலப் பேசிடும், இவரை!!

காங்கிரசாட்சி மக்களிடம் கசக்கிப் பிழிந்து வசூலித்திருக்கும் வரிப் பணத்தின் அளவைக் கணக்குப் பார்க்கும்போது, அந்த ஆட்சி மக்களின் வசதிக்காகச் செய்திருக்கிற ஏற்பாடு மிக மிகக் குறைவு என்பது நமது குற்றச்சாட்டு!

காங்கிரசிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள ஆட்சியை, மக்கள் மற்றவர்களிடம் ஒப்படைத்தால், காங்கிர சாட்சியால் ஏற்பட்டுள்ள கேடுகளை நீக்குவதுடன், ஏழைகளைக் கசக்கிப் பிழியும் வரிகளைக் குறைப்ப



துடன் நலன்கள் மிகுதியாகும்படி செய்யமுடியும் என்பது நாம் அளிக்கும் உறுதிமொழி.

இதுபோல மக்களிடம் கூறிடும் உரிமையைத் தருவதே ஜனநாயக முறை.

ஒருமுறை மற்றவர்களிடந்தான் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்துப் பார்ப்போமே

என்ற முடிவெடுக்க வேண்டிய பொறுப்பும் உரிமையும், திறமையும் பெற்றவர்கள் பொதுமக்கள். அவர்களிடம், தமது கட்சியினர் ஆட்சி நடத்திச் சாதித்தவைகளை எடுத்துக் கூறவேண்டியவர் காமராஜர்.

மற்றவர்களுக்கு நாடாளும் தகுதியும் திறமையும் இல்லையென்று கூறுவது துடுக்குத்தனம். ஜனநாயகப் பண்பு மேலோங்கியுள்ள நாட்டினிலே அத்தகைய அரசியல் துடுக்குத்தனத்தை அனுமதிக்க மாட்டார் கள்.

இங்கு மக்கள் மனத்திலே, அதிகாரத்திலுள்ளோர் மூட்டி விடும் அச்சமும், அவிழ்த்துவிடும் அடக்கு முறையும், இத்தகைய அரசியல் துடுக்குத்தனம் நடமிட இடமளித்து விடுகிறது.

ஆனால், மெள்ள மெள்ள அந்த 'அச்சம்' கலைந்து கொண்டு வருகிறது. கேள்விகள் பிறந்துவிட்டன! கண்டனக் கணைகள் பறந்தபடி உள்ளன. விழிப்புணர்ச்சி தோன்றிவிட்டது.

இதை ஓரளவு உணருவதால்தான் காமராஜர், தூற்றித் துளைத்திடலாமா என்ற நைப்பாசையைக் கடைசிக் கருவியாகக்கொண்டு பயணம் நடத்தி வருகிறார்.

நாடாள எமக்கன்றி வேறு எவருக்கும் தகுதி இல்லை என்று பேசிப் பார்க்கிறார்.

கடவுள் ஒழிப்பு, பிராமண எதிர்ப்பு என்று எதை யாவது செய்து கொண்டிருப்பதை விட்டுவிட்டு, ஏன், நாடாள விழைகிறீர்கள் என்று நம்மைக் கேட்கிறார்.

அதனைக் கண்டதால்தான் தம்பி! எனக்கு, நந்தனாரைப் பார்த்து வேதியர் கேட்டதாகப் பாடுகிறார்களே, அந்தப் பாடல் நினைவிற்கு வந்தது.

மற்றொன்றும் புரிந்தது. இவ்வளவு வசதிக் குறைவுகளுக்கு இடையிலேயும், நாம் ஏற்படுத்தி வைத்திருக்கிற மக்கள் எழுச்சி, காமராஜரை இவ்வளவு வேலை வாங்குகிறதே, தரக்குறைவாகப் பேசியாவது பார்க்கலாம் என்ற நிலைக்குத் துரத்திவிட்டிருக்கிறதே, நாம் இன்னமும் முழு அளவில், பணியாற்றினால் எவ்வளவு வேகமாகக் காங்கிரஸ் எதேச்சாதிகாரம் வீழ்ந்துபடும் என்பதும் புரிகிறது. அது புரிவதால்தான் தம்பி! உன்னைக் கேட்டுக்கொள்கிறேன்,

நிலைமை மிக நன்றாக இருக்கிறது.

உன் ஆற்றல் தக்க பயனைத் தந்திருக்கிறது.

உன் பணி காரணமாக எழுந்துள்ள விழிப்புணர்ச்சி காமராஜரைக் கடுமையாக வேலை வாங்குகிறது.

காங்கிரசாட்சியின் கேடுகள் பற்றி நீ தந்திடும் விளக்கங்களை மறுத்திட வக்கற்ற நிலையினில் காமராஜர், கடுமொழியும் இழிமொழியும் தவிர வேறு எதனையும் உமிழ முடியாத நிலைக்கு வந்துவிட்டார்.

ஆகவே, மேலும் உற்சாகத்துடன், நம்பிக்கையுடன் பணியாற்றிடப் புறப்படு என்பதாக.

கழகத் தோழர்கள் சீரிய முறையில் பணியாற்றுகின்றனர்; மகிழ்ச்சி அடைகிறேன்.

ஆனால், ஒவ்வொருவரும் தங்களைத் தாங்களே கேட்டுக்கொள்ள வேண்டும்,

மற்ற எந்தவிதமான ஆசாபாசங்களையும் ஒதுக்கி வைத்துவிட்டுப் பணியாற்றுகிறேனா?

என் ஆற்றலின் முழு வேகத்தையும் பணியாற்றுவதிலே இணைத்திருக்கிறேனா?

தொடர்ந்து பணியாற்றுகிறேனா? தோழர்களை அணி திரட்டிக் கூட்டாகப் பணியாற்றுகிறேனா?

ஆத்திரப்படாமல், பொறுப்புணர்ச்சியுடன் பணியாற்றுகிறேனா?

ஜனநாயகக் கடமை உணர்ச்சியுடன் பணியாற்றுகிறேனா?



மக்களுக்கு நல்லாட்சி கிடைத்திடச் செய்யும் மகத்தான தொண்டு என்பதை உணர்ந்து பணியாற்றுகிறேனா?

தம்பி! இந்தக் கேள்விகள், ஒருவரை மற்றொருவர் கேட்டுக் கொள்வதற்காக அல்ல; ஒவ்வொருவரும் தங்களைத் தாங்களே கேட்டுக்கொள்வதற்காக. ஏன் இத்தனைக் கூறுகிறேன் என்றால், தம்பி! உன்னால் இப்போது செய்திடுவதைக் காட்டிலும் அளவிலும் தரத்திலும் உயர்வான பணியாற்றிட முடியும். நாளை! நாளை என்று எண்ணிக் கொண்டிருந்திடக் கூடாது. இன்று இன்று!— என்ற எழுச்சியுடன் புறப்பட்டாக வேண்டும். இழிமொழி உமிழ்ந்திடுகிறார் இடம் பிடித்துக் கொண்டவர்; அரசியல் ஆணவத்தை அடக்கிட முடியும் என்ற நம்பிக்கை இருப்பதால்தான் உன்னிடம் கூறுகிறேன்; முறையிடுகிறேன்.

அண்ணன்,

8—5—'66



காஞ்சிக் கடிதம்: 62

# உன்னைத்தான் நம்பியிருக்கிறேன்!

★ காங்கிரஸ் பேசும் சோஷியலிசம் போலிப் பேச்சு!

★ உழுபவனுக்கு நிலமா என்றவர் காமராசர்!

★ எதேச்சாதிகாரத்தை வீழ்த்த உன்னையே நம்பியுள்ளேன்!

★ நான் எதிர்பார்ப்பது ஒன்றே! உன் இதயத்தில் இடம்!

தம்பி,

> எனக்காக அல்ல—என் இலாபத்துக்காக அல்ல—ஏழை எளியவர்களுக்காக—இல்லாது இடர்ப்படுவோர்களுக்காக - சாவடி கட்ட - ஆகவே, விலை குறைவு என்று தயங்காதே - நல்ல காரியத்துக்காக - தர்மத்துக்காக - புண்ணிய காரியத்துக்காகக் கொடு!

உருக்கமாகப் பேசுகிறார்; மறுக்கமுடியாத 'நியாயம்' எடுத்துக் காட்டுகிறார் தண்டாயுதபாணி கோவில் தர்மகர்த்தா - ஆறு ஆயிரம் மதிப்புள்ள 'சதுரத்தை' இரண்டாயிரத்துக்குத் தந்துவிடும்படி விளங்கானூராரிடம்.

விலை மிகவும் குறைத்துக் கேட்கிறார். நாலு ஆயிரத்துக்கு முன்பு ஒருவர் கேட்டார், ஆறுக்கு அரை பைசா குறையாது என்று அடித்துப் பேசினோம். வேறு ஒருவரும் இவ்வளவு குறைவாக விலை கூறமாட்டார்கள், ஆனால்,,,



தர்மகாரியம் என்கிறார்; புண்ணியம் கிடைக்கும் என்கிறார்; சாவடி கட்ட என்கிறார்; எப்படி மறுக்க முடியும் - ஒரே குழப்பமாக இருக்கிறதே என்று எண்ணி ஏக்கப் படுகிறார் விளங்கானூரார்.

ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு பார்த்தால், அந்தச் சதுரத்தில் 'தண்டாயுதபாணி மாளிகை' தெரிகிறது; ஒருநாள் தங்க வாடகை இருபத்து ஐந்து ரூபாய் என்று குறிப்புப் பலகை தொங்குகிறது. 'அறைகாலி இல்லை' என்ற அறிவிப்புப் பலகையும் தொங்கவிடப்பட்டிருக்கிறது. சாவடி கட்ட! ஏழைகளுக்காக! தர்மகாரியத்துக்காக! - என்றுமயக்கி, சதுரத்தை மிகக் குறைந்த விலைக்கு வாங்கியவர், உயர்தரமான உணவு விடுதி கட்டிக் கொழுத்த இலாபம் அடைகிறார்.

'மாளிகை'யிலே பெரிய பெரிய புள்ளிகள் வந்து தங்குகிறார்கள்: கும்பாபிஷேகம் காண வந்தவர்கள் அல்ல! கள்ளச்சரக்கு வியாபாரம்செய்வோர்! ஊருக்குத்தெரிகிறது. ஆனால், அதிகாரிகளிடம் தருவதற்கான ஆதாரங்கள் மட்டும் எவர் கரமும் சிக்குவதில்லை; அவ்வளவு திறமையாக நடத்தப்படுகிறது திருட்டு வேலை.

தர்மகாரியம்—புண்ணிய காரியம்—என்று மயக்க மூட்டும் பேச்சுப் பேசி, விவரமறியாதானை வலையிலே விழச் செய்து, இலாப வேட்டையாடிடும் வஞ்சகத்துக்கும் நாங்கள் ஜனநாயக சோஷியலிசத்தைத் தந்திடப்போகிறோம்; ஏழையை வாழ வைக்கப் போகிறோம் என்ற ஆசை வார்த்தையை ஊட்டி, ஓட்டுகளைத் தட்டிப் பறித்துக்கொண்டு; ஏழையைக் கசக்கிப் பிழிந்து கொழுத்திடும் செல்வவான்களுக்குத் தங்கள் 'முதுகை'க் கொடுத்து அவர்கள் வீசிடுவதை வழித்தெடுத்து சுவைத்திடும் போக்குக்கும் அதிக வித்தியாசமில்லை. அளவிலே அவை வேறு வேறு; தரத்திலே இரண்டும் ஒன்றுதான்.

> களவு என்று எண்ணாதே குழந்தாய்! உனக்கு நற்கதி தந்திடவே நாம் இதனைச் செய்தோம். செல்வம், மனத்தை மயக்கும்; பண்பை அழிக்கும்: கடவுளிடம் கொண்டிட வேண்டிய பக்தியினை அழித்தொழிக்கும்.

> பணம், பாபத்தின் சின்னம்! அதிலே பற்றும் பாசமும் மிகுந்திடின் பாபத்தின் பிடியிலே சிக்கிக் கொள்வாய்;

மகனே! உன்னைப் பாபத்தின் பிடியிலிருந்து விடுவிக்கவே நாம் உன் பொருளைப் பறித்துக் கொண்டோம். சென்று சிவனருளை நாடு;

என்று வழிப்பறி நடத்தியவன் பேசிடின் அதற்குப் பெயர் 'உபதேசம்' என்றாகுமா! சூது! வஞ்சகம்! சூழ்ச்சி!

ஆனால், பாப புண்ணியம்பற்றிய உருக்கத்தைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு ஏய்த்திடுவோர்போல, ஆட்சியில் அமர்ந்திடுவோர் மயக்கமூட்டும் பேச்சினை வீசி மக்களைத் தம் பக்கம் ஈர்த்துக்கொண்டு, பிறகு அந்த மக்களுக்கே கேடு செய்திடத் துணிகின்றனர்.

காங்கிரசாட்சியினர் பேசிடும் ஜனநாயக சோஷியலிசம், இதுபோன்றதோர் சூழ்ச்சியாகவே இருந்து வருகிறது.

போலிப் பேச்சு—அல்லது மயக்கமூட்டும் பேச்சு அல்லது சூழ்ச்சிப் பேச்சு காங்கிரசாட்சி பேசிடும் சோஷியலிசம் என்பதை நன்கு உணர்ந்து கொண்டிருப்பதால்தான், சீமான்கள் காங்கிரஸ் கட்சியில் அச்சமின்றி இருந்து வருகிறார்கள்.

உண்மையிலேயே காங்கிரசாட்சி சோஷியலிசத்தை நடைமுறைக்குக் கொண்டு வந்துவிடும் என்ற நிலைமை இருந்திடின் இத்தனை முதலாளிகள் காங்கிரஸ் முகாமிலே இருந்து வருவார்களா? தற்கொலை செய்துகொள்ளச் சம்மதிப்பார்களா!

ஒரு புதுவரி தமக்குப் பாதகமான முறையிலே போடப்பட்டுவிட்டால் காட்டுச் கூச்சலிட்டு, எதிர்ப்புக் கிளப்பி, அந்த வரி எடுபடுகிற வரையில் புயலைக் கிளப்பியபடி இருக்கும் இயல்பு படைத்த முதலாளிகள், தங்கள் வாழ்க்கை முறைக்கே உலைவைக்கக் கூடிய திட்டமான சோஷியலிசத்தைக் காங்கிரசாட்சி மேற்கொள்வதாக அறிவித்தது கேட்டு வாளாவா இருப்பார்கள்! தேளாகிக் கொட்டுவார்களே! ஆனால், அவர்கள் ஒரு துளியும் கவலைப்படாமலல்லவா இருக்கிறார்கள்! ஏன்? அவர்களுக்கு நன்றாகத் தெரியும் காங்கிரசாட்சி பேசிடும் சோஷியலிசம், மக்களை மயக்கவே தவிர, தங்கள் ஆதிக்கத்தை மாய்க்க அல்ல என்ற உண்மை,



நிலத்துக்கு உச்சவரம்பு கட்ட சட்டம் வரும் என்று தெரிவித்ததும், எவ்வளவு எதிர்ப்பு, ஆர்ப்பரிப்பு செய்தனர் இந்தப் பிரபுக்கள்! இன்று சோஷியலிசம் பேசப்படுகிறது. கவலையற்று இருக்கிறார்கள் என்றால் காரணமற்றா?

ஆதரித்தே கூடப் பேசுகிறார்கள் சீமான்கள்; வரட்டுமே சோஷியலிசம் என்று! ஏன்? அவர்கள் மிக நன்றாக அறிவார்கள், காங்கிரசாட்சி சோஷியலிசத்தை நடைமுறைக்குக் கொண்டு வராது என்பதனை.

அமெரிக்கத் தலைவரொருவரைக் கேட்டனர் அந்நாட்டு முதலாளிகள், இந்தியாவுக்குக் கடன் கொடுங்கள் தாராளமாக; ஏராளமான 'முதல்' போட்டுத் தொழில் நடத்துங்கள் என்று கூறுகிறீர்களே, இந்தியாவிலே காங்கிரஸ் அரசு, சோஷியலிசத் திட்டத்தினை மேற்கொண்டிருக்கிறதே, அந்த நிலையில் நாங்கள் எப்படி முதல் போட முடியும் என்று.

அமெரிக்கத் தலைவர் சொன்னார், இந்தியாவில் காங்கிரசாட்சியினர் பேசிடும் சோஷியலிசத்தைக் கண்டு பயப்படாதீர்கள்; அந்தச் சோஷியலிசம் நம்மை ஒன்றும் செய்துவிடாது என்று.

விவரம் தெரிந்தவர்கள், காங்கிரஸ் கட்சியின் அமைப்பை அறிந்தவர்கள், நன்றாகத் தெரிந்து கொண்டிருக்கிறார்கள், பேசப்படும் சோஷியலிசம் போலி என்று...ஆனால், பாமரருக்கு அந்தப் பேச்சு தித்திப்புத் தரும் என்பதைத் தெரிந்துகொண்டுதான் காங்கிரஸ் தலைவர்கள் ஓயாமல் சோஷியலிசம் பற்றிப் பேசுகிறார்கள். காங்கிரஸ் ஆதிக்கத்தை எதிர்ப்பவர்களெல்லாம் சோஷலிச விரோதிகள் என்று பழியும் சுமத்துகிறார்கள்.

எவரெவர் சோஷியலிசம் ஏற்பட்டால் ஆதிக்கத்தை, உடைமைகளை, சுகபோகத்தை இழந்தாக வேண்டி நேரிட்டுவிடுமோ அவர்களெல்லாம் வாய் மூடிக் கொண்டிருக்கிறார்கள் — சோஷியலிசத் திட்டத்தை எதிர்க்காமல்.

சோஷியலிசம் ஏற்படின், அதனால் நிரம்பப் பயன் அடையக்கூடிய ஏழை எளியோர் நடுத்தரக் குடும்பத்தினர் மிகப்பெரும் அளவு இடம் பெற்றுள்ள

கழகம், நம்முடையது. உள்ளபடி சோஷியலிசம் நடைமுறைக்கு வரும் என்றால், நாமல்லவா மகிழ்ச்சியால் துள்ளுவோம்; திட்டத்தை வரவேற்போம்.

நாம் அவர்கள் சோஷியலிசம் பேசுவதையும் பார்க்கிறோம்; அதேபோது சோஷியலிசப் பகைவர்கள் அந்த முகாமிலே மூலவர்களாக இருப்பதையும் காண்கின்றோம். எனவேதான், வெறும் மயக்கமூட்டும் பேச்சு இது என்று கூறுகிறோம்,

சோஷியலிசம் பேசி மக்களை ஏய்ப்பதனை எதிர்க்கிறோம், சோஷலிசத் திட்டத்தை அல்ல.

ஆரோக்கியசாமி என்ற பெயருள்ள ஒருவர் அக்கிரமம்செய்திடக் கண்டு கண்டித்தால், உடனே ஆரோக்கியத்தைக் கண்டிக்கிறோம், வெறுக்கிறோம் என்றா பொருள்? பித்தரும் கூறமாட்டார் இதுபோல. ஆனால், பெரிய தலைவர்கள் பேசுகிறார்கள், கழகம் சோஷியலிசத்தை எதிர்க்கிறது என்று.

ஆறாயிரம் மதிப்புள்ள சதுரத்தை இரண்டு ஆயிரம் கொடுத்துத் தட்டிக் கொண்டு போகத் தந்திரம் செய்பவனைக் கண்டித்தால், உடனே அவன், நாம் 'சாவடி' கட்டும் புண்ணிய காரியத்தைத் தடுக்கிறோம், எதிர்க்கிறோம் என்றா பேசப் புறப்படுவது?

ஆனால் காமராஜர், இந்த அபத்தப் பேச்சைத்தான் அள்ளி அள்ளி வீசுகிறார், ஊரூருக்கும்.

நான் ஏழை பணக்காரன் வித்தியாசத்தைப் போக்கப் பாடுபடுகிறேன், அதனை இந்தக் கழகத்தான் எதிர்க்கிறான் என்றாராம், பெரியவர்!

ஏழை பணக்காரன் என்ற வித்தியாசத்தைப் போக்க இவர் வைத்துக் கொண்டுள்ள திட்டம் என்ன? சொல்லட்டுமே பார்ப்போம்,

திட்டவட்டமாக அவர் தமது ஏற்பாட்டினைக் கூறட்டும், அது போலியாகிப் போய்விடாது என்பதை விளக்கட்டும், பிறகு அந்தத் திட்டத்தைக் கழகத்தினர் எதிர்க்கிறார்களா என்று பார்க்கட்டும்.

நான் ஏழை பணக்காரன் பேதத்தைப் போக்க இன்ன திட்டம் தீட்டினேன், அதனை இந்தக் கழகத்



தான் எதிர்த்தான் என்று எடுத்துக்காட்டி மெய்ப்பிக்கட்டும், பார்ப்போம்.

ஓட்டை ஒடிசல் உள்ள முறையிலே தயாரிக்கப்பட்டது என்றபோதிலும் நிலத்துக்கு உச்சவரம்பு கட்ட சட்டம் வந்தபோது கழகம் வரவேற்றது; நாடு அறியாதா இந்த உண்மையினை.

நிலப்பிரபுக்கள் தப்பித்துக் கொள்வதற்கான ஓட்டைகள் சட்டத்திலே இருக்கின்றன என்பதை எடுத்துக் காட்டிற்று, கழகம்.

உச்சவரம்புச் சட்டத்திலிருந்து தப்பித்துக் கொள்ள, நிலப்பிரபுக்கள் செய்திடும் சூழ்ச்சிகளை விளக்கிக் காட்டிற்று.

உச்சவரம்புச் சட்டத்தை ஏய்க்க, நிலப் பிரபுக்கள் செய்துகொண்ட நிலப் பிரிவினைகள், சூதானவை, புரட்டானவை என்பதனைக் கழகம் அம்பலப்படுத்திற்று,

இந்த முறையிலே கழகம் நடந்து கொண்டதே தவிர நிலத்துக்கு உச்சவரம்பு கட்டவே கூடாது. அப்படிப் பட்ட சட்டம் தவறானது, என்று கூறிற்றா? எதிர்த்தா? எடுத்துக்கூறச் சொல்லட்டுமே பார்க்கலாம்.

நில உச்சவரம்புச் சட்டத்தை வரவேற்று அந்தச் சட்டம் மேலும் செம்மையானதாக்கப்பட வேண்டும்; அதில் உள்ள ஓட்டைகள் அடைக்கப்பட வேண்டும் என்று வாதாடிய நமது கழகமா சோஷியலிசத்தை எதிர்க்கும் கழகம். பேதையும் இதனை நம்பமாட்டானே! ஆனால், பெரிய இடத்தைப் பிடித்துக் கொண்டவர் பேசுகிறார் இப்படி ஒரு அபத்தத்தை.

இவர் போன்றாரே, சோஷியலிசப் பகைவர்கள் என்று பகிரங்கமாகக் குற்றம் சாட்டுகிறோம்.

இவர் போன்றார்க் கூடிக் குலாவுவதும் தேடிப் பெற்று மகிழ்வதும் முதலாளிகளை என்று மெய்ப்பித்துக் காட்டிக்கொண்டு வருகிறோம்,

கபிஸ்தலமும், வாண்டையாரும், வடபாதியும், நெடும்பலமும், செய்யூரும் பிறவும், காங்கிரசின்

கொலுமண்டபத்திலே நாயகர்களாக இருந்து வருவதைக் காட்டுகிறோம்.

சீமான்களுக்காக இந்த ஆட்சியிலே தொடர்ந்து செய்யப்பட்டுவரும் வசதிகள் எவைஎவை என்பதனை எடுத்துக்காட்டி வருகிறோம்.

இந்த ஆட்சியின் துணைபெற்று எவ்வளவு வேகமாக முதலாளித்தனம் வளர்ந்து கொண்டு வருகிறது என்பதனை விளக்கிக் காட்டுகிறோம்.

இந்த ஆட்சியின் தயவினால் இலாபவேட்டை நடத்துபவர்கள், இந்த ஆட்சியை நடத்திடும் கட்சிக்கு கோடிக்கணக்கிலே 'நிதி' தந்து வருவதற்கான புள்ளி விவரத்தைக் காட்டுகிறோம்.

இவ்விதமாக காங்கிரஸ் நடத்திடும் கபடத்தை உடைத்தெறியும் கழகமா சோஷியலிசம் வேண்டாம் என்று கூறிடும். மந்த மதி படைத்தவனும் ஏற்கமாட்டானே! ஆனால், பேசுகிறாரே, பெரியவர்!! ஏன்! எதையும் பேசலாம் என்ற நிலை தமக்கு இருக்கிறது என்ற நினைப்பினால்.

சோஷியலிச தத்துவத்துக்கு முரணாக முதலாளித்துவத்துக்கு அரணாக இருந்து வரும் மோட்டார் பஸ் தொழிலைத் தனிப்பட்ட முதலாளிகளிடம் விட்டு வைக்காமல், சர்க்கார் ஏற்று நடத்தவேண்டும் என்ற மசோதாவைக் கழகம் கொண்டு வந்தபோது எதிர்த்து மாய்த்தவர்கள் யார்? இதே காமராஜர் கட்சி அல்லவா? அன்று சோஷியலிசத் திட்டத்தைப் பதைக்கப் பதைக்கப் படுகொலை செய்துவிட்டு இன்று சோஷியலிசம் பேசினால், யார் நம்புவார்கள்?

கூட்டிவைத்துக் கேட்கவில்லையா இந்த மகானுபாவர்கள், பஸ் முதலாளிகளை.

பிழைக்கப் போகிறீர்களா?

சாகப்போகிறீர்களா?

காங்கிரசாட்சி ஏற்பட்டால், பிழைத்திருக்க முடியும்!

எதிர்க்கட்சி வெற்றி பெற்றால், செத்தீர்கள்.



என்ன சொல்லுகிறீர்கள்?

என்ன செய்யப்போகிறீர்கள்?

சாகப்போகிறீர்களா, அல்லது பிழைக்கப் போகிறீர்களா?

பிழைக்க விரும்பினால் காங்கிரசுக்கு நிதி கொடுங்கள்! கழகத்தைத் தோற்கடியுங்கள்.

என்றெல்லாம். இது உலகறிந்த இரகசியமல்லவா!

அமைச்சர்பிரான்களின் ஊர்வலங்கள், பெரியவரின் பவனி இவற்றின்போது ஊரூருக்கும் ஆயிரக்கணக்கான ரூபாய்களைச் செலவிட்டு அமைக்கப்பட்ட அலங்கார வளைவுகளிலேயே, இது இன்ன பஸ் முதலாளியின் உபயம்-அன்பளிப்பு—என்று பொறிக்கப்பட்டதில்லையா! அதை மக்கள் காணவில்லையா! மக்கள் இவைகளை அடியோடு மறந்தா போய்விடுவார்கள்!

மக்கள் பார்த்துக் கொண்டுதானே இருக்கிறார்கள், புதிய புதிய தொழிற்சாலைகள் கிளம்புவதை; பொட்டலெல்லாம் புது நகர்களாக மாறுவதை; அவ்வளவும் முதலாளிகளின் பாசறையாக இருப்பதனை.

இந்தப் புதிய வளர்ச்சி முதலாளிகளுக்கு ஏற்பட்டிருப்பது காங்கிரசாட்சியினால்தான் என்பது மக்களுக்குத் தெரியாதா!

இரத்தக் கறை படிந்த கரமுடையான் அகிம்சை பற்றிய புதிய அகவலை அரங்கேற்றுவதுபோல, திட்டமிட்டு முதலாளித்துவத்தை வளர்த்துக் கொண்டு வரும் இவர்களா பேசுவது சோஷியலிசம்பற்றி! அந்தப் புனிதமான கோட்பாட்டைப் பற்றிப் பேச இவர்களுக்கு அருகதை ஏது?

ஆனால், பேசுகிறார்கள்; ஏமாளிகள் நம்பட்டுமே; நம் பாதவர்கூட நம்மை எதிர்த்தா கேட்கமுடியும்! நமது செல்வாக்கென்ன, அதிகார பலம் என்ன, பளபளப்பு என்ன!! இவற்றினைக் கண்டதும் அவர்களுக்குத் தன்னாலே வாயடைத்துப் போய்விடாதா, என்ற நினைப்பு.

தம்பி! காங்கிரசினால் சோஷியலிசத்தை நடைமுறை ஆக்க முடியாது; அந்த உறுதியோ விருப்பமோ அவர்

களுக்குக் கிடையாது என்பதற்கு விளக்கமளித்திட ஒன்று கூறுகிறேன்.

இரண்டு திங்களுக்கு முன்பு கோடீஸ்வரரான பிர்லா தம்மையொத்த பெருவணிகர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்தார்!

நமக்கு (முதலாளிகள்—தொழில் அதிபர்கள்) ஏற்ற சர்க்கார் காங்கிரஸ் சர்க்கார்தான்.

நாம் காங்கிரஸ் சர்க்கார் அமைவதற்குப் பாடுபட வேண்டும்; ஆதரவு அளிக்க வேண்டும் என்று.

காங்கிரஸ் சோஷியலிசம் ஏற்படுத்தும் என்று தெரிந்தால் பிர்லா இவ்விதம் பேசியிருப்பாரா?

பிர்லா விரும்பி வரவேற்கும் ஆட்சி சோஷியலிச ஆட்சியாகவா இருக்க முடியும்!

என்ன விளக்கமளிக்கிறார்கள் இந்த விந்தைக்கு-பிர்லாவின் ஆதரவுக்கு!

சிந்தையில் கள் விரும்பி சிவசிவா என்பது போல,

முதலாளித்தனத்தை வளர்த்துக்கொண்டே,சோஷியலிசம் பேசுகிறார்கள். இதனைப் பண்டித நேருவின் உடன் பிறந்தார் விஜயலட்சுமி அவர்களே உடைத்து காட்டினார்களே,

காங்கிரஸ் பேசும் சோஷியலிசம் உதட்டளவுதான் என்று.

உதட்டளவுதான் இவர்கள் பேசும் சமதர்மம் என்று நாம் கூறினால், கூரைக்குத் தாவிக் கொக்கரிக்கிறாரே காமராஜர்; வாய் திறக்கிறாரா, அம்மையார் பேசியது கேட்டு. கிலி! சுடச்சுட ஏதாவது கொடுத்துவிடப் போகிறார்கள், செம்மையாக என்ற பயம். ஓடோடி வருகிறார், இங்கு! நம்மை ஏச!! உதட்டளவுதான் நமது சோஷியலிசம் என்று அங்கே உலகப் புகழ் ஈட்டிய அம்மையார் குட்டுகிறார்; அது மோதிரக்கை என்பதாலே இவர் பட்டுக்கொள்கிறார், துடைத்துக் கொள்ளக்கூடத் துணிவற்று. பேசச் சொல்லுங்கள் கழகத்தைப்பற்றி, ஏ! அப்பா! வாய் எத்தனை அகலமாகி விடுகிறது! வார்த்தை எவ்வளவு நாராசத்தில் தோய்த்து எடுத்து வீசப்படுகிறது!



தம்பி! காங்கிரஸ் கட்சி பேசிடும் சோஷியலிசம் போலி என்பதை உணர்ந்து, காங்கிரசிலேயே ஒரு பகுதியினர்

காங்கிரஸ் சோஷியலிச அணி

என்று ஒரு உள் அமைப்பே நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

வெட்கம் துளி இருந்தால், ஏ! போக்கிரிகளே! காங்கிரசே சோஷியலிசத்தைத் தன் திட்டமாக, கொள்கையாகக் கொண்டு நடந்துகொள்கிறபோது, காங்கிரசிலேயே இருந்துகொண்டு, சோஷியலிச அணி என்ற உள் அமைப்பை நடத்தலாமா; ஊர் என்ன சொல்லும், உலகம் என்ன சொல்லும்; காங்கிரசிலே மிகப் பெரும்பகுதியினர் உண்மையான சோஷியலிஸ்டுகள் அல்ல என்றல்லவா பேசும்; இப்படி கட்சிக்கே ஒரு இழுக்கைத் தேடிக்கொடுக்கிறீர்களே; இது கட்டுப்பாட்டையே குலைத்துவிடுவதாகுமே; மரியாதையாக சோஷியலிச உள் அமைப்பைக் கலைத்துவிடுங்கள்; இல்லையென்றால் கட்சியைவிட்டு வெளியே செல்லுங்கள் என்றல்லவா காங்கிரசின் தலைவர் கட்டளை பிறப்பிப்பார்! செய்யச் சொல்லுங்கள், பார்ப்போம்! பீடமே ஆடிப்போகும்! ஆகவே, உள்ளே இருந்து கொண்டு அவர்கள் குட்டுகிறார்கள்; இவர் அந்த எரிச்சலை இங்கே கொண்டுவந்து கொட்டுகிறார், கொடி பிடித்தானூரிலும் கொடுத்தானூரிலும்.

இவர்கள் பேசுவது போலி சோஷியலிசம், நாங்கள் தான் உண்மையான சோஷியலிசத்தைக் கொண்டு வரப் போகிறோம் என்று சொல்லுவதாகத்தானே பொருள்—காங்கிரசுக்குள்ளேயே ஒரு சோஷியலிச அணி செயல்படும் விந்தை. ஆஹா நம்மோடு இருப்பவர்களே நம்மைப் பற்றிச் சந்தேகப்படுகிறார்களே என்று பதறுகிறாரா? எப்படிப் பதறுவார்! அவர்கள்தான் தயாராக இருக்கிறார்களே, வெளியே சென்று இவர்களின் போலி சோஷியலிசத்தை வெளுத்துக் கட்ட - அந்தப் பயத்தால், பெட்டிப் பாம்பாகிவிடுகிறார்! இங்கு வந்து சீறுகிறார்!!

சோஷியலிசம் என்றால் என்ன என்று புரிந்து கொள்ளாமல், வாயால் சோஷியலிசம் பேசிக் கொண்டிருக்காதீர்கள்.

சோஷியலிசத்திலே நம்பிக்கையில்லாத மந்திரிகளை, மந்திரிசபையிலிருந்து வெளியே துரத்தியாக வேண்டும்.

என்று தம்பி! நான் சொன்னால் காங்கிரசின் மாபெருந் தலைவர் மட்டுமல்ல, கையேந்திகள்கூடக் கடுங்கோபம் கக்கிட முனைவது காணலாம்! எமது மந்திரிகளுக்கா சோஷியலிசம் புரியவில்லை! அவர்களுக்கா சோஷியலிசத்தில் நம்பிக்கை இல்லை! அப்படிப் பேசிடுவோன் நாவினைத் துண்டித்துக் காக்கை கழுகுக்கு விருந்திடுவேன்! இன்றே! இப்போதே! இதோ! என்று ஆவேசமாடிடுவர்.

ஆனால், நான் அல்ல, இதனைக்கூற முன்வந்தது.

பாராளுமன்றத்தில் ஒரு காங்கிரஸ் உறுப்பினர் பேசியதை நான் எடுத்துக் காட்டுகிறேன். அமைச்சர் கொலு வீற்றிருந்த அவையில், வெளிநாட்டு இதழ்களின் நிருபர்கள குறிப்பெடுக்கும் அந்த அவையில், ஒழுங்கு நடவடிக்கை எடுப்பார்களோ என்பது பற்றித் துளியும் அஞ்சாமல், மார்ச் 12ந் தேதி டி. சி. சர்மா எனும் காங்கிரஸ் உறுப்பினர், இது போலப் பேசினார்.

ஐயன்மீர்! நீங்கள் சோஷியலிசம் பேசுகிறீர்களே தவிர, அதன் பொருளை உணரவில்லையே!

ஏடுகளிலும் பல நாடுகளிலும் அறிவாளர்கள் சோஷியலிசத்திற்குத் தந்துள்ள பொருளுக்கும் உமது வியாக்யானத்திற்கும் துளியும் பொருந்தவில்லையே;

சோஷியலிசத்தின் பொருளைப் புரிந்துகொண்டா பேசுகிறீர்கள்?

என்று நாம் மிகப் பணிவுடன் பேசிடுவது கேட்டாலே, காங்கிரஸ் தலைவர்கள் பெருத்த குரலெடுத்து ஏசுகிறார்கள், ஆத்திரத்தைக் கொட்டுகிறார்கள். பாராளுமன்றத்திலேயே பலமான சவுக்கடி கொடுக்கிறார், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்; துடைத்துக்கொண்டு விடுகிறார்களே! மற்றவர்களைக் கேட்கிறார்கள், மானம் இல்லையா! —என்று!!

சோஷியலிசம் வெற்றி பெற வேண்டுமென்றால், முதலில் உழுபவனுக்கே நிலம் என்ற கொள்கை நடைமுறையாக்கப்படல் வேண்டும் என்று வலியுறுத்திய போது



நெடுங்காலம் அதனை எதிர்த்துக் கேலி பேசிக் கொண்டிருந்தவர்தான் இந்தக் காமராஜர். அவருடைய பொன்மொழி ஊரறியுமே, தம்பி! உனக்குக் கவனமில்லையா!

உழுபவனுக்கு நிலமா!

ஏறுபவனுக்கு இரயிலா!

இருப்பவனுக்கு வீடா!

என்று வக்கணை பேசிக்கொண்டிருந்தார்.

ஆனால் நாட்டு மக்கள் வெகுவேகமாக சோஷியலிசத்தின் பக்கம் சென்று கொண்டிருக்கிறார்கள் என்று கண்டு கொண்டதும், 'சோஷியலிசமா! நாங்களே அதனைத் தருகிறோம்!!' என்று பேசத் தொடங்கினர்.

சோப்பு வேண்டுமா சீப்பு வேண்டுமா, ஆடும் பொம்மை வேண்டுமா அலங்காரச்சட்டை வேண்டுமா என்று தன்னிடம் உள்ள சரக்குகளை விற்றிடச்சந்தைக் கடைக்கரன் நச்சரித்தான். தொல்லை தாள மாட்டாமல் ஒருவன், எனக்கு ஒரு சாமானும் வேண்டாம்; தொல்லை செய்யாதே; போ! போ! மேலும் தொல்லை கொடுத்தால், போலீஸ்காரரைத் கூப்பிட்டு உன்னை ஒப்படைத்து விடுவேன் என்றானாம்.

தந்திரக்கார வியாபாரி பயந்து விடவுமில்லை, சலித்துவிடவுமில்லை.

ஒரு ஊதுகுழலை எடுத்துக்காட்டி, இதோ ஊது குழல்! போலீஸ்காரரைக் கூப்பிட உதவும்- எட்டணா தான் விலை! வாங்கிக் கொள்ளுங்கள் என்றானாம்.

தம்பி! காங்கிரஸ் கட்சியை நடத்திச் செல்பவர்கள் அது போன்ற தந்திரத்தை மேற்கொள்பவர்கள்! அதனால்தான், தங்களிடம் கைவசம் இருக்கும் சரக்கு விலைபோகவில்லை என்று தெரிந்ததும், மக்களுக்கு சோஷியலிசத்திலே விருப்பம் ஏற்பட்டுவிட்டது தெரிந்ததும்,

இதோ சோஷியலிசம் என்று கூவுகிறார்கள்.

ஆனால், 'லேபிள்' தான் சோஷியலிசம்—சரக்கு அல்ல!

சரக்கு எப்படிப்பட்டது என்பதற்கு ஒரு எடுத்துக் காட்டினை மட்டும் தருகிறேன், தம்பி! ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் பார்த்தால் போதுமல்லவா?

நில உச்சவரம்பு சட்டம், புரட்சித் திட்டம், புதுமைத் திட்டம், சமதர்மத் திட்டம் என்றெல்லாம் விளம்பரம் செய்துகொண்டு வந்தார்கள்.

நாம் அந்தச் சட்டத்திலே இவர்கள் வேண்டுமென்றே ஏற்படுத்தி வைத்திருந்த ஓட்டைகளைக் காட்டி, சட்டம் சரியாக இல்லை என்று கூறியபோது கூட, உரத்த குரலெடுத்து மறுத்தார்கள், நிலப்பிரபுத்துவமுறை ஒழிந்துவிடும், ஏழைகளுக்கு ஏற்றம் கிடைக்கும், உழுபவனுக்கு நிலம் கிடைக்கும் என்று.

காங்கிரஸ் கட்சியிலே இடம் பிடித்துக்கொண்டு விட்ட நிலப்பிரபுக்கள், குறும்புப் புன்னகை உதிர்த்தனர். சட்டம் நிறைவேற்றப்பட்டது. உழுபவன் எந்த அளவு பலன் பெற்றிருக்கிறான், அந்தச் சட்டத்தின் துணைகொண்டு. ஊரறியுமே! சட்டம் நிறைவேற்றப்பட்டு செயல்படுத்தப் பட்டு ஆண்டு பல ஆகிவிட்டன. ஆயினும், உழுபவனுக்கு, இந்தச் சட்டத்தின் மூலம் எந்த அளவு நிலம் கிடைத்திருக்கிறது. நேர்மையிலே நாட்டம் கொண்டுள்ள எவரேனும் நடைமுறையிலே இந்தச் சட்டம் எப்படி வடிவமெடுத்திருக்கிறது என்பதைக் கண்டு வெட்கமும் வேதனையும் அடையாமலிருக்க முடியுமா! டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரே கூறினாரே, நில உச்சவரம்புச் சட்டம் போட்டோம்; ஆனால்,பெரிய நிலப் பிரபுக்கள் எங்களை ஏய்த்துவிட்டார்கள் என்று.

சட்டம் ஏட்டளவுதான் இருக்கிறது, நாட்டிலே அது நிறைவேற்றப்பட்டதாகத் தெரியவில்லை என்று இவர்களே வரவழைத்த அமெரிக்க ஆய்வாளர்கள் எடுத்துக் காட்டினரே!

சோஷியலிசத்திலே உண்மையான நம்பிக்கையும் அதனைச் செயல்படுத்தவேண்டும் என்பதிலே தீவிரமும் உள்ளவர்களானால் என்ன செய்திருக்க வேண்டும்? ஓட்டைகளை அடைத்திருக்க வேண்டுமல்லவா? செய்தனரா?

பெயரளவுக்கு நில உச்சவரம்பு சட்டத்தை நிறைவேற்றி வைத்தனரே தவிர, அதனால் உருப்படியான



பலன் கிடைத்திருக்கிறதா? கிடைக்கவில்லை என்பதற்குத் தம்பி! அமைச்சர்களின் பேச்சே சான்றளிக்கிறதே!

உச்சவரம்பு சட்டத்தைச் செயல்படுத்தி, நிலப் பிரபுக்களிடமிருந்து நிலத்தை எந்த அளவு பெற்றீர்கள், உழுபவனுக்குத் தந்திட என்ற தகவல் தரும்படி கேட்டதற்கு அமைச்சர் அளித்திருக்கிற விவரத்தைப் படித்திருப்பாயே, தம்பி! மலையைக் கெல்லி எலியைப் பிடித்த கதை போலில்லையா!

உண்மையான நேர்மையான சோஷியலிசத் திட்டம் இப்படியா இருக்கும்?

ஊரை வளையக்கட்டித் தமதாக்கிக் கொண்டுள்ள நிலப் பிரபுக்களிடம் சிக்கிக் கொண்டுள்ள நிலத்திலே உச்சவரம்பு சட்டத்தின் மூலம் இலட்சக்கணக்கான ஏக்கர் நிலம் கிடைத்திடும்; அவ்வளவையும் உழுபவனுக்குப் பகிர்ந்தளிக்க முடியும்; அவன் உள்ளம் களிநடமிடும்; கதிர் குலுங்கும்; செந்நெல் குன்றெனக் குவியும்; உணவுப் பஞ்சமே ஒழிந்து போகும்; வெளிநாடுகளுக்கெல்லாம் உணவுப் பொருளை ஏற்றுமதி செய்திடலாம் என்றெல்லாம் எழுச்சி மிக்க குரலில் பேசினார்களே, நிலைமை என்ன இப்போது என்பதுபற்றி வாய் திறக்கிறார்களா! கவனித்துப் பாரேன், தம்பி!

உச்சவரம்புச் சட்டத்தின் மூலம், எவ்வளவு நிலம் பெறப்பட்டது என்பதுபற்றி அமைச்சர் தந்த விவரத்தைப் பார்த்துவிட்டு, இந்த ஆட்சியினர் உண்மையான சோஷியலிஸ்டுகளா என்பதுபற்றிய தீர்ப்பு அளிக்கும்படி மக்களைக் கேட்டுக்கொண்டால் என்னவிதமான தீர்ப்புக் கிடைக்கும்?

### உச்சவரம்புச் சட்டத்தின்படி கிடைத்துள்ள நில அளவு

| மாவட்டம் | | நஞ்சை-ஏகர் | | புஞ்சை-ஏகர் |
|---|---|---|---|---|
| செங்கற்பட்டு | — | 87.89 | — | 269.89 |
| வடாற்காடு | — | 146.43 | — | 198.96 |
| தென்னாற்காடு | — | 337.63 | — | 348.63 |
| தஞ்சாவூர் | — | 711.95 | — | 68.69 |

| | | | | |
|---|---|---|---|---|
| திருச்சி | — | 184.65 | — | 283.88 |
| சேலம் | — | 12.28 | — | 217.90 |
| தர்மபுரி | — | 73.03 | — | 344.72 |
| மதுரை | — | 59.23 | — | 1135.330 |
| கோவை | — | 4.47 | — | 334.88 |
| இராமநாதபுரம் | — | 91.93 | — | 30.92 |
| நெல்லை | — | 18.29 | — | 484.38 |

தம்பி! அமைச்சர் இராமய்யா அறிவித்துள்ள மகத்தான சாதனை இது! மொத்தத்தில் இதுவரை பெறப்பட்டுள்ள நிலத்தின் அளவு 5445 ஏகர்! புதுமைத் திட்டம்! புரட்சித் திட்டம்! இதுவாம்!! சொல்லிக் கொள்கிறார்கள் வெட்கமின்றி! மார்தட்டிக் கொள்கிறார்கள், சோஷியலிசத்தை நடத்துவதாக!! இதை நாடு நம்பவேண்டும் என்றும் எதிர்பார்க்கிறார்கள்.

ஆட்சி பீடத்திலே இருப்போர்முன்

கைகட்டி நிற்க
பராக்குக் கூற
பல்லாண்டு பாட
பல்லிளித்துக் கிடக்க
பாதம் தாங்கிட
தலையாட்டிட
பண்டம் மாற்றிட
பேரம் பேசிட

பலர் முன்வருவர்! இது உலக அதிசயங்களிலே ஒன்று அல்ல! திருவிழாக் கூட்டத்திலே, சிறார்கள் கண்களை அகலத் திறந்துகொண்டு வேடிக்கை பார்த்திடவில்லையா, பொம்மைக் கடையை, அதுபோல! ஆட்சியாளர்களின் அங்காடியிலே அடுக்கிக் காட்டப்படும் பொம்மைகள் பளபளப்பானவை, பகட்டானவை! ஒவ்வொன்றுக்கு ஒவ்வொரு விலை.

காட்டிக் கொடுத்தால் இந்தப் பொம்மை.

அடுத்துக்கொடுத்தால் அந்தப் பொம்மை.

பிளவுமூட்டினால் இந்தப் பொம்மை!



என்று ஒவ்வொரு பொம்மைக்கும் 'விலை' குறிக்கப்பட்டிருக்கிறது.

இந்த 'வியாபாரம்' இன்று நேற்றல்ல, மனித மனத்திலே ஆசையும் சூழ்ச்சித் திறனும் முளைத்த நாள் தொட்டு இருந்து வருகிறது.

இத்தகையோர் தம்மைச் சுற்றி நின்று கூடம் கொளுத்தி, வந்தனை வழிபாடு செய்வதுகண்டு, நாடே நமது பக்கம்! என்று எண்ணிக்கொள்வதும் இயல்பு. ஆனால் நாடு, இத்தகையவர்களைத் தாங்கிக் கொண்டிருக்கிறதே தவிர, நாட்டின் குடிமக்கள், நாணயமான குடிமக்கள் நைப்பாசைக்கு ஆளாகாத குடிமக்கள், கோடி கோடியாக உள்ளனர். அவர்கள்மீது நம்பிக்கை வைத்துத் தான் தம்பி! நாம் பணியாற்றி வருகிறோம். அவர்களின் கண்ணீரைத் துடைத்திட! அவர்கள் புன்னகை பூத்திட! புதுவாழ்வு பெற்றிட.

போலி சோஷியலிசம் பேசிடும் காங்கிரஸ் அந்த மக்களை வாட்டி எடுக்கிறது என்பதனை எடுத்துக்காட்ட அதிகம் கூறத் தேவையில்லை.

காங்கிரசாரும் மறுக்க முடியாத ஒரு புள்ளி விவரம் தருகிறேன். தம்பி! இது, நாலாவது ஐந்தாண்டுத் திட்ட விளக்கத்துக்காக காங்கிரஸ் சர்க்கார் வெளியிட்டுள்ள புள்ளி விவரம். நாட்டுமக்களை இந்த ஆட்சி எந்த இலட்சணத்தில் வைத்திருக்கிறது என்பதைக் காட்டிடுவது.

## இன்று

| | | |
|---|---|---|
| **430 இலட்சம் மக்கள்** | **—** | **நாள் ஒன்றுக்கு 30-பைசாவும்** |
| **430–இலட்சம் மக்கள்** | **—** | **42-பைசாவும்** |
| **460–இலட்சம் மக்கள்** | **—** | **51-யைசாவும்** |
| **430–இலட்சம் மக்க்ள்** | **—** | **59–பைசாவும்** |

வருவாயாகப் பெறுகிறார்கள்!

எப்படி இருக்கும் இந்த எளியோரின் வேதனை என்பதனை விளக்கிடவா வேண்டும்!!

இந்த வேதனை நிலையை மூட்டிக்கொண்டு வருபவர்கள், சோஷியலிசம் வேறு பேசுவது, துகிலுரிந்த

துச்சாதனன், துரௌபதிக்கு விலையுயர்ந்த பட்டாடை வாங்கித் தரப்போகிறேன் என்று கூறுவதற்கு ஒப்பானது அல்லவா?

ஏழைகளை வேதனையில் ஆழ்த்திவிட்டு, ஏழ்மை இந்த அளவு படருவதற்குக் காரணமாக உள்ள முதலாளித் தனத்துக்குத் துணை இருந்துகொண்டே, காங்கிரசாட்சி சோஷியலிசம் பேசுகிறது. நியாயமா?

இல்லை! இல்லை! இல்லை! என்ற முழக்கம் எங்கும் கேட்கிறது.

அந்த முழக்கம் மூட்டிவிடும் கலக்கம் காமராஜரைத் துரத்துகிறது, கிராமம் கிராமமாக!—மாலையிலே பொது மக்களை மயக்க—காலையிலே ஊழியர்களை உற்சாகப் படுத்த—இடையிலே வலைவீச—முதலாளிமார்களை உலுக்கிப் பணம் திரட்ட!!

அவருடைய பரபரப்புமிக்க நடவடிக்கையும், கொதிப்பு மிக்க பேச்சும், தம்பி! காங்கிரசுகாட்சிக்கு எதிராகத் திரண்டு எழுந்துள்ள எதிர்ப்பினை நன்கு எடுத்துக் காட்டுகிறது.

இதனை உணர்ந்திடின் தம்பி! நமக்கெல்லாம் புதிய உற்சாகமும், உறுதியும், பிறந்திடத்தானே செய்யும்.

அந்த வேகத்துடன் நமது தோழர்கள் தீவிரமாகப் பணியாற்றுகிறார்கள்.

தம்பி! ஒவ்வொரு நாளும் உன்னை நீயே கேட்டுக் கொள்ள வேண்டும். இன்று நாம் செய்தது என்ன? எந்த வகையில் கழகப் பணியாற்றினோம்? என்பதனை, ஏன் என்கிறோயோ தம்பி! காங்கிரஸ் எதேச்சாதிகாரத்தை வீழ்த்தும் புனிதப் பணிக்கு நான், உன்னைத்தான் நம்பிக் கொண்டிருக்கிறேன்.

உருட்டி மிரட்டிப் பேசிடுபவனல்ல நான்—நான் உன்னோடு இருப்பவன்-உயர ஏறிவிட்டவன் அல்ல.

என்னைத் தேடி இலட்சாதிபதிகள் வரமாட்டார்கள்- நான் உனக்காகப் பணியாற்றுபவன் என்பது அவர்களுக்குத் தெரியும்!

நமது மாளிகைக்கு விருந்துண்ண வருக! என்று என்னை எவரும் வேண்டிக் கேட்டுக்கொள்ள மாட்டார்கள். நான் பர்மிட் லைசென்சு கொடுப்பவனல்ல!



ஊர்க்கோடியிலே மணிக் கணக்கிலே காத்திருந்து எனக்கு மாலை அணிவிக்கச் சீமான்கள் நின்றுகொண்டிருக்க மாட்டார்கள்; நான் பதவியைத் தந்திட வல்லவன் அல்ல.

நான் இன்னின்னது பேசினேன்—இத்தனை முறை கை தட்டினார்கள்—இத்தனை மாலைகள் போட்டார்கள்—என்று இதழ்கள் வெளியிடாது-நான் அவர்கள் போற்றிப் புகழ்ந்திடும் இடத்திலே இல்லை.

நான், அவனுக்கு என்ன தெரியும், இவனுக்கு என்ன தெரியும், எவனுக்கு என்ன யோக்யதை இருக்கிறது என்றெல்லாம் பேசிட முடியாது—என் இயல்பு இடந் தராது-அப்படிப் பேசினாலும் தாங்கிக்கொள்ள மாட்டார்கள்- ஏனெனில், நான் தர்பாரில் இடம் பெற்றவன் அல்ல.

கூப்பிடு அவரை! கொண்டு வா இவரை! என்று நான் கட்டளை பிறப்பிக்க முடியாது—ஏனெனில், எவரும் மதித்தே ஆகவேண்டும் என்ற பகட்டான பதவிப் பீடத்திலே நான் இல்லை.

நான் இவைகள் கிடைக்கவில்லையே என்று ஏக்கப் படவுமில்லை; கிடைக்கும் என்று எதிர்பார்க்கவுமில்லை.

நான் எதிர்பார்ப்பது ஒன்றுதான், உன் இதயத்தில் இடம்.

எனக்குக் கிடைத்திருப்பதும் ஒன்றுதான், உன் இதயத்தில் எனக்கோர் இடம்.

நான் விளக்கிக் காட்ட முடியும்—செய்கிறேன்.

வேண்டுகோள் விடமுடியும்—செய்கிறேன்.

உன் ஆதரவை, உழைப்பைக் கேட்க முடியும்-கேட்கிறேன்.

என்னால் முடிந்ததை நான் செய்கிறேன்; உன்னால் முடியக்கூடிய தனைத்தையும் தம்பி! நீ செய்திடவேண்டும்.

செய்திடின் தம்பி! மாலை போடவரும் கனவான், மாளிகையில் விருந்து வைக்கும் சீமான், கூப்பிட்ட குரலுக்கு ஓடிவரும் பூமான் ஆகியோரின் துணையில்லையே என்று எவரேனும் என்னிடம் கூறிடினும், எனக்கு ஏன்

அந்தப் போலிச் சரக்கு, அதோ என் உடன் பிறந்தார்களின் உறுதியைப் பார்! உள்ளன்பைப் பார்! உற்சாகத்தைப் பார்! எந்த இன்னலையும் ஏற்றுக்கொள்ளும் துணையைப் பார்! தனக்கென எதனையும் தேடிடாத தூய்மையைப் பார்! அந்த உத்தமன் அளித்திடும் உழைப்பைப் பார்! அந்தச் சக்தியின் மீது பகட்டு உலகினர் திரட்டித் தரும் படைக்கலன் பாய்ந்திடின், படைக்கலன் நொறுங்கும்—அறிவேன் நான்—என்று கூறிடுவேன்—எழுச்சியுடன்—நம்பிக்கையுடன்.

உன்னைத்தான் நம்பியிருக்கிறேன், தம்பி உன்னைத்தான்.

அண்ணன்,

15—5—'66

அண்ணாதுரை

காஞ்சிக் கடிதம் : 63

# கருத்தோவியம்

★ கனவானின் காசநோயும் பற்பலரின் கருத்துகளும்

★ செயலிலே கோணல்; சீலம் பற்றிப் பேச்சு!

★ குற்றம் சுமத்தப் பெற்றவர் உபதேசியாகிறார்!

★ மக்களின் குறும்புப் பார்வையும் கேலிப் புன்னகையும்.

தம்பி,

சில இடங்களைச் சுற்றிப் பார்த்துவிட்டு வரலாம்; வருகிறாயா? என்ன கேள்வி கேட்கிறேன் பார் ஏமாளித்தனமாக. நான் அழைக்கும்போதெல்லாம், அழைக்கும் இடங்களுக்கெல்லாம் வரத்தவறாத உன்னைப் பார்த்துக் கேட்கிறேனே, வருகிறாயா? என்று. நீ வருகிறாய் என்றதெம்புதானே என்னையே இயக்கிவைக்கிறது. ஆகவே வருகிறாயா? என்று கேட்டது, கேள்வி வடிவிலே இருக்கிறதே தவிர, ஐயப்பாட்டின் விளைவாக எழுந்துள்ள வினா அல்ல: வா! தம்பி! சில இடங்களைச் சென்று கண்டுவிட்டு வரலாம்.

தங்கமான குணம்! எல்லோராலும் மதிக்கப்படுபவர்! வாணிபத் திறமை கண்டு ஊரே வியந்து பாராட்டுகிறது! ஊர் மக்களின் நலனுக்காக உழைப்பதிலே தனி ஆர்வம்! அவருடைய குணத்துக்கு ஏற்ற பத்தினி! பிள்ளைகள் அவர் கீறிடும் கோட்டைத்

தாண்ட மாட்டார்கள், அவ்வளவு அடக்கம், கட்டுப்பாடு, ஒழுக்கம். எந்தக் காரியத்திலே ஈடுபட்டாலும் வெற்றிதான்! வெற்றிமேல் வெற்றி பெற்று வருகிறவர்! ஆனால், பாவம் அவருக்குத் தீராத காசநோய்!!

★

தம்பி! பேசினாரே, அவரைப் பார்த்தாயா, 'பெரிய புள்ளி', மற்றோர் பெரிய புள்ளியைப் பற்றிப் பரிவுடன் பேசுகிறார். பரிவுக்குக் காரணம் என்ன என்றா கேட்கிறாய். ஏன், சாதாரண-மனிதாபிமானம்! ஒப்புக்கொள்ளமாட்டாயா... சாதாரணமானவர்களுக்குத்தானே மனிதாபிமானம் இருக்கும்; இவர் 'பெரியபுள்ளி'யாயிற்றே இவருக்கு வேறு ஏதாவது பெரிய 'அபிமானம்' இருக்க வேண்டுமே என்கிறாய்; சரி உன்னிடம் உண்மையை மறைப்பானேன். காசநோய் வந்திருப்பதாகச் சொல்லுகிறாரே, அவர் காசுக்கடை கனகசபை. அந்த வட்டாரத்திலேயே மிகப் பெரிய புள்ளி. அவரிடம் பெரிய 'தொகை' கடன் வாங்கி இருப்பவர் இந்தப் 'பெரியபுள்ளி' அரிய நாயகம்.

கடன் பட்டிருக்கும் ஆசாமிக்குக் கசப்பு அல்லவா இருக்கும்: பரிவுடன் பேசுகிறாரே; காரணம் என்ன என்று கேட்கிறாய். விடமாட்டாயே நீ, முழு உண்மையைச் சொன்னாலொழிய.

கடனைத் திருப்பித் தரச்சொல்லி கனகசபை வற்புறுத்தியதாலே, அருமை நாயகத்துக்குக் கசப்புத்தான். ஆனால், அதை மறைத்துக்கொண்டுதான் பேசுகிறார், பரிவுகொண்டவர்போல. ஏன் என்றால், அவர் யாரிடம் பேசிக்கொண்டிருக்கிறாரோ, அவர் 'கனகசபை'யின் 'கையாள்'. ஊரிலே யாரார் தன்னைப் பற்றி என்னென்ன பேசுகிறார்கள் என்பதைத் தெரிந்து வந்து சொல்லுவதற்காகவே 'வேலை'யில் வைக்கப்பட்டிருக்கும், வையாண்டி! கடன் பட்டிருக்கும் அருமைநாயகம், கனகசபையைப் பற்றிப் பரிவு காட்டி, தங்கமான குணம் என்று பாராட்டிப் பேசுவது, இதனை வையாண்டி, கனகசபையின் காதிலே போட்டுவைப்பான், அது கேட்டு மகிழ்ந்து கனகசபை கடனைத் திருப்பிக் கொடுத்தாக வேண்டும் என்று 'கிட்டி' போடுவதை விட்டுவிடுவான் என்பதற்காக, பரிவுக்குக் காரணம் அதுதான்.

★



காசநோயா? அடே அப்பா. என்னமோ ஏதோ என்று எண்ணிக்கொண்டேன். தக்க மருத்துவம் பார்த்தால் பஞ்சு பஞ்சாகப் பறந்து போகாதா அந்தக் காசம். இந்த ஊரிலேயே அதற்குத் தகுந்த டாக்டர் இல்லை என்றால் தான் என்னவாம்! சீமைக்குப் போகிறார்! அமெரிக்கா போகிறார்! சுவிட்சர்லாந்து காற்றுப் பட்டாலே போதுமாமே, காசம் போய்விடுமாம். அவருக்கு என்ன, வசதிக்குக் குறைவா! இருப்பதிலே பதினாயிரத்திலே ஒரு பங்கு வீசி எறிந்தால், வீட்டைத் தேடி ஓடிவருகிறார்கள் உலகப் புகழ்பெற்ற டாக்டர்கள், காசம் அவருக்கு என்று பெருமூச்செறிய வேண்டுமா!!

இவர் யார் தெரிகிறதா தம்பி! காசநோயைப் பற்றி இவ்வளவு அலட்சியமாகப் பேசுகிறாரே, இவர் கலியாணத் தரகர் கதிரேசன்—கமிஷன் ஏஜண்டு கதிரேசன் என்று சொல்லி கொள்வார். இவர், யாரிடம் பேசுகிறார், தெரியுமா? கனகசபைக்கு மூன்றாம் தாரமாகத் தன் இளம் பெண்ணைக் கொடுத்துவிட்டு, இப்போது கலக்கமடைந்திருக்கும் குட்டியப்பரிடம்! பாவி! பணத்துக்கு ஆசைப்பட்டு, பெண்ணைக் கொண்டு போய் காசநோய் பிடித்தவனுக்குத் கொடுத்தாயே, இது அடுக்குமா என்று நாலுபேர் கேட்கிறார்கள். அதனால் ஆத்திரமடைந்து அவர் கதிரேசனிடம் கேட்கிறார் இப்படிப்பட்ட இடம் பார்த்துக் கொடுத்தாயே, என் குடும்பத்தைக் கெடுத்தாயே என்று. அதற்குச் சமாதானம் கூற, ஆறுதல் அளிக்கத் தரகன் தந்திரமாகப் பேசுகிறான், சீமைக்குப் போயாவது காசத்தைப் போக்கிக்கொள்வார், சீமான்! ஏன் கவலைப்படுகிறாய், காசம் அவரை என்ன செய்யும் என்று அடித்துக் கேட்கிறான்.

★

காசமாமே! ஏழையும் இல்லாதவனும், உடல் வலிவுக்குத் தேவையான உணவு கிடைக்காமல், மாடாக உழைத்து ஒட்டி உலர்ந்துபோய் இந்தவிதமான வியாதிக்கு ஆளாவது உண்டு. இவருக்கு என்ன குறை! வேலிகள் ஆயிரம்! கூப்பிட்ட குரலுக்கு ஓடோடிவர ஆள் அம்பு, மாளிகை; நாலு சமயற்காரர்கள்! வேளை தவறாமல் பால் பழம். ஒரு குறையும் கிடையாதே, வயலுக்குத் தண்ணீர் இறைக்க வேண்டுமா, வண்டியில் மாட்டைப் பூட்டி ஓட்ட வேண்

டுமா, வயலிலே இறங்கி உழவேண்டுமா, உடலை வாட்டத்
தக்க எந்த வேலையாவது உண்டா! கொடுத்து வைத்த
வர்! கோலாகல வாழ்வு! அவருக்கு ஏன் வந்தது காசம்?
எப்படி வந்தது அந்த நோய்? உடம்பு ஒரு மாதிரியாக
இருப்பது தெரிந்தாலே போதுமே, பத்து வைத்தியர்கள்
பக்கத்திலே வந்து நிற்பார்களே! மூன்று வேளை பஸ்பம்
என்பான் ஒருவன! ஒரு முழுங்கு கஷாயம் என்பான் இன்
னொருவன்? கச்சக்காய் அளவு லேகியம் என்பான் இன்
னொருவன்! ஒரே ஒரு ஊசி! அடுத்த நாள் காசம் இருந்
தால் என் பெயரையே மாற்றிக்கொள்கிறேன் என்பான்
இன்னொருவன்! இப்படிப்பட்ட சுகபோகம் அவருக்கு.
அவரை வந்து தொட இந்தக் காசத்துக்கு அத்தனை
துணிச்சலா!

இவர் யார் கூறட்டுமா? புதிதாகப் பணம் சேர்த்துக்
கொண்டிருக்கும் புன்னைவனம். கனகசபை போன்ற
பெரிய புள்ளிகளின் நேசத் தொடர்பு மூலம் ஆதாயம்
தேடிக்கொள்ளும் போக்கினன். பணம் ஒருவருக்குக்
சேருவதே அவன் செய்த புண்ணியத்தினால் என்பதிலும்,
பணத்தைச் செலவிட்டால் எந்தவிதமான கஷ்டத்தையும்
போக்கிவிட முடியும் என்பதிலேயும் அசைக்க முடியாத
நம்பிக்கை உள்ளவன். கனகசபையுடைய கடைச் சரக்கு
களை மொத்த விலைக்கு வாங்கிக் கடைகளுக்கு விற்பனை
செய்திடும் ஏற்பாட்டுக்காகத் திட்டமிட்டுக் கொண்டிருப்
பவன். அதற்குத் தன்னோடு 'பங்கு' சேர விருப்பம் தெரி
வித்து பிறகு 'ஒருவிதமாக'ப் பேசத் தொடங்கிய பரசு
ராமனிடம் பேசுகிறான். கனகசபைக்குக் காசமே வராது!
வந்திருப்பது காசமாக இருக்கமுடியாது! என்று கூறுகிறான்',
பரசுராமனுக்குத் தைரியமூட்ட.

★

அபிஷேகம் செய்தார், ஆராதனை நடத்தினார்,
ஆலயம் கட்டினார், திருவிழா நடத்தினார், புண்யவான்,
தர்மவான், பக்திமான் என்று ஊரே கொண்டாடுகிறது.
அவருடைய தெய்வ பக்திதான் அவருக்கு வேலிகள் ஆயிரம்
தந்தது, போதும் என்கிற அளவு செல்வம் கொடுத்தது,
நிம்மதியான வாழ்க்கையைக் கொடுத்தது என்றெல்லாம்
பெருமைப்பட்டுக் கொண்டார்களே; தெரியுமா விஷயம்?
ஆசாமிக்குக் காசம்!! ஆமய்யா, ஆம்! காசம்!! உலுக்கி



உலுக்சி எடுக்கிறது! உடலை உருக்கியே விடுகிறது. பொல்
லாத வியாதி இந்தக் காசம்; அது இவருக்கு!!

கொதிப்புடன் பேசுகிறானே ஏன் என்று யோசிக்
கிறாயா, தம்பி! கோதண்டன், நல்லவன்; வாழ்ந்து
கெட்டவன்- அயன் நஞ்சை ஒரே சதுரம் அறுபது ஏகர்!
யானை கட்டிப் போர் அடிப்பது என்று பாடுகிறார்களே,
இப்படிப்பட்ட வயல் பற்றித்தான்- அந்தச் சதுரத்தை
அநியாயமாக விலையைக் குறைத்து, வேறு ஒருவனும்
'ஏலம்' கேட்க வராமல் தடுத்து, தட்டிப் பறித்துக் கொண்
டான் கனகசபை. கொதிப்பு ஏற்படாமலா இருக்கும்
கோதண்டனுக்கு. தன் நிலத்தை அநியாயமாகக் கனக
சபை அபகரித்துக் கொண்டது பற்றியும், திருட்டுக் கணக்கு
எழுதியது பற்றியும் ஊரிலே பெரியவர்களிடம் கோதண்டன்
முறையிட்டபோது, அவர் அப்படிச் செய்யக்கூடியவரே
அல்ல! பக்திமான்! தர்மிஷ்டர்! என்றெல்லாம் கூறினார்
கள். தனக்காக, நியாயத்துக்காகப் பரிந்து பேச ஒருவரும்
வரவில்லையே என்ற எரிச்சல். இப்போது, கனகசபைக்குச்
காசம் என்று கேள்விப்பட்டதும், அடக்கிவைக்கப்
பட்டிருந்த ஆத்திரம் பீறிட்டுக் கொண்டு கிளம்புகிறது.
கனகசபையின் அக்கிரமத்தைச் கண்டிக்கத் துணிவற்றுக்
கிடந்தவர்களை இடித்துக் கேட்கத் துடிக்கிறான். பெரிய
வர்கள் இவனை இவ்விதம் பேசவிடுவார்களா! அதனால்
தான், பெரியவர்கள் காதிலே விழட்டும் என்று, பெரிய
வர்கள் பலர் நடத்தும் பண்டரி பஜனைக் கூடத்து
மானேஜர் மார்க்க பந்துவிடம், பேசுகிறான், ஆத்திரம்
தீர.

★

காசம்தானே? குஷ்டம், குன்மம்! குடல்புண்,
இப்படி ஏதும் இல்லையா! காசம்தானா வந்தது,
எத்தனையோ பேர்களுடைய வாழ்வை வாட்டி
வதைத்த அந்த உத்தமருச்கு! காசமாம்! அது என்ன
துடிதுடிக்கச் செய்யுமா, பதைபதைக்க வைக்குமா!
ஒரு குற்றமும் செய்யாதவனைப் பிடித்துக் கொள்
கிறது தொழுநோய்—இவருக்குக் காசம்!! காசநோய்
வந்தால் என்ன? பட்டென்று கீழே வீழ்ந்து பொட்
டென்று உயிரா போய்விடும். ஐயோ அப்பா! அம்மா!
என்று அலறியா துடிக்கப் போகிறார்! ஒரே ஊசி
போட்டு குணப்படுத்திவிட மாட்டார்களா, டாக்டர்

கள்! காசம் வந்துவிட்டது காசம் வந்துவிட்டது என்று பேசிக் கண்ணைக் கசக்கிக் கொள்வதா! செத்தே போனாலும் என்ன, குடும்பம் சோற்றுக்கு இல்லையே என்று தேம்பித் தவித்துக்கிடக்கவா போகிறது. ஊரை அடித்து 'உத்தமன்' குவித்து வைத்திருக்கிற சொத்து. மூன்று தலைமுறைக்குப் போதுமே! காசம் வந்துவிட்ட தாம், காசம்! காசம்தானே வந்தது போ! போ!

சின்னப்பன்! தம்பி! இவனுக்கு ஊரிலே கெட்டவன் என்று பெயர்! சிறையிலே இவன், தங்ககம்பி! என்னமோ திருட்டுக் குற்றத்துக்காகத்தான் பயல் தண்டிக்கப்பட்டிருக் கிறான்; ஆனால், நான் சொல்கிறேன்; இவனை நம்பி ஒரு இலட்சரூபாய்கூட நான் கொடுத்துவைப்பேன். எனக்கு இவனிடம் அவ்வளவு நம்பிக்கை என்று ஒருமுறை சிறை மேலதிகாரியே கூறியிருக்கிறார். அவரிடம் இலட்ச ரூபாய் இல்லை என்கிற தைரியத்திலேதான் அப்படிப் பேசினாரோ என்னவோ! ஆனால், சின்னப்பன் சிறையிலே நல்ல பெய ருடன்தான் இருந்திருக்கிறான். அவனைக் கூண்டிலே நிற்க வைத்த கனகசபை 'சாமி சாட்சியாக'ச் சொன்னார், நல்ல அமாவாசைக் கருக்கலின்போது சின்னப்பன் தன்னை வழி மடக்கி, கழுத்திலே இருந்த தங்க உருத்திராட்சமாலை யைப் பறித்ததாக! சாட்சிகளைத் தீர விசாரித்து, குற்றம் மெய்ப்பிக்கப்பட்டதாகக் கூறி நாலு வருடம் கடுங்காவல் தண்டனை விதித்தார் நீதிபதி. கடைசி வரையில் சின்னப்பன் நான் ஒரு பாவமும் அறியேன் என்றுதான் சத்தியம் செய்தான். அவன் மனைவி மருதாயி கண்ணீர் பொழிந்தாள். அவளை, கனகசபை 'கெடுக்க' முயன்ற போது, சின்னப்பன் அடித்து விரட்டிய சம்பவமே, வழிப் பறி வழக்காக வடிவமெடுத்தது என்று ஊரிலே வதந்தி. இது உண்மையா அல்லவா என்று கூற ஒரே ஒரு சாட்சி தான் உண்டு; மருதாயி! ஆனால், மருதாயியின் பிணம் தான் மடுவில் மிதந்ததே, சின்னப்பன் ஜெயிலுக்கு இழுத்துச் செல்லப்பட்ட நாளைக்கு மறுநாள். ஆகவே, சின்னப்பன், நடுஜாம பூஜைக்காக நந்திகேஸ்வரர் கோயி லுக்குச் சென்றுவிட்டுத் திரும்பிய கனகசபையை வழி மறுத்துக் கொள்ளை அடித்தான் என்பதை ஊர் ஏற்றுக் கொண்டுவிட்டது. அந்த ஆத்திரம் சின்னப்பனுக்கு! ஊரே, அநியாயத்திற்குத் துணை நிற்கிறதே என்று எண்ணி வேதனைப்பட்டான். அதனால்தான் தம்பி! கனகசபைக்குக் காசம் என்றதும், காசம்தானே! குஷ்டம்



வரவில்லையே என்று கொதிப்புடன் கேட்கிறான். அவ னுக்கு ஒரு எண்ணம் கனகசபை தனக்குச் செய்த துரோ கத்துக்கான தண்டனையைக் கடவுள் எப்படியும் தருவார் என்று. ஆனால், காசம் போதுமான தண்டனை அல்ல; இதைவிடப் பயங்கரமான நோய் வரவேண்டும் அந்த அக்கிரமக்காரனுக்கு என்று எண்ணுகிறான். அந்த ஆத்தி ரத்தைத்தான் கொட்டிக்காட்டுகிறான், உண்மை தெரிந் தும் ஊமையாகிக் கிடந்த கனகசபையின் வண்டி யோட்டியிடம்.

★

காசம்தான், சந்தேகமே இல்லை! முதலிலேயே எனக் குச்சந்தேகம், ஆனால், அவசரப்பட்டுச்சொல்லிவிடலாமா? அதனால்தான் இரத்தத்தைச் சோதனை செய்து பார்த் தேன், இப்போது தெளிவாகத் தெரிந்துவிட்டது. காசம் தான்! உடம்பைக் கவனித்துக்கொள்வதில்லையே நீங்கள்! ஓயாத வேலை. வேளையறிந்து சாப்பிடுவதில்லை. நான் பலநாள் சொல்லி இருக்கிறேனே, எல்லா வேலையையும் தலையின்மீது போட்டுக்கொண்டு ஏன் சுமக்க வேண்டும்! மகன் இருக்கிறான், மருமகன் இருக்கிறான், நாணயமான ஆட்கள் இருக்கிறார்கள், ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள், என்று சொன்னேன். கேட்டால்தானே! பொழுது போக வில்லை என்று சொல்லிக்கொண்டிருந்தீர்! இப்போது? பொல்லாத காசம் வந்துவிட்டிருக்கிறது. ஆபத்து இருக் காது, குணப்படுத்திவிடலாம், அதற்காக நான் துளியும் கவலைப்பட வில்லை; ஆனால், உங்களுக்கு எதற்காக இந்தத் தொல்லை? நீங்களாகவா தொல்லையைத் தேடிக் கொள்வது? அதைத்தான் கேட்கிறேன். குற்றாலம் போய் வாருங்கள், கொடைக்கானல் போய் ஒரு மாதம் இருந்து விட்டு வாருங்கள் என்று தலைப்பாடாகச் சொன்னால் கேட்டீர்களா? குடகு போகவேண்டும் ஆரஞ்சு வாங்க, கொச்சி போகவேண்டுப் முந்திரி வாங்க, கோவை போக வேண்டும் மந்திரியைக் காண, என்று இப்படி எதையாவது சொல்லி என் வாயை மூடிவிடுவீர்! இப்போது? இலட்ச இலட்சமாகப் பணம் இருந்து என்ன பயன்? காசநோய் வருவதை அந்தப் பணத்தினாலே தடுக்க முடிந்ததா? ஊரே பேசும் இனி காசமாம் அவருக்கு என்று! எதற்காக இதற்கு இதற்கு இடம் கொடுப்பது? காசம் வரலாமா உங்களுக்கு!

பந்த பாசத்துடன் இதுபோலப் பேசுகிறார் டாக்டர் பாஸ்கர்—கனகசபைக்குக் குடும்ப டாக்டர்! இந்த ஒரு குடும்பத்தின் மூலமாக மட்டும் டாக்டருக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வருமானம் வரும். அவர் வந்து 'ஊசி' போட்டால் தான், அம்மாவுக்குத் தூக்கமே வரும் என்று 'ஐயா' வே சொல்கிறார்: 'ஐயாவுக்குத் தனியாகத் தயாரிக்கப்பட்ட 'டானிக்' டாக்டர் கொடுக்கிறார்' வேறு ஒருவருக்கும் கிடைக்காததாம், அந்த டானிக்!

கிடைக்காததா, தேவைப்படாததா என்று கனகசபை யின் 'வீட்டில்' கேட்பார்கள், குறும்புப் புன்னகையுடன்.

டாக்டர், கனகசபையின் ஆதரவு பெற்றுத்தான் ஜில்லா மிராசுதாரரர் சங்கத்தின் வைத்திய ஆலோசக ரானார்! வியாபார சங்கத்தார் நடத்தும் 'பிரசவ ஆஸ் பத்திரி'க்கு, 'கௌரவ' டாக்டரானார். அவர் பரிவு காட்டக் கடமைப்பட்டவர்தானே!

★

காசம்தானே இதற்கு ஏன் இப்படிப் பயந்து பதறிக் கிடக்கறே—பைத்தியம்! பைத்தியம்!என்னை என்ன செய்து விடும் இந்தக் காசம்! இதோ பார்! இது எப்படிப்பட்ட உடம்பு தெரியுமா! பாம்பு கடித்தால்கூட விஷம் ஏறாது. அவ்வளவு மூலிகைச்சாறு உள்ளே போயிருக்குது. ஏதோ என்னோட வந்து நடக்கச் சொல்லு உன்னோட தம்பியை; வயது என்ன இருபதுதான்! அறுபதுன்னு கணக்கு என் வயது, வந்து போட்டி போடச் சொல்லேன் வாலிப வயசுக் காரனுங்களை. காசம்னு டாக்டர் சொன்னதும் ஐயோ! காசமாமே! என்று கவலைப்படுகிறாயே! க ல் லு ப்பிள்ளை யார்போல இருப்பேன். நீ எதற்கும் கலங்காதே! கொஞ்சம் இழுப்பும் ஆயாசமும் இருக்கும்; ஒரு நாலுநாளைக்கு; ஒரு மருந்தும் சாப்பிடாமல், தன்னாலேயே போய்விடும். இருந்தாலும் டாக்டர் சங்கடப்படுவாரே என்பதற்காக அவர் கொடுத்த மருந்தையும் சாப்பிட்டு வைத்திருக் கிறேன். நாளை மறுநாளே பாரேன். வழக்கப்படி, கோயில் பிரதட்சணம் செய்யிறேனா இல்லையான்னு. காசம் என்னை என்ன செய்துவிடும்! சுத்த சொத்தையான வியாதி, இந்தக் காசம்!!

அந்தக் கண்களிலே வெறுப்பு இருந்தது; அவர் அதை வேதனை என்று எண்ணிக் கொண்டார், ஏதோ சாப்பிட்டு



விட்டதால் கண் சிவப்பாகிக் கிடந்தது, அழுது அழுது கண்களைச் சிவப்பாக்கிக் கொண்டதாக அவர் கூறுகிறார், யார்? கனகசபைதான்! மூன்றாம் தாரமாக வாய்த்த, மங்கையிடம்!

ஒரு உத்தமி, தன் கணவனுக்குப் பொல்லாத நோய் வந்ததறிந்தால், என்ன ஆகுமோ ஏது ஆகுமோ என்று கலங் கிப் போவாளல்லவா? கணவன், ஆறுதல் கூறி தைரியம் ஊட்டினாலொழிப, உத்தமி வேதனையில் வீழ்ந்து துடிக்க மாட்டாளா! அதனால் கனகசபை தேற்றுகிறார். இடை யில், தன்னை முதியவன் என்று பலர் கூறுவார்களே, இவள் அதுபற்றி என்ன எண்ணிக் கொள்வாளோ என்ற கவலை யில், தனக்கு வயோதிகம் இல்லை, வாலிபம்தான், முறுக் குடன் இருக்கிறது என்று சொல்லி வைக்கிறார். வாலிபன் இது போலக் கூறத் தேவையில்லை! வாலிபம் தன்னாலே தெரிகிறது. வயோதிகர்தான், தனக்கு வாலிபம் இருப்ப தாகக் கூறித் தீரவேண்டும். அதிலும்; பாவம் 'கனகசபை' மூன்றாம் தாரமல்லவா பெற்றிருக்கிறார். அதனால்தான், கலங்காதே! காசம் என்னை ஒன்றும் செய்துவிடாது! என் கிறார். ஆனால்! மனத்திலேயோ, காசம் வேறு வந்து விட்டதே! ஏற்கனவே என்னிடம் வெறுப்பு இவளுக்கு— இப்போது என்னென்ன எண்ணுகிறாளோ என்ற திகில். அந்தத் திகிலை மறைத்துக்கொண்டு தைரியம் பேசிக் காட்டுகிறார், கனகசபை.

★

காசமேதான்! ஆமாமாம். பெரிய டாக்டரே சொல்லி விட்டார். இனி ஆசாமி வீட்டோடுதான்! பொல்லாத நோயாச்சே காசம்; அடே அப்பா, ஆளை உருக்கி உருக்கி எடுத்துவிடுமே! ஒரு வேலையும் செய்யவிடாது. ஒரு ஊருக் கும் போகவிடாது சதா தொல்லைதான். காசம்னா இலேசா! ஆசாமி இனி பழையபடி அலைய முடியாது. எங்கே சரக்கு கிடைக்கும், எங்கே பதுக்கி வைக்கலாம் என்கிற காரியத்துக்காக. ஒரு பெரிய தெ ல்லையே விட்டுதுன்னு சொல்லணும். கொஞ்சமான தொல்லையா நமக்கு அவனாலே. எத்தனை வாடிக்கைக்காரர்களை வலைபோட்டு இழுத்துக் கொண்டான். நம்ம வியாபாரத் தையே நாசமாக்கப் பார்த்தானே. அவனோடு போட்டி போட்டுப்போட்டு நமக்கு இதுவரையிலே எத்தனை பத்தா யிரம்பாழாகியிருக்குது. காசம் வந்தது-இனி காலை மடக்கிக்

கொண்டு வீட்டோடு கிடப்பான். நம்ம பாடு இனி நிம்மதி
தான். காசம் என்ன இலேசிலே போய்விடுகிற வியாதியா
என்ன? நாளைக்கு மூன்று ஊசிதான் போட்டுக் கொள்
ளட்டுமே, போய்விடுமா! அதுதான் கிடையாதுன்னேன்.
காசம், கட்டையோடுதான்! பச்சைச் சிரிப்பு சிரிச்சே
மட்டச் சரக்கை ஆசாமிகள் தலையிலே கட்டி அனுப்பு
வானே, இனி முடியுமா? முகமே மாறி விடுமே, வியாதி
அப்படிப்பட்டது. காரணமில்லாமல் கோபம் வரும்,
பொறுமை இருக்காது, இதெல்லாம் காசத்தாலே ஏற்படு
கிற கோளாறு. நான் பார்த்திருக்கிறேனே, காச நோய்
பிடித்த ஆசாமிகளை. எங்க மாமனுக்கே அந்த நோய்
தானே! ஒருவரும் கிட்டே போக முடியாது, எரிஞ்சி
எரிஞ்சி விழுவாரு. வியாதியொட குணம் அது. காசம்
பொல்லாத வியாதி. அது வந்தா அவ்வளவுதான், உலுக்கி
உலுக்கி எடுத்துவிடும்-

★

தம்பி! பேச்சே, ஆசாமி எப்படிப்பட்டவனாக இருக்க
முடியும் என்கிறதைக் காட்டிவிடுகிறதல்லவா? ஆமாம்,
கடைவீதியிலே கனகசபைக்குச் சரியான போட்டி யார்
என்று கேட்டால் இந்த வடிவேலுவைத்தான் காட்டுவார்
கள். கனகசபையுடன் போட்டியிட்டுப் போட்டியிட்டுப்
பொருள் நட்டம் அதிகம்; ஆனால், ஆசாமி சளைக்க
வில்லை. கனகசபையை அடக்கி ஒடுக்கி மூலையிலே உட்
கார வைக்காவிட்டால், என் ஒரு பக்கத்து மீசையையே
எடுத்து விடுகிறேன் பார்! என்று பகிரங்கமாகச் சொன்ன
வன். 'அவன் மனத்திலே ஒரு மகிழ்ச்சி. காசநோய் காரண
மாக, கனகசபை வியாபார வேலையைச் சரிவரக் கவனிக்க
முடியாது என்பதாலே. நேரிலே போய்ப் பார்த்து,
தைரியம் சொல்லிவிட்டுப் பழனிப் பிரசாதம் கூடக்
கொடுத்துவிட்டு வந்தார். அது ஊரார் பார்க்க. இந்தப்
பேச்சு, உள்ளத்தின் குமுறல், உண்மை!

காசம்டா, பயலே, காசம்! பெரியவீட்டுப்
பிள்ளை, சொத்து இருக்குது அந்தஸ்து இருக்குதுன்னு
சொல்லி, கிளிபோல உள்ளவளைக் கொடுத்தாளே
பேராசைக்காரி பெருந்தேவி, தெரியுமா விஷயம்,
மாப்பிள்ளைஇருக்கானே அவனுக்குக் காசம்! அவளைக்
கல்யாணம் செய்துகொண்டு, என்ன சுகத்தைக் காணப்
போகிறாள் செல்லி. அழுதுகொண்டு இருக்க வேண்டி



யதுதான். ஊரே திருவிழா கொண்டாடினாலும், இந்தப்
பய, வீட்டோடு முடங்கிக் கிடப்பான், அவனுக்குப்
பணிவிடை செய்துகொண்டு இந்தப் பெண் செல்லி
இருக்குது! பெரிய டாக்டர் வந்தாரா? புதிய மருந்து
கொடுக்கல்வியா?—இப்படிப் பட்ட கேள்விகளுக்குப்
பதில் சொல்லிக் கொண்டிருக்கவேண்டிய வேலைதான்
செல்லிக்கு! பெண்ணைப் பெரிய இடத்திலே கொடுக்
கிறோம், மோட்டாரிலே மாப்பிள்ளையும் பெண்ணும்
போவார்கள், கடற்கரையிலே உலாவுவார்கள் என்
றெல்லம் கனவு கண்டாள் பெருந்தேவி. இனி ஒவ்வொரு
டாக்டர் வீடாகப்போய் வரவேண்டிய வேலைதான்
செல்லிக்கு. காசம், தீராதநோய்! சொத்து இருந்தும்
தான்சுகம் இல்லை. எந்த நேரத்திலும் கவலை, கலக்கம்.
போயும் போயும் ஒரு காச நோய்க்காரன் தானா
கிடைத்தான் செல்லிக்கு என்றுதான் பலரும் பேசு
வார்கள். கூலிவேலை செய்பவனாக இருந்தால்
'போதும் என்றுதான் ஒரு பெண் எண்ணுவானே தவிர,
காசநோய் இருந்தால் என்ன, கை நிறைய வளையல்
போட்டிருக்கிறான். காதிலே வைரக்கம்மல் போட்
டிருக்கிறான், மாளிகையிலே வாசம் செய்ய வசதி
செய்திருக்கிறான், என்று எண்ணியா திருப்திப்பட்டுக்
கொள்ள முடியும், பாவம்! அவனுக்குக் காசம்! அதைப்
பார்த்துக் பார்த்துக் கலங்கிக் கலங்கி இந்தப் பெண்
ணுக்கு என்னென்ன நோய் வந்துவிடுமோ யார் கண்
டார்கள்.

செல்லி!—என்று, கனகசபையின் மூன்றாந்தாரம்,
மங்கையர்ச் செல்வியைத்தான், செல்லமாகப் பெயரிட்டுப்
பேசுகிறார், தர்மகர்த்தா தனபால். பெயரில் மட்டுமே'
தனம்' இருந்தது, கையிலே, கொடுத்து வராமல் காலாவதி
யாகிவிட்ட கடன் பத்திரங்களும், புதுவருடப் பஞ்சாங்கமும்
தான்! அவருடைய ஒரே மகன் ச[illegible]ாசிவத்துக்கு மங்கையை
—செல்லியைத் தரும்படி, போய்க்கேட்டார் தனபால்,
நடையாய் நடந்தார். செல்லியின் தாயார் பெருந்தேவி
ஒரே பிடிவாதம் பிடித்தாள், தன் மகளைச் சீமாட்டியாக்
கிக் கண்குளிரக் காணவேண்டுமென்று.

இப்போது என்ன காண்கிறாள் பெருந்தேவி! காச
நோய் பிடித்த கனகசபையைத்தானே! என்று கேட்கிறார்,
தனபால்; பெருந்தேவி வீட்டுத் தோட்டக் காரனிடம்,

அவன் என்ன சொல்லுவான் பாவம், பெருந்தேவியிடம் போய்ச் சொல்ல முடியுமா! அவன் பார்க்கிறான் பெருந்தேவியை—அதிகமாகக் கவலைப் பட்டதாகக் கூடத் தெரியவில்லை. காசமாமே என்று யாரோ சொன்னதற்குக்கூட பெருந்தேவி, தரித்திரத்தைவிட ஆபத்தான நோய் வேறே கிடையாது, பணத்தைப்போல கைகண்ட மருந்தும் வேறே கிடையாது என்று சொன்னதாகக் கேள்வி.

அவளைக் கண்டிப்பதன் மூலம், தனபால், தன் மகனுக்கு அவன் விரும்பிய பெண்ணைத் திருமணம் செய்து வைக்க முடியாமற் போய்விட்டதே என்ற துக்கத்தைத் தான் வெளியிட்டுக் கொண்டார்.

★

காசநோயா! அவருக்கா? பாரேன், எவ்வளவு வசதியான வாழ்க்கை அவருக்கு. அவருக்கே காசநோய்! அவ்வளவு கெட்டுவிட்டிருக்கிறது ஊர். எதில் பார்த்தாலும் கலப்படம், ஏன் உடல்நலம் கெடாது. பலபேர் படாதபாடு படுகிறார்கள், காசம், குன்மம், இப்படிப்பட்ட பொல்லாத வியாதிகளால். இந்தக் காலம் அப்படிப்பட்டதப்பா, அதற்கென்ன செய்வது. என்னென்னமோ வியாதிகள். காற்றிலேயே விஷம் கலந்துவிட்டிருக்கிறது. தண்ணீர் சுத்தம் இல்லை. சாப்பாட்டுப் பண்டங்கள் மோசமான நிலையில். காசம் போன்ற நோய் ஏன் வராது?

பழைய சம்பிரதாயங்களைக் கைவிட்டு விட்டதாலேயே எல்லா நோய்களும் வந்துவிட்டன என்று பிரசாரம் செய்து, பிரமுகர்களிடம் நன்கொடை திரட்டி 'யோகாசன சாலா' அமைத்து அதற்குத் தலைவர் ஆகிவிட்டிருந்த 'வியாசர்' இதழ் ஆசிரியர் வேம்பு அவர்களின் விமரிசனம் தம்பி! ஒவ்வொரு சம்பவத்தையும், தனது கருத்துக்கு வலுவளிக்கப் பயன்படுத்திக்கொள்ளும் பக்குவம் தெரிந்தவர். கனகசபைக்குக் காசம் என்றவுடன், அவரிடம் சென்று பதினைந்தே நாட்கள், 'பத்மாசனம்' முறைப்படி—பிறகு காசம் இருக்கிறதா என்று தேடவேண்டும், ஓடியே போய்விடும் எனறு சொல்லிவிட்டு, 'வியாசர்' இதழுக்குக் கனக சபையை ஆயுள் சந்தாதாரர் ஆக்கிக் கொண்டவர். தமது யோகாசன சாலையை வளரச் செய்ய, கனகசபையின் காசம் ஒரு வரப்பிரசாதம் என்று எண்ணி மகிழ்ந்து பேசுகிறார்.

★



தம்பி! பார்த்தனையா, உலகத்தின் போக்கை! கனவான் ஒருவருக்குக் காசநோய் என்றவுடன் எந்தெந்த நிலையினர், என்னென்ன நோக்கத்துடன், பேசுகிறார்கள்' பார்த்தனையா?

கனகசபை, சீமான்; ஆகவே அவருக்குக் காசம் என்றதும் பலருடைய கவனமும் அதிலே செல்கிறது. அவரவர்கள் தமக்கும் கனகசபைக்கும் உள்ள தொடர்பு கிளறிடும் எண்ணத்துக்கு ஏற்றவிதமாகப் பேசுகிறார்கள்.

காசம் போன்ற நோய் மட்டுமல்ல, கனவானைப் பீடித்துக் கொள்ளக்கூடிய ஆணவம் என்ற நோய் பற்றிக்கூட, ஒவ்வொருவர் கூறிடும் கருத்தும், அவர்களுக்கும் அந்தச் சீமானுக்கும் உள்ள தொடர்பின் தன்மைக்கு ஏற்றபடி தான் அமையும்.

ஆணவம் கண்டிக்கத்தக்கது, வெறுக்கத்தக்கது, தவிர்க்கப்பட்டாக வேண்டியது. இது பொது இலக்கணம்; பாடப் புத்தகங்களில். ஆனால் சமூக அமைப்பு இன்றுள்ள நிலையில் ஆணவம் பிடித்த ஏழையை அடக்கிட, கண்டித்திட ஆயிரம்பேர் ஓடோடி வருவார்கள், உருட்டு விழிகாட்டியபடி, ஆனால் செல்வத்தாலோ, பதவியாலோ உயர்ந்த இடத்தில் அமர்ந்துவிட்ட கனவான், ஆணவம் கக்கினால், ஏன் என்று கேட்டிட, எதிர்த்து நின்றிட மிகப் பெரும்பாலானவர்கள் வரமாட்டார்கள். அஞ்சுவர்! ஒதுங்கிக் கொள்வர்! முணுமுணுப்பர்!

சரி, தம்பி! காசநோய்க்காரனைப் பற்றிப் பலர் பல்வேறு விதமாகப் பேசினார்களே, உனக்கு என்ன தோன்றுகிறது. பார்த்துவிட்டுத்தான் சொல்லுவேன் என்கிறாயா, சரி வா! போய்ப் பார்ப்போம்.

★

என்ன அண்ணா! குடிசைக்குள் போகிறாயே......காசநோய்......கனவான் மாளிகையில் அல்லவா இருப்பான். இங்கு......! என்று தானே கேட்கிறாய். தம்பி! உற்றுக் கேள்! இதுவும் காசநோய்க்காரன் வீடுதான்! ஏழைஇல்லம்.

என்னை என்ன செய்யச் சொல்றே. காசம்னு இப்பத்தான் தெரியுது. பெரிய டாக்டர் முப்பது ரூபா வாங்கிக் கொண்டு, அதற்குப் பிறகுதான் இது காசம்னு

சொன்னாரு. நீர்கோத்து கிட்டு இருக்குது வேறே ஒண்ணும் இல்லே, எண்ணெயையைக் காய்ச்சித் தேய்ச்சி நாலு வாரம் தலைமுழுகுன்னு, நம்ம வைத்தியர் சொன்னாரு. இதற்கு முன்னே அவர் சொன்னா சொன்னபடி தானே நடந்துவந்தது. நம்பினேன். நாளை ஓட்டிவிட்டாயே, வியாதி முற்றிவிட்டிருக்குதே என்று கோபிக்கிறார் பெரிய டாக்டர். நான் என்ன செய்ய. இதுக்கு மருந்து மட்டும் சாப்பிட்டா பிரயோஜனம் இல்லையாம். ஆகாரமுறையே மாறணுமாம். மாறணும்னா என்னா தெரியுமா; டாக்டர் சொல்கிற முறைப்படி சாப்பிட வேண்டிமென்றா வேலைக்கு மூன்று ரூபா வேணும். ஐயா நான் ஏழைன்னு சொன்னேன்; அவரு சிரிக்கிறாரு. காசம், ஏழை பணக்காரன் என்றா வித்தியாசம் பார்க்கும்னு கேட்கிறாரு. வெட்கமாகக்கூட இருந்தது அவர் பேச்சைக்கேட்க. வாரத்துக்கு மூன்று ஊசியாம்; ஊசி ஒன்றின் விலை பதினைந்து ரூபாயாம், இப்படி ஆறுமாதமாம். அத்தோடு விடுதா! அந்த ஆறுமாதம் அலையக்கூடாதாம், பாடுபடக்கூடாதாம். அதைவிட வேடிக்கை துளியும் கவலை இருக்கக்கூடாதாம். கேட்டயா! கவலை இருக்கக்கூடாதாம் இந்த வியாதிக்கு. அந்தப்பய வீட்டை விட்டுப் போயி வருஷம் இரண்டு ஆகுது. அவனுக்குக் கழுத்தை நீட்டிய பாவத்துக்காக அந்தப் பொண்ணு இங்கே குமுறிக்கிட்டு இருக்குது, இந்தப்பய நாலு எழுத்து படிப்பான் நாணயமா இருப்பான்னு நினைச்சா, வீடு தங்கறதில்லை படிப்பிலே வகையில்லை, இப்படி இருக்குது நம்ம குடும்பம்; நான் கவலைப்படக்கூடாதுன்னு டாக்டர் சொல்கிறார்: நினைத்தாலேசிரிப்புத்தான் வருது. மிளகாமிஷனுக்குப் பக்கம் இருப்பவன், தும்மக்கூடாது இருமக்கூடாதுன்னு சட்டம் போட்டா நடக்கிற காரியமா! அதுபோல இருக்குது டாக்டர் சொல்றது. என்கூட வேலை பார்க்கறானே வெள்ளையன் அவன், காசம்தானே இது பரவாயில்லேயே, வேறே எத்தனையோ பயங்கரமான வியாதிகளெல்லாம் இருக்கு தெரியுமான்னு சொல்லி மிரட்டி வைக்கறான். உயிருக்கு மிஞ்சியா உடைமை, வீட்டைக் காட்டி ஒரு ஆயிரம் ஐந்நூறு கடனை வாங்கிச் செலவழிச்சி, நோயைக் குணப்படுத்திக்க என்கிறாரு என் சிநேகிதர். ஆனா, வீட்டை விற்கணுமானாலும், ஓடிப்போயிருக்குதே ஒரு தறு



தலை, அதுவந்து கையெழுத்துப் போட்டாகணுமாம். காச நோய்க்காரன்னு தெரிந்தா போதும், வேலையிலேயே இருந்து நீக்கிவிடுவாங்க. எத்தனையோ தொல்லையைத் தாங்கித் தத்தளிக்கிற என்னைப் பார்த்தா வந்து சேரவேண்டும் இந்த வியாதி!

புரிகிறதல்லவா, தம்பி! ஏழை வீடு! காசநோய் என்று தெரிந்து கொள்வதற்குள்ளேயே, நோய்முற்றி விட்டிருக்கிறது. கனவானா, உடனே டாக்டர் கண்டுபிடித்துக்கூற. இவன் உழைப்பாளி—மண்டி பண்டரிநாதன் கடையிலே எடுபிடி வேலையிலே துவங்கி இப்போது எண்பது ரூபா சம்பளம் வாங்கும் மானேஜர் வேலை பார்க்கிறான்—பெயர் ஆரோக்கியசாமி! மனைவி பெயர் தெரியுமா, சந்தோஷத்தம்மாள்! கிருத்தவக் குடும்பம் தம்பி! ஓடிப்போய்விட்ட பயல் பெயர் சாலமன். 'இன்னொன்று' பெயர் பீடர்! என்ன செய்வான் இந்தக் காசநோய்க்காரன் டாக்டர் சொல்கிறபடி நடக்கமுடியுமா! கவலை இருக்கக்கூடாதாமே! பார்க்கும்போதே உனக்குக் கவலையாகத்தான் இருக்கும். தம்பி! புறப்படு! காசநோய் கொண்ட இந்த ஏழையைப் பற்றி என்னென்ன பேச்சு கிளம்பியிருக்கிறது என்பதைப் பார்க்கலாம்.

ஏழைதான், என்றாலும் என்ன செம்வது, வியாதியை ஓட்டியாக வேண்டுமே. எங்காவது கடன் வாங்க வேண்டியதுதான். வேறேவழி. அநியாய வட்டி கேட்டால் கூடச் சம்மதிக்க வேண்டியதுதான்.

தம்பி! அதோ மண்டிக்கடைக்கு எதிர்ப்புறம் பார்த்தனையா, வட்டிக்கடை! உள்ளே போகலாம்......என்ன கண்டிப்பான குரல், கேட்டனையா! காசம் என்று சொன்னதும், கல்மனமும் கரையும் என்று நாம் எண்ணிக்கொள்கிறோம். இந்தக் குரல், அதிகாரக் குரல்! கேள், தம்பி!

காசமா? ஆராய்ச்சி நடத்தினார் போலிருக்கு! காசமா இருந்தா என்ன, குன்மமா இருந்தா என்ன! பட்ட கடனைத் திருப்பித்தரச் சொல்வி, கண்டிப்பாய் பேசினா, உடனே காசம், குன்மம், கைகால் விழுந்துவிட்டது என்று எதையாவது சொல்லிக் காலிலே வந்து விழுவது! காசமாமா, காசம்! அதற்கு என்னை என்ன செய்யச் சொல்

தமிழ் நூல் காப்பகம் விருத்தாசலம்

றான் கொடுத்த கடனை விழுங்கிவிட்டா, காசம் போய் விடும், அதனாலே பணத்தைத் திருப்பித் தரச் சொல்லிக் கேட்கல்லே, உன் காசம் போனால் போதும்னு சொல்லச் சொல்றானா? இல்லையானா, கலயத்தைத் தூக்கிக்கிட்டு வீட்டுக்கு ஓடிப் பச்சிலை அறைச்சித் தரச் சொல்லுகிறானா! காசம் வந்துவிட்டதாமா, காசம்! வரும், வரும்! கொடுத்த பணத்தைத் திருப்பிக் கேட்டா காசமும் வரும், கண்ணிலே புண்ணும் வரும்!

கடன் கொடுத்தவனிடம் போய், காசம்—குன்மம்—காய்ச்சல் என்று எதைச் சொல்லி என்ன பயன்? அதிலும் வேடிக்கை என்னவென்றால் தம்பி! கடன் பட்டவனுக்கு நோயும் கண்டுவிட்டது என்றால், கடன் கொடுத்தவன் மேலும் கண்டிப்புக் காட்டுவான்! சீக்கிரமாகக் கடனை வசூலித்துவிடவேண்டும். ஆசாமி போய்விட்டா கொடுத்த பணமல்லவா கோவிந்தா ஆகிவிடும்! ஆகவே, இப்போதே பணத்தை வசூலித்தாக வேண்டும்.

அந்தப் பரபரப்புடன் வட்டிககடைக்காரன் பேசுகிறான். கடனிலே ஒரு பகுதியாவது திருப்பிக் கொடுத்து விட்டால், பிறகு அவனே கூட; பரிவுகாட்டுவான் பேச்சில், பயம்வேண்டாம் காசநோய்க்காக என்பான், மருந்து பற்றிய விவரம் கூடச் சொல்லுவான். இப்போது அவனுக்கு வேண்டியது பணம்! அந்த நோயாளி பிணமாவதற்குள்!!

தம்பி! எதிரேதானே மண்டிக்கடை; அந்த முதலாளி கைகொடுக்கமாட்டாரா; அவருக்கு இவ்வளவு ஆண்டுகளாக வேலை பார்த்தவனிடம் சிறிதளவாவது பரிவு இருக்கத்தானே செய்யும். மாடாக உழைத்தவனல்லவா, முதலாளியின் குரல்கூடக் கேட்கிறது, வா, வா, போய்க் கேட்போம்.

□

காசமாமா! சொல்கிறாரா? சொல்லுவாரே, ஆசாமி என்ன சாதாரணமானவரா! எல்லாவிதமான வேஷமும் போடுவாரே! காசம்னு சொன்னா, பச்சாத்தாபப்பட்டு, விட்டுவிடுவாங்க என்கிற தந்திரம். தெரியுமே எனக்கு, கணக்கிலே திருட்டும் புரட்டும் செய்துவிடுவது, கண்டு பிடித்தது தெரிந்தா, மாட்டிக் கொண்டா உடனே



இழுத்துப் போர்த்துக்கொண்டு வீட்டிலே படுத்துக் கொண்டு, எனக்குக் காச வியாதி வந்துவிட்டது என்று சொல்லிக் கண்ணைச் கசக்கிக் காட்டுவது! இந்த வித்தை எனக்குத் தெரியாதா! மரியாதையா அந்தப் பயலை நாளைக் காலையிலே பணத்தோடு வந்து கணக்கைத் தீர்த்துக்கொண்டு போகச் சொல்லு; இல்லே! காசத்துக்கு மருந்து தருகிற பெரிய ஆஸ்பத்திரி இருக்குதே,—எது? ஜெயில்! ஆமா அங்கேதான் அனுப்பிவைப்பேன். காசம் கீசம்னு சொல்லி ஏய்த்துவிடலாம் என்று எண்ணிக் கொள்ள வேண்டாமென்று சொல்லு. எனக்குத் தெரியும் இவனோட காசம்! போ! போ! இழுத்துக் கொண்டுவா, பயலை!!

கிணறு வெட்டப் பூதம் கிளம்பும் கதை போலிருக்கிறதே என்று பதறுகிறாயா. தம்பி! பதறாதே! கணக்கிலே திருட்டும் புரட்டும் துளியும் கிடையாது. அதைச் செய்திருந்தால் அவன் ஏன் பாவம், நோயாளியாகி இருக்கப் போகிறான். தனக்குக் நோய் வந்துவிட்டதே என்ற கவலையில், கணக்கிலே தவறு செய்துவிட்டிருக்கிறான், வரவு வைத்து எழுதவேண்டியதைச் சரியாகச் செய்யவில்லை. பணத்திலே அவன் கைவைக்கவில்லை. பணம், பெட்டிக்குள் இருக்கிறது; மறதி; ஆகவே, அது கணக்கில் சேரவில்லை.

கணக்கிலே புரட்டுச் செய்து பணத்தை மோசம் செய்துவிட்டு, காசம் என்று வேஷம் போட்டுத் தப்பித்துக் கொள்ளப் பார்க்கிறான் என்று முதலாளி அவசர முடிவு செய்கிறான். ஆரோக்கியசாமி, ஏழை; சத்தியத்தை மதிப்பவன். அவன் வீட்டுக்கு மண்டிக் கடை ஆள் போய் என்னென்ன மிரட்டுவானோ, வா, வா, போய்க் கேட்போம்.

●

காச நோயாமா? யார், பெரிய டாக்டர் சொல்லிவிட்டாரா? பெரிய டாக்டரல்லவா, பெரிய பெயராகத் தான் வைப்பார், நோய்க்கு. வெறும் பீதி கிளப்புகிறார். காச நோயல்லப்பா, காச நோய்—டாக்டர் காசு பறிக்கச் சொல்லுகிறார் காசநோய் என்று. நாலு வேளை மிளகுக் கஷாயம் சாப்பிடு, ஒரு நோயும் இருக்காது. அலுப்பின் பேரிலே ஒரு ஆயாசம், இது. இதுவா காசநோய்! வீணாக

மனத்தைக் குழப்பிக் கொள்ளாதே. காசநோய் என்றால் இந்நேரம் உன்னை நடமாட விட்டிருக்குமா, பேச விட்டிருக்குமா! அதனுடைய குணமே வேறே! இது காச நோயே அல்ல.

முதலாளி அனுப்பிய ஆள்தான். அவனுக்குத் தெரியும் ஆரோக்கியசாமியின் நாணயம். ஆகவே, அவன் விவரம் கேட்கிறான்- மறதியால் நேரிட்டுவிட்ட தவறு பற்றி ஆரோக்கியசாமி சொல்லிவிட்டு, மண்டிக்குக் கிளம்பு கிறான், முதலாளியின் சந்தேகத்தைத் துடைக்க.

ஆரோக்கியசாமிக்கு ஆறுதல் அளிக்க, தைரியம் கூறு கிறான் அவனைப் போன்ற ஏழை, ஏகாம்பரம்; இது காச நோயே அல்ல என்று.

அந்த ஏழையின் பேச்சு ஒரு தெம்பு கொடுக்கிறது ஆரோக்கியசாமிக்கு. பழைய கோட்டை உதறிப் போட்டுக் கொண்டு புறப்படுகிறான். சந்தோஷத்தம்மாள்கூட, தன் கணவனுக்கு உள்ளபடி காசம் இல்லை; வீண் சந்தேகம், பயம், இதனால் கவலை என்றுதான் எண்ணிக் கொள் கிறார்கள்.

மறதியாகப் பெட்டிக்குள் வைத்துவிட்ட பணத்தை எடுத்துக் கொடுத்ததும், முதலாளி மகிழ்ந்து போவார், அல்லவா! அந்த எண்ணம் துள்ளுகிறது அவன் மனத்தில். அதனால்தான் அத்தனை வேகமான நடை.

அய்யோ! என்ன இவனுக்கு, மறதி கூடப் பிறந்த வியாதி! பாதை ஓரத்தில் நடக்காமல், இப்படி...

அய்யோ! அடடா; ஏ! கிழவா! ஏ! ஏ! மோட்டார்!

அவ்வளவுதான் தம்பி! நாம் செய்யக்கூடியது. அவன் போய்விட்டான். காசம் இனி அவனை ஒன்றும் செய் யாது!

மோட்டார் ஓட்டி வந்தவர் டாக்டர்! அவரே கூறி விட்டார், அதிர்ச்சி—இருதயம் வெடித்துவிட்டது என்று. அதே டாக்டர் தம்பி! கனவான் வீட்டு, டாக்டர்.

அங்கிருந்து அவசரமான அழைப்பு. அதனால்தான் மோட்டாரை வேகமாக ஓட்டிக்கொண்டு சென்றார், வழியில் இவன்!



போலீசுக்கு ஏதோ குறிப்பு கொடுக்கிறார். மோட்டார் கிளம்புகிறது; கனவான் மாளிகைக்கு. அவருக்குக் காச மல்லவா!! போகலாமா மறுபடியும், மாளிகைக்கு? வேண் டாம் என்கிறாயா! ஆமாம் தம்பி! வேதனையாகத்தான் இருக்கும். ஆனால், என்ன செய்வது, நிலைமை அவ்விதம் இருக்கிறது.

உலகின் போக்கு இருக்கும் விதம்பற்றி எண்ணிப் பார்த்திட வேண்டும் என்பதற்காக மட்டுமல்ல காசு மிக்க வனுக்குக் காசநோய் வந்திடின் எவரெவர் என்னென்ன விதமாகப் பேசிடுவர் என்பதனை எடுத்துக் காட்டியது.

வேறோர் விந்தை நடைபெற்றிடின் தம்பி! என்ன கருதிடத் தோன்றும்.

வேகமாக மோட்டாரை ஓட்டிக்கொண்டு சென்று ஏழை யைச் சாகடித்தாரே ஒரு டாக்டர், அவர் கிளம்புகிறார் என்று வைத்துக்கொள். ஆபத்தில்லாமல் மோட்டார் ஓட்டும் முறைபற்றிய விளக்கமளித்திட! எப்படி இருக்கும்!! கை கொட்டிச் சிரிப்பர்.

காசு படைத்தவர் என்பதால் மூன்றாந்தாரம் தேடிப் பெற்றுக்கொண்ட காசநோய்க்காரர் கனகசபை 'இல்லற இன்பம்' பற்றிய சொற்பொழிவு நடாத்திடக் கிளம்பிடின் எப்படி இருக்கும்!

அம்மையார்—அதாவது கனகசபையின் இல்லக் கிழத்தியார்—இளமங்கை—'பதி பக்தி' மகத்துவம் பற்றிய காலட்சேபம் செய்திடின் மக்கள் என்ன நினைப்பர்?

கைகொட்டிச் சிரிப்பர், கண்டித்திடுவர்; செயலிலே கோணலாக நடந்துகொண்டு சீலம் பற்றிப் பேசவும் வந்துள் ளனரே என்று கேலி பேசுவர். அப்படித்தானே?

இல்லை என்கிறேன், தம்பி! இல்லை என்கிறேன், உயர்ந்த இடத்தில் உள்ளவர்கள், செல்வம் படைத்தவர் கள், அக்ரமம் பல செய்துவிட்டு, அவற்றினை மறைத்து விட்டு, ஏதுமறியாதார்போல நடித்து, ஊருக்கே உபதேசம் செய்திட முன்வந்திடின், ஊர் மக்கள் திகைப்படைவர், ஆனால், கண்டித்துப் பேசிட முன்வரமாட்டார்கள்.

பெரிய இடத்துப் பகை நமக்கேன் என்று இருந்து விடுவர். அதுவே உலக வாடிக்கையாகிவிட்டது.

செய்த அக்ரமத்தை மறைத்துவிடவும், மக்கள் அதனை மறந்துவிடும்படி செய்துவிடவும்கூட முடியும், செல்வவான்களால், ஆனால், சீலர்கள் என்று தம்மைக் கூறிக்கொண்டு ஊருக்கு உபதேசமும் செய்து கொண்டிருக்கவும் முடியுமா, பெரும்பாலான மக்களுக்கு அச்சஉணர்ச்சி அழுத்தமாக இருக்கத்தான் செய்கிறது என்றாலும், இந்த நிலைமையையும் தாங்கிக் கொள்ளமாட்டார்கள் என்று வாதாட நினைப்பர்—சிலரேனும்.

அப்படிப்பட்டவர்கள் கூடத் தமது கருத்தை மாற்றிக் கொள்வர், முன்னாள் நிதி அமைச்சர் டி.டி. கிருஷ்ணமாச்சாரியார் தமிழகத்தில் அரசியல் உபதேசம் அருளிக் கொண்டு வருகிற விந்தையைக் கண்டபிறகு.

முடிகிறதே அவரால்! நாடு தாங்கிக்கொள்ளுகிறதே அவருடைய உபதேசத்தை!!

அவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள்—சுமத்தப்பட்ட என்றே கூறுகிறேன், தம்பி! மெய்ப்பிக்கப்பட்ட என்று கூறவில்லை—பற்றிய பேச்சும் வதந்திகளும் நிரம்பக் கிளம்பின.

மறைந்த பிரதமமந்திரி லால் பகதூர், டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் அபத்தமானவை, அடிப்படையற்றவை, கவனிக்கத் தகாதவை என்றுகூறி குற்றச்சாட்டுகளைக் கொண்ட புகார் மனுவைத் தூக்கிக் குப்பைத் தொட்டியிலே வீசிவிட்டு, டி. டி. கிருஷ்ணமாச்சாரியின் முகத்தைத் துடைத்து, முகமன் கூறி, மாசுமருவற்றவரே! மாநிதியே! மாச்சரியம் காரணமாகத் தங்கள்மீது இல்லாததும் பொல்லாததுமான புகார்களைக் கூறினர், புல்லர்கள், சிலர்—உமது அருமை பெருமை, நேர்மை, நாணயம், திறமை, தகுதி, ஆற்றல் அறியாது; அந்தப் புகார்க் கடிதத்தைச் சுக்கு நூறாகக் கிருத்துக் குப்பை கூடையின் எறிந்துவிட்டேன். ஆகவே, ஆற்றல் மிக்கவரே! புகார்பற்றித் துளியும் கவலையற்றுப் பதவியில் வீற்றிருந்து பாரதமாதாவுக்குச் சேவை செய்து கொண்டு வரவேண்டும்! மறுக்கக்கூடாது! பிரதம மந்திரியாம் எனது வேண்டுகோளை மறுக்கக் கூடாது!—என்றா கூறினார்?

இல்லை, தம்பி! இல்லை! புகார் மனுவை, இந்தியாவின் பிரதம நீதிபதியிடம் அனுப்பி வைக்க இருக்கிறேன்,



அவர் பரிசீலனை நடத்தித் நமது கருத்தளிப்பது நல்லது, தேவை, முறை என்று கருதுகிறேன் என்று தெரிவித்தார்.

அவர் தெண்டனிடாதது மட்டும்தான் பாக்கி, அத்தனை பணிவுடன் கூறிப்பார்த்தார், புகார் பற்றித் தாங்களே பரிசீலனை செய்யலாமே, அல்லது தாங்கள் அமைக்கும் ஒரு குழுவினர் பரிசீலனை செய்யலாமே, பிரதம நீதிபதியிடம் அனுப்பத் தேவையில்லையே என்று முறையிட்டுக் கொண்டார்.

தாங்களோ எனது சகா! தங்கள்மீது வந்துள்ள புகாரை நான் விசாரிப்பதா! செச்சே! அது முறையாகாதே! அதனால்தான் இந்தியாவின் பிரதம நீதிபதியிடம் அனுப்பி வைக்க எண்ணுகிறேன். அவர் துவக்க வேலையைத்தான் பார்த்திடுவார்; அதாவது இந்தப் புகார்களுக்குத் துளியேனும் ஆதாரம் இருக்கிறதா, விசாரணைக்கு எடுத்துக் கொள்ளத்தக்கதுதானா இந்தப் புகார், அல்லது வெறும் குப்பைதானா என்பதுபற்றிப் பிரதம நீதிபதி ஆராய்வார். அதுதான் முறை? அதுதான் என் முடிவு என்று வலியுறுத்தினார்.

தங்கள் முடிவு அதுவாக இருந்தால், நான் நிதி மந்திரியாக இனியும் இருந்து வருவது முறையாக இராது; எப்போது என்மீது வந்த புகார் பற்றிப் பிரதம நீதிபதியைக் கொண்டு பரிசீலனை செய்தாக வேண்டும் என்று முடிவெடுத்தீர்களோ, அப்போதே தங்கள் நம்பிக்கையை நான் பரிபூரணமாகப் பெற்றில்லை என்பது விளக்கமாகிறது. ஆகவே நான் என் பதவியை ராஜிநாமாச் செய்கிறேன் என்று தெரிவித்தார்.

லால்பகதூர், வருத்தம் தெரிவித்தார்; ஆனால், தமது முடிவை மாற்றிக்சொள்ள மறுத்தார், டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் தமது ராஜிநாமாவை வலியுறுத்தினார்; லால்பகதூர் அதனை ஏற்றுக்கொண்டார்—வருத்தத்துடன்!!

இது நடைபெற்ற நிகழ்ச்சி—நாட்டை ஒரு குலுக்குக் குலுக்கிவிட்டது.

புகார் பற்றியோ, அது குறித்து எழுந்த விவாதம் பற்றியோ, காமராஜரைக் கலந்தாலோசிக்க வேண்டும் என்றுகூட லால்பகதூர் கருதவில்லை. பெரிய ரோஷக்காரர் என்ற விருதுபெற்ற காமராஜரும் தாம் இவ்விதம்

புறக்கணிக்கப்பட்டிருப்பது பற்றி ஒரு வார்த்தை பேச வில்லை. எங்கோ கனாவில், கயானாவில் நடைபெறும் நிகழ்ச்சி என்று விட்டுவிட்டார்.

டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் பதவியை ராஜிநாமாச் செய்தார். புதிய நிதிமந்திரி நியமிக்கப்பட்டார்.

புகார் மனுவைக்கூட லால்பகதூர் தள்ளிவிட வில்லை.

இன்று வரையில்—நாளை எப்படியோ—காமராஜரே கூட டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் மீது ஒரு அபத்தமான புகார் தொடுக்கப்பட்டது குறித்தோ, அதை ஒரு பெரிய பிரச்சினையாகக்கொண்டு ராஜிநாமாச் செய்யவேண்டிய நிலைக்கு அவரைத் துரத்திய நிலைமைகள் பற்றியோ ஒரு கண்டனம், ஒரு சொல் பேசவில்லை. அவருடைய அபார மான ஆற்றல் அத்தனையும், தி. மு. கழகத்தின் எதிர் காலம் பற்றிய 'ஆரூடம்' கணிப்பதற்கே செலவிட்டுக் கொண்டிருக்கிறார்.

இப்படித் தன்னைக் கவனிப்பாரற்ற நிலையினராக்கி விட்டதனை எண்ணி, டி. டி. கிருஷ்ணமாச்சாரியார்,

அரசியல் துறவுபற்றியும்

சுயசரிதம் எழுதுவதுபற்றியும்

குறிப்பிட்டதுடன், டில்லியில் இருந்துகொண்டு அங்கு நடை பெற இருக்கும் 'வேடிக்கை'யைப் பார்க்கப் போவதாகக் கூறினார்.

என்ன வேடிக்கையோ, கூறவில்லை.

எதிர்பாரத முறையில லால்பகதூர் மறைந்தார்.

இந்திராகாந்தியார் பிரதம மந்திரியாவதற்காக டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் மும்முரமாகப் பணியாற்றினார்,

இந்திராகாந்தியார் தகுதியுள்ளவர் என்ற உணர்வு சலித்துப் போன உள்ளத்துடன் இருந்தவரையும் சுறுசுறுப் பாக்கிற்று என்று கூறினர்.

வேறு சிலரோ, தப்பித் தவறி மொரார்ஜிதேசாய் பிரதம மந்திரியாக வந்துவிட்டால், புகார் மனு பற்றிய புதுக் கட்டங்கள் அமைந்துவிடுமே என்ற திகில் உலவுகிறது என்றனர்.



இந்திராகாந்தியார் வெற்றி பெற்றார்.

அவர்களாவது, டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் மீது—

பொறாமை

பொச்சரிப்பு

பகை

போட்டி உணர்ச்சி

போன்றவை காரணமாகச் சிலர்

அபத்தமான

ஆதாரமற்ற

அலட்சியப்படுத்தத்தக்க

புகார்களை அனுப்பியுள்ளனர். அதனை நான் பொருட் படுத்தவில்லை. அவர் மாசு அற்றவர் என்று தீர்ப்பளிக் கிறேன், அவருடைய பெருமையை நாடு உணரத்தக்க விதத்தில், அவர்மீது தொடுக்கப்பட்டுள்ள புகாரைக் குப்பையில் போட்டுவிட்டு மீண்டும் அவரை மந்திரிசபை யில் அமர்ந்து பணியாற்றும்படி வேண்டிக் கேட்டுக்கொள் கிறேன் என்று அறிவித்தாரா என்றால் இல்லை.

அவர், தமது பதவியை ராஜிநாமாச் செய்துவிட் டதால், அவர் குறித்து அனுப்பப்பட்ட புகார்பற்றி மேற்கொண்டு எந்தவிதமான நடவடிக்கையும் மேற் கொள்ளத் தேவையில்லை என்று சர்க்கார் முடிவு செய்கிறது என்று மட்டுமே அறிவித்தார்;

டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் குற்றமற்றவர் என்று கூறிடவில்லை.

டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் பொய்யானவை என்று மெய்ப்பிக்கப் படவில்லை.

போதுமான அளவு தன்மான உணர்வு உள்ள எவரும் இந்த நிலையை வரவேற்கத்தக்கது என்று ஏற்றுக்கொள்ளமாட் டார்கள்.

தகுத்த முறையில் புகார்பற்றி பரிசீலனை செய்து, என்மீது சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் பொய் யானவை என்று மெய்ப்பிக்கப்படவேண்டும். அது தான், சமூகத்தில் எனக்கு உண்மையான மதிப்பைக் கொடுக்கும். ஆகவே, புகார் பற்றிய விசாரணைக்கு ஏற்பாடு செய்யும்படி வற்புறுத்துகிறேன்,

என்று டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் வற்புறுத்தி இருக்க வேண்டும், செய்யவில்லை! ஏன் என்றும் கூறவில்லை!

தம்மீது பூசப்பட்ட அழுக்கைத் துடைத்துக்கொள்ள முனையாமல், அவர் கிளம்பிவிட்டிருக்கிறார், எதிர்க்கட்சி களை—குறிப்பாக, கழகத்தை—வெளுத்து வாங்க!

அவர் தரிசனம் கிடைத்ததும், பார்வையாளர்களின் கண்களிலே ஒருவிதமான குறும்புப் பார்வை! இதழ்களிலே ஒரு கேலிப்புன்னகை!

மெல்லிய குரலில் பேசிக் கொள்கிறார்கள்:

இவர் கதியைப் பாருங்கள்!

இருந்ததை இழந்துவிட்டு அலைகிறார்.

இந்திராகாந்தி யார் கூட இவருக்குப் பதவி தரவில்லை.

இவருக்காகக் காமராஜர் ஒரு வார்த்தை பரிந்து பேச வில்லை.

பதவிகூட வேண்டாம், புகார் அபத்தமானது என்று ஒரு வார்த்தை சொல்லி, இவர்மீது பூசப்பட்ட அழுக்கையாவது துடைத்திருக்கலாமல்லவா! அதையும் செய்யவில்லை.

இவர் கழகத்தின் அழுக்கு பற்றிப் பேசுகிறார்.

நமக்கோ இவரைப் பார்த்ததும், இவர்மீது இப் போது பூசப்பட்ட அழுக்கும், முன்பு கிளம்பிய முந்திரா ஊழல் கிளப்பிவிட்ட முடைநாற்றமும், அப் போது ஒரு தடவை இவர் பதவியைவிட்டு வெளி யேறிய சம்பவமும்தான் நினைவிற்கு வருகின்றன.

என்று இவ்விதமாகத்தான் பேசிக் கொள்கிறார்கள்,



இந்த மனநிலையுடன் உள்ளவர்களின் மத்தியில் பேசு கிறார்: பலன் எத்தனை உருப்படியாக இருக்க முடியும் என்று விளக்கவா வேண்டும்.

ஆனால், பேசுகிறார்! அபாரமான நம்பிக்கையுடன்!!

எந்த நம்பிக்கை? மற்றவர் விஷயம் இருக்கட்டும் மகானுபாவரே! தங்கள் விஷயம் என்ன? ஏன் தங்கள் மீது துளியும் குற்றம் இல்லை; தொடுக்கப்பட்ட புகாருக்கு ஆதாரமே இல்லை என்று ஒரு விசாரணைக் குழு மூலம் விளங்கக்கூடாது. அப்படிச் செய்து விட்டுப் பிறகு ஒழுக்கப் பிரசாரம் செய்தால் நன்றாக இருக்குமே என்று யாரும் கேட்க மாட்டார்கள் என்ற நம்பிக்கை!

அதைப் பார்த்த பிறகுதான், தம்பி! எனக்கு, காச நோய்ச் சீமானும் அவன் கடிமணம் செய்துகொண்ட காரிகையும், ஆளைச் சாகடித்த டாக்டரும், ஊருக்கு, முறையே இல்லற இன்பம் — பதிபக்தி — ஆபத்தின்றி மோட்டார் ஓட்டுவது போன்றவை பற்றிய 'உபதேசம்' செய்ய முற்படுவது என்றால் மக்கள் என்ன கருதுவார் கள் என்று சிந்திக்கத் தோன்றிற்று.

என்ன கருதுவார்கள்? என்ன கருதுகிறார்கள்; டி. டி, கிருஷ்ணமாச்சாரியாரின் பேச்சைக் கேட்டுவிட்டு!

அவர் என்னமோ ஓயாமல் உச்சரிக்கிறார்!

கழகத்தை நம்பாதே!

கழகத்தை நம்பாதே!!

என்று, ஊருருக்கும் சென்று அவர் அந்தத் திருமந்திரத் தைத்தான் உச்சரித்தபடி இருக்கிறார். ஆனால், மக்கள் செவியில் விழுவதோ

முந்திரா விவகாரம்

முந்திரா விவகாரம்

என்ற சொற்களே!!

காசநோய்க் கனகசபை இல்லற இன்பம் பற்றிப் பேசும் போது மக்கள் செவியில் என்ன விழும்!

மூன்றாந் தாரம்! இளமங்கை என்ற சொற்கள்!

மேலிடம் சென்றவர்கள்—பணம் காரணமாகவோ பதவி காரணமாகவே மேலிடம் சென்றவர்கள், தீயன புரிந்துவிட்டு, உபதேசிகளாக வடிமெடுக்கும்போது, எதிர்த்துக் கேட்டிடமாட்டார்கள்; உன் வாயாலா இது பற்றிப் பேசுகிறாய்என்று கூற மாட்டார்கள்; அவர்களின் கண்களிலே ஒரு குறும்புப் பார்வை மலரும்; இதழோரத்தில்ஒரு கேலிப் புன்னகை தெரியும்.

எனக்கு ஓவியம் தீட்டத் தெரியாது, தம்பி! தெரிந்திடின் எனக்குச் சொள்ளை ஆசை; அந்தக் குறும்புப் பார்வையையும், கேலிப் புன்னகையையும் படமாக்கித் தந்திடவேண்டும் என்று. இயலவில்லை. உன் மனக்கண்ணால் அந்தக் காட்சியைக் கண்டு கொள்ளக் கேட்டுக் கொள்கிறேன். கருத்தோவியம் கிடைத்திடும்.

அண்ணன்,

22—5—'66



தமிழ் நூல் காப்பகம்
09218
தமிழ் நகர் விருத்தாசலம் - 606 001.